
# லெனின்

## ஊழியர் பயிற்சி



உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

# வி. இ. லெனின்

# ஊழியர் பயிற்சி

## கட்டுரைகளும் சொற்பொழிவுகளும்

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

NEW CENTURY BOOK HOUSE
RS 3-50
MADRAS-2.

மொழிபெயர்ப்பாளர்: இரா. பாஸ்கரன்

© தமிழ் மொழிபெயர்ப்பு,
முன்னேற்றப் பதிப்பகம், 1984

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Л $\frac{0101020000-339}{014(01)-84}$ 335—84

## பொருளடக்கம்


முன்னுரை . . . . . . . . . . . . . . . 9

பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர்களுக்கும் சோஷலிஸ்டுகளுக்கும் ''போராட்டச் சங்கத்தின்'' பேரில் . . . . . . . . . . . . . . 19

ருஷ்ய சமூக-ஜனநாயகத்தின் பின்வாங்கும் போக்கு என்ற கட்டுரையிலிருந்து . . . . . 24

நமது இயக்கத்தின் உடனடிப் பணிகள் . . . 29

என்ன செய்ய வேண்டும்? என்னும் புத்தகத்திலிருந்து . . . . . . . . . . . . . . 37

3. தொழிற்சங்க மற்றும் சமூக-ஜனநாயகக் கொள்கை . . . . . . . . . . . .

உ. ஜனநாயகத்துக்கான போராட்டத்தின் முன்னணிப் படை தொழிலாளி வர்க்கம் . .

4. பொருளாதாரவாதிகளின் பக்குவமின்மையும் புரட்சியாளர்களின் அமைப்பும் . . . 44

அ. பக்குவமின்மை என்பது என்ன? . . . 44

இ. தொழிலாளிகளின் அமைப்பும் புரட்சியாளர்களின் அமைப்பும் . . . . . . . 48

ஈ. அமைப்பு வேலையின் செயல் பரப்பு . . . 53

பெ. கெ. ஸ்மிதோவிச்சுக்குக் கடிதம். 2.08.1902 . . . . . . . . . . . . . . 64

நமது ஸ்தாபனக் கடமைகளைப் பற்றி தோழருக்கு எழுதியக் கடிதத்திலிருந்து . . 67

ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசில் கட்சி

விதிமுறையைப் பற்றிய விவாதத்தின் போது நிகழ்த்தப்பட்ட இரண்டாவது உரையிலிருந்து. ஆகஸ்ட் 2 (15), 1903 . . . . . 83

''இஸ்க்ரா'' பத்திரிகை காரியாலயத்திற்குக் கடிதம் . . . . . . . . . . . . . . 88

அ.அ. பக்தானவிற்கும் எஸ். இ. குசெவிற்கும் எழுதிய கடிதத்திலிருந்து. 11.02.1905. . 94

ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் மூன்றாவது காங்கிரஸ். சமூக-ஜனநாயக ஸ்தாபனங்களில் தொழிலாளர்கள், அறிவுத் துறையினரின் உறவுகளைப் பற்றிய உரை. ஏப்ரல் 20 (மே 3), 1905 . . . . . . . . . . . 97

இவான் வசீலியெவிச் பாபுஷ்கின் (இரங்கல் செய்தி) . . . . . . . . . . . . . 99

சோஷலிசமும் போரும் என்ற துண்டுப் பிரசுரத்திலிருந்து . . . . . . . . . . 105

அத்தியாயம் 2. ருஷ்யாவில் வர்க்கங்களும் கட்சிகளும் . . . . . . . . . . 105

அரசாங்க டுமாவில் உள்ள ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் பிரிவும் போரும் . . . . . . . . . . 105

போல்ஷிவிக்குகள் நீடித்து அரசாள முடியுமா? என்னும் கட்டுரையிலிருந்து . . . . . . . 110

போட்டியை எவ்வாறு ஒழுங்கமைப்பது? . . 117

கட்சிச் செயல்திட்ட நகலின் முதற்குறிப்பிலிருந்து. மார்ச் 6-8, 1918 . . . . . . . 132

சோவியத் ஆட்சியைப் பற்றிய பத்து ஆய்வுரைகள். சோவியத் ஆட்சியை வலுப்படுத்தி வளர்த்தல் . . . . . . . . . . . . 132

தேசியப் பொருளாதாரக் கவுன்சில்களின் முதலாவது அகில ருஷ்யக் காங்கிரசில் ஆற்றிய உரை. மே 26, 1918 . . . . . . . . 135

ருஷ்ய சோவியத் சமஷ்டி சோஷலிச குடியரசின் உயர் கல்வி நிலையங்களில் சேர்த்துக்

கொள்வதைக் குறித்து. மக்கள் கமிசாரவை யின் தீர்மான நகல் . . . . . . . . . . . 147

தொழிற்சங்கங்களின் கடமைகளைப் பற்றி என்னும் ஆய்வுரைகளிலிருந்து. . . . . . . . 148

இரண்டாவது அகில ருஷ்ய தொழிற்சங்கக் காங்கிரசில் நிகழ்த்திய உரையிலிருந்து. ஜனவரி 20, 1919 . . . . . . . . . 151

''தொழிலாளர் மற்றும் விவசாயிகளின் மேற் பார்வையைப் பற்றிய பத்திரத்தின்'' திட்ட நகல்களுக்கான குறிப்பும் சேர்க்கையும் . . 155

தேசியப் பொருளாதாரக் கவுன்சில்களின் மூன்றாவது அகில ருஷ்யக் காங்கிரசில் நிகழ்த்திய உரையிலிருந்து. ஜனவரி 27, 1920. 158

பிளாகுஷே-லெபோர்த்தவ்ஸ்கி வட்டத்தின் கட்சியைச் சாராதோர் மகாநாட்டில் நிகழ்த்திய உரையிலிருந்து. பிப்ரவரி 9, 1920. 159

மாஸ்கோ தொழிலாளர் மற்றும் செஞ்சேனை பிரதிநிதிகளின் சோவியத்தின் கூட்டத்தில் நிகழ்த்திய உரையிலிருந்து. மார்ச் 6, 1920 160

உள்ளூர் சோவியத்துக்களுக்கு உழைப்பு மற் றும் பாதுகாப்புக் கவுன்சிலின் உத்தர விலிருந்து . . . . . . . . . . . . . . 162

7. பொருளாதாரக் கட்டுமானத்திலுள்ள அரசுப் பணியாளர்களின் வட்டத்தை விரி வாக்குதல் . . . . . . . . 162

கட்சியைத் தூய்மைப்படுத்துவதைப் பற்றி . 164

ஒன்பதாவது அனைத்து ருஷ்ய சோவியத்துக் களின் காங்கிரசால் ஏற்கப்பட்ட பொருளா தாரப் பணியின் பிரச்சினைகளைப் பற்றிய கட்டளையிலிருந்து. டிசம்பர் 28, 1921 . . . 168

புதிய பொருளாதாரக் கொள்கை சூழ் நிலைகளில் தொழிற்சங்கங்களின் பங்கு, கடமைகளைப் பற்றிய ஆய்வுரைகளின் நகல் 171

7. பாட்டாளி வர்க்க அரசின் பொருளாதார மற்றும் அரசு நிறுவனங்களில் தொழிற் சங்கங்களின் பங்கும் பங்கேற்பும் . . . 171
8. தொழிற்சங்கங்களின் எந்தவிதப் பணிக் கும் வெகுஜனங்களுடன் உள்ள தொடர்பு முக்கிய நிபந்தனை . . . . . . . . . 173
9. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தில் தொழிற்சங்கங்களின் நிலையிலே உள்ள முரண்பாடுகள் . . . . . . . . 175
10. தொழிற்சங்கங்களும் நிபுணர்களும் . . 176
11. தொழிற்சங்கங்களும் தொழிலாளி வர்க் கத்தின் மீதான குட்டி முதலாளித்துவத் தாக்கங்களும் . . . . . . . . . 178

சோவியத் குடியரசின் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிலைமை பற்றி. உலோகத்தொழிலாளி களின் அனைத்து ருஷ்யக் காங்கிரசின் கம்யூனிஸ்டுப் பிரிவின் கூட்டத்தில் ஆற்றிய உரையிலிருந்து. மார்ச் 6, 1922. . . . . . . . . . . . . . . 180

ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் (போல்ஷி விக்) பதினொன்றுவது காங்கிரசில் மத்தியக் கமிட்டியால் சமர்ப்பிக்கப்பட்ட அரசியல் அறிக்கையிலிருந்து. மார்ச் 27, 1922 185

''இரட்டைக்'' கீழ்ப்படிதலையும் சட்டத்தைப் பின்பற்றுதலையும் பற்றி. பொலிட்பீரோ விற்காக தோழர் ஸ்தாலினுக்கு. . . . . . . 199

அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் ஒன்பதாவது கூட்டத்தின் நான்காவது அமர்வில் நிகழ்த்திய உரையிலிருந்து அக்டோபர் 31, 1922 . . . . . . . . 206

காங்கிரசுக்கு கடிதம் என்பதிலிருந்து . . . . . 209

1. . . . . . . . . . . . . . . . . . 209
2. . . . . . . . . . . . . . . . . . 210
3. . . . . . . . . . . . . . . . . . 213

7. (மத்தியக் கமிட்டியின் உறுப்பினர் எண்ணிக்கையை அதிகப்படுத்துவது பற்றிய பகுதிக்கு) . . . . . . . . 215

தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பை (ரப்கிரின்) நாம் எப்படிப் புனரமைக்க வேண்டும் (12வது கட்சிக் காங்கிரசுக்குப் பரிந்துரை) . . . . . . . 217

சொற்பமாயினும் சிறந்ததே நன்று . . . . 225

பதிப்பாளர் குறிப்புகள் . . . . . . . . . . 249

# முன்னுரை

கம்யூனிஸ்டு கட்சி, தொழிலாளி வர்க்கத்தின், உழைக்கும் மாமக்கள் அனைவரின் அரசியல் தலைவனாகவும் ஸ்தாபன அமைப்பாளனாகவும் விளங்குகிறது. தொழிலாளி வர்க்கம் தனது வரலாற்றுக் கடமையை உணரவும் தனது அணிகளை ஒருங்கிணைத்து ஸ்தாபன ரீதியாக ஒன்றுபடுத்தவும் கம்யூனிஸ்டு கட்சி துணை புரிகிறது; அதற்கு விஞ்ஞான பூர்வமான செயல்திட்டத்தை வகுத்துக்கொடுக்கிறது. இவ்வாறாகக் கம்யூனிஸ்டு கட்சி வெகுஜன புரட்சிகர தொழிலாளர் இயக்கத்தை விஞ்ஞான சோஷலிசத்துடன் இணைக்கிறது.

கடந்த கால சமுதாயப் புரட்சிகளைப் போல் புரட்சிகர கம்யூனிச இயக்கம் தானாகவே நிறைவேற்றப்படவில்லை மாறாக இது சுய உணர்வுடன் விஞ்ஞான ரீதியாக அறிந்துணரப்பட்ட மனித சமுதாய வரலாற்று வளர்ச்சியின் புறவய விதிகளின் அடிப்படையில் நடத்தப்படுகிறது. பல மில்லியன் மக்களை இட்டுச் செல்லும் பரவலான இந்த இயக்கத்திற்கு ஈடு இணையில்லை. இந்தத் தொடர்பில் அரசியல் தலைவர்கள், ஸ்தாபன அமைப்பாளர்கள், உழைக்கும் மாமக்களின் வழி காட்டிகள் ஆகியவற்றுக்கான தொண்டர்களைப் பயிற்றுவிக்கும் பிரச்சினை குறிப்பாக மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது.

முதலாளி வர்க்கத்தின் ஆதிக்கத்தை முறியடிப்பதற்காகவும் சோஷலிசம், கம்யூனிசத்தின் முடிவான வெற்றிக்காகவும் முக்கியமான வர்க்கப் போராட்டங்கள் வெடித்துள்ள சகாப்தத்தில் பாட்டாளி வர்க்கத்திற்கான புரட்சித் தொண்டர்களை உருவாக்கி பயிற்றுவித்ததில் மகத்தான பங்கு லெனினைச் சாரும்.

அவரது படைப்புக்கள் அனைத்திலும் கட்சிக்கான, பொருளாதாரத் துறைக்கான தொண்டர்களைப் பயிற்றுவிப்பது, அவர்களை மேம்படுத்துவது, மக்கள் மத்தியில் அவர்களது பாத்திரத்தையும் செல்வாக்கையும் அதிகப்படுத்துவது ஆகியவற்றைப் பற்றிய அக்கறை தெட்டத்தெளிவாக தென்படுகிறது. தொண்டர்களைத் தேர்ந்தெடுப்பதிலும் அவர்களை நடைமுறை ரீதியாகச் சோதித்துப் பார்ப்பதிலும்தான் கட்சியின் மிக முக்கியக் கடமைகளில் ஒன்று அடங்கியுள்ளது என்பதை லெனின் கண்டார். ''தேவையானவர்களைத் தேர்ந்தெடுங்கள், அவர்களின் நடவடிக்கைகளைக் கண்காணியுங்கள்—இதை மக்கள் மதிப்பிடுவார்கள்'' என்றார் லெனின்.

பிரெடெரிக் எங்கெல்ஸ், சமூக-ஜனநாயகக் கட்சியின் வேலைத்திட்ட நகலும் விளக்கமும், ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளின் கடமைகள், என்ன செய்ய வேண்டும்? போன்ற தனது ஆரம்ப காலத்திய படைப்புக்களிலேயே லெனின், உழைக்கும் மாமக்களின் புரட்சிப் போராட்டத்திற்குத் தேவையான தலைவர்களை, குறிப்பாக முழுநேர புரட்சிவீரர்களை—இவர்களின் உதவியின்றி தொழிலாளி வர்க்கம் முதலாளிகளை வெற்றி கொள்ள இயலாது—உருவாக்குவதை முன்னணியில் வைத்தார். ''முழுநேர எழுச்சியாளனாகவும் ஸ்தாபன அமைப்பாளனாகவும் பிரச்சாரகர்த்தாவாகவும் மாற திறமை மிக்க ஒவ்வொரு தொழிலாளிக்கும் உதவி புரிவதே நமது கடமை'' என்று அவர் எழுதினார்.

தொழிலாளி வர்க்கத்தின் மத்தியிலிருந்தே புரட்சித் தொண்டர்களைத் தேர்ந்தெடுத்து முன்மொழிவது இதில் முக்கியக் கடமையாகும் என்று அவர் கருதினார். கட்சியின் தலைமை ஊழியர்கள் மக்களுடன் இடையறாது தொடர்பு உடையவர்களாயும் தன்னலமற்று புரட்சிக்குத் தம்மை அர்ப்பணித்தவர்களாகவும் மக்களின் எல்லையற்ற நம்பிக்கையை உடையவர்களாகவும் விளங்க வேண்டும்.

ஆனால், அவர்கள் மக்களுடன் கலந்து மறைந்து தொழிலாளர்கள் மத்தியில் தானாகத் தோன்றக் கூடிய கோரிக்கைகளை ஆதரிப்பதுடன் தங்களது பணியை மட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று இதற்குப் பொருளாகாது. ருஷ்யாவில் சென்ற நூற்றாண்டின் இறுதியில் சமூக-ஜனநாயகவாதிகளின் மத்தியில் ''பொருளாதாரவாதம்'' என்றழைக்கப்பட்ட சந்தர்ப்பவாத போக்கு தோன்றியது. சமூக-ஜன

நாயகம் ஜார்முறைக்கு எதிரான அரசியல் போராட்டத்தை யும் தொழிலாளர்களுக்கு புரட்சிக் கல்வி புகட்டுவதையும் விடுத்து வேலை நேரத்தைக் குறைத்தல், ஊதிய உயர்வு போன்ற தொழிலாளர்களின் பொருளாதாரக் கோரிக்கை களுக்கான போராட்டத்துடன் தனது நடவடிக்கையை மட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ''பொருளாதார வாதத்தின்'' பிரதிநிதிகள் கருதினர். லெனின் ''பொருளா தாரவாதத்தை'' வன்மையாகக் கண்டித்தார். தொழிலாளர் களின் நிலைமைகளை மேம்படுத்துவதற்கான போராட்டத்தி லும் தொழிலாளி வர்க்கக் கட்சி பங்கு கொள்ள வேண்டும் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. ஆனால், கட்சியின் முக் கியக் கடமை, முதலாவதாக எதேச்சாதிகாரத்தையும் பின் முதலாளித்துவத்தையும் முறியடிப்பதற்கான, சோஷலிசப் புரட்சிக்கும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கும் நடத்தப்படுவதான அரசியல், புரட்சிப் போராட்டமேயாகும். ''முக்கியக் கவனம் தொழிலாளர்களைப் புரட்சிவீரர்களாக உயர்த்துவதற்காக செலுத்தப்பட வேண்டுமேயன்றி, ''பொருளாதாரவாதிகள்'' கூறும்படி நாமே ''தொழிலாளர் வெகுஜனம்'' வரை கீழிறங்கும் வகையில் செலுத்தப்படக் கூடாது'' என்று லெனின் எழுதினார்.

புரட்சிப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டங்களில் இருந்தே, முழுநேரப் புரட்சியாளருக்கும் மக்கள் லட்சியத் திற்கான போராட்ட வீரருக்கும் அவசியமான உயர்ந்த தனிக்குணங்களைக் கம்யூனிஸ்டுகளுக்கு புகட்ட வேண்டும் என்று லெனின் போதித்தார். சமூக-ஜனநாயகவாதியின் இலட்சியம் தொழிற்சங்கத்தின் செயலாளனாக இருத்தல் கூடாது; மாறாக, பொதுஜனங்களின் மத்தியில் எப்போதும் இருக்கக் கூடிய மக்கள் மாமேதையாக இருக்க வேண்டும். புரட்சிவீரன்—கம்யூனிஸ்டு தனது பிரஜைக்குரிய கடமை யின் முழு முக்கியத்துவத்தையும் ஒட்டுமொத்தமாக புரட்சி இயக்கத்தின் முழுப்பொறுப்பையும் உணருகிறான்.

தொழிலாளி வர்க்கத்தின், மக்களின் நலன்களை, குறு கிய தனிப்பட்ட மற்றும் வேலைக்குழுக்களின் நலன்களுக்கு மேலாக வைக்கும் கம்யூனிஸ்டுகளின் திறமையை லெனின் உயர்வாக மதிப்பிட்டார். உயர்ந்த ஸ்தாபனரீதியான கட்டுக் கோப்பிற்காகவும் ஒழுக்கத்திற்காகவும், எதிர்காலத்தை நோக்கி வீறுநடை போடுபவரின் மீது வரலாற்றால் தவிர்க்க

இயலாது சுமத்தப்படும் சோதனைகளையும் இன்னல்களையும் பொறுத்துக்கொள்ளும் திறமைக்காகவும் அவர் போரிட்டார்.

அதே சமயம், பதவிமோகம், தன்னலம் மற்றும் சகதோழர்களுடனான உறவில் மரியாதையின்மை ஆகியவற்றுக்கெதிரான சகியாமையைக் கம்யூனிஸ்டுகளுக்கு புகட்ட வேண்டிய தன் அவசியத்தைப் பற்றி சர்வதேசப் பாட்டாளி வர்க்கத் தலைவன் எச்சரித்தார். கட்சி ஜனநாயகத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை மீறுவதைக் குறிக்கக்கூடிய, உழைப்பாளிகள் விடுதலை இயக்கத்தின் நலன்களுக்கு பெரும் கேடு விளைவிக்கக்கூடிய கர்வம், ''கம்யூனிச கர்வம்'' போன்ற ''குணங்கள்'' வெளிப்படுவதை அவர் கடுமையாகக் கண்டித்தார்.

கட்சித் தொண்டர்களை சரிவரத் தேர்ந்தெடுத்து கல்வி புகட்டுவதற்கான முக்கிய நிபந்தனை ஜனநாயக மத்தியத்துவத்தைப் பற்றிய லெனினியக் கோட்பாடுகளைக் கண்டிப்பாக பின்பற்றுவதாகும்; இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள லெனினின் பல படைப்புக்கள் இதற்கு அர்ப்பணிக்கப்பட்டவை.

கட்சி கீழிருந்து மேல் வரை ஜனநாயக ரீதியில் கட்டப்பட்டிருப்பதுதான் உள்கட்சி ஜனநாயகத்திற்கு வழிவகை செய்கிறது என்று லெனின் சுட்டிக்காட்டினார். கட்சியின் எல்லா உறுப்பினர்களும் கட்சிப் பணிகளை சம உரிமையுடன் செய்கின்றார்கள் என்பது இதன் பொருள். கட்சியில் எல்லாப் பதவிகளில் உள்ளவர்களும் தலைமை உறுப்புக்களும் மேலிருந்து நியமிக்கப்படுவதில்லை, மாறாக, தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவர்கள் கட்சி உறுப்பினர்கள் முன்னும் மக்களின் முன்னும் தங்களது நடவடிக்கைகளைப் பற்றி அவ்வப்போது அறிக்கை சமர்ப்பிக்க கடமைப்பட்டவர்களாகின்றார்கள். கட்சித் தலைமைப் பதவிகளுக்கு முன்மொழியப்பட்ட தலைவர்கள் இப்பதவிகளைத் தற்காலிகமாகத்தான் வகிக்கின்றார்கள்; குறிப்பிட்ட காலம் முடிந்ததும் இவர்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படலாம்.

விமரிசன சுதந்திரம், கட்சியால் திட்டமிடப்படும் நடவடிக்கைகளைப் பற்றிய விவாத சுதந்திரம் ஆகியவற்றுக்கும் முடிவுகளை பொதுவாக உருவாக்கி ஏற்பதற்கும் ஜனநாயக மத்தியத்துவம் வழிகோலுகிறது. கட்சித் தலைமையைப்

பற்றிய எல்லா விஷயங்களும் பெரும்பான்மை வாக்கின் மூலம் தீர்மானிக்கப்படும். கட்சிக் காங்கிரசுகளால் ஏற்கப் பட்ட எல்லா முடிவுகளையும் நிறைவேற்றுவது கம்யூனிஸ்டு களுக்கு கட்டாயமானதாகும். நடவடிக்கைகளின், மன வுறுதியின் ஒற்றுமையும் கண்டிப்பான கட்சிக் கட்டுபாட்டு போதனையும் இதன் மூலம் சாத்தியமாகிறது. எல்லாக் கட்சி நடவடிக்கைகளிலும் சுறுசுறுப்பாக பங்கு கொள்ளும் வாய்ப் பையும் மக்களின் உண்மையான தலைவனாக தன்னைப் பயிற்று வித்துக் கொள்ளும் வாய்ப்பையும் கட்சியின் ஒவ்வொரு உறுப்பினனுக்கும் ஜனநாயகம் அளிக்கிறது என்பதில்தான் அதன் முக்கியத்துவம் அடங்கியுள்ளது.

பரந்த ஜனநாயகம், திட்டவட்டமான ஸ்தாபனக்கோப்பு, கடுமையான கட்சிக் கட்டுப்பாடு ஆகியவற்றின் உள்ளார்ந்த இணைப்பு, விவாத சுதந்திரம், நடவடிக்கைகளின் முழு ஒற்றுமையின் அடிப்படையில் விமரிசனம், சுயவிமரிசனத்தின் பரவலான வளர்ச்சி—இவைகள்தான் கட்சித் தலைவர்களாகப் போகின்றவர்களின் தோற்றத்திற்கும் வெற்றிகரமான சேவைக்கும் உரிய சூழ்நிலைகள்.

தொழிலாளர் கட்சியில் கட்டுப்பாட்டின் உள்ளடக்கத்தை வரையறுத்து லெனின் எழுதுகிறார்: ''நடவடிக்கைகளின் ஒற்றுமை, விவாதம் மற்றும் விமரிசனத்திற்கான சுதந்திரம் —இதுதான் நமது வரையறை. இத்தகைய கட்டுப்பாடுதான் முற்போக்கு வர்க்கத்தின் ஜனநாயகக் கட்சிக்குத் தகுந்தது.''

புரட்சிப் போராட்டத்தின், கம்யூனிசக் கட்டுமானத்தின் எல்லாக் கட்டங்களிலும் கம்யூனிஸ்டுகளை ஸ்தாபனக் கட்டுக் கோப்பு, உறுதியான கட்சி கட்டுப்பாடு ஆகியவற்றின் அடிப் படையில் பயிற்றுவிக்க வேண்டுமென லெனின் கோரினார். "'தொழிலாளி வர்க்கத்தின் சக்தி—ஸ்தாபனம், ஸ்தாபன மின்றி பாட்டாளி மக்கள் ஒன்றுமேயில்லை. ஸ்தாபனரீதி யாக அவர்கள் எல்லாமே'' என்று லெனின் போதித்தார்.

அதே சமயம், சிந்தனையற்ற சம்பிரதாயமான கீழ் படிதலுக்குப் பாடுபடாமல், மாறாக, செய்யும் காரியங்களின் அவசியத்திலும் சரித்தன்மையிலும் ஒவ்வொரு கட்சி உறுப்பினனும் கொண்டுள்ள நம்பிக்கையின் அடிப்படை யிலான, சுயமான கட்டுப்பாட்டிற்காகப் பாடுபட வேண்டுமென லெனின் கூறினார். தொண்டர்களின் உறுதியான சித்தாந்த பயிற்சியின் அடிப்படையில்தான் இத்தகைய

நம்பிக்கையை அடைய முடியும்; இது எப்போதுமே கம்யூனிஸ்டு கட்சியின் குறிப்பான அக்கறையை பெற்றதாக இருந்து வந்துள்ளது.

மார்க்சிய-லெனினிய புரட்சித் தத்துவத்தைப் படைப்பாற்றலோடு படிப்பதும் அதை ஆழ்ந்து புரிந்து கிரகிப்பதும் தான் பாட்டாளி வர்க்க புரட்சிவீரனின் முதற் கடமையாக இருந்துள்ளது, இன்னமும் இருக்கிறது. விஞ்ஞான கம்யூனிசம் கனவோ அல்லது ஒருசில தனிமேதைகளின் கற்பனையோ அல்ல; அது ஒரு கட்டுக்கோப்பான உலகக் கண்ணோட்டமாகும் என்று லெனின் எழுதினர். இது எல்லாத் துறைகளிலும் மனித ஞானம் அடைந்துள்ள திட்டவட்டமான விஞ்ஞான விவரங்களை ஆதாரமாகக் கொண்டது. ''எப்போது ஒருவன் மனிதகுலம் உருவாக்கிய எல்லா செல்வத்தையும் பற்றிய ஞானத்தால் தனது ஞாபகசக்தியை வளமூட்டிக் கொள்கிருனே அப்போதுதான் அவன் கம்யூனிஸ்டாக முடியும்'' என்ற லெனினின் புகழார்ந்த வார்த்தைகள் அனைவருக்கும் தெரிந்ததே.

உழைப்பாளிகள் நடைமுறையில் சோஷலிசக் கட்டுமானத்தைத் துவக்கிய சூழ்நிலைகளில் சித்தாந்தப் பயிற்சிப் பணியின் புதிய உள்ளடக்கத்தை லெனின் காண்பித்தார். கம்யூனிஸ்டிற்கு ''சாதாரண எழுத்தறிவு போதுமானதல்ல.'' ''கம்யூனிசத்தைக் கற்க வேண்டும், கம்யூனிச சமுதாயத்தை உருவாக்க'' கற்றுக் கொள்ள வேண்டும் என்று லெனின் வலியுறுத்தினர். கம்யூனிசத்திற்கான அன்றாட நடைமுறைப் போராட்டமின்றி, இதை உருவாக்குவதில் நிலையாக தனிப்பட்ட முறையில் பங்குகொள்ளாமல் இதை அடைய முடியாது. ''வேலை இல்லாமல், போராட்டமில்லாமல் கம்யூனிசத்தைப் பற்றிய புத்தக அறிவு என்பது... ஒன்றுமே இல்லாததாகும்'' என்கிருர் லெனின்.

தொழிலாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தை வென்று பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிலைநாட்டப்பட்டபின் தொண்டர்களைப் பற்றியப் பிரச்சனை குறிப்பான கடுமையுடன் முன்நின்றது. போல்ஷிவிக்குகளின் கட்சி நாட்டை நிர்வகிக்க கற்றுக் கொள்ள வேண்டியிருந்தது, அதாவது ''புதிய அமைப்பை வழிகாட்டி ஒழுங்குப்படுத்த, முதலாளிகள் இன்றி, முதலாளிகளுக்கு எதிரான பொது வாழ்வின் கட்டுமானத்தில் அனைத்து உழைப்பாளிகள், சுரண்டப்படு

பவர்களின் தலைவனாக, வழிகாட்டியாக, ஆசிரியராக இருக்க'' வேண்டியிருந்தது.

இந்த நேரத்தில் (1917ஆம் ஆண்டு நவம்பர் முதல் 1923 மார்ச் வரை) லெனின், கட்சி மற்றும் அரசு தலைமைப் பதவிகள், சோஷலிசக் கட்டுமானம் ஆகியவற்றில் தொண்டர்களின் பணிகளைப் பற்றிய பிரச்சினைகள் குறித்து எழுதினார். அவர் அரசு நிர்வாக அமைப்பைப் பற்றிய திட்டவட்டமான செயல்திட்டத்தை தீட்டினார்; தொண்டர்கள் பிரச்சினையின் தீர்விற்கான வழிகளையும் தொண்டர்களை உருவாக்குதல், அவர்களைத் தேர்ந்தெடுத்தல், தக்க இடத்தில் வைத்தல் ஆகியவற்றைப் பற்றியக் கோட்பாடுகளையும் கோடிட்டுக் காண்பித்தார்.

பொறுப்பான கட்சி, அரசுப் பதவிகளுக்கு ஆட்களை முன்மொழியும்போது அவர்களின் அரசியல் மற்றும் காரிய ரீதியான குணநலன்களை கவனத்தில் கொள்ள வேண்டும் என்றார் லெனின். எந்த ஒரு தலைமைப் பொறுப்பில் உள்ளவரும் திடநம்பிக்கையுள்ள கம்யூனிஸ்டாகவும் அதே சமயம் விசேஷ ஞானம், அனுபவம், திறமைகள் உடையவராயும் இருக்க வேண்டும் என்பது இதன் பொருள்.

''...எப்படிப்பட்ட நேர்மையும் எப்படிப்பட்ட கட்சிச் செல்வாக்கும், முக்கியமானதாகிய செய்யும் காரியத்தில் உள்ள அறிவை மாற்றாது'' என்று சுட்டிக் காட்டினார் லெனின்.

முக்கிய தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களின் தேர்தல், அவர்களின் மாற்றம், அறிக்கை சமர்ப்பித்தல் மற்றும் அவர்களின் நடவடிக்கைகளை மக்கள் கண்காணித்தல் போன்ற ஜனநாயகக் கோட்பாடுகள் கண்டிப்பாகப் பின்பற்றப்படுவதற்கு அவர் மிகுந்த முக்கியத்துவம் தந்தார்.

தலைவனின் நடவடிக்கைகளைக் கீழிருந்து மக்கள் பரவலாகக் கண்காணிப்பதில் அதிகாரவர்க்க மனப்பாங்கை அகற்றும் முக்கிய சாதனத்தை லெனின் கண்டார்; அதிகாரவர்க்க மனப்போக்கிற்கு எதிரான போராட்டத்திற்கு அவர் பெரும் கவனம் செலுத்தினார். ஜனநாயக அமைப்புக்களால் அனுமதிக்கப்பட்டதற்கு அதிகமான அதிகாரத்தை தனது கைகளில் குவித்துக்கொள்ளும் நாட்டம், பதவி வேட்கை, மக்களுக்கு கல்விபுகட்டுவதை விடுத்து கண்மூடித்தனமான அதிகாரம் செலுத்தல், கர்வம், மக்களிடமிருந்து தள்ளி

யிருந்தல் போன்ற அதிகாரவர்க்க மனப்போக்கின் எந்த ஒரு பிரதிபலிப்பையும் லெனின் மிகப்பெரும் குற்றம் எனக் கருதினர்; இவைகளுக்கு எதிராக கம்யூனிஸ்டுகள் இடையருது போராட வேண்டுமென்ருர். தலைவர்கள் கட்சியின் கொள்கைகளை விளக்கியும் தங்களது நடவடிக்கைகளைப் பற்றிய அறிக்கைகளை சமர்ப்பித்தும் தொடர்ந்து மக்கள் முன் உரையாற்ற வேண்டும் என்ருர் லெனின். அவர்கள் மக்களின் மனப்போக்கை அறிந்திருக்க வேண்டும்; பொது நலன்களை உத்தேசித்து அதன் மேல் தாக்கம் செலுத்தும் திறமையுடையவர்களாயிருக்க வேண்டும்.

முன்னணித் தொண்டர்கள் மார்க்சியத்திலிருந்து பிறழ்வதைச் சகித்துக் கொள்ளாமை, உயர்ந்த கோட்பாட்டு நெறி, புதியதை உணரும் தன்மை, விமரிசனத்திற்கும் சுயவிமரிசனத்திற்கும் தக்க கவனம் செலுத்துதல் போன்ற குணங்களை உடையவர்களாய் இருக்க வேண்டும்.

சோஷலிசக் கட்டுமானத்தில் கட்சிக்குள்ள தலைமைப் பாத்திரத்தை மறுக்கும் கட்சி விரோதிகளின் முயற்சிகளையும் கட்சித் தலைமையை கலாச்சார, கல்வித் துறைகளோடு மட்டுப்படுத்த செய்யப்பட்ட முயற்சிகளையும் தோலுரித்துக் காட்டியதில்தான் லெனினின் மாபெரும் தகுதி அடங்கியுள்ளது. உழைப்பாளிகளின் அரசு மற்றும் சமூக ஸ்தாபனங்களை, உதாரணமாக தொழிற்சங்கங்களை, கட்சிக்கு மேலாக வைக்க விரும்பிய திருத்தல்வாதிகளின் முயற்சிகளை அவர் மறுத்தார். கட்சிக்கும் தொழிற்சங்கங்கள், கூட்டுறவுகள், இளங் கம்யூனிஸ்டு சங்கம் போன்ற உழைப்பாளிகளின் வெகுஜன சமூக ஸ்தாபனங்களுக்கும் இடையேயுள்ள பரஸ்பர உறவுகளுக்கான விஞ்ஞான அடிப்படைகளை லெனின் வகுத்தார். வெகுஜன ஸ்தாபனங்களின் மேல் உள்ள கட்சியின் சித்தாந்த மற்றும் ஸ்தாபனச் செல்வாக்கின் தளர்ச்சி அவற்றின் தலைமையின் ஐக்கியத்தையும் எதிர்காலச் சாத்தியக்கூறுகளையும் இல்லாதவாறு செய்துவிடும்; இது அவற்றின் ஸ்தாபனக் கலைப்பிற்கு மட்டுமே கொண்டுவிடக்கூடும் என்று லெனின் சுட்டிக் காட்டினுர்.

சோஷலிசக் கட்டுமானம், அரசிலும் சமுதாயத்திலும் கட்சியின் தலைமைப் பாத்திரம் அப்படியே இருந்தால் மட்டும் போதாது, இன்னமும் வலுப்படுத்தப்பட வேண்டுமெனக் கோருகிறது என்ருர் லெனின். இது இல்லாமல், புரட்சியில்

வெற்றிவாகை சூடிய தொழிலாளி வர்க்கத்தால் தன் முன் நிற்கக் கூடிய வர்க்கப் போராட்டத்தின், ஆக்கப் பணியின் எந்த ஒரு புதிய பிரச்சினையையும் வெற்றிகரமாகத் தீர்க்க முடியாது.

அனைத்து கம்யூனிஸ்டுகளையும் பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதத்திற்கு விசுவாசமான மனப்போக்கில் கல்விபுகட்டுவதற்கு லெனின் குறிப்பான முக்கியத்துவம் அளித்தார். ''மூலதனம் ஒரு சர்வதேச சக்தி. இதை வெல்வதற்குத் தொழிலாளிகளின் சர்வதேச கூட்டும், அவர்களின் சர்வதேச சகோதரத்துவமும் அவசியம். நாம் சர்வதேசியவாதிகள்'' என்று லெனின் எழுதினர்.

தனது நாட்டில் புரட்சி இயக்கத்தின், புரட்சிப் போராட்டத்தின் வளர்ச்சிக்கான தன்னலமற்ற பணி, மற்ற எல்லா நாடுகளிலும் புரட்சிப் போராட்டத்திற்கு ஆதரவு என்பதைத் தான் சர்வதேசியவாதம் நடைமுறை ரீதியாகக் குறிக்கிறது என்று லெனின் போதித்தார். இதில் எல்லாவிதமான சந்தர்ப்பவாதப் போக்குகளுக்கும் எதிரான போராட்டத்திற்கு அவர் முதன்மையான முக்கியத்துவம் அளித்தார். இந்நூலில் இடம்பெற்றுள்ள சர்வதேசியவாதம், உலகக் கம்யூனிச இயக்கத்தின் ஐக்கியத்தைப் பற்றிய லெனினியக் கோட்பாடுகள் மிக நம்பிக்கையான அளவுகோலாகும்; இதன் உதவியால் ஒவ்வொரு கம்யூனிஸ்டு கட்சியும் தனது அரசியல் கொள்கையை சரிபார்த்துக் கொள்ளலாம்; வலதுசாரி சந்தர்ப்பவாதிகளுக்கும் ''இடதுசாரி'' துர்ச்சாகசக்காரர்களுக்கும் பதிலடி தரலாம்.

தொழிலாளர் இயக்கத்தின் தனிப்பட்ட பிரிவுகளில் தோன்றக் கூடிய கருத்து மாறுபாடுகளையும் தவறுகளையும் சமாளிக்க வேண்டியதன் அவசியத்தையும், இயக்க ஒருமைப்பாட்டின் நலன்களுக்காக அவற்றை சர்வதேச அளவில் கவனமாக விவாதித்து கருத்துப் பரிமாறிக் கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் லெனின் வலியுறுத்தினர். அதே நேரத்தில் அவர், புரட்சிகர மார்க்சியத்தின் மாபெரும் இலட்சியங்களில் இருந்து விலகுபவர்களுடனும் அதை இழிவுபடுத்துபவர்களுடனும் சமரசம் செய்துகொள்வதை சகித்துக்கொள்ளாத மனநிலையில் கட்சித் தொண்டர்களைப் பயிற்றுவித்தார். ஒற்றுமை என்பது ஒரு மாபெரும் செயலாகும்; ஆனல் ''மார்க்சியவாதிகளின் ஒற்றுமைதான் வேண்

டுமே தவிர, மார்க்சிய எதிரிகளுடனும் அதை திரிப்பவர்களுடனுமான ஒற்றுமை தேவையில்லை'' என்று லெனின் போதித்தார்.

லெனினிய நம்பிக்கையும் சர்வதேச புரட்சி இயக்கத்தின் ஒருமைப்பாட்டைப் பிளவுபடுத்துபவர்களுக்கு எதிரான போராட்டத்தில் உள்ள உற்சாகமும் எந்த ஒரு உண்மையான மார்க்சிய-லெனினியவாதிக்கும் தக்க உதாரணமாகும்.

இந்நூல் பரவலான வாசகர்களுக்கானது. கட்சியை உருவாக்கி அதன் உறுப்பினர்களை ஒன்றுதிரட்டி உழைப்பாளர்களின் மேல் உள்ள செல்வாக்கை உறுதிப்படுத்தும் முகமாக லெனின் ஆற்றிய மாபெரும் பணி இந்நூலில் பிரதிபலிக்கிறது. லெனினியப் படைப்புக்கள், புரட்சிகர மார்க்சியத்தின் சரித்திரத்திலும் தத்துவத்திலும் ஆர்வமுள்ள அனைவருக்கும் பெரும் கல்வி புகட்டும், போதிக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குவதோடன்றி, எல்லா மார்க்சிய-லெனினியவாதிகளுக்கும், அவர்களின் பணிக்கேற்ற வழிகாட்டியாகவும் விளங்குகின்றன.

அ. மிரோஷ்னிக்கவ்

# பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர்களுக்கும் சோஷலிஸ்டுகளுக்கும் "போராட்டச் சங்கத்தின்" பேரில்[1]

பீட்டர்ஸ்பர்க் புரட்சியாளர்கள் கடினமான காலத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்ருர்கள். சமீபத்தில் உதித்தெழுந்து, மிகுந்த சக்தியுடன் வெளிப்பட்ட தொழிலாளர் இயக்கத்தை நசுக்க அரசாங்கம் தனது பலம் முழுவதையும் திரட்டிக்கொண்டு நிற்கிறது. அசாதாரணமான அளவில் கைதுகள் நடைபெறுகின்றன, சிறைகள் நிரம்பி வழிகின்றன. அறிவுஜீவிகளையும், ஆண்களையும் பெண்களையும் கைபற்றுகின்றனர், தொழிலாளர்களைப் பிடித்து, கும்பல் கும்பலாக நாடுகடத்துகின்றனர். மூர்க்கத்தனமான கோபத்தில் தனது விரோதிகளின் மேல் பாயும் போலீஸ் அரசாங்கத்தின் புதிய புதிய பலிகளைப் பற்றிய செய்திகள் வெளிவராத நாளே கிடையாது. ருஷ்யப் புரட்சி இயக்கத்தின் புதிய போக்கு வலிவுற்று, தனது காலில் நிற்பதை தடுத்து நிறுத்த அரசாங்கம் விழைகிறது. அரசு வழக்கறிஞர்களும் போலீஸ்காரர்களும் தாங்கள் ''போராட்டச் சங்கத்தை''[2] ஏற்கெனவே நசுக்கிவிட்டதாகப் பெருமையடித்துக் கொள்கின்ருர்கள்.

இந்தத் தற்பெருமை பொய்யானதாகும். எல்லாவித அடக்குமுறைகளுக்குமிடையே ''போராட்டச் சங்கம்'' முழுமையாக உள்ளது. பரவலான கைதுகள், தொழிலாளர்கள் மத்தியிலும், சோஷலிஸ்டு அறிவுஜீவிகள் மத்தியிலும் மாபெரும் பிரச்சார ஆயுதமாக இருந்து தங்களது பணியை ஆற்றி வருகின்றன என்பதையும், ருஷ்ய பாட்டாளிக்காகவும், ருஷ்ய மக்கள் அனைவருக்காகவும் போராட புத்துணர்ச்சியோடு தயாராயுள்ள புதியவர்கள் மாண்டுபோன புரட்சி வீரர்களுக்குப் பதிலாக முன் வருகின்ருர்கள் என்பதையும் நாம் ஆழ்ந்த திருப்தியுடன் குறிப்பிடுகின்ரும். இழப்பின்றி

போராட்டம் இருக்க முடியாது, ஜார் வம்ச காவல்காரர்களின் மிருகத்தனமான சோக கிதத்திற்கு நாம் அமைதியாகப் பதில் அளிக்கின்றோம்: ஆம்! புரட்சிவீரர்கள் மாண்டு போயினர்—-புரட்சி நீடூழி வாழ்க!

அடக்கு முறைகள் உக்கிரப்படுத்தப்பட்டதன் விளைவாய், ''போராட்டச் சங்கத்தின்'' ஒரு சிலத் தனிப்பட்ட நடவடிக்கைகள்தான் தற்காலிகமாக பலவீனப்பட்டன, ஏஜெண்டுக்கள், பிரச்சாரகர்த்தாக்களின் தற்காலிகப் பற்றுக்குறை ஏற்பட்டது. இந்தப் பற்றுக்குறைதான் தற்போது உணரப்படுகிறது; புரட்சிக்குச் சேவைபுரிய தனது சக்திகளைச் செலவிடத் தயாராயுள்ள எல்லா சுய உணர்வு மிக்க தொழிலாளர்களுக்கும் எல்லா அறிவுஜீவிகளுக்கும் வேண்டுகோளை விடுக்க இதுதான் எம்மைத் தூண்டுகிறது. ''போராட்டச் சங்கத்துக்கு'' ஏஜெண்டுக்கள் தேவை. எவ்வளவு சிறிய புரட்சிகர நடவடிக்கையாய் இருந்தாலும் சரி, அதில் பங்குகொள்ள விருப்பமுள்ள எல்லா குழுக்களும் தனிப்பட்ட மனிதர்களும் இதைப் பற்றி ''போராட்டச் சங்கத்துடன்'' தொடர்பு உள்ளவர்களுக்கு அறிவிக்கட்டும் (ஒருவேளை எதாவது ஒரு குழுவிற்கு இத்தகைய ஆட்களைக் கண்டுபிடிக்க முடியாது போனால்—இவ்வாறு நடக்க அநேகமாக வழியில்லை—அந்தக் குழு வெளிநாட்டில் உள்ள ''ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளின் சங்கத்''தின் மூலம் தொடர்பு கொள்ளலாம்). எல்லா விதமான வேலைகளுக்கும் ஆட்கள் தேவைப்படுகின்றார்கள்; புரட்சிவீரர்கள் புரட்சிப் பணியின் தனிப்பட்ட நடவடிக்கைகளில் எவ்வளவுக்கெவ்வளவு கண்டிப்புடன் தேர்ச்சி பெறுகின்றார்களோ, அவர்கள் இரகசிய நடவடிக்கைகளையும் தங்களது காரியத்தை மூடிமறைக்கும் வழிகளையும் எவ்வளவுக்கெவ்வளவு உன்னிப்பாகச் சிந்தித்துப் பார்க்கின்றார்களோ, எவ்வளவுக்கெவ்வளவு தியாக மனப்பான்மையோடு அவர்கள் சிறிய, மறைவான, ஒரு பகுதியான வேலையில் தங்களை ஈடுபடுத்திக் கொள்கின்றார்களோ, அவ்வளவுக்கவ்வளவு காரியம் முழுவதும் நம்பிக்கையானதாக இருக்கும், போலீசுக்கும் ஒற்றர்களுக்கும் புரட்சியாளர்களை வெளிப்படுத்துவது அவ்வளவுக்கவ்வளவு கடினமானதாக இருக்கும். அரசாங்கம், அரசு எதிர்ப்பு ஆட்களின் இன்றையப் பிறப்பிடங்களை மட்டுமின்றி, இவ்வாறான புதிய பிறப்பிடங்கள் தோன்றக்கூடிய வாய்ப்பு உள்ள புதிய இடங்களையும் தனது

ஏஜெண்டுக்களைக் கொண்டு ஏற்கெனவே சுற்றிச் சூழ்ந்துள்ளது. புரட்சிவீரர்களை வேட்டையாடும் தனது சேவகர்களின் நடவடிக்கைகளை அரசாங்கம் இன்னமும் விரிவாகவும் ஆழமாகவும் தொடர்ந்து வளர்த்து வருகின்றது, புதிய முறைகளைக் கண்டுபிடிக்கிறது, புதிய ஆத்திர மூட்டுபவர்களைக் உருவாக்குகிறது, அச்சுறுத்தல், பொய் சாட்சியங்களை முன்வைத்தல், திருட்டுக் கையெழுத்துக்கள், போலியான துண்டுப்பிரசுரங்களை வீசுதல் போன்ற இன்னும் பல நடவடிக்கைகளின் மூலம் கைதுசெய்யப்பட்டவர்களின் மேல் நிர்ப்பந்தம் செலுத்த முற்படுகிறது. புரட்சிகரக் கட்டுப்பாட்டையும் ஸ்தாபன அமைப்பையும் இரகசிய நடவடிக்கை முறைகளையும் வளர்த்து வலுப்படுத்தாமல் அரசாங்கத்துடன் போரிட இயலாது. இரகசிய நடவடிக்கைகளுக்கு, தனிப்பட்ட நடவடிக்கைகளில் அந்தந்த குழுக்கள், நபர்களின் தேர்ச்சியும் பின்னர் ஒன்றிணைக்கும் பொறுப்பை ''போராட்டச் சங்கத்''தின் மத்தியக் கருவில் உள்ள ஒரு சில உறுப்பினர்களுக்கு அளிப்பதும் முதன்முதலாக அவசியம். புரட்சிப் பணியின் தனிப்பட்ட நடவடிக்கைகள் முடிவின்றி விதவிதமானவைகள்: பிரச்சாரத்திற்காக நீதிமன்றத்திற்கு இழுக்க இயலாதபடி திறமையாக உரையாற்றவல்ல, தேவையானவற்றில் ஒரு பகுதியை மட்டும் கூறி, பிற பகுதிகளைக் கூறும் சாத்தியத்தை மற்றவர்களுக்குத் தரும் திறமையுடன் உரையாற்றவல்ல சட்டபூர்வமான பிரச்சாரக் கர்த்தாக்கள் தேவைப்படுகின்றனர். நூல்களையும் துண்டுப் பிரசுரங்களையும் விநியோகிப்பவர்கள் தேவைப்படுகின்றனர். தொழிலாளர் குழுக்களையும் சங்கங்களையும் கட்டுபவர்கள் தேவைப்படுகின்றனர். எல்லா ஆலைகள், தொழிற்சாலைகளில் இருந்தும் அனைத்துச் சம்பவங்களையும் பற்றியச் செய்திகளையும் கொண்டுவரும் நிருபர்கள் தேவைப்படுகின்றனர். ஒற்றர்களையும் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களையும் கண்காணிக்க ஆட்கள் தேவைப்படுகின்றனர். இரகசியச் சந்திப்புக்களுக்கான வீடுகளை ஏற்பாடு செய்பவர்கள் தேவைப்படுகின்றனர். நூல்களை கொண்டு செல்லவும் தகவல்களை எடுத்துச் செல்லவும் எல்லாவிதமான தொடர்புகளுக்கும் ஆட்கள் தேவைப்படுகின்றனர். நிதி வசூலிப்பவர்கள் தேவைப்படுகின்றனர். தொழிலாளர்களுடனும் அன்றாடத் தொழிற்சாலை வாழ்க்கையுடனும் நிர்வாகத்தினருடனும்

(போலீசுடனும், ஆலேயின் சோதனைப் பிரிவுடனும்) தொடர்புள்ள ஏஜெண்டுக்கள் அறிவுஜீவிகள் மத்தியிலும் உத்தியோகஸ்தர்கள் மத்தியிலும் தேவைப்படுகின்றனர். பல்வேறு ருஷ்ய நகரங்களுடனும் மற்ற நாடுகளுடனும் தொடர்பு கொள்ள ஆட்கள் தேவைப்படுகின்றார்கள். எல்லாவிதமான நூல்களையும் இயந்திர கதியில் பிரதியெடுப்பதற்கான பல்வேறு முறைகளை அமைக்கும் நபர்கள் தேவைப்படுகின்றனர். நூல்களையும் மற்றப் பொருட்களையும் பாதுகாத்து வைப்பதற்கு ஆட்கள் தேவைப்படுகின்றார்கள். இதுபோல் இன்னும் பலப்பல விஷயங்களுக்கு ஆட்கள் தேவைப்படுகின்றனர். தனிப்பட்ட நபர்களும் குழுக்களும் பொறுப்பேற்கும் காரியம் எவ்வளவுக்கெவ்வளவு முழுக்காரியத்தின் சிறிய பாகமாக இருக்கின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு இந்தக் காரியத்தை நன்கு சிந்தித்து நிறைவேற்றவும் தோல்வியிலிருந்து இதைக் காப்பாற்றுவதற்கான உத்திரவாதத்தைத் தரவும் இரகசிய நடவடிக்கைகளின் எல்லா அம்சங்களையும் விவாதிக்கவும் போலீசின் விழிப்புணர்ச்சியை ஏமாற்றும் எல்லா வழிகளையும் பயன்படுத்தி அவர்களைக் குழப்பத்தில் ஆழ்த்தவும் வாய்ப்புக்கள் அதிகம்; அவ்வளவுக்கவ்வளவு காரியத்தின் வெற்றி நம்பிக்கையானதாயிருக்கும்; போலீசுக்கு புரட்சி வீரரையும் ஸ்தாபனத்துடன் அவருக்கு உள்ள தொடர்பையும் கண்டுபிடிப்பது கடினமானதாயிருக்கும்; மாண்டு போன ஏஜெண்டுக்களுக்கும் உறுப்பினர்களுக்கும் பதிலாக இயக்கம் முழுவதற்கும் சேதமின்றி புதிய ஆட்களை அமர்த்துவது புரட்சிகரக் கட்சிக்கு அவ்வளவுக்கவ்வளவு எளிதாயிருக்கும். இவ்வாறான திறமையைப் பெறுவது கடினமானது என்பது நமக்குத் தெரியும், கடினமானது ஏனெனில் இதற்குப் பெரும் பொறுமையும் தியாகமனப்பான்மையும் தேவை; வெளிப்படையாக நன்கு தெரியாத, ஒரே மாதிரியான, தோழர்களுடன் தொடர்புகளற்ற இந்த வேலைக்கு முழுச் சக்தியும் தேவைப்படுகிறது; இது புரட்சியாளர்களின் வாழ்க்கையை வறண்ட, கண்டிப்பான கட்டுத்திட்டங்களுக்கு உட்படுத்துகிறது. ஆனால் இத்தகைய சூழ்நிலைகளில்தான் ருஷ்யாவில் புரட்சி இயக்கத்தின் முன்னோடிகள் மகத்தான காரியங்களை, அவைகளின் பன்முகத் தயாரிப்பிற்காக பல ஆண்டுகளைச் செலவிட்டுப்பின், நிறைவேற்றினர்; முந்தைய தலைமுறையினரின் புரட்சிவீரர்களுக்கு இருந்ததைவிட

சற்றும் குறையாத தியாகமனப்பான்மை சமூக-ஜனநாயக வாதிகளுக்கு இருக்கும் என நாம் பெரிதும் நம்புகின்றோம். நாம் முன்மொழியக் கூடிய முறையின்படி, ''போராட்டச் சங்கத்''துக்கு தனது சேவைகளைத் தரத் தயாராயுள்ள நபரை அல்லது குழுவைப் பற்றிய நம்பிக்கையான தகவல் களைச் சேகரித்து, பிறகு அவரைத்தனிப்பட்ட பொறுப்புக் களில் சோதித்துப் பார்க்கும் ஆரம்பப் பயிற்சிக் காலம் புரட்சி இயக்கத்திற்குத் தனது சக்திகளைத் தரத் தயாராக உள்ள பலருக்கு மிகக் கடுமையானதாக இருக்கும் என்பது நமக்குத் தெரியும். ஆனால் இத்தகைய பூர்வாங்க சோதனை களின்றி நவீன ருஷ்யாவில் புரட்சி இயக்கத்தை நடத்துவது இயலாததாயிருக்கும்.

இத்தகைய வேலை முறையை நமது புதிய தோழர்களுக்கு சிபாரிசு செய்யும் நாம், புரட்சி இயக்கத்தின் வெற்றிக்கு இத்தகைய வேலை முறையில்தான் அதிகபட்ச உத்திரவாதம் உள்ளது என்று நமது நீண்டகால அனுபவத்தின் பயனாய் ஆழ்ந்த நம்பிக்கையுடன் கூறுகின்றோம்.

*1898ஆம் ஆண்டு ஜினீவாவில் வெளிவந்த ருஷ்ய சமூக-ஜன நாயகவாதிகளின் கடமைகள் என்ற வி. இ. லெனினது துண்டுப் பிரசுரத்தின் பிற்சேர்க்கையாக முதன்முதலில் அச்சிடப்பட்டது*

## ருஷ்ய சமூக-ஜனநாயகத்தின் பின்வாங்கும் போக்கு
### என்ற கட்டுரையிலிருந்து

முன்னணித் தொழிலாளர்கள்தான் சோஷலிச கருத்துக்களை மற்ற எல்லோரையும் விட முன்னதாகவும் எளிதாகவும் ஏற்றுக் கொள்கின்றனர்கள் என்பதைஅனைத்து நாடுகளின் தொழிலாளர் இயக்கத்தின் வரலாறும் காண்பிக்கிறது. இத்தகையவர்களின் மத்தியில் இருந்துதான் எந்த ஒரு தொழிலாளர் இயக்கமும் முன்கொணரக்கூடிய தலைசிறந்த தொழிலாளர்களும், தொழிலாளர் வெகுஜனங்களின் முழுநம்பிக்கையையும் பெறக்கூடிய திறமை உள்ள தொழிலாளர்களும், பாட்டாளி வர்க்கத்திற்குக் கல்வி புகட்டி அதை ஒன்றுபடுத்தும் லட்சியத்திற்கு தங்களை முற்றிலும் அர்ப்பணிக்கும் தொழிலாளர்களும், முழு சுய உணர்வோடு சோஷலிசத்தை ஏற்று தாங்களாகவே சோஷலிச தத்துவங்களை வளர்க்கக் கூடிய தொழிலாளர்களும் வருகின்றனர். எல்லா உயிரோட்டமுள்ள தொழிலாளர் இயக்கங்களும் புரூதோன்கள், வல்யான்கள், வைட்லிங்குகள், பெபெல்கள்[3] போன்ற தொழிலாளர் தலைவர்களை முன்கொணர்ந்தன. இந்த விதத்தில், ஐரோப்பியத் தொழிலாளர் இயக்கத்திலிருந்து பின்தங்கியிருக்காது என நமது ருஷ்யத் தொழிலாளர் இயக்கம் உறுதியளிக்கிறது. கற்றறிந்த சமூகம் நியாயமான, சட்டவிரோதமான இலக்கியத்தின் மேல் ஆர்வத்தை இழந்துவரும் நேரத்தில் தொழிலாளர்கள் மத்தியில் ஞானத்தின் மேலும் சோஷலிசத்தின் மேலும் தீவிரமான நாட்டம் வளர்ந்து வருகிறது; தங்களது இழிகேடான வாழ்க்கை நிலைகளையும் ஆலைகளில் தங்களது கடுமையான, இடுப்பை முறிக்கும் வேலையையும் பொருட்படுத்தாது, இடையறாது தொடர்ந்து படித்துக் கொண்டே இருக்கவும் தங்களை சுய உணர்வு மிக்க சமூக-ஜனநாயகவாதிகளாகவும் ''தொழிலாளி வர்க்க அறிவு

ஜீவிகளாகவும்'' மாற்றிக்கொள்ளவும் தேவையான குணம் சத்தையும் இலட்சிய வேட்கையையும் தங்களிடம் வளர்த்துக் கொள்ளும் மெய்யான வீரர்கள் தொழிலாளர்கள் மத்தியில் இருந்துதான் வெளிப்படுகின்றார்கள். ருஷ்யாவில் இந்தத் ''தொழிலாளர் அறிவுஜீவிகள்'' ஏற்கெனவே இருக்கின்றார்கள்; இவர்களின் எண்ணிக்கையை தொடர்ந்து பெருக்கவும் இவர்களின் உயர்வான அறிவுப் பசியை முற்றிலும் திருப்திபடுத்தவும் இவர்களின் மத்தியில் இருந்து ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் தலைவர்கள் வெளிப்படவும் நாம் இயன்ற அனைத்தையும் செய்ய வேண்டும். எனவே, எல்லா ருஷ்ய சமூக-ஜனநாயக வாதிகளின் ஏடாக மாறும் விருப்பமுள்ள பத்திரிகை முற்போக்குத் தொழிலாளர்களின் தரத்தில் நிற்க வேண்டும்; இப்பத்திரிகை தனது தரத்தைச் செயற்கையாகக் குறைக்கக் கூடாதது மட்டுமல்ல, மாறாக தனது தரத்தை இடையறாது வளர்க்க வேண்டும், சர்வதேச சமூக-ஜனநாயக இயக்கத்தின் எல்லா நடைமுறைத் தந்திர, அரசியல், தத்துவப் பிரச்சினைகளையும் கவனித்து வர வேண்டும். அப்போதுதான் தொழிலாளர் அறிவுஜீவிகளின் தேவைகள் பூர்த்தி செய்யப்படும்; அவர்களே ருஷ்யத் தொழிலாளர் இயக்கத்தையும் அதன் பயனாக ருஷ்யப் புரட்சிப் பணியையும் தங்களது கைகளில் எடுத்துக்கொள்வார்கள்.

எண்ணிக்கை ரீதியாகக் குறைவான முன்னணித் தொழிலாளர்களையடுத்து பரவலான நடுத்தரத் தொழிலாளர்கள் வருகின்றனர். இந்தத் தொழிலாளர்களும் சோஷலிசத்தை மிக்க ஆர்வத்துடன் நாடுகின்றனர், தொழிலாளர் குழுக்களில் பங்கேற்கின்றனர், சோஷலிசப் பத்திரிகைகளையும் நூல்களையும் படிக்கின்றனர், பிரச்சாரங்களில் கலந்து கொள்கின்றனர், சமூக-ஜனநாயக தொழிலாளர் இயக்கத்தின் முழுச் சுயேச்சையான தலைவர்களாக இவர்களால் ஆக முடியாது என்ற விதத்தில்தான் இவர்கள் முந்தையப் பிரிவினரில் இருந்து மாறுபடுகின்றனர். கட்சியின் ஏடாக இருக்கக் கூடியப் பத்திரிகையின் ஒரு சில கட்டுரைகள் நடுத்தரத் தொழிலாளிக்குப் புரியாது, சிக்கலான தத்துவ அல்லது நடைமுறை ரீதியான பிரச்சினையில் அவனுக்குப் பூரணத் தெளிவு பிறக்காது. இதனால் பத்திரிகை தனது வாசகர்களின் தரத்திற்கு இறங்கிவர வேண்டும் என்று பொருளாகாது.

மாருக, பத்திரிகை அவர்களது தரத்தை உயர்த்த வேண்டும். நடுத்தரத் தொழிலாளர்களில் இருந்து முன்னணித் தொழிலாளர்களைக் கொணர உதவிபுரிய வேண்டும். அந்தந்த இடத்தின் நடைமுறை நடவடிக்கைகளில் ஊன்றிப்போய் தொழிலாளர் இயக்கத்தின் செய்திகள் மற்றும் பிரச்சார விஷயங்கள் ஆகியவைகளில் ஆர்வம் கொண்ட இத்தகையத் தொழிலாளி, தனது ஒவ்வொரு நடவடிக்கையையும் ருஷ்ய தொழிலாளர் இயக்கம் முழுவதைப் பற்றிய சிந்தனையுடனும் அதன் சரித்திரக் கடமை, சோஷலிசத்தின் இறுதி லட்சியம் ஆகியவற்றைப் பற்றிய சிந்தனைகளுடனும் இணைக்க வேண்டும்; எனவே நடுத்தர தொழிலாளர்களைப் பரவலான வாசகர்களாகக் கொண்டுள்ளப் பத்திரிகை, ஒவ்வொரு குறுகிய உள்ளூர்ப் பிரச்சினையையும் சோஷலிசத்துடனும் அரசியல் போராட்டத்துடனும் இணைக்க வேண்டும்.

இறுதியாக, நடுத்தரப் பிரிவினரையடுத்து பாட்டாளி வர்க்கத்தின் கீழ் மட்ட பிரிவினர் வருகின்றனர். சோஷலிசப் பத்திரிகை இவர்களுக்கு முற்றிலும் அல்லது கிட்டத்தட்ட முற்றிலும் எட்டாததாயிருக்கும் என்பது முழுவதும் சாத்தியமே (மேற்கு ஐரோப்பாவில் சமூக-ஜனநாயக வாக்காளர்களின் எண்ணிக்கை சமூக-ஜனநாயக பத்திரிகை வாசகர்களின் எண்ணிக்கையைவிட எவ்வளவோ அதிகம்). ஆனல் சமூக-ஜனநாயகவாதிகளின் பத்திரிகை தொழிலாளர்களின் இயன்ற அளவு குறைவான தரத்திற்கு இறங்கிவரத்தான் வேண்டும் என்று இதிலிருந்து முடிவெடுப்பது அபத்தமாகும். இத்தகைய பிரிவினர்களுக்காக எளிமையாக எழுதப்பட்ட சிறு நூல்கள், வாய்மொழிப் பிரச்சாரம், குறிப்பாக உள்ளூர் நிகழ்ச்சிகளைப் பற்றிய துண்டுப்பிரசுரங்கள் போன்ற மற்றப் பிரச்சார வழிகளைப் பயன்படுத்த வேண்டும் என்ற முடிவுதான் இதிலிருந்து பிறக்கிறது. சமூக-ஜனநாயகவாதிகள் இதனேடு நின்றுவிடக் கூடாது: கீழ்மட்டத் தொழிலாளர்களின் மத்தியில் சுய உணர்வு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய முதல் முயற்சிகள் சட்டபூர்வமான கல்வி புகட்டும் நடைமுறைகளோடு தொடர்பு கொண்டவைகளாக இருக்கக்கூடும் என்பது முற்றிலும் சாத்தியமே. இந்த நடவடிக்கைகளை பயன்படுத்துவதும் இவைகள் எங்கு அதிகமாகத் தேவைப்படுகின்றதோ, குறிப்பாக அங்கு அவைகளை அனுப்புவதும் சமூக-ஜனநாயக பிரச்சாரக்கர்த்தாக்கள்

பின்னர் சென்று பணியாற்றத்தக்க முன்னேற்பாடுகளைச் செய்ய சட்டரீதியாக இயங்கக்கூடிய பிரதிநிதிகளை அனுப்புவதும் கட்சிக்கு மிகவும் முக்கியமானதாகும். பிரச்சாரக்கர்த்தாக்களின் தனித்தன்மைகளுக்கும் அந்தந்த இடத்தின், வேலையின் விசேஷத் தன்மைகளுக்கும் மற்றவைகளுக்கும் கீழ்மட்டத் தொழிலாளர்கள் மத்தியிலான பிரச்சாரம் மிக அதிகமான இடத்தைத் தர வேண்டும். ''நடைமுறைத் தந்திரத்தையும் பிரச்சாரத்தையும் கலக்கக் கூடாது. பிரச்சார முறை தனிநபரின் குணம்சங்களுக்கும் அந்தந்த இடத்தின் சூழ்நிலைகளுக்கும் ஏற்றவாறு அமைய வேண்டும். ஒவ்வொரு பிரச்சாரக்கர்த்தாவிற்கும் அவரிடம் உள்ள சாதனங்களைப் பிரச்சாரத்திற்குத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பைத் தர வேண்டும். ஒருவர் தனது உத்வேகத்தின் மூலமும் மற்றவர் தனது கடுமையான கிண்டலின் மூலமும் மூன்றாமவர் ஏராளமான உதாரணங்களைக் கூறும் திறமையின் மூலமும் ஆழ்ந்த உளப்பதிவை ஏற்படுத்துவார்கள். பிரச்சாரக்கர்த்தாவுடன் சேர்ந்து பிரச்சாரம் பொதுமக்களுக்கு ஏற்றவாறு அமைய வேண்டும். பிரச்சாரக்கர்த்தா, அவரை புரிந்துகொள்ளும்படி பேச வேண்டும்; கேட்பவர்களுக்கு நன்கு தெரிந்த விஷயங்களில் இருந்து துவங்கிப் பேச வேண்டும். சொல்லாமலேயே நன்கு விளங்கும் இந்த விஷயங்கள் விவசாயிகளின் மத்தியிலான பிரச்சாரத்திற்கு மட்டும் பொருந்திவருபவைகள் அல்ல. வண்டியோட்டிகள் மத்தியில் பேசும்படி மாலுமிகள் மத்தியில் பேசக் கூடாது, மாலுமிகள் மத்தியில் பேசும்படி அச்சுக்கோப்பவர்கள் மத்தியில் பேசக் கூடாது. பிரச்சாரம் என்பது தனிப்பட்ட முறையில் அமைய வேண்டும், ஆனால் நமது நடைமுறைத் தந்திரமும் அரசியல் நடவடிக்கையும் ஒரே மாதிரியானதாக இருக்க வேண்டும்'' என்று பெர்ன்ஷ்டைனுக்கு எதிரான நூலில் காவுத்ஸ்கி[1] கூறுகின்றார் (பக்கங்கள் 2-3). சமூக-ஜனநாயக தத்துவத்தின் முற்போக்குப் பிரதிநிதியின் இந்தச் சொற்கள் கட்சியின் பொதுவாழ்வில் பிரச்சாரத்திற்கான தலைசிறந்த மதிப்பீட்டை உள்ளடக்கியுள்ளன. அரசியல் போராட்டத்தை நடத்தக் கூடியப் புரட்சிக் கட்சியின் தோற்றம் பிரச்சாரத்தை தடுத்துவிடும், இதை இரண்டாவது இடத்திற்குத் தள்ளிவிடும், அல்லது பிரச்சாரக்கர்த்தாக்களின் சுதந்திரத்தைப் பறித்துவிடும் என்று நினைப்பவர்களின் அச்சம் எவ்வளவு

ஆதாரமற்றது என்பதை இந்தச் சொற்கள் காட்டுகின்றன. மாருக, பரவலான பிரச்சாரத்தை நடத்தவும் பிரச்சாரக்கர்த் தாக்களுக்குத் தேவையான தலைமையையும் எல்லா அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளைப் பற்றிய தகவல்களையும் தரவும், பிரச்சாரத்தின் ஒவ்வொரு ஸ்தல வெற்றியையும் எல்லா ருஷ்யத் தொழிலாளர்களுக்காகவும் பயன்படுத்தவும் மிக வெற்றியுடன் பிரச்சாரக்கர்த்தாக்கள் எங்கெல்லாம் செயல்பட முடியுமோ, அந்த இடங்களுக்கு அனுப்பவும் ஸ்தாபனரீதியான கட்டுக்கோப்பான கட்சியால்தான் முடியும். கட்டுக்கோப்பான கட்சியில்தான் பிரச்சாரத் திறமை கொண்டவர்கள் தங்களை இந்த லட்சியத்திற்கு—பிரச்சாரத்தின் வெற்றிக்கும் சமூக-ஜனநாயக பணியின் மற்ற அம்சங்களின் வெற்றிக்கும்—முற்றிலும் அர்ப்பணிக்க இயலும். பொருளாதாரப் போராட்டத்தின் பின் அரசியல் பிரச்சாரத்தைப் பற்றி மறப்பவர்களும் தொழிலாளர் இயக்கத்தை அரசியல் கட்சிப் போராட்டமாக மாற்றும் அவசியத்தை மறப்பவர்களும், மற்ற எல்லாவற்ருேடும் சேர்ந்து, பாட்டாளி வர்க்கத்தின் மிகவும் கீழ்மட்டத்திலுள்ள வர்களைத் தொழிலாளர் இயக்க லட்சியங்களுக்கு கவர்ந்திழுப்பதை நிலையாக, வெற்றிகரமாகச் செய்யும் வாய்ப்பைக் கூட இழக்கின்ருர்கள் என்பது இதிலிருந்து தெரிகிறது.

*1899ம் ஆண்டு கடைசியில்*
*எழுதப்பட்டது*

# நமது இயக்கத்தின் உடனடிப் பணிகள்

எதேச்சாதிகாரத்தை வீழ்த்துவதும் அரசியல் சுதந்திரத்தை பெறுவதும் தான் ருஷ்ய தொழிலாளர் கட்சியின் உடனடி அரசியல் பணி என்பதை ருஷ்ய சமூக-ஜனநாயகம் பன்முறை பறைசாற்றியுள்ளது. பதினைந்து ஆண்டுகட்கு முன்னரே ருஷ்ய சமூக-ஜனநாயகத்தின் பிரதிநிதிகளும் ''உழைப்பு விடுதலைக்'' குழுவின்[5] உறுப்பினர்களும் இதை அறிவித்தார்கள்; 1898ஆம் ஆண்டு வசந்தத்தில் ருஷ்யாவின் சமூக-ஜனநாயக தொழிலாளர் கட்சியை[6] உருவாக்கிய ருஷ்ய சமூக-ஜனநாயக நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இரண்டரை ஆண்டுகட்கு முன்னர் இதை அறிவித்தார்கள். இவ்வாறான பல அறிக்கைகளுக்குப் பின்னருங்கூட, ருஷ்யாவில் சமூக-ஜனநாயகத்தின் அரசியல் பணிகளைப் பற்றிய பிரச்சினை மீண்டும் இப்போது முன்னிலைக்கு வந்திருக்கிறது. நமது இயக்கத்தின் பல பிரதிநிதிகள் இப்பிரச்சினைக்கு அளிக்கப்பட்ட மேற்கண்ட தீர்வு சரியானதா என்று சந்தேகப் படுகின்றனர். பொருளாதாரப் போராட்டமே முதன்மையான முக்கியத்துவமுடையது என்று பேசப்படுகிறது; பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் பணிகள் இரண்டாம் பட்சமாக்கப்படுகின்றன; இவைகள் குறுக்கப்பட்டு வரம்பிட்டுக் கட்டுப்படுத்தப்படுகின்றன; ருஷ்யாவில் சுயேச்சையான தொழிலாளர் கட்சியை உருவாக்குவதைப் பற்றிய பேச்சுக்கள் அயலார் பேச்சுக்களை அப்படியே திருப்பிச் சொல்வதற்கு ஒப்பானதாகும் என்றும் தொழிலாளர்கள் அரசியலை மிதவாதிகளுடன் கூட்டாக உள்ள அறிவுத்துறையினரிடம் விட்டு விட்டு பொருளாதாரப் போராட்டத்தை மட்டும் நடத்திச் சென்றால் போதும் என்றெல்லாம் கூட பேசப்படுகிறது. இந்தப் புதிய நெறியின் அண்மைக் காலத்திய பிரகடனம்

(அபகீர்த்தி பெற்ற Credo[7]), ருஷ்ய பாட்டாளி வர்க்கத்துக்கு இன்னமும் வயது வந்தாகவில்லை என்பதை ஒப்புக்கொண்டு சமூக-ஜனநாயகத்தின் வேலைத்திட்டத்தை அறவே நிராகரிக்கும் அளவிற்குச் செல்கிறது. ரபோச்சயா மீசில்[8] பத்திரிகை (குறிப்பாக அதன் தனி அனுபந்தம்) அனேகமாக இதே நிலையைத்தான் ஏற்கிறது. ருஷ்ய சமூக-ஜனநாயகம் ஊசலாட்டம் மிக்க காலகட்டத்தை, தன்னைத்தானே மறுப்பதில் கொண்டுபோய் விடக்கூடிய சஞ்சலங்கள் நிறைந்த காலகட்டத்தைக் கடந்து கொண்டிருக்கிறது. ஒரு புறம் தொழிலாளர் இயக்கம் சோஷலிசத்தில் இருந்து துண்டிக்கப்படுகிறது: பொருளாதாரப் போராட்டத்தை நடத்த தொழிலாளர்களுக்கு உதவி செய்யப்படுகிறது; ஆனால் இயக்கம் முழுமைக்கும் உரித்தான சோஷலிச லட்சியங்களையும் அரசியல் பணிகளையும் அவர்களுக்கு முற்றிலும் விளக்க அல்லது போதுமான அளவு விளக்க எதுவும் செய்யப்படவில்லை. மறு புறம் சோஷலிசம் தொழிலாளர் இயக்கத்தில் இருந்து துண்டிக்கப்படுகிறது: தொழிலாளர்கள் பொருளாதாரப் போராட்டத்தோடு தம்மை கட்டுப்படுத்திக் கொள்வதால், அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தை அறிவுத்துறையினர் மட்டுமே நடத்த வேண்டும் என்று ருஷ்ய சோஷலிஸ்டுகள் மேலும் மேலும் அதிகமாகப் பேச மீண்டும் முற்படுகின்றனர்.

நமது கருத்துப்படி, வருந்தத்தக்க இந்த நிலைமைக்கு மூன்றுவித சூழ்நிலைகள் காரணமாய் இருந்துள்ளன. முதலாவதாக, ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகள் தமது செயற்பாட்டின் ஆரம்பக் காலத்தில் வெறும் பிரச்சாரக் குழு வேலைக்கு அப்பாற் செல்லாது தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டனர். வெகுஜனங்களிடையே நாம் கிளர்ச்சி நடத்த முற்பட்ட போது மற்றொரு கடைக்கோடி நிலைக்குப் போகாதபடி எப்போதும் நம்மை நாமே கட்டுப்படுத்திக் கொள்ள இயலவில்லை. இரண்டாவதாக, நமது செயற்பாட்டின் ஆரம்பக் காலத்தில், ''அரசியலை'' தொழிலாளர் இயக்கத்திலிருந்து துண்டிக்கப்பட்ட செயற்பாடாய் கருதிய, அரசியலை வெறும் சதிப் போராட்டமாய் சிறுமை செய்த ''நரோத்னயா வோல்யா''[9] உறுப்பினர்களை எதிர்த்து நமது வாழ்வின் உரிமைக்காக நாம் அடிக்கடி போராட வேண்டி வந்தது. இத்தகைய அரசியலை நிராகரிக்கையில் சமூக-ஜனநாயகவாதி

கள் அரசியலையே முற்றிலும் இரண்டாம் கட்டத்திற்குத் தள்ளிவிடும் கடைக்கோடி நிலைக்குச் சென்றனர். மூன்றாவதாக, சிறுச்சிறு உள்ளூர்த் தொழிலாளர் குழுக்களில் தனிமைப்பட்டு செயல்பட்ட சமூக-ஜனநாயகவாதிகள், உள்ளூர் குழுக்களின் அனைத்து செயல்களையும் ஒன்றுபடுத்தவும் புரட்சிப் பணி சரியான வழிகளில் நடைபெற ஏற்பாடு செய்யவும் கூடியதான புரட்சிகரக் கட்சி ஒன்றைக் கட்டுவதன் அவசியத்தில் போதிய கவனம் செலுத்தவில்லை. தனிமைப்பட்ட இந்தச் செயற்பாடு மேலோங்கியிருந்தது பொருளாதாரப் போராட்டம் மேலோங்கியிருந்ததுடன் இயற்கையாகவே தொடர்புகொண்டது.

மேலேக் குறிப்பிட்ட நிலைமைகளின் விளைவாய் இயக்கத்தின் ஒரு புறத்தில் மட்டும் ஆர்வம் குவியத் துவங்கியது. ''பொருளாதாரவாதப் போக்கு'' (இதை ஒரு ''போக்கு'' என்று கூறலாம் ஆதலால்) இந்தக் குறுகலான தன்மையை ஒரு தனித் தத்துவமாக உயர்த்தவும் இதற்காக அது புதிய பாணியாகியுள்ள பெர்ன்ஷ்டைனியத்தையும்[10] பழைய பூர்ஷ்வாக் கருத்துக்களுக்குப் புதுப் பெயரிட்டு ''மார்க்சிய விமரிசனம்'' என்று அதையும் பயன்படுத்திக் கொள்ளவும் முயற்சி செய்துள்ளது. இம்முயற்சிகள்தான், ருஷ்ய தொழிலாளர் இயக்கத்திற்கும் அரசியல் சுதந்திரப் போராட்டத்தின் முன்னணிப் படையான ருஷ்ய சமூக-ஜனநாயகத்துக்கும் இடையேயுள்ள இணைப்பு பலவீனமடைந்துவிடும் அபாயத்தை உண்டாக்கின. இந்த இணைப்பை வலுப்படுத்துவதே நமது இயக்கத்தின் உடனடிப் பணியாகும்.

தொழிலாளர் இயக்கமும் சோஷலிசமும் ஒன்று சேர்ந்த இணைப்புதான் சமூக-ஜனநாயகம் எனப்படுவது; இதன் பணி செயலின்றி சும்மாயிருந்து தொழிலாளர் இயக்கத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் அதற்குச் சேவை புரிவதல்ல; மாறாக, இயக்க முழுவதன் நலன்களையும் ஒட்டுமொத்தமாக பிரதிபலிப்பதும், இந்த இயக்கத்திற்கு அதன் இறுதி லட்சியத்தையும் அரசியல் பணிகளையும் சுட்டிக் காட்டுவதும், அதன் அரசியல் மற்றும் சித்தாந்த தனித்தன்மையை பாதுகாப்பதும் தான் இதன் பணி. சமூக-ஜனநாயகத்திலிருந்து பிரிக்கப்பட்ட தொழிலாளர் இயக்கம் சிறுமையுற்று தவிர்க்க இயலாதபடி பூர்ஷ்வா தன்மையுடையதாகிவிடுகிறது: பொருளாதாரப் போராட்டத்தை மட்டும் நடத்திச் செல்வதால்

தொழிலாளி வர்க்கம் தனது அரசியல் தனித்துவத்தை இழந்து மற்றக் கட்சிகளின் வாலாகி ''தொழிலாளர்களின் விடுதலையைத் தொழிலாளர்கள் மட்டுமே போராடிப்பெற வேண்டும்''[11] என்னும் மாபெரும் கோட்பாட்டுக்கு துரோக மிழைத்ததாகிறது. எல்லா நாடுகளிலும் தொழிலாளர் இயக்கமும் சோஷலிசமும் விலகி நின்று தனித்தனியே தனது பாதையில் சென்ற காலகட்டம் ஒன்று இருந்துள்ளது— எல்லா நாடுகளிலும் இந்த தனிமைப்பாடு சோஷலிசத்தையும் தொழிலாளர் இயக்கத்தையும் பலவீனப்படுத்தியுள்ளது; எல்லா நாடுகளிலும் சோஷலிசமும் தொழிலாளர் இயக்கமும் இணையும் போதுதான் இரண்டிற்கும் ஏற்ற நிலையான அடித்தளம் அமைகிறது. ஆனால், தொழிலாளர் இயக்கத்துடனை சோஷலிசத்தின் இந்த இணைப்பு ஒவ்வொரு நாட்டிலும் வரலாற்றுரீதியில், அந்தந்த நாட்டிற்குரிய தனிவழிகளில், காலம், இடம் ஆகிய நடப்பு நிலைமைகளுக்கு ஏற்ப உருவாயிற்று, ருஷ்யாவில் சோஷலிசத்தையும் தொழிலாளர் இயக்கத்தையும் இணைக்க வேண்டியதன் அவசியம் தத்துவார்த்த ரீதியாக நெடுங்காலத்திற்கு முன்னரே பறைசாற்றப் பட்டிருந்தது—ஆனல் நடைமுறை ரீதியாக இந்த இணைப்பு இப்போதுதான் உருவாக்கப்பட்டு வருகிறது. இது ஒரு கடினமான நிகழ்ச்சிப்போக்கு; இது நடைபெறுகையில் பல்வேறுவித ஊசலாட்டங்களும் சஞ்சலங்களும் ஏற்படுவதில் குறிப்பான வியப்பேதுமில்லை.

கடந்த காலத்திலிருந்து நாம் பெறக்கூடிய படிப்பினை என்ன?

எதேச்சாதிகார அரசுக்கு எதிராகப் போராடுவதும் அரசியல் சுதந்திரம் பெறுவதுமே ருஷ்ய சோஷலிசத்தின் உடனடிப் பணி என்ற நிலைக்கு ருஷ்ய சோஷலிசத்தின் வரலாறு முழுவதும் இட்டுச் சென்றுள்ளது; நமது சோஷலிச இயக்கம் எதேச்சாதிகாரத்திற்கு எதிரான போராட்டத்தில் முழுக் கவனத்தையும் செலுத்தியது. மறுபுறத்தில் ஏனைய நாடுகளைவிட ருஷ்யாவில் சோஷலிச சிந்தனையானது உழைக்கும் வர்க்கங்களின் முன்னணிப் பிரதிநிதிகளிடமிருந்து பெருமளவுக்கு பிரிக்கப்பட்டுள்ளது என்பதையும் இத்தகைய ஒரு நிலையில் ருஷ்ய புரட்சி இயக்கம் நிச்சயம் திறனற்றதாகிவிடும் என்பதையும் வரலாறு தெளிவுபடுத்தியுள்ளது. ருஷ்ய சமூக-ஜனநாயகம் நிறைவேற்ற வேண்டிய

பணி இதிலிருந்து தானுகவே எழுகிறது: சோஷலிசக் கருத்துக்களேயும் அரசியல் சுய உணர்வையும் பாட்டாளி வர்க்க வெகுஜனங்களுக்கு ஊட்டுவதும் தன்னிச்சையான தொழிலாளர் இயக்கத்துடன் பிரிக்க இயலாதபடி தொடர்பு கொண்ட புரட்சிக் கட்சியைக் கட்டுவதும்தான் அப்பணி யாகும். இத்திசையில் ருஷ்ய சமூக-ஜனநாயகத்தால் எவ்வளவோ செய்யப்பட்டுள்ளது; ஆனுல் செய்ய வேண்டியது இன்னமும் அதிகமாக உள்ளது. இயக்கத்தின் வளர்ச்சியோடு சமூக-ஜனநாயகத்தின் செயல்துறை மேலும் மேலும் விரிவடைந்து வருகிறது; பணி பலதரப்பட்டதாகிவருகிறது; பிரச்சாரம், கிளர்ச்சி இவற்றின் அன்ருடத் தேவைகள் முன் வைக்கும் பலவிதத் தனிப்பட்ட பணிகளேயும் செய்து முடிக்க இயக்கத்தின் செயல்வீரர்களில் மேலும் மேலும் அதிக மானேர் தமது சக்திகளே ஒன்றுதிரட்டுகின்றனர். இது முற்றிலும் இயற்கையானதும் தவிர்க்க இயலாததும்தான்; ஆனுல் இது இந்த தனிப்பட்ட பணிகளும் போராட்ட முறை களும் சுயேச்சையான தனி நோக்கங்களாகிவிடாமல் தடுப் பதிலும் தயாரிப்பு வேலேகளே பிரதானமான தனிப்பெரும் செயற்பாடாய்க் கருதப்படுவதைத் தடுப்பதிலும் நம்மைக் குறிப்பான சிரமத்தை மேற்கொள்ளச் செய்கிறது.

தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் வளர்ச்சிக்கும் அரசியல் நிறுவன ஒழுங்கமைப்புக்கும் உதவுவதுதான் நமது முதன்மையான, அடிப்படையான பணி. இந்தப் பணியை பின்னணிக்குத் தள்ளுபவர்கள், எல்லாத் தனிப்பட்ட பணி களேயும் குறிப்பிட்ட போராட்ட முறைகளேயும் இதற்குக் கீழ்ப்படுத்த மறுப்பவர்கள் தவருன பாதையில் சென்று இயக்கத்துக்கு பெரும் தீங்கு இழைப்பவர்களாகின்ருர்கள். முதலாவதாக, தொழிலாளர் இயக்கத்திலிருந்து பிரிக்கப் பட்ட தனிப்பட்ட சதிவேலேக் குழுக்களின் சக்தியை மட்டும் கொண்டு அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் நடத்த வேண்டும் என புரட்சியாளருக்கு அறிவுறுத்துவோரால் இது பின்னணிக்குத் தள்ளப்படுகிறது. இரண்டாவதாக, அரசியல் பிரச்சாரம், கிளர்ச்சி, ஸ்தாபன ஒழுங்கமைப்பு ஆகியவற்றின் உள்ளடக்கத்தையும் செயற்பரப்பையும் குறுகச்செய்து விடு பவர்களும்; தொழிலாளர்களின் வாழ்க்கையில் அசாதாரண மான சில தருணங்களில் மட்டும், விழாக்கொண்டாட்டங் களின் போது மட்டும் அவர்களுக்கு ''அரசியலே'' தெரியப்

படுத்துவதுதான் சாத்தியமானது, பொறுத்தமானது என நினைப்பவர்களும்; எதேச்சாதிகாரத்துக்கு எதிரான அரசியல் போராட்டத்துக்குப் பதிலாக எதேச்சாதிகாரத்திடமிருந்து தனிப்பட்ட சலுகைகள் சிலவற்றைப் பெறுவதற்கான கோரிக்கைகளை மிக பரிவுடன் மேற்கொள்பவர்களும்; தனிப்பட்ட இந்த சலுகைகளுக்கான கோரிக்கைகள், எதேச்சாதிகாரத்துக்கு எதிரான புரட்சிகரத் தொழிலாளர் கட்சியின் முறையான விட்டுக்கொடுக்காத போராட்டமாக உயர்த்துவதில் போதிய கவனம் செலுத்தாமலிருப்பவர்களும் இப்பணியை பின்னணிக்குத் தள்ளுகின்றனர்.

''ஒன்றுபடுங்கள்!'' என்று ரபோச்சயா மீஸில் பத்திரிகை தொழிலாளர்களுக்குத் திரும்பத்திரும்பக் கூறிக்கொண்டிருக்கிறது, ''பொருளாதாரவாதப்'' போக்கின் ஆதரவாளர்கள் அனைவரும் இதையே திருப்பிக் கூறுகின்றார்கள். இந்த அறைகூவலுக்கு முழு மனத்தோடு ஆதரவளிக்கும் அதே சமயம் இன்னொன்றைக் கூறுகின்றோம்: பரஸ்பர நலச் சங்கங்களிலும் வேலைநிறுத்த நிதிகளிலும் தொழிலாளர் குழுக்களிலும் ஒன்றுபடுவது மட்டுமின்றி ஒரு அரசியல் கட்சியாகவும் ஒன்றுபடுங்கள், எதேச்சாதிகார அரசாங்கத்தையும் முதலாளித்துவ சமுதாயம் முழுவதையும் எதிர்த்து உறுதியான போராட்டம் நடத்துவதற்காகவும் ஒன்றுபடுங்கள். இத்தகைய ஸ்தாபன ஒழுங்கமைப்பு இன்றி பாட்டாளிகளால், வர்க்க உணர்வுமிக்க போராட்டம் நடத்தும் நிலைக்கு உயர முடியாது; இத்தகைய ஸ்தாபன ஒழுங்கமைப்பு இன்றி தொழிலாளர் இயக்கம் சக்தியற்றதாகிவிடும்; தன்னையும் ருஷ்ய மக்கள் அனைவரையும் அரசியல் மற்றும் பொருளாதார அடிமை வாழ்விலிருந்து விடுவிக்கும் மாபெரும் வரலாற்றுக் கடமையைத் தொழிலாளி வர்க்கத்தால் நிதிகளையும் குழுக்களையும் பரஸ்பர நலச் சங்கங்களையும் மட்டும் கொண்டு நிறைவேற்ற முடியாது. ஒரு இயக்கத்தை உருவாக்கி அதற்குத் தலைமை தாங்கிச் செல்லவல்ல தனது அரசியல் தலைவர்களை, முன்னணிப் பிரதிநிதிகளை உருவாக்காத எந்த ஒரு வர்க்கமும் வரலாற்றில் அதிகார நிலையை அடைந்ததில்லை. இத்தகையவர்களைத் தன்னால் உருவாக்க முடியும் என்று ருஷ்யத் தொழிலாளி வர்க்கம் ஏற்கெனவே காட்டியுள்ளது: கடந்த ஐந்தாறு ஆண்டுகளில் பரவலாய் வளர்ந்துள்ள ருஷ்யத் தொழிலாளர்களின் போராட்டம்,

தொழிலாளி வர்க்கத்திடம் எவ்வளவு மாபெரும் புரட்சி சக்தி உள்ளாற்றலாய் அடங்கியுள்ளது என்பதையும், சோஷலிசத்தையும் அரசியல் சுய உணர்வையும் அரசியல் போராட்டத்தையும் நாடும் தொழிலாளர்களின் எண்ணிக்கையை துணிவான அரசாங்க அடக்குமுறை எப்படிக் குறைக்காது அதிகரிக்கச் செய்துள்ளது என்பதையும் காட்டியுள்ளது. நமது தோழர்கள் 1898ல் நடத்திய காங்கிரஸ் அயலாரின் சொற்களைத் திருப்பிக்கூறுமல், ''அறிவுத்துறையினரது'' ஆர்வத்தை வெளியிடுவதுடன் நின்றுவிடாமல் நமது பணிகளைச் சரிவர வரையறுத்தது... கட்சியின் வேலைத்திட்டத்தையும் ஸ்தாபன அமைப்பையும் போர்த்தந்திரத்தையும் பற்றிய பிரச்சினையை முன்வைத்து இந்தப் பணிகளை நிறைவேற்ற நாம் வைராக்கியத்தோடு பாடுபட வேண்டும். நமது வேலைத்திட்டத்தின் முக்கிய அம்சங்களைப் பற்றி ஏற்கெனவே எடுத்துரைத்துள்ளோம்; விவரமாக இந்த அம்சங்களை எடுத்துரைக்க இது ஏற்ற இடமல்ல. வருகிற இதழ்களில் பல கட்டுரைகளை ஸ்தாபன அமைப்பு பற்றிய பிரச்சினைகளுக்கு அர்ப்பணிக்க திட்டமிட்டுள்ளோம். இது நமது மிக துன்பம் தரும் பிரச்சினைகளில் ஒன்று. இந்த விஷயத்தில் நாம் ருஷ்ய புரட்சி இயக்கத்தின் பழைய பிரதிநிதிகளை விட வெகுவாக பின்தங்கியுள்ளோம்; இந்தக் குறைபாட்டை நாம் ஒளிவுமறைவின்றி ஒப்புக்கொண்டு நமது பணி மேலும் அதிக அளவுக்கு இரகசியமாய் நடைபெறுவதற்கான முறைகளை வகுக்கவும், இந்த விதிமுறைகளையும் அரசியல் போலீசாரை ஏமாற்றுவதற்கும் போலிஸ் கண்களில் அகப்படாது தப்பிக்கவும் தேவையான முறைகளையும் முறையாகப் பிரச்சாரம் செய்யவும் நாம் நமது சக்திகளைப் பயன்படுத்த வேண்டும். ஓய்வு நேரமான மாலைப்பொழுதுகளை மட்டுமின்றி, வாழ்நாள் முழுவதையும் புரட்சிக்காக அர்ப்பணிக்கக் கூடியவர்களை நாம் பயிற்றுவிக்க வேண்டும்; நமது பணியின் பல்வேறு வடிவங்களிலும் கண்டிப்பான உழைப்புப் பிரிவினையை அனுசரிக்க இடம்தரும்படியான பெரிய ஸ்தாபனத்தை உருவாக்க வேண்டும். இறுதியாக, செயல்தந்திரப் பிரச்சினைகள் சம்பந்தமாய் பின்வருவதைக் குறிப்பிடுவதுடன் நிறுத்திக் கொள்கின்றோம்: சமூக-ஜனநாயகம் தனது கைகளுக்கு விலங்கிட்டுக் கொள்ளவில்லை, அரசியல் போராட்டத்துக்காக முன்கூட்டியே கற்பனை செய்யப்பட்ட ஒரே

திட்டம் அல்லது முறைக்குள் அது தனது செயல்களைச் சுருக்கிக் கொள்ளவில்லை—கட்சியின் சக்திக்கேற்றவாறும் அந்தந்த நிலைமைகளில் சாத்தியமான சிறந்த பலன்களை அடைய உதவுவனவாயும் இருக்கும் பட்சத்தில் எல்லாப் போராட்ட முறைகளையும் அது அங்கீகரிக்கிறது. உறுதியான ஸ்தாபனக் கட்டுக்கோப்புள்ள ஒரு கட்சி இருக்குமாயின் தனியொரு வேலைநிறுத்தமே அரசியல் ஆர்ப்பாட்டமாய், அரசாங்கத்தின் மீதான ஒரு அரசியல் வெற்றியாய் மாறிவிடக்கூடும். உறுதியான ஸ்தாபனக் கட்டுக்கோப்புள்ள ஒரு கட்சி இருக்குமாயின் தனியோர் இடத்தில் ஏற்படும் எழுச்சி வெற்றிகரப் புரட்சியாக வளர்ந்துவிட முடியும். தனிப்பட்ட கோரிக்கைகளுக்காக அரசாங்கத்துடன் நடைபெறும் போராட்டங்களும் நாம் போராடிப்பெறும் தனிப்பட்டச் சலுகைகளும் பகைவனுடனான சிறு கைகலப்புகளே, புறக்காவல் வழிகளில் பகைவனுடன் ஏற்படும் சிறு சந்திப்புக்களே என்பதையும் முடிவான போர் இனிமேல்தான் நடைபெறப் போகிறது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். நம் மீது குண்டையும் வெடியையும் பொழிந்து நமது தலைசிறந்த வீரர்களை வீழ்த்திக்கொண்டிருக்கும் பகைவனது கோட்டை நம்முன் முழு பலத்துடன் உயர்ந்து நிற்கிறது. இந்தக் கோட்டையை நாம் கைப்பற்றியாக வேண்டும்; விழித்தெழும் பாட்டாளி வர்க்கத்தை ருஷ்யப் புரட்சியாளர்களது எல்லாச் சக்திகளுடனும் ஒன்றிணைத்து ருஷ்யாவில் உள்ள உயிராற்றலும் நேர்மையும் கொண்ட யாவற்றையும் கவர்ந்திழுக்கக் கூடிய ஒரு கட்சியாய் உருவாக்குவோமாயின், இந்தக் கோட்டையை நாம் பிடித்து விடலாம். அப்போது தான், ''கோடிக்கணக்கான தொழிலாளர்களின் வலிய கரம் உயர்த்தப்படும், படைவீரர்களின் துப்பாக்கி முனைகளால் பாதுகாக்கப்படும் எதேச்சாதிகாரம் தவிடுபொடியாக்கப் படும்!'' என்ற ருஷ்யத் தொழிலாளி புரட்சிவீரர் பீட்டர் அலெக்சேயெவின்[12] மாபெரும் உன்னதவாக்கு நிறைவேற்றப்படும்.

*1900 அக்டோபரிலும் நவம்பர்*
*ஆரம்பத்திலும் எழுதப்பட்டது*

## என்ன செய்ய வேண்டும்?
என்னும் புத்தகத்திலிருந்து

### 3. தொழிற்சங்க மற்றும் சமூக-ஜனநாயகக் கொள்கை

#### உ. ஜனநாயகத்துக்கான போராட்டத்தின் முன்னணிப் படை தொழிலாளி வர்க்கம்

மிக விரிந்த அளவில் அரசியல் கிளர்ச்சி நடத்துவதும் அதன் விளைவாகப் பன்முகமான அரசியல் அம்பலப்படுத்தல்களை நடத்துவதும் நம் நடவடிக்கையின் முற்றிலும் இன்றியமையாத பணியாகும், தலையாய பணியாகும், அப்போது தான் நம் நடவடிக்கை சமூக-ஜனநாயக வழிப்பட்ட நடவடிக்கையாக இருக்கும் என்று கண்டோம். அரசியல் அறிவும் அரசியல் பயிற்சியும் தொழிலாளி வர்க்கத்துக்கு அவசர அவசியத் தேவைகளாக இருப்பதை மட்டுமே அடிப்படையாக வைத்து இம்முடிவுக்கு வந்தோம். ஆனால் இது பிரச்சினையை மிகவும் குறுக்கி முன்வைப்பதாகும், ஏனெனில் இது சமூக-ஜனநாயகத்தின்—குறிப்பாக, தற்கால ருஷ்ய சமூக-ஜனநாயகத்தின்—பொதுவான ஜனநாயகப் பணிகளைப் புறக்கணிக்கிறது. விஷயத்தை மேலும் ஸ்தூலமாக விளக்க வேண்டி ''பொருளாதாரவாதிக்கு'' மிகவும் ''நெருங்கிய'' அம்சமான நடைமுறை அம்சத்திலிருந்து அணுகுவோம். தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் உணர்வை வளர்ப்பது அவசியம் என்று ''எல்லோரும் ஒப்புக் கொள்கிறார்கள்.'' ஆனால், இதை எப்படிச் செய்வது, செய்வதற்கு என்ன தேவை என்பதே கேள்வி. தொழிலாளி வர்க்கத்தின்பால் அரசாங்கத்துக்கு இருக்கிற கண்ணோட்டத்தைத் தொழிலாளிகள் புரிந்து கொள்ள மட்டுமே பொருளாதாரப் போராட்டம் ''தூண்டிவிடுகிறது''. ஆகவே, ''பொருளாதாரப் போராட்டத்துக்கே அரசியல் தன்மை கொடுக்க'' நாம் எவ்வளவு தான் முயன்றாலும் பொருளாதாரப் போராட்டத்தின் கட்டுக்கோப்புக்குள்ளே இருந்துவருவதின் மூலமாக நாம் தொழிலாளிகளின் அரசியல் உணர்வை (சமூக-ஜனநாயக அரசியல் உணர்வின் தரத்துக்கு) வளர்ப்பது என்றைக்கும்

சாத்தியமில்லை; காரணம், அந்தக் கட்டுக்கோப்பு மிகவும் குறுகியதாகும். மார்த்தினவ் சூத்திரம்[13] நமக்குச் சற்று மதிப்புடையது—விஷயங்களைக் குழப்புவதில் மார்த்தினவுக்குள்ள நாட்டத்தை அது காட்டுகிறது என்கிற காரணத்துக்காக அல்ல, மாறாக எல்லாப் ''பொருளாதாரவாதிகளும்'' செய்கிற அடிப்படையான தவறை அது முனைப்பாக வெளியிடுகிறது என்கிற காரணத்துக்காக. அந்த அடிப்படையான தவறு, உள்ளிருந்து, இப்படிச் சொல்லலாமெனில் அவர்களது பொருளாதாரப் போராட்டத்திலிருந்து, அதாவது பொருளாதாரப் போராட்டத்தையே தனிமுழுமையான (அல்லது குறைந்த பட்சம் முதன்மையான) தொடக்கப் புள்ளியாகவும் தனிமுழுமையான (அல்லது குறைந்த பட்சம் முதன்மையான) அடிப்படையாகவும் கொண்டு தொழிலாளிகளின் வர்க்க அரசியல் உணர்வை வளர்ப்பது சாத்தியம் என்கிற அவர்களின் துணிபாகும். இப்படிப்பட்ட கருத்து ஓர் ஆழ்ந்த தவறாகும். நாம் ''பொருளாதாரவாதிகளை'' எதிர்த்துச் சர்ச்சை செய்வதால் அவர்கள் கோபமூட்டப்பட்டு இந்தக் கருத்து வேறுபாடுகளின் மூலாதாரங்களைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க மறுக்கிறார்கள்; இதனால் நாம் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள முடியாமலே போகிறது, வெவ்வேறு மொழிகளில் நாம் பேசுவது போல் இருக்கிறது.

தொழிலாளிகளுக்கு வர்க்க அரசியல் உணர்வு வெளியிலிருந்து மட்டுமே—அதாவது பொருளாதாரப் போராட்டத்திற்கப்பால் வெளியிலிருந்துதான், தொழிலாளிகள், முதலாளிகள் இடையேயுள்ள உறவுகளின் துறைக்கப்பால் வெளியிலிருந்துதான்—கொண்டுவர முடியும். அரசின் பாலும் அரசாங்கத்தின் பாலும் எல்லா வர்க்கங்களுக்கும் மக்கட் பகுதிகளுக்கும் இருக்கும் உறவு முறைகளின் துறையிலிருந்து மட்டுமே, எல்லா வர்க்கங்களுக்கும் இடையேயுள்ள பரஸ்பர உறவு முறைகளின் துறையிலிருந்து மட்டுமே இந்த அறிவைப் பெறுவது சாத்தியம். தொழிலாளிகளிடம் அரசியல் அறிவை எடுத்துச் செல்ல என்ன செய்ய வேண்டும் என்று கேள்வி கேட்டால் ''தொழிலாளிகளிடையே செல்லுங்கள்'' என்று விடையளிப்பதோடு பெரும்பான்மையான ஊழியர்கள், குறிப்பாக ''பொருளாதாரவாதத்தின்'' பக்கம் சாய்ந்துள்ள ஊழியர்கள் திருப்திப்பட்டு விடுகிறார்கள், ஆனால் இது மட்டும் விடையாகி விட முடியாது; மேலே சொன்னதுதான்

இதற்குக் காரணம். தொழிலாளிகளிடம் அரசியல் அறிவை எடுத்துச் செல்ல சமூக-ஜனநாயகவாதிகள் மக்களைச் சேர்ந்த எல்லா வர்க்கங்களிடையேயும் செல்ல வேண்டும், தம் படைப் பிரிவுகளை எல்லாத் திசைகளிலும் அனுப்பிவைக்க வேண்டும்.

வேண்டுமென்றே இந்த மொட்டையான சூத்திரத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம், வேண்டுமென்றே மிகவும் எளிதாக்கப்பட்ட இந்த முறையிலே நம் கருத்தை வெளியிடுகிறோம்—காரணம், நாம் முரணுண்மைகளில் ஈடுபட வேண்டுமென்கிற விருப்பத்தால் அல்ல, மன்னிக்க முடியாத அளவு தமது பணிகளைப் புறக்கணித்துவரும் ''பொருளாதாரவாதிகள்'' அறிந்து புரிந்து கொள்ளும்படி ''தூண்டுவதற்காகத்'' தான்; தொழிற்சங்கவாத கொள்கைக்கும் சமூக-ஜனநாயக கொள்கைக்கும் உள்ள வேற்றுமையை அவர்கள் புரிந்து கொள்ள மறுத்துவருகிறார்களே, அந்த வேற்றுமையை அவர்களுக்குப் பலமாக உணர்த்துவதற்காகத்தான். ஆகவே, வாசகர் பதற்றமடையாமல் நாம் சொல்வதைப் பொறுமையுடன் கடைசிவரை கேட்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறோம்.

சென்ற சில ஆண்டுகளில் மிகப் பரவலாகி விட்டிருக்கும் சமூக-ஜனநாயகப் பயிற்சிக் குழுவின் மாதிரிப் படிவத்தை எடுத்துக்கொண்டு அதன் வேலையைப் பரிசிலிப்போம். அது ''தொழிலாளிகளுடன் தொடர்புகளை'' வைத்திருக்கிறது, தொழிற்சாலைகளில் நடக்கும் அநீதிகளையும் முதலாளிகளின் பக்கம் அரசாங்கம் நிற்பதையும் போலீஸின் கொடுங்கோன்மையையும் வன்மையாகக் கண்டிக்கும் துண்டுப் பிரசுரங்களை வெளியிடுகிறது, அத்துடன் திருப்தியடைந்து விடுகிறது. தொழிலாளர் கூட்டங்களில் நடக்கும் விவாதங்கள் இவ் விஷயங்களின் வரம்பைத் தாண்டிப் போவதே கிடையாது. அப்படிப் போவது அரிதினும் அரிதுதான். புரட்சி இயக்கத்தின் வரலாறு, நம் அரசாங்கத்தின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகள் பற்றிய பிரச்சினைகள், ருஷ்யா மற்றும் ஐரோப்பாவின் பொருளாதாரப் பரிணும வளர்ச்சி பற்றிய பிரச்சினைகள், தற்காலச் சமுதாயத்தின் பல்வேறு வர்க்கங்களின் நிலை, முதலியவற்றைப் பற்றிய விரிவுரைகளும் விவாதங்களும் நடப்பதும் மிகமிக அரிதுதான். சமுதாயத்தின் மற்ற வர்க்கங்களோடு முறையாகத் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு அதை விரிவுபடுத்துவதைப் பற்றி

யாரும் கனவிலும்கூடச் சிந்திப்பதில்லை. உண்மையாகச் சொன்னால், ஒரு சோஷலிஸ்டு அரசியல் தலைவன் என்கிறதை விட மிக அதிகமாக ஒரு தொழிற்சங்கச் செயலாளர் எனும் தன்மையிலேதான் பெரும்பான்மையான குழு உறுப்பினர்கள் இலட்சியத் தலைவனைச் சித்திரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனெனில், எந்தத் தொழிற்சங்கச் செயலாளரையாவது (எடுத்துக்காட்டாக, ஆங்கிலேயத் தொழிற்சங்கத்தின் செயலாளரை) பாருங்கள்: அவர் பொருளாதாரப் போராட்டத்தைத் தொழிலாளிகள் நடத்திக்கொண்டிருக்க எப்போதும் உதவிவருகிறார், தொழிற்சாலையில் நடக்கும் அநீதிகளை அம்பலப்படுத்த அவர்களுக்கு உதவுகிறார், வேலைநிறுத்தம் செய்யும் உரிமையையும் மறியல் செய்யும் (அதாவது, குறிப்பிட்ட தொழிற்சாலையில் வேலைநிறுத்தம் நடக்கிறதென்று எல்லோரையும் எச்சரிக்கை செய்யும்) உரிமையையும் தடங்கல் செய்கிற சட்டங்களிலும் நடவடிக்கைகளிலும் உள்ள அநீதியை விளக்குகிறார், முதலாளித்துவப் போக்கு வர்க்கங்களைச் சேர்ந்த மத்தியஸ்தத் தீர்ப்பு மன்ற நீதிபதிகளின் ஓரவஞ்சனையை விளக்குகிறார், என்றவாறு சொல்லிக் கொண்டே போகலாம். சுருங்கச் சொன்னால், ஒவ்வொரு தொழிற்சங்கச் செயலாளரும் ''முதலாளிகளையும் அரசாங்கத்தையும் எதிர்த்துப் பொருளாதாரப் போராட்டத்தை'' நடத்துகிறார், நடத்த உதவுகிறார். இருந்தாலும் இது சமூக-ஜனநாயகம் அல்ல, சமூக-ஜனநாயகவாதியின் இலட்சியம் தொழிற்சங்கச் செயலாளர் என்று இருக்கவே கூடாது, மக்களின் உரிமைக்காவலர் என்றிருக்க வேண்டும் என்று மிக வன்மையாக நிலைநிறுத்த இயலாது, இவர் இந்த கொடுங்கோன்மையின், ஒடுக்குமுறையின் ஒவ்வொரு வெளிப்பாட்டுக்கும்—அது எங்கு தலை காட்டினாலும் சரி, மக்களின் எந்தப் பிரிவையோ வர்க்கத்தையோ பாதித்தாலும் சரி—பதில் நடவடிக்கை எடுக்கத் திறமுள்ளவராக இருக்க வேண்டும்; இந்த வெளிப்பாடுகளை எல்லாம் பொது வரையறை செய்து போலீஸ் வன்முறை, முதலாளித்துவச் சுரண்டல் பற்றிய ஒரேயொரு சித்திரத்தைத் தீட்டித்தரும் திறமுள்ளவராக இருக்க வேண்டும்; தனது சோஷலிஸ்டுத் துணிபுகளையும் ஜனநாயகக் கோரிக்கைகளையும் எல்லோருடைய முன்னிலையில் வகுத்து முன்வைக்கும் பொருட்டு, பாட்டாளி வர்க்க விடுதலைப் போராட்டத்தின் உலக வரலாற்றுச் சிறப்

புள்ள முக்கியத்துவத்தை எல்லோருக்கும் தெளிவுபடுத்தும் பொருட்டு ஒவ்வொரு நிகழ்ச்சியையும்—அது எவ்வளவு சிறிதாக இருந்தாலும் சரி—பயன்படுத்திக் கொள்ளும் திற முள்ளவராக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, ராபர்ட் நைட் போன்ற ஒரு தலைவரை (இவர் இங்கிலாந்திலுள்ள வலுமிக்க தொழிற்சங்கங்களில் ஒன்றாகிய கொதிகலன் செய்வோர் சங்கத்தின் பிரபலமான செயலாளரும் தலைவருமாவார்) வில்ஹெல்ம் லீப்க்னெஹ்டுடன்[14] ஒப்பிட்டுப் பாருங்கள், இஸ்க்ராவுடன் தாம் நடத்தும் சர்ச்சையில் மார்த்தினவ் வரைந்து காட்டும் வேறுபாடுகளை அவ்விருவருக்கும் பொருத்திப்பார்க்க முயலுங்கள். நீங்கள் காண்பீர்கள்—மார்த்தினவ் கட்டுரையைப் புரட்டியவாறு சொல்கிறேன்: ராபர்ட் நைட் ''சில ஸ்தூலமான நடவடிக்கைகளுக்கு மக்களை அறைகூவியழைப்பதில்'' (மேலே குறிப்பிட்டது, பக்கம் 39) அதிகமாக ஈடுபட்டிருக்கிறார். அதே பொழுதில் வில்ஹெல்ம் லீப்க்னெஹ்ட் ''தற்கால அமைப்பு முறை முழுவதையுமோ அல்லது அதன் அரைகுறையான வெளிப்பாடுகளையோ புரட்சிகரமான வழியிலே விரித்து விளக்குவதில் (38—39) அதிகமாக ஈடுபட்டிருக்கிறார்''; ராபர்ட் நைட் ''பாட்டாளி வர்க்கத்தின் உடனடிக் கோரிக்கைகளை வரையறுத்து அவற்றைப் பெறுவதற்கான வழிமுறைகளைக் காட்டினார்'' (41) என்றால், வில்ஹெல்ம் லீப்க்னெஹ்ட் அதைச் செய்கிற அதே பொழுதில் ''ஏககாலத்தில் பல்வேறு எதிர்ப்பு நிலையிலுள்ள மக்கட் பிரிவுகளின் நடவடிக்கைகளுக்கு வழிகாட்டுவதிலிருந்தும்'' ''அவற்றிற்கு உருப்படியான செயல் வேலைத்திட்டத்தை வகுத்தளிப்பதிலிருந்தும்'' (41) பின்வாங்கவில்லை.* ராபர்ட் நைட் ''முடிந்தவரை பொருளாதாரப் போராட்டத்துக்கே அரசியல் தன்மை கொடுக்க'' (42) முயன்றார், ''தொட்டறியத்தக்க குறிப்பான பலன்கள் அளிக்கக் கூடிய ஸ்தூலமான கோரிக்கைகளை அரசாங்கத்தின் முன் வைப்பதில்'' (43) சிறந்த திறமை பெற்றிருந்தார், அதே பொழுதில் வில்ஹெல்ம் லீப்க்னெஹ்ட் ''ஒருதலையான'' ''அம்பலப்படுத்தல்களில்'' (40) அதை விட அதிகமாக ஈடு

* எடுத்துக்காட்டாக, பிரெஞ்சு-பிரஷ்ய போர் நடந்த போது ஜனநாயகம் முழுவதற்கும் லீப்க்னெஹ்ட் செயல் வேலைத் திட்டம் ஒன்றை வகுத்தளித்தார்; அதை விட அதிகமாக இப்பணியை மார்க்சும் எங்கெல்சும் 1848ல் செய்தனர்.

பட்டிருந்தார். ராபர்ட் நைட் ''சுவையற்ற அன்றாடப் போராட்டத்தின் முன்னேற்றத்துக்கு'' (61) எவ்வளவோ அதிகமான முக்கியத்துவத்தைக் கற்பித்தார், ஆனால் லீப்க்னெஹ்ட் ''ஒளி நிறைந்த, முழுவடிவுள்ள கருத்துக்களைப் பிரச்சாரம் செய்வதற்கு'' (61) மேலும் அதிகமான முக்கியத்துவம் கற்பித்தார். லீப்க்னெஹ்ட் நெறியாண்மை புரிந்து வந்த பத்திரிகையை ''நம் நாட்டு நிலவரங்களை, குறிப்பாக மக்களின் மிக வேறுபட்ட பகுதிகளின் நலன்களைப் பாதிக்கிறதாயுள்ள அரசியல் நிலவரங்களை அம்பலப்படுத்தும் புரட்சிகரமான எதிர்க்கட்சிப் பத்திரிகையாக'' (63) மாற்றினார், ராபர்ட் நைட் ''பாட்டாளி வர்க்கப் போராட்டத்துடன் நெருக்கமான, உயிர்ப்புள்ள தொடர்பு கொண்டு தொழிலாளி வர்க்க இலட்சியத்துக்குப் பணியாற்றினார்'' (63)—அதாவது, கிரிச்சேவ்ஸ்கி, மார்த்தினவ் ஆகியவர்களின் எடுத்துக்காட்டுகளைக் கொண்டு தன்னியல்புக்கு அடிபணிவதை மேலே பரிசீலித்தோமே, அதுதான் ''நெருக்கமான, உயிர்ப்புள்ள தொடர்பு'' என்பதற்குப் பொருள் ஆகுமென்றால்—மற்றும், ''தமது செல்வாக்கின் பரப்பைக் குறுக்கிக் கொண்டார்'', ''அவ்வாறு செய்ததிலே அந்தச் செல்வாக்கை ஆழமாக்கிக் கொண்டார்'' (63)—இதுவே மார்த்தினவின் திடநம்பிக்கையுமாகும். சுருங்கச் சொன்னால், மார்த்தினவ் சமூக-ஜனநாயகத்தை தொழிற்சங்கவாதத்தின் மட்டத்துக்கு மெய்நடப்பில் (de facto) தாழ்த்துகிறதைப் பார்ப்பீர்கள்—காரணம், அவர் சமூக-ஜனநாயகத்தின் நன்மையை விரும்பவில்லை என்பதல்ல, பிளெஹானவைப்[15] புரிந்து கொள்ளச் சிரமம் எடுத்துக் கொள்ளுவதற்குப் பதில் அவரது அறிவை ஆழப்படுத்துவதில் மார்த்தினவ் சற்று மிதமிஞ்சிய அவசரம் காட்டுகிறார்.

நிற்க, நமது ஆய்வுரைக்குத் திரும்பி வருவோம். பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் உணர்வை சர்வ அம்சத்திலும் வளர்ப்பது அவசியம் என்று உண்மையிலேயே ஒரு சமூக-ஜனநாயகவாதி நம்புகிறாரென்றால் அவர் ''மக்களின் எல்லா வர்க்கங்களிடையேயும் போவது'' அவசியம் என்று சொன்னோம். இதை எப்படிச் செய்வது? செய்வதற்குப் போதிய சக்திகள் நம்மிடம் உள்ளனவா? மற்றெல்லா வர்க்கங்களிடையேயும் இப்படிப்பட்ட வேலை செய்வதற்கு அடிப்படை இருக்கிறதா? இது வர்க்கப் பார்வை நிலையிலிருந்து

பின்வாங்குவதில் கொண்டுபோய் விடுவது என்று பொருள் படாதா?—எனும் கேள்விகள் இதிலிருந்து எழுகின்றன. இக்கேள்விகளைக் கவனிப்போம்.

தத்துவாசிரியர்கள், பிரச்சாரக்கர்த்தாக்கள் கிளர்ச்சியாளர்கள், அமைப்பாளர்கள் என்கிற வகையில் நாம் ''மக்களின் எல்லா வர்க்கங்களிடையேயும் போக'' வேண்டும். பல்வேறு வர்க்கங்களின் சமுதாய, அரசியல் நிலைமையின் தனிக்குறிப்பான எல்லா முனைப்புக் கூறுகளையும் பயில்வதை சமூக-ஜனநாயகவாதிகளின் தத்துவார்த்தப் பணி தனது குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதில் எவருக்கும் ஐயமில்லை. ஆனால், தொழிற்சாலை வாழ்க்கையின் தனிக்குறிப்பான முனைப்புக் கூறுகளைப் பயில்வதில் ஆற்றியிருக்கும் பணியோடு ஒப்பிடும் போது இத்துறையில் ஆற்றிவருவது மிகச் சொற்பமே. உலோகத் தொழிலின் ஏதாவதொரு கிளையைப் பற்றியும் கூடப் பயில்வதில் மூழ்கியிருக்கும் நபர்களைக் கமிட்டிகளிலும் பயிற்சிக் குழுக்களிலும் சந்திக்க முடியும், ஆனால் பிற மக்கட் பிரிவுகளிடையே சமூக-ஜனநாயகப் பணி செய்வதற்குச் சாதனமாகப் பயன்பட முடிகிற மாதிரி ஏதாவதொரு அவசர அவசியமான சமுதாய, அரசியல் பிரச்சினை குறித்து விவரப் பொருட்களைத் திரட்டுவதில் குறிப்பாக ஈடுபட்டுள்ள அமைப்புகளின் உறுப்பினர்களை (அடிக்கடி நிகழ்கிற மாதிரி, ஏதாவதொரு காரணத்திற்காக நடைமுறைப் பணியைக் கைவிட வேண்டி நேரிடும் உறுப்பினர்களை) காண்பது அரிதாகும். தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தற்காலத்திய பெரும்பான்மையான தலைவர்கள் பயிற்சியற்றிருக்கும் விஷயத்தைப் பற்றிப் பேசுகையில் இது சம்பந்தப்பட்ட பயிற்சி பற்றியும் குறிப்பிடாமல் இருக்க முடியாது; காரணம், இதுவும் ''பாட்டாளி வர்க்கப் போராட்டத்துடன் நெருக்கமான, உயிர்ப்புள்ள தொடர்பு'' பற்றிய ''பொருளாதாரவாதக்'' கருத்தோட்டத்துடன் பிணைக்கப்பட்டுள்ளது. உண்மைதான், எல்லா மக்கட் பிரிவுகளிடையேயும் பிரச்சாரமும் கிளர்ச்சியும் நடத்துவதே முதன்மையான காரியம். எல்லோரும் வந்து கேட்கிற மாதிரி பொதுக் கூட்டங்களும் அணிவகுப்புகளும் நடப்பதும் நாடாளுமன்றத்தில் எல்லா வர்க்கங்களின் பிரதிநிதிகளையும் நோக்கி உரை நிகழ்த்த முடிவதும் இந்த அம்சத்தில் மேற்கு ஐரோப்பிய சமூக-ஜனநாயகவாதியின் வேலைக்கு வசதியா

யுள்ளது. நமக்கு நாடாளுமன்றமும் இல்லை, கூட்டம் கூடிப் பேசும் உரிமையும் இல்லை என்றபோதிலும், ஒரு சமூக-ஜன நாயகவாதியின் பேச்சைக் கேட்க விரும்பும் தொழிலாளர் கூட்டங்களை நாம் ஏற்பாடு செய்ய முடிகிறது. ஒரு ஜனநாயக வாதியின் பேச்சைக் கேட்க விரும்புகிற எல்லா வர்க்கங் களின் பிரதிநிதிகளையும் கொண்ட கூட்டங்களை ஏற்பாடு செய்வதற்கான வழிவகைகளையும் நாம் தேடிக் கொள்ள வேண்டும். ஏனெனில், ''ஒவ்வொரு புரட்சிகரமான இயக்கத் தையும் கம்யூனிஸ்டுகள் ஆதரிக்கிறார்கள்''[16] என்பதையும் அக்காரணத்தால் நமது சோஷலிஸ்டுத் துணிபுகளை ஒரு கணமேனும் மூடிமறைக்காமல் எல்லா மக்கள் முன்னிலையில் பொதுவான ஜனநாயகப் பணிகளை நாம் விளக்கி வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதையும் மறக்கிறவன் சமூக-ஜனநாயகவாதி அல்ல. ஒவ்வொரு பொதுவான ஜனநாயகப் பிரச்சினையையும் எழுப்புவதிலும் வற்புறுத்துவதிலும் தீர்ப் பதிலும் எல்லோரையும் முந்திக் கொண்டு நிற்க வேண்டிய தனது கடமையை நடைமுறையில் மறக்கிறவன் சமூக-ஜன நாயகவாதி அல்ல.

## 4. பொருளாதாரவாதிகளின் பக்குவமின்மையும் புரட்சியாளர்களின் அமைப்பும்

### அ. பக்குவமின்மை என்பது என்ன?

*1894—1901* காலத்தைச் சேர்ந்த, மாதிரியாகக் கொள்ளத்தக்க ஒரு சமூக-ஜனநாயகப் பயிற்சிக் குழுவின் நட வடிக்கையைச் சுருக்கமாக வர்ணிப்பதின் வழியே இந்தக் கேள்விக்கு விடையளிக்க முயல்வோம். அந்தக் காலத்திய மாணவ இளைஞர்கள் அனைவரும் மார்க்சியத்தில் மூழ்கிப் போயிருந்ததைக் குறிப்பிட்டிருக்கிறோம். அந்த மாணவர்கள் தத்துவம் என்கிற வகையில் மார்க்சியத்தின் பால் அக்கறை கொண்டிருந்தது மட்டுமல்ல; அல்லது அதை விட அதிக மாக, ''என்ன செய்ய வேண்டும்?'' எனும் கேள்விக்குரிய விடையாக, பகைவனை எதிர்த்துக் கிளம்ப அழைக்கும் அறைகூவல் என்ற முறையில் அதன் பால் அக்கறை கொண் டிருந்தார்கள் என்பது உண்மை. இந்தப் புதிய போர்வீரர்கள் திகைப்பூட்டக் கூடிய அளவுக்கு ஆதிகால ஆயுதங்களோடும்

பயிற்சியோடும் போர்க்களத்தை நோக்கி விரைந்தனர். அவர்களில் பெரும்பாலாரிடம் ஆயுதம் அநேகமாக இல்லை, பயிற்சி அறவே இல்லை. ஏரையும் கலப்பையையும் விட்டு கம்புகளை மட்டும் எடுத்துக் கொண்டுவரும் விவசாயிகள் போல் போருக்குக் கிளம்பிவிட்டார்கள். இயக்கத்தின் பழைய உறுப்பினர்களோடு எந்தத் தொடர்பும் இல்லாமலே, பிற மாவட்டங்களிலுள்ள பயிற்சிக் குழுக்களோடு எந்தத் தொடர்பும் இல்லாமலே, அல்லது ஒரே நகரத்தின் பிற பகுதிகளிலுள்ள (அல்லது பிற கல்வி நிலையங்களிலுள்ள) பயிற்சிக் குழுக்களோடுங்கூட எந்தத் தொடர்பும் இல்லாமலே, புரட்சிப் பணியின் பல்வேறு பிரிவுகளுக்குரிய அமைப்பு எதுவும் இல்லாமலே, எந்த ஒரு கால அளவுக்கும் போதியதான முறையான நடவடிக்கைத் திட்டம் ஏதும் இல்லாமலே ஒரு மாணவர் பயிற்சிக் குழு தொழிலாளிகளோடு தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு வேலை செய்யத் தொடங்குகிறது. இந்தக் குழு படிப்படியாகத் தனது பிரச்சாரத்தையும் கிளர்ச்சியையும் விரிவாக்கிக் கொள்கிறது; தனது நடவடிக்கைகளைக் கொண்டு ஓரளவுக்குப் பெரும் பகுதித் தொழிலாளிகளின் அனுதாபத்தையும் படித்த மக்கட் பகுதியிலே ஒரு பிரிவினரின் அனுதாபத்தையும் வென்று கொள்கிறது, அவர்களிடமிருந்து பணமும் பெறுகிறது, அவர்களிடையேயிருந்து புதிய இளைஞர் குழுக்களையும் ''கமிட்டி'' சேர்த்துக் கொள்கிறது. கமிட்டியின் (அல்லது போராட்டச் சங்கத்தின்) கவர்ச்சிச் சக்தி வளர்கிறது, அதன் நடவடிக்கைத் துறை விரிவடைகிறது, கமிட்டி இந்நடவடிக்கையை முற்றிலும் தன்னியல்பாகத்தான் விரிவாக்குகிறது. ஓராண்டுக்கு முன்னரோ சில மாதங்களுக்கு முன்னரோ மாணவர் பயிற்சிக் குழுக் கூட்டங்களில் பேசியும் ''எங்கே செல்கிறோம்?'' எனும் பிரச்சினையை விவாதித்தும் வந்த அதே நபர்கள்தாம், தொழிலாளிகளோடு தொடர்பு ஏற்படுத்தி நிலைநிறுத்திக் கொண்டு துண்டுப் பிரசுரங்கள் எழுதியும் பிரசுரித்தும் வந்த அதே நபர்கள்தாம் இப்போது வேறு புரட்சியாளர் குழுக்களோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்கிறார்கள், இலக்கியங்களைத் தேடிக் கொடுக்கிறார்கள், உள்ளூர் செய்தித்தாள் ஒன்றை பிரசுரிக்க முனைகிறார்கள், ஆர்பாட்டம் நடத்த அணிதிரட்டுவது பற்றிப் பேசத் தொடங்குகிறார்கள், கடைசியில் பகிரங்கமான போராட்டத்துக்கு வருகிறார்கள் (இது,

சூழ்நிலைமைகளுக்கேற்ப, முதல் கிளர்ச்சித் துண்டுப் பிரசுரம் வெளியிடுகிறதாகவோ, முதல் செய்தித்தாள் இதழ் வெளியிடுகிறதாகவோ, முதல் ஆர்ப்பாட்டத்துக்கு அணிதிரட்டுகிறதாகவோ வடிவம் தாங்கலாம்). இப்படிப்பட்ட செயல்கள் துவக்கியதும் உடனடியான, முழுமையான தோல்வியில் முடிவது வழக்கம். தோல்வி உடனடியானது, முழுமையானது—காரணம், ஒரு நீடித்த, பிடிவாதமான போராட்டத்துக்கு முறையாகவும் கவனமாகவும் சிந்தித்துப் படிப்படியாகத் தயாரிக்கப்பட்ட ஒரு திட்டத்தின் விளைவல்ல இந்தப் பகிரங்கப் போராட்டம்,மரபான பயிற்சிக் குழுவின் வேலையின் தன்னியல்பான வளர்ச்சியிலிருந்து அப்படியே ஏற்பட்ட விளைவு அது;காரணம்,இயல்பாகவே, அநேகமாக எல்லா நிகழ்வுகளிலும் போலீசுக்கு உள்ளூர் இயக்கத்தின் முக்கியத் தலைவர்களைத் தெரியும். ஏனெனில், அவர்கள் மாணவர்களாயிருந்த காலத்தில் ஏற்கெனவே ''பெயர்பெற்று'' விட்டவர்கள், போலீஸ் தனது திடீர்ச் சோதனைக்குச் சரியான தருணம் பார்த்துக் கொண்டிருந்தது, அவ்வளவுதான் பயிற்சிக் குழு தன் வேலையை வளர்க்கட்டும், அதனால் கணிசமான corpus delicti* கிடைக்கும் என்று போலீஸ் வேண்டுமென்றே போதிய காலத்துக்கு விட்டுவைத்திருந்தது. மேலும், எப்போதும் ''வளர்ப்புக்காக'' (எனக்குத் தெரிந்த வரை இந்தச் சொல்லை நம்மவர்களும் போலீஸ்காரர்களும் பயன்படுத்துகிறார்கள்) தனக்குத் தெரிந்த சில பேர்களை போலீஸ் சுதந்திரமாயிருக்க விட்டிருந்தது. நவீனகாலத் துருப்புகளை எதிர்த்து விவசாயிகள் கம்புகள் ஏந்தி போராடும் போராட்டத்துடன் இதை ஒப்பிட்டுப் பார்க்காமல் இருக்க முடியாது. என்றாலும், போராளிகளுக்குப் பயிற்சி அறவே இல்லாதிருந்துங்கூட இயக்கம் விரிந்து வளர்ந்து வெற்றிகள் ஈட்டிக் கொண்டுதான் இருந்தது என்றால், அந்த இயக்கத்தின் வீரியத்தைக் கண்டு வியக்காமலிருக்கவும் முடியாது. உண்மைதான், வரலாற்றுப் பார்வை நிலையிலிருந்து பார்க்கையில், ஆயுதங்களின் பழம்பாணி துவக்கத்தில் தவிர்க்க முடியாததே; அது மட்டுமல்ல, விரிந்த அளவில் போராளிகளைத் திரட்டிச் சேர்த்துக் கொள்வதற்கான நிலைமைகளில் ஒன்று

*—குற்றச்சாட்டுக்கான உருப்படியான ஆதாரங்கள். —ப-ர்.

என்கிற வகையில் அது நியாயமானதுங்கூட. ஆனால் முக்கியமான போர் நடவடிக்கைகள் துவங்கியவுடன் (உண்மையிலே அவை 1896 கோடைக்காலத்தில் வேலைநிறுத்தங்களுடன் தொடங்கிவிட்டன) நமது போர் அமைப்புகளிலுள்ள குறைபாடுகள் மேன்மேலும் அதிகமாக நாம் உணரும் அளவுக்கு வெளிப்படலாயின. அரசாங்கம் முதலில் குழம்பிப்போய் பல தவறுகள் செய்தது (எடுத்துக்காட்டாக, அது சோஷலிஸ்டுகளின் தீச்செயல்களை வர்ணித்து மக்களுக்கு வேண்டுகோள் விட்டது, அல்லது தொழிலாளிகளைத் தலைநகரங்களிலிருந்து மாநிலத் தொழில்துறை மையங்களுக்குக் கடத்தியது), வெகு விரைவிலே போராட்டத்தின் புதிய நிலைமைகளுக்கேற்றவாறு தன்னைச் சரிப்படுத்திக் கொண்டு நேர்த்தியாக ஆயத்தம் செய்யப்பட்ட ஆத்திரமூட்டும் கையாட்களையும் உளவாளிகளையும் அரசியல் போலீஸ்காரர்களையும் கொண்ட படைகளை நன்கு பரப்பி நிறுத்தியது. போலீஸ் படையெடுப்புகள் அடிக்கடி நிகழ்ந்தன, பெருந் தொகையான மக்களைப் பாதித்தன, உள்ளூர்ப் பயிற்சிக் குழுக்களை முற்றாக அழித்துவிட்டன, தொழிலாளர்களின் மக்கள் திரள் தங்கள் தலைவர்களனைவரையும் இழந்தது. இதனால், இயக்கம் மலைக்கத்தக்க திடீர்சிதறலான தன்மை பெற்று விட்டது; தொடர்ச்சியான, உள்ளிணக்கமான வேலை செய்வது அறவே சாத்தியமற்று விட்டது. உள்ளூர்த் தலைவர்கள் பயங்கரமாகச் சிதறடிக்கப்பட்டனர்; பயிற்சிக் குழுக்களில் உறுப்பினர்கள் சேர்வது தற்செயலான நிகழ்ச்சியாகிவிட்டது; தத்துவார்த்த, அரசியல், ஸ்தாபனத் துறை பிரச்சினைகளில் பயிற்சியின்மை, அவற்றைப் பற்றிய குறுகிய பார்வை; இவையனைத்தும் மேலே வர்ணித்த நிலைமைகளின் தவிர்க்கவியலாத விளைவாகும். காரியங்கள் எந்த அளவுக்கு முற்றிவிட்டன என்றால், நம்மிடம் தன்னுணர்ச்சிக் கட்டுப்பாடு இல்லாததாலும் இரகசிய நிலையை நீடித்திருக்கச் செய்யும் திறமை இல்லாததாலும் பல இடங்களில் தொழிலாளிகள் அறிவுஜீவிகள்பால் நம்பிக்கை இழந்து அவர்களை விட்டு விலகிச் செல்லத் தொடங்குகின்றனர். அறிவுஜீவிகளுடைய கவனமின்மை தோல்விகளுக்கு இடமளிக்கிறது என்று அவர்கள் பேசுகின்றனர்!

## இ. தொழிலாளிகளின் அமைப்பும் புரட்சியாளர்களின் அமைப்பும்

''நூறு முட்டாள்களை விட டஜன் அறிஞர்களைச் சுலுவாக ஒழித்துவிட முடியும்.'' இந்த அதிசயமான உண்மை (இதற்காக அந்த நூறு முட்டாள்களும் உங்களை எப்போதும் பாராட்டுவார்கள்) வெளிப்படையானதாகத் தோன்றுவதற்குக் காரணம் வாதத்தின் மத்தியில் நீங்கள் ஒரு பிரச்சினையை விட்டு வேறொரு பிரச்சினைக்குத் தாவிவிட்டிருப்பதுதான். ''கமிட்டி'' பறித்தெறியப்படுவது பற்றி, ''அமைப்பு'' பறித்தெறியப்படுவது பற்றி நீங்கள் பேசத் தொடங்கினீர்கள், நீடித்துப் பேசிக் கொண்டேயிருந்து இப்போது இயக்கத்தின் ''வேர்கள்'' அவற்றின் ''அடியாழத்திலிருந்து'' பறித்தெறியப்படும் பிரச்சினைக்குத் தாவுகிறீர்கள். உண்மையில் விஷயம் என்னவென்றால், நம் இயக்கத்தைப் பறித்தெறிய முடியாது, ஏனெனில் அது மக்களிடையே பல்லாயிரக்கணக்கான வேர்கள் கொண்டிருக்கிறது. ஆனால், சர்ச்சையிலிருக்கும் விவகாரம் அது அல்ல. ''ஆழமான வேர்கள்'' பொறுத்தவரை, நம்மிடம் தேர்ச்சிநயமின்மை எவ்வளவோ இருந்தும், இன்று கூட நம்மைப் ''பறித்தெறிய'' முடியாது; என்றபோதிலும் ''அமைப்புகள்'' பறித்தெறியப்படுவது பற்றியும் அதன் விளைவாக இயக்கத்தில் தொடர்ச்சியை வைத்திருக்க முடியாமலிருப்பது பற்றியும் நாமனைவரும் குறைபட்டுக் கொள்கிறோம், குறைபட்டுக் கொள்ளாமல் இருக்கவும் முடியாது. எனினும் நீங்கள் அமைப்புகள் பறித்தெறியப்படுவது பற்றிய பிரச்சினையைக் கிளப்புகிறதினாலும் உங்கள் கருத்தைப் பிடிவாதமாக வற்புறுத்துவதாலும், நூறு முட்டாள்களைப் பிடித்துச் செல்வதை விட டஜன் அறிஞர்களைப் பிடித்துச் செல்வது எவ்வளவோ கஷ்டம் என்று அறைந்து கூறுகிறேன். எனது ''ஜனநாயக விரோதமான'' கருத்துக்கள் முதலியவற்றிற்காக எனக்கு எதிராக நீங்கள் எவ்வளவுதான் மக்களைத் தூண்டிவிட்டாலும் சரியே, இந்நிலையை ஆதரித்துநிற்பேன். ஏற்கெனவே நான் திரும்பத் திரும்ப சொல்லியுள்ள படி, அமைப்பு சம்பந்தமாக நான் ''அறிஞர்கள்'' என்பதற்கு முழுநேரப் புரட்சியாளர்கள் என்றே பொருள் கொள்கிறேன், அவர்கள் மாணவர்கள் மத்தியிலிருந்து உருவாகி வளர்ந்தவர்களா அல்லது தொழிலாளர்கள் மத்தியிலிருந்து உருவாகி வளர்ந்தவர்களா

என்பது பற்றிக் கவலேயில்லே. நான் அறைந்து கூறுகிறேன்: 1) தலைவர்களைக் கொண்டதாய் தொடர்ச்சியை நிலைநிறுத்தி வரும் ஒரு திடமான அமைப்பு இல்லாமல் எந்தப் புரட்சி இயக்கமும் நிலைத்து நிற்க முடியாது என்று; 2) போராட்டத்தில் தன்னியல்பாக இழுக்கப்பட்டுவரும் மக்கள்தாம் இயக்கத்துக்கு அடிப்படையாக இருந்து கலந்து கொள்கிருர்கள், அப்படிப்பட்ட மக்கள் திரள் எவ்வளவுக்கெவ்வளவு விரிந்து பரந்து இருக்கிறதோ அவ்வளவுக்கு இப்படிப்பட்ட அமைப்பு அவசரத் தேவையாகும், அவ்வளவுக்கு இந்த அமைப்பு மேலும் கெட்டியானதாக இருந்து தீர வேண்டும் (காரணம், மக்களில் கூடுதலாகப் பிற்பட்ட நிலையில் உள்ள பகுதிகளைப் பலரகமான வாய்வீச்சு வீரர்கள் திசை திருப்புவது மேலும் சுளுவானது) என்று; 3) புரட்சி நடவடிக்கையில் முழுநேரமாக ஈடுபட்டுள்ள நபர்கள்தாம் முதன்மையாக இப்படிப்பட்ட அமைப்பில் இருக்க வேண்டும் என்று; 4) ஒரு எதேச்சாதிகார அரசில், முழுநேரமாகப் புரட்சி நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறவர்களாயும் அரசியல் போலீசை எதிர்த்துப் போராடும் கலையில் தொழில்முறை பயிற்சி பெற்றவர்களாயும் உள்ளவர்களை மட்டும் கொண்டதாய் இப்படிப்பட்ட அமைப்புகளில் உறுப்பினர் தொகையை எவ்வளவுக்கெவ்வளவு கட்டுப்படுத்துகிருேமோ அவ்வளவுக்கு இந்த அமைப்பைக் ''கெல்லியெறிவது'' கஷ்டமாகும் என்று; மற்றும் 5) அவ்வளவுக்கு இயக்கத்தில் சேர்ந்து அதில் தீவிரமாகப் பணிபுரியக் கூடிய தொழிலாளி வர்க்க நபர்களும் ஏனையச் சமுதாய வர்க்கங்களின் நபர்களும் அதிகமாக இருப்பார்கள் என்று.

இந்த முன்கூற்றுகள் தவறென்று நிரூபிக்குமாறு நம் ''பொருளாதாரவாதிகளையும்'' பயங்கரவாதிகளையும் ''பொருளாதாரவாதிகள்-பயங்கரவாதிகளையும்''* அழைக்

---

* முந்தையச் சொற்களை விட இந்தச் சொல் ஸ்வபோதாவுக்கு ஒருவேளை பொருந்தக் கூடும். ஏனெனில், புரட்சிவாதத்தின் மறுபிறப்பு எனும் தலைப்பிட்ட கட்டுரையில் இந்த சஞ்சிகை பயங்கரவாதத்தைத் தாங்கிப் பேசுகிறது, அதே நேரத்தில் நாம் தற்போது விமர்சித்துக் கொண்டிருக்கும் கட்டுரையில் ''பொருளாதாரவாதத்தைத்'' தாங்கிப் பேசுகிறது. ''முடிந்தால் செய்யும், ஆனல் முடியவில்லை'' என்று ஸ்வபோதா விஷயத்தில் சொல்லிவைக்கலாம். அதன் விருப்பங்களும்

கிறேன். தற்போதைக்கு நான் கடைசி இரண்டு அம்சங்களை மட்டும் எடுத்துக் கவனிக்கிறேன். ''டஜன் அறிஞர்களை'' ஒழிப்பது சுலபமா அல்லது ''நூறு முட்டாள்களை'' ஒழிப்பது சுலபமா எனும் பிரச்சினை, கண்டிப்புள்ள இரகசிய நிலையை நிலைக்கச் செய்வது அவசியமாயிருக்கும் போது ஒரு வெகுஜன அமைப்பை வைத்திருப்பது சாத்தியமா என்று நாம் மேலே கவனித்த பிரச்சினையாகிவிடுகிறது. அரசாங்கத்தை எதிர்த்து விடாப்பிடியான தொடர்ந்த போராட்டம் நடத்துவதற்கு இன்றியமையாத அளவில் இரகசிய நிலையை நாம் ஒரு வெகுஜன அமைப்புக்குக் கொடுக்கவே முடியாது. எல்லா இரகசிய வேலைகளையும் முடிந்தவரை ஒரு சில முழுநேரப் புரட்சியாளர்களிடம் முற்றாக ஒப்படைப்பதற்கு அர்த்தம் அவர்கள் ''எல்லோருக்குமாகச் சேர்த்து சிந்திப்பார்கள்'' என்பதோ, சாதாரண ஊழியர்கள் இயக்கத்தில் தீவிரமாகப் பங்கு கொள்ள மாட்டார்கள் என்பதோ அல்ல. மாறாக, அவர்கள் தங்கள் அணிகளிடையேயிருந்து மேன்மேலும் அதிகமான எண்ணிக்கையில் முழுநேரப் புரட்சியாளர்களை வளர்த்துக் கொண்டு வருவார்கள்; காரணம், ஒரு சில மாணவர்களும் பொருளாதாரப் போராட்டத்தை நடத்திக் கொண்டு இருக்கும் ஒரு சில தொழிலாளிகளும் ''கமிட்டி'' அமைப்பதற்காக ஒன்று கூடினால் போதாது என்பதும் முழுநேரப் புரட்சியாளனாகப் பயிற்சி பெறுவதற்குப் பல ஆண்டுகள் பிடிக்கும் என்பதும் அவர்களுக்குத் தெரியும்; மேலும், சாதாரண

---

நோக்கங்களும் மிகச் சிறந்தவைதான்—ஆனால் விளைவு என்னவோ குழப்பமயமாயுள்ளது; இதற்கு முக்கிய காரணம், அமைப்பின் தொடர்ச்சியை ஸ்வபோதா ஆதரித்துப் பேசுகிற அதே நேரத்தில் புரட்சிகரமான சிந்தனையின் தொடர்ச்சியையும் சமூக-ஜனநாயகத் தத்துவத்தின் தொடர்ச்சியையும் அங்கீகரிக்க மறுக்கிறது. அது முழுநேரப் புரட்சியாளனை மீண்டும் கொண்டுவர விரும்புகிறது (புரட்சிவாதத்தின் மறு பிறப்பு), அதன் பொருட்டு முதலாவதாக உணர்ச்சியைத் தூண்டிவிடும் பயங்கரவாதத்தையும் இரண்டாவதாக ''சராசரி ஊழியர்களின் அமைப்பையும்'' முன்வைக்கிறது, அந்த அமைப்பை ''வெளியிலிருந்து முன்னேக்கித்தள்ளுவது'' குறைவாயிருக்குமாம் (ஸ்வபோதா, இதழ் 1, பக்கம் 66, மற்றும் அடுத்த சில பக்கங்கள்), அதாவது வீட்டுக்குள் வெப்பம் உண்டாக்குவதற்காக அந்த வீட்டைத் தகர்த்து அதன் மரச் சட்டங்களை எரிப்போம் என்று சொல்லலாம்.

ஊழியர்கள் தேர்ச்சிநயமற்ற வேலை முறைகளைப் பற்றி மட்டுமல்லாமல் இப்படிப்பட்ட பயிற்சி பற்றியும் ''சிந்திப் பார்கள்''. அமைப்பின் இரகசிய வேலைகளை மையப்படுத்துவது என்றால் இயக்கத்தின் எல்லா வேலைகளையும் மையப்படுத்து வதாக அர்த்தமல்ல, அல்லவே அல்ல. சட்டவிரோதமான இலக்கியத்தை வெளியிடுவது சம்பந்தப்பட்ட எல்லா இரக சிய வேலைகளையும் ஒரு ''பத்து'' முழுநேரப் புரட்சியாளர் கள் மையப்படுத்துகிறார்கள் என்கிற காரணத்திற்காகச் சட்ட விரோத இலக்கியத் துறையில் மிக விரிவான மக்கள் திரள் தீவிரமாக ஈடுபடுவது குறைந்துவிடாது; மாறாக, பத்து மடங்கு அதிகமாகும். இந்த ஒரே வழியிலேதான், சட்டவிரோத மான இலக்கியத்தைப் படிப்பதும் அதற்கு எழுதுவதும் ஓரளவுக்கு அதை வினியோகிப்பதும் அநேகமாக இரகசிய மற்ற வேலையாகி விடும்படி நாம் உறுதிப்படுத்திக் கொள்ளு வோம். ஏனெனில், பல்லாயிரக்கணக்கிலே வினியோகிக்கப் பட்டு வரும் வெளியீடுகளின் ஒவ்வொரு பிரதி விஷயத்திலும் சட்ட ரீதியான, நிர்வாக ரீதியான சிவப்புநாடா செயல்முறை கைக்கொள்வது முட்டாள்தனம், அசாத்தியமானதுங்கூட என்று வெகு விரைவிலே போலீஸ் புரிந்து கொள்ளத் தொடங்கும். இது பத்திரிகை விஷயத்தில் மட்டுமின்றி இயக் கத்தின் ஒவ்வொரு வேலைக்கும் ஆர்ப்பாட்டங்களுக்குங்கூட பொருந்தும். மக்கள் தீவிரமாகவும் பரவலாகவும் கலந்து கொள்வது பாதிக்கப்படாது; மாறாக, போலீசுக்குச் சமமாகத் தொழில்முறையில் பயிற்சி பெற்ற ஒரு ''பத்து'' அனுபவ முள்ள புரட்சியாளர்கள் வேலையின் எல்லா இரகசியமான அம்சங்களையும்—துண்டுப் பிரசுரங்கள் எழுதுவது, உத்தேச மான திட்டங்கள் வகுத்திடுவது, ஒவ்வொரு நகரப் புறத்து மாவட்டத்துக்கும் தொழிற்சாலைப் பிரதேசமான மாவட்டத் துக்கும் ஒவ்வொரு கல்வி நிறுவனத்துக்கும் பிறவற்றிற் கும் தலைவர்களைக் கொண்ட உறுப்புகளை நியமிப்பது இத்தியாதி—மையப்படுத்துவதால் அதற்கு நன்மையே கிடைக்கும் (எனது ''ஜனநாயகப் பாங்கற்ற'' கருத்துக் களுக்கு ஆட்சேபணை கிளம்பும் என்பதை நான் அறிவேன். இந்த அறிவற்ற ஆட்சேபணைக்குக் கீழே முற்றாகப் பதிலளிப் பேன்). புரட்சியாளர்களின் அமைப்பில் மிக இரகசியமான வேலைகளை மையப்படுத்துவது, வேறு மிகப் பல அமைப்பு களுடைய நடவடிக்கையின் விரிவையும் தரத்தையும் குறைப்

பதற்குப் பதிலாக உயர்த்தவே செய்யும்; இந்த வேறு அமைப்புகள் விரிந்த மக்கட் பகுதிக்காக அமைக்கப் பட்டவை, எனவே கூடுமானவரை நெகிழ்வாயும் மறைவின்றி யும் இருப்பவை, எடுத்துக்காட்டாக: தொழிலாளர்களின் தொழிற்சங்கங்கள், தொழிலாளர்களின் சுயக்கல்விக் குழுக் கள், சட்டவிரோதமான இலக்கியம் படிப்பதற்கான வட்டங் கள், மக்களின் மற்ற எல்லாப் பகுதிகளிலுமுள்ள சோஷ லிஸ்டு மற்றும் ஜனநாயக வட்டங்கள் முதலியன. இவ்வகைப் பட்ட வட்டங்களும் சங்கங்களும் அமைப்புகளும் சாத்திய மானவரை பெருந் தொகையில் பல வித வேலைகள் உள்ளவை யாய் எல்லா இடங்களிலும் நமக்கு இருக்க வேண்டும். ஆனால் அவற்றைப் புரட்சியாளர்களின் அமைப்போடு குழப்பிக் கொள்வது, இரண்டுக்கும் உள்ள எல்லைக்கோட்டை அழித்து விடுவது, வெகுஜன இயக்கத்துக்குப் ''பணியாற்றிட'' சமூக-ஜனநாயக நடவடிக்கைகளுக்கு முற்றாக அர்ப் பணித்துக் கொள்கிற நபர்கள் நமக்கு இருக்க வேண்டும் என்கிற விஷயத்தையும் அப்படிப்பட்ட நபர்கள் முழுநேரப் புரட்சியாளர்கள் ஆவதற்குப் பொறுமையுடனும் உறுதி யுடனும் தங்களைப் பயிற்றுவித்துக் கொள்ள வேண்டும் என்கிற விஷயத்தையும் எவ்வளவோ தெளிவின்றி அங்கீகரித்திருப் பதை மேலும் குழப்பிவிடுவது முட்டாள்தனமானதாகும், தீங்கானதாகும்.

ஆம், இது மிகத் தெளிவின்றியே அங்கீகரிக்கப்பட்டிருக் கிறது. நமது பக்குவமின்மை காரணமாக ருஷ்யாவில் நாம் புரட்சியாளர்களின் கௌரவத்தைத் தாழ்த்தியிருக்கிறோம்; அமைப்பு விஷயத்தில் நாம் செய்திருக்கும் படுமோசமான கேடு இதுவே. தத்துவ சம்பந்தமான பிரச்சினைகளில் உரமின்மை, உறுதியின்மை; குறுகிய பார்வை; தன் சொந்தச் சோம் பலுக்கு மக்களின் தன்னியல்புத்தன்மையைச் சாக்காகச் சொல்வது; மக்களின் தலைவராயிருப்பதை விட தொழிற் சங்கச் செயலாளர் போலத் தோன்றுவது; எதிரிகளுங்கூட மதிக்கத்தக்க விரிவான, தைரியமான திட்டம் உருவாக்கி யளிக்கத் திறனின்மை; தானே தொழிலாக மேற்கொண்டு ள்ள கலையில்—அரசியல் போலீசை எதிர்த்துப் போராடும் கலையில்—அனுபவமின்மை, நயமின்மை; இப்படியுள்ள நபர் புரட்சியாளனல்ல, படுமோசமான கற்றுக்குட்டியே!

இந்த ஒளிவுமறைவற்ற கருத்துரைகளால் தீவிர ஊழி

யர்கள் யாரும் மனம் புண்பட வேண்டாம்; ஏனெனில், பயிற்சி போதாமை விஷயத்தில் என்னையே முதலில் குறை கூறிக் கொள்கிறேன். நான் ஒரு பயிற்சிக் குழுவில் பணியாற்றி வந்த துண்டு; அது மிக விரிவான, முழுதளாவிய பணிகளை வைத்திருந்தது. அதன் உறுப்பினர்களாகிய நாங்கள் எல்லோரும் ''புரட்சியாளர்களைக் கொண்ட அமைப்பைத் தாருங்கள், ருஷ்யாவைக் குப்புறக் கவிழ்ப்போம்!'' (ஒரு பிரசித்தி பெற்ற கூற்றை மாற்றிச் சொல்கிறேன்) என்று சொல்லியிருக்கத் தக்க வரலாற்றுத் தருணத்தில் தேர்ச்சிநயமற்றவர்களாகச் செயலாற்றுகிறோமே என்கிற உணர்வு மேலிட்டு வேதனைப் பட்டோம். அப்போது நான் அனுபவித்த சுட்டெரிக்கும் வெட்க உணர்வை நினைத்துப் பார்க்கப் பார்க்க போலி சமூக-ஜனநாயகவாதிகள் மீது எனக்குள்ள கசப்புணர்ச்சி அதிகமாகிறது. இந்தப் போலி சமூக-ஜனநாயகவாதிகளின் போதனைகள் ''புரட்சியாளனின் தொழிலுக்கு அவமானம் உண்டாக்குகின்றன''; புரட்சியாளனைக் கற்றுக்குட்டியின் தரத்துக்குத் தாழ்த்துவதை ஆதரித்துப் பேசுவதல்ல, கற்றுக் குட்டிகளைப் புரட்சியாளர்களின் தரத்துக்கு உயர்த்துவதே நம் பணி என்பதை அவர்கள் புரிந்து கொள்ளத் தவறுகிறார்கள்.

### ஈ. அமைப்பு வேலையின் செயல் பரப்பு

''செயலாற்றத் தகுதியுள்ள புரட்சிச் சக்திகள் போதாதிருப்பதை செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் மட்டுமின்றி ருஷ்யாவெங்கும் உணர்ந்திருக்கிறார்கள்'' என்பது பற்றி B-v[17] சொல்லக் கேட்டிருக்கிறோம். இவ்விஷயத்தை அநேகமாக யாரும் மறுக்க மாட்டார்கள். ஆனால், இதை எப்படி விளக்குவது என்பதே கேள்வி. B-v எழுதுகிறார்:

''இந்தப் புலப்பாட்டுக்குரிய வரலாற்றுக் காரணங்களை நாம் விளக்கப் புகவில்லை. நீடித்த அரசியல் பிற்போக்காலும் சென்ற கால, நிகழ் காலப் பொருளாதார மாற்றங்களால் ஏற்பட்ட பிளவாலும் மனமுடைந்துபோன ஒரு சமுதாயம் புரட்சி வேலைக்குத் தகுதியுள்ள மிகச் சில நபர்களையே தன் மத்தியிலிருந்து மேலுக்குக் கொண்டு வருகிறது; புரட்சிகரமான ஊழியர்களைத் தொழிலாளி வர்க்கம் உண்டாக்கித் தரத்தான் செய்கிறது, அவர்கள் சட்டவிரோதமான அமைப்புகளின் அணிகளை ஓரளவுக்குப் பெருக்குகிறார்கள்.

ஆனல் இப்படிப்பட்ட புரட்சியாளர்களின் தொகை காலத்தின் தேவைகளுக்குப் போதாமலிருக்கிறது என்று மட்டும் சொல்லிவைக்கிரேம். மேலும் அப்படி இருக்கக் காரணம்: தொழிலாளி நாள்தோறும் தொழிற்சாலேயில் பதினெென்றரை மணி நேரம் செலவழிக்கிருன். எனவே, முக்கியமாய் அவன் ஒரு கிளர்ச்சியாளனுக மட்டுமே பணியாற்ற முடியும். ஆனல், பிரச்சாரம், அமைப்புத் துறை, சட்டவிரோதமான இலக்கியத்தைச் சேர்ப்பிப்பது, பிரதியெடுப்பது, துண்டுப் பிரசுரங்களே வெளியிடுவது முதலிய கடமைகளே அவசியமாகவே வெகு சில அறிவுஜீவிகள் மீதுதான் முக்கியமாகச் சுமத்த வேண்டியுள்ளது'' (ரபோச்செயே தியேலோ, இதழ் 6, பக்கங்கள் 38—39).

பல அம்சங்களில் நாம் B-vயுடன் உடன்படவில்லே; குறிப்பாக நாம் வலியுறுத்தியுள்ளவையுடன் உடன்படவில்லே; இவை தெளிவாகக் காட்டுவதாவது: நமது தேர்ச்சிநயமின்மை குறித்து (சிந்திக்கும் ஒவ்வொருவரையும் போலவே) B-v அலுத்துக் கொண்டாலும் இந்த சகிக்கவொண்ணுத நிலேமையிலிருந்து மீளும் வழியை அவரால் கண்டு கொள்ள முடியவில்லே; காரணம், ''பொருளாதாரவாதம்'' அவரை அழுத்திப் பிடித்துக் கொண்டிருக்கிறது. உண்மை என்னவென்ருல், ''இலட்சியத்துக்குத்'' தகுதியுள்ள மிகப் பல நபர்களேச் சமுதாயம் உண்டாக்கித் தருகிறது, நாம்தான் அவர்கள் அனேவரையும் பயன்படுத்திக் கொள்ள முடியாமல் இருக்கிரேம். இவ்விஷயத்தில் நம் இயக்கத்தின் நெருக்கடியான, பரிணமிப்பு நிலேக்குரிய கட்டத்தைப் பின்வருமாறு வரையறுக்கலாம்: ஊழியர்களே இல்லே—எனினும் ஊழியர்கள் திரள் திரளாக இருக்கவே செய்கிருர்கள். ஊழியர்கள் திரளாக இருக்கக் காரணம், ஆண்டுதோறும் தொழிலாளி வர்க்கமும் மேன்மேலும் வேறுபட்ட சமுதாயப் பிரிவுகளும் தம்மிடையேயிருந்து அதிகரித்துவரும் எண்ணிக்கையில் அதிருப்தியடைந்த நபர்களே உண்டாக்கியவாறு இருக்கின்றன; இவர்கள் கண்டனம் தெரிவிக்க விரும்புகிருர்கள், எதேச்சாதிகார ஆட்சி முறையை எதிர்த்து நடக்கிற போராட்டத்தில் தம் மாலான உதவியனேத்தும் அளித்திடத் தயாராயிருக்கிருர்கள். இந்த எதேச்சாதிகார ஆட்சி முறையைச் சகிக்க முடியாது என்பதை எல்லோரும் அங்கிகரிக்கவில்லே ஆயினும், மேன்மேலும் அதிகமான மக்கள் திரள் தீவிரமாக உள்ளுற உணர்ந்துவருகிருர்கள். அதே நேரத்தில் நம்மிடம் ஊழியர்

கள் இல்லாதிருக்கக் காரணம், மிகமிக அற்பமானவற்றையும் உள்ளிட்ட எல்லாச் சக்திகளையும் பயன்படுத்தும் வகையில் விரிவாயும் அதே நேரத்தில் ஒரே சீராகவும் இசைவாகவும் வேலையை ஒழுங்குபடுத்திச் சித்தம் செய்யத் திறமையுள்ள தலைவர்கள், அரசியல் தலைவர்கள், ஆற்றல்மிக்க அமைப்பாளர்கள் நம்மிடம் இல்லை. ''புரட்சிகரமான அமைப்புகளின் வளர்ச்சியும் பெருக்கமும்'' தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வளர்ச்சியைப் பின்னடைந்திருப்பது மட்டுமல்ல (இதை B-v கூட ஒப்புக் கொள்கிறார்), எல்லா மக்கட் பிரிவுகளிடையேயுமுள்ள பொதுவான ஜனநாயக இயக்கத்தின் வளர்ச்சியை விடவும் பின்னடைந்திருக்கிறது. (தமது முடிவுக்கு இணைப்பாக உள்ளதாக B-v இன்று இதையும் பெரும்பாலும் கருதக்கூடும் என்று போகிற போக்கில் சொல்லி வைப்போம்.) இயக்கத்தின் தன்னியல்பான அடிப்படையின் விரிவுடன் ஒப்பிடுகையில் புரட்சி வேலையின் செயல் பரப்பு மிகக் குறுகியதாக உள்ளது. ''முதலாளிகளுக்கும் அரசாங்கத்துக்கும் எதிரான பொருளாதாரப் போராட்டம்'' எனும் படுமோசமான தத்துவம் இதை வேலி போட்டு மிகவும் குறுக்கிவிட்டுள்ளது. ஆனால், தற்சமயம் அரசியல் கிளர்ச்சியாளர்கள் மட்டுமல்லாமல் சமூக-ஜனநாயக அமைப்பாளர்களும் ''மக்களைச் சேர்ந்த எல்லா வர்க்கங்களையும் அணுகியே''தீர வேண்டும்.* சமூக-ஜனநாயகவாதிகள் தம் அமைப்புத் துறை வேலையைச் சேர்ந்த ஆயிரத்தொன்று சிறுசிறு செயற்கூறுகளை மிகவும் வேறுபட்ட வர்க்கங்களின் தனித்தனி பிரதிநிதிகளிடையே வினியோகிக்க முடிகிறதைப் பற்றி ஒரு நடைமுறை ஊழியனுக்கும் ஐயமிராது. நம் தொழில் நுணுக்கத்தின் மிக மோசமான குறை

---

* இப்படித்தான், சந்தேகமின்றி அண்மையில் இராணுவ சேவை புரிகிற நபர்களிடையே ஜனநாயக உணர்ச்சி மீண்டும் தோன்றியுள்ளதைக் காண்கிறோம்; தொழிலாளிகள், மாணவர்கள் போன்ற ''பகைவர்களுடன்'' முன்னை விட அடிக்கடி நடக்கிற தெருப் போராட்டங்களினால் ஓரளவுக்கு ஏற்பட்ட விளைவு இது. நம்மிடமுள்ள சக்திகள் இடங்கொடுக்கும் அளவுக்கு விரைவிலே நாம் படையாளிகளிடையேயும் அதிகாரிகளிடையேயும் கிளர்ச்சியும் பிரச்சாரமும் செய்வதிலும் நம் கட்சியுடன் இணைப்புள்ள ''இராணுவ அமைப்புகளைப்'' படைப்பதிலும் தவறாமல் மிகத் தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டும்.

பாடுகளில் தனித்தேர்ச்சியின்மையும் ஒன்ருகும்; இதைப் பற்றி B-v நியாயமாகவே கசப்புடன் குறைப்பட்டுக் கொள் கிருர். நம் பொது இலட்சியப் பணியில் ஒவ்வொரு தனித் தனி ''செயற்கூறும்'' எவ்வளவுக்கெவ்வளவு சிறியதாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அப்படிப்பட்ட செயற் கூறுகளைச் செய்து முடிக்கத் திறமையுள்ள நபர்கள் அதிக மாகக் கிடைப்பார்கள் (இவர்களில் பெரும்பாலோர் முழு நேரப் புரட்சியாளர்களாகும் திறமை சிறிதேனும் இராத வர்களே); அவ்வளவுக்கவ்வளவு போலீசுக்கும் இந்த ''நுணுக்கப் பிரிவு ஊழியர்கள்'' அனைவரையும் ''பிடிப்பது'' அதிகக் கஷ்டமாயிருக்கும்; ''பாதுகாப்பிற்காக'' அரசாங்கம் செலவழிப்பதை நியாயப்படுத்தும் அளவிற்கு ஒரு சில்லறை விவகாரத்திற்காகக் கைது செய்து ''வழக்கு'' ஜோடிப்பதும் அதிகக் கடினமாகி விடும். நமக்கு உதவி செய்யத் தயாராக இருக்கும் நபர்களின் எண்ணிக்கையைப் பொருத்தவரை, சென்ற ஐந்தாண்டு வாக்கில் நிகழ்ந்துள்ள மாபெரும் மாற்றத்தை முந்திய அத்தியாயத்தில் குறிப்பிட்டிருக்கிருேம். மறு புறத்தில், இந்தச் சின்னஞ்சிறு கூறுகளை ஒரு முழுமை யாக ஒன்றுபடுத்துவதற்கும் இயக்கத்தின் செயற்கூறுகளைப் பிரிக்கும் அதே நேரத்தில் இயக்கத்தையே உடைத்தெறி யாமல் இருப்பதற்கும் இந்தச் சின்னஞ்சிறு செயற்கூறுகளை நிறைவேற்றி வரும் நபர்கள் தாங்கள் செய்யும் வேலை அவசியமானதென்றும் முக்கியமானதென்றும் உறுதியான நம்பிக்கை ஊட்டுவதற்கும் (இந்த நம்பிக்கை இல்லையேல் அவர்கள் என்றைக்கும் வேலை செய்ய மாட்டார்கள்*) புடம்

* ஒரு தொழிற்சாலை கண்காணிப்பாளரைப் பற்றி ஒரு தோழர் ஒரு சமயம் சொன்னது என் நினைவுக்கு வருகிறது. அந்தக் கண்காணிப்பாளர் சமூக-ஜனநாயகவாதிகளுக்கு உதவ விரும்பினர், உதவவும் செய்தார். ஆனல் தான் கொடுக்கும் ''தகவல்'' பொருத்தமான புரட்சி மைய அமைப்பிடம் போய்ச் சேர்ந்ததா, எந்த அளவுக்கு உண்மை யிலே தன் உதவி தேவைப்படுகிறது, தன் அற்பசொற்ப மான சேவைகளைப் பயன்படுத்திக் கொள்வதற்குச் சாத் தியப்பாடுகள் என்ன என்பது பற்றித் தனக்கு ஒன்றுமே தெரியவில்லை என்று கசப்புடன் குறை தெரிவித்தார். இது போன்ற பல உதாரணங்களை ஒவ்வொரு நடைமுறை ஊழிய ரும் கொடுக்க முடியும் என்பது உண்மை; நமது பக்குவமின் மையால் நாம் துணைச் சக்திகளை இழந்ததை இவை காட்டு கின்றன. இந்தச் சேவை ஒவ்வொன்றும் தன்னளவில்

போட்ட புரட்சியாளர்களைக் கொண்ட வலுவான அமைப்பு எவ்வளவுக்கெவ்வளவு இரகசியமாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு மேலாகக் கட்சியின் மீதுள்ள நம்பிக்கை பலமாகவும் பரவலாகவும் இருக்கும். போர்க்காலத்தில், நம் சொந்த இராணுவம் தன் பலத்தில் நம்பிக்கை கொள்ளச் செய்வது மட்டுமின்றி, அந்தப் பலத்தைப் பற்றி எதிரிக்கும் எல்லா நடுநிலைச் சக்திகளுக்கும் உறுதியாக உணர்த்துவதும் மிகமிக முக்கியம். நேசமுள்ள நடுநிலை சில சமயம் விவகாரத்தையே தீர்மானிக்கக் கூடியதாய் இருக்கும்; இதை நாம் அறிவோம். உறுதியான தத்துவார்த்த அடிப்படையில் கட்டப்பட்டும் சமூக-ஜனநாயகப் பத்திரிகை ஒன்று வைத்துக் கொண்டும் இருக்கிற இவ்வகை அமைப்பு இருக்குமேயானால், இயக்கத்தின்பால் ஈர்க்கப்படும் எண்ணற்ற ''அந்நிய'' நபர்கள் இயக்கத்தைத் திசை திருப்பக்கூடும் எனும் பயம்

---

''சிறியது'' ஆயினும் மொத்தத்தில் பார்க்கையில் விலைமதிக்கொணாதது. தொழிற்சாலைகளிலுள்ள அலுவலகப் பணியாளர்களும் அதிகாரிகளும் மட்டுமல்லாமல், அஞ்சல், இரயில்வே, சுங்கவரித் துறைகளிலும் பிரபுவம்சத்தினர் பாதிரிமார் இடையேயும், போலீஸ், அரசவைத் துறைகளையும் உள்ளிட்ட எல்லா வாழ்க்கைத் துறைகளிலும் அலுவலகப் பணியாளர்களும் அதிகாரிகளும் நமக்கு இந்தச் சிறிய சேவைகளை அளிக்க முடியும், அளிப்பார்கள்! நம்மிடம் உண்மையான கட்சி இருந்தால், புரட்சியாளர்களைக் கொண்ட உண்மையான செயல்துடிப்புள்ள அமைப்பு இருந்தால், இந்தத் ''துணையாட்கள்'' ஒவ்வொருவரிடமும் தகுதிக்கு அப்பாற்பட்ட காரியங்களைச் செய்யக் கொடுக்க மாட்டோம், நம் ''சட்டவிரோத நிலையின்'' மையத்திற்கு எப்போதும் அவர்களைக் கொண்டுவரத் துடிக்க மாட்டோம்; மாறாக, அவர்களைப் பத்திரமாகக் கவனித்துக் கொள்வோம். குறிப்பாக இப்படிப்பட்ட வேலைகளுக்கென்று நபர்களைப் பயிற்றுவிக்கவும் செய்வோம், ''குறுகியகால'' புரட்சியாளர்களாக இருப்பதை விட ஏதாவது அதிகாரபூர்வமான பதவியை வகித்துவரும் நிலையில் பல மாணவர்கள் ''உதவியாளர்களாக'' கட்சிக்கு எவ்வளவோ அதிகமாகச் சேவை செய்யக் கூடியவர்களாக இருக்க முடியும். எனினும் உறுதியாக நிலைநாட்டப் பட்டுத் தீவிரமாகப் பணியாற்றும் சக்திகளின் பற்றாக்குறையை உணராமல் இருக்கிற அமைப்புக்கு மட்டுமே இப்படிப்பட்ட போர்த்தந்திரங்களைச் செயல்படுத்தும் உரிமையிருக்கும் என்று இன்னுமொரு முறை கூறுகிறேன்.

நமக்கு ஏற்படக் காரணமிராது (மாருக, தேர்ச்சிநயமின்மை நிலவும் இந்தக் காலத்திலேதான் பல சமூக-ஜனநாயகவாதிகள் "Credo" பால் சாய்வதையும் வெறுமே தங்களைச் சமூக-ஜனநாயகவாதிகள் என்று கற்பனை செய்து கொள்வதையும் காண்கிறோம்). சுருங்கச் சொன்னால் தனித்தேர்ச்சி மையப்படுத்தலின் அவசியத்தை முன்னுணர்கிறது, அதே நேரத்தில் அதை நிச்சயமாகக் கோருகிறது.

தனித்தேர்ச்சியின் அவசியத்தை எவ்வளவோ நேர்த்தியுடன் வர்ணித்த அதே B-v தான் நாம் மேற்கோள் காட்டிய வாதத்தின் இரண்டாம். பகுதியில் அதன் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடுகிறார் என்று கருதுகிறோம். அவர் தொழிலாளி வர்க்கப் புரட்சியாளர்களின் எண்ணிக்கை போதாதென்கிறார். இது முற்றிலும் உண்மை. இன்று சமூக-ஜனநாயகத்திற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிக்குரிய காரணங்கள் பற்றியும் எனவே அந்நெருக்கடியை அகற்றுவதற்கு வேண்டிய சாதனங்களைப் பற்றியும் நாம் கொண்டுள்ள கருத்தை ''ஒரு நெருங்கிய நோக்கரின் மதிப்பு மிக்க தகவல்'' முற்றாக உறுதிப்படுத்துகிறதை மீண்டும் வலியுறுத்துகிறோம். பொதுவாகவே புரட்சியாளர்கள் தன்னியல்பாய் விழிப்புற்று வரும் மக்கள் திரளுக்குப் பின்னடைந்து வருகிறார்கள் என்பது மட்டுமல்ல, தொழிலாளர் புரட்சியாளர்களுங்கூட தன்னியல்பாய் விழிப்புற்று வரும் தொழிலாளி வர்க்க மக்கள் திரளுக்குப் பின்னடைந்து வருகிறார்கள். தொழிலாளர்களுக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமைகளைப் பற்றிய விவாதத்தில் மிக அடிக்கடி நம்மிடம் கூறப்படும் ''ஆசிரியரியலின்'' முட்டாள்தனத்தை மட்டுமன்றி அதன் அரசியல் பிற்போக்குத் தன்மையையும் ''நடைமுறைப்'' பார்வையிலே கூட இந்த உண்மை தெளிவான சான்றுடன் உறுதிப்படுத்துகிறது. இந்த உண்மை நிரூபிக்கிறதாவது: நமது முதன்மையான, முக்கியமான கடமை தொழிலாளி வர்க்கப் புரட்சியாளர்களைப் பயிற்றுவிக்க உதவுவதே, இவர்கள் கட்சி நடவடிக்கை விஷயத்தில் அறிவுஜீவிகளிடையே இருந்து வரும் புரட்சியாளர்களுக்குச் சமமாக இருப்பார்கள் (''கட்சி நடவடிக்கை விஷயத்தில்'' எனும் சொற்களை வலியுறுத்துகிறோம், ஏனெனில் மற்ற விஷயங்களில் அறிவுஜீவிகளின் தரத்திற்குத் தொழிலாளிகளை உயர்த்துவது அவசியமாயினுங்கூட அது அவ்வளவு சுலபமோ அவசரத்

தேவையோ அல்ல). எனவே, தொழிலாளிகளைப் புரட்சியாளர்களின் தரத்திற்கு உயர்த்துவதில் முதன்மையான கவனம் செலுத்த வேண்டும்; ''பொருளாதாரவாதிகள்'' செய்ய விரும்புவது போல் ''உழைக்கும் மக்களின்'' தரத்திற்கோ, ஸ்வபோதா செய்ய விரும்புவது போல் ''சராசரித் தொழிலாளியின்'' தரத்திற்கோ இறங்குவது நம் பணி அல்லவே அல்ல (ஸ்வபோதா அவ்வாறு செய்ய விரும்புவதிலே பொருளாதாரவாத ''ஆசிரியரியல்'' இரண்டாம் படிவத் தரத்திற்கு ஏறுகிறது). தொழிலாளர்களுக்கு எளிதாகப் புரியக்கூடிய இலக்கியம் வேண்டும், குறிப்பாகப் பிற்பட்ட தொழிலாளர்களுக்கு மிக எளிதாகப் புரியக்கூடிய (ஆனால் கொச்சைப் படுத்தப்படாத) இலக்கியம் வேண்டும் என்பதை நான் மறுக்கவே இல்லை. ஆனால் அரசியல், அமைப்புத்துறை பற்றிய பிரச்சினைகளோடு ஆசிரியரியலை இடைவிடாது போட்டுக் குழப்புவதுதான் எனக்கு எரிச்சலூட்டுகிறது. ''சராசரி தொழிலாளியைப்'' பற்றி இவ்வளவு கவலை தெரிவிக்கும் பெருமான்களே, தொழிலாளி வர்க்க அரசியலைப் பற்றியும் தொழிலாளி வர்க்க அமைப்பைப் பற்றியும் விவாதிக்கும் போது நீங்கள் தொழிலாளிகளுக்கு வளைந்து கொடுக்க விரும்புவதால் உண்மையிலேயே அவர்களை அவமதிக்கிறீர்கள். முக்கியமான விஷயங்களை வினைத்திட்ப முறையிலே பேசுங்கள்; ஆசிரியரியல் ஆசிரியர்களோடு நிற்கட்டும், அரசியல் வாதிகளுக்கும் அமைப்பாளர்களுக்கும் அது வேண்டாம்! படிப்பாளிப் பகுதியினர் இடையே கூட முன்னிலை நபர்கள், ''சராசரி நபர்கள்'', ''மக்கள் திரள்'' இல்லையா? படிப்பாளிப் பகுதியினருக்கும் எளிதாகப் புரியக்கூடிய இலக்கியத்தின் தேவையை ஒவ்வொருவரும் அங்கீகரிக்கவில்லையா? அவ்வகை இலக்கியம் எழுதப்படவில்லையா? கல்லூரி அல்லது உயர்நிலைப் பள்ளி மாணவர்களைத் திரட்டியமைப்பது பற்றிய கட்டுரையில் ஒருவர் ஏதோ ஒரு புதிய கண்டுபிடிப்பு செய்தவர் போல் முதன்முதலில் ''சராசரி மாணவர்கள்'' கொண்ட அமைப்பு அவசியம் என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டு இருப்பதாகக் கற்பனை செய்து பாருங்கள். அந்த ஆசிரியர் கேலிசெய்யப்படுவார், அது சரியாகவும் இருக்கும். அமைப்பு பற்றி உங்களுக்குக் கருத்துக்கள் ஏதேனுமிருந்தால் கொடுங்கள், யார் ''சராசரி'', யார் சராசரிக்கு மேலே அல்லது கீழே என்பதை நாங்களே முடிவுசெய்து கொள்

கிறேம் என்று அவரிடம் சொல்வார்கள். ஆனல் அமைப்பு பற்றி உங்களுக்கு சொந்தத்தில் கருத்துக்கள் எதுவும் இல்லை என்றல் ''மக்கள் திரள்'' சார்பிலும் ''சராசரி நபர்கள்'' சார்பிலும் நீங்கள் எடுத்துக் கொள்ளும் சிரமங்கள் அனைத்தும் வெறுமே அலுப்பூட்டுவதாயிருக்கும். ''அரசியல்,'' ''அமைப்பு'' சம்பந்தமான இந்தப் பிரச்சினைகள் தம்மளவில் எவ்வளவோ முக்கியத்துவமுடையவை ஆதலால், அவற்றை வினைத்திட்பமுடைய வழியிலே அல்லாது வேறெந்த வழியிலும் கவனிக்க முடியாது. நாம் தொழிலாளிகளைப் (பல்கலைக்கழக மாணவர்களையும் பள்ளி மாணவர்களையும்) பயிற்றுவிக்க முடியும், பயிற்றுவிக்க வேண்டும்; அவ்விதம் செய்வதால் அவர்களோடு இந்தப் பிரச்சினைகளை விவாதிக்க நமக்கு இயலக் கூடும். ஆனல் இந்தப் பிரச்சினைகளை நீங்கள் கிளப்பத் தொடங்குகிறீர்கள் என்றல் அவற்றிற்கு உண்மையான பதில்களை நீங்கள் கொடுத்தாக வேண்டும்; ''சராசரி நபர்கள்'' என்றே, ''மக்கள் திரள்'' என்றே சொல்லிக் கொண்டு பின்வாங்கக் கூடாது; குறும்புத்தனமான குறிப்புரைகளோடும் வெறும் சொற்றொடர்களோடும் விஷயத்தை முடித்து விட முயற்சிக்கக் கூடாது.*

அதேபோல் தொழிலாளி புரட்சியாளனும் தன் பணியைச் செய்வதற்கு முற்றுகத் தயார்படுத்திக் கொள்வதற்கு ஒரு முழுநேரப் புரட்சியாளனுக ஆகியே தீர வேண்டும். எனவே, தொழிற்சாலையிலே தொழிலாளி பதினென்றரை மணிநேரம் செலவழிப்பதினுல் (கிளர்ச்சி தவிர) மற்றெல்லா புரட்சி வேலைகளும் ''அறிவுஜீவிகளைக் கொண்ட ஒரு சின்னஞ்சிறு குழுவின் மேலேதான் முக்கியமாக விழுவது அவசியமாகித் தீர வேண்டும்'' என்று B-v சொல்வது தவறு. இந்த நிலைமை வெறும் ''அவசியத்திலிருந்து'' மட்டும் விளைவதல்ல. அது விளையக் காரணம் நாம் பின்தங்கியிருப்பது தான், நாம் ஒவ்வொரு திறமையுள்ள தொழிலாளியும் ஒரு முழுநேரக் கிளர்ச்சியாளனுகவும் அமைப்பாளனுகவும் பிரச்சாரகனுகவும் இலக்கிய விநியோகஸ்தனுகவும் மற்றபடியும்

* ஸ்வபோதா, இதழ் 1, பக்கம் 66ல் அமைப்பு என்ற கட்டுரையில் கூறுவதாவது: ''தொழிலாளர் படையின் கனமிக்க நடை ருஷ்ய உழைப்பாளர்கள் சார்பில் முன்வைக்கப் படும் எல்லாக் கோரிக்கைகளையும் பலப்படுத்தும்''—உழைப் பாளர்கள் என்கிற சொல்லைக் கொட்டையெழுத்தில் போடுங்

ஆவதற்கு உதவ வேண்டிய நமக்குள்ள கடமையை நாம் உணரவில்லை என்பதுந்தான். இவ்விஷயத்தில் முற்றிலும் வெட்கக் கேடான முறையில் நம் சக்தியை வீணடிக்கிறோம்; பேணிக்காக்க வேண்டியதை, தனிக் கவனிப்போடு வழங்கப் பட வேண்டியதைச் சிக்கனத்தோடு சேமித்துவைக்கும் திறமை நம்மிடம் இல்லை. ஜெர்மானியர்களைப் பாருங்கள்; அவர்களிடம் நம்மை விட நூறு மடங்குச் சக்திகள் உண்டு என்ற போதிலும் ''சராசரி'' நிலையிலுள்ள அணிகளிடையே இருந்து உண்மையிலேயே திறமையுள்ள கிளர்ச்சியாளர் முதலானோர் அடிக்கடி முன்னேற ஊக்குவிக்கப்படுவதில்லை என்று மிக நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, ஒவ்வொரு திறமையுள்ள தொழிலாளியும் தன் ஆற்றல்களை முழுமையாக வளர்த்துக் கொள்ளவும் செயல்படுத்தவும் இடமளிக்கக் கூடிய நிலைமைகளில் அவனை வைத்திட உட னுக்குடன் முயல்கின்றனர்: அவன் ஒரு முழுநேரக் கிளர்ச்சி யாளனாக ஆக்கப்படுகிறான்; தனது நடவடிக்கைக்கான நிலைக் களத்தை விரிவுபடுத்திக் கொள்ளும்படி, ஒரு தொழிற்சாலை யிலிருந்து அது சம்பந்தப்பட்ட தொழில் முழுவதற்கும் பரப்பிக் கொள்ளும்படி, ஒரு தனி ஊரிலிருந்து நாடு முழு வதற்கும் பரப்பிக் கொள்ளும்படி ஊக்குவிக்கப்படுகிறான். அவன் தன் தொழிலில் அனுபவமும் நயத்திறமும் பெறுகிறான்; பார்வையை விரிவாக்கிக் கொள்கிறான், அறிவைப் பெருக்கிக் கொள்கிறான். வேற்று வட்டாரங்களையும் மாற்றுக் கட்சி களையும் சேர்ந்த அரசியல் தலைவர்களை நெருங்கிய நிலையில் கவனிக்கிறான்; அவர்கள் தரத்திற்கு உயர முயற்சிக்கிறான், தொழிலாளி வர்க்கச் சூழலைப் பற்றிய அறிவையும் சோஷ

---

கள், உண்மையாக! மேலும், ஆசிரியர் கூவுகிறார்: ''எனக்குப் படிப்பாளிப் பகுதியினர் பால் சிறிதேனும் பகை இல்லை, ஆனால்''... [ஆனால் — இந்தச் சொல்லுக்குப் பொருள் ''நெற்றிக்கு மேலே காதுகள் உயர வளர்வதேயில்லை'' என்று ஷெட்ரின் மொழிபெயர்த்தார்!]... ''ஆனால் யாராவது ஒருவன் என்னிடம் வந்து அழகும் கவர்ச்சியும் மிக்க வார்த்தைகள் பேசி அவற்றின் (தன்னுடைய?) அழகுக்காக வும் மற்ற பண்பு நலன்களுக்காகவும் அவற்றை ஏற்க வேண்டும் என்று கோரினால் எனக்கு எப்போதும் பயங்கர மான எரிச்சல் வருகிறது'' என்று (பக்கம் 62). உண்மைதான், எனக்கும் கூட ''எப்போதும் பயங்கரமான எரிச்சல் வரு கிறது''.

லிஸ்டுத் துணிபுகளின் புது மலர்ச்சியையும் தொழிற் திறனுடன் தன்னுள் இணைத்துக் கொள்ள முயல்கிறான். இது இல்லையேல் நேர்த்தியான பயிற்சி பெற்ற தனது பகைவர் களை எதிர்த்துத் தொழிலாளி வர்க்கம் விடாப்பிடியான போராட்டம் நடத்த முடியாது. இவ்வாறான வழியிலேதான் உழைப்பாளி மக்கள் பெபெல், ஆவுயெர் போன்ற தலை வர்களை உண்டாக்கித் தருகின்றனர். ஆனால் அரசியல் வகை யிலே சுதந்திரமாக உள்ள ஒரு நாட்டில் பெருமளவுக்குத் தன்னாலேயே நிகழக்கூடிய இது ருஷ்யாவில் நம் அமைப்பு களால் முறைமையுடன் செய்யப்பட வேண்டும். சிறிதள வேனும் ஆற்றலுள்ளவனாகவும் ''முன்னுக்கு வரக் கூடிய வனாகவுமுள்ள'' தொழிலாளி கிளர்ச்சியாளனைத் தொழிற் சாலையில் பதினொரு மணிநேரம் வேலைசெய்யும் படி விட்டு வைக்கக் கூடாது. அவனைக் கட்சி காத்துப் பேணிவரும் படி நாம் ஏற்பாடு செய்ய வேண்டும்; காலாகாலத்தில் அவன் தலைமறைவாகச் சென்றுவிடுவதற்கும் ஏற்பாடு செய்ய வேண் டும். அவன் வேலை செய்யும் இடத்தை மாற்றிக் கொள்ளவும் ஏற்பாடு செய்ய வேண்டும், அப்பொழுதுதான் அவன் தன் அனுபவத்தைப் பெருக்கிக் கொள்வான், பார்வையை விரிவாக்கிக் கொள்வான், போலீஸ் உளவாளிகளை எதிர்க்கும் போராட்டத்தில் குறைந்தபட்சம் ஒரு சில ஆண்டுகளுக்கா யினும் சமாளித்து நிற்பான். தொழிலாளி வர்க்க மக்கள் திரளின் இயக்கத்தின் தன்னியல்பான எழுச்சி மேன் மேலும் அகன்றும் ஆழ்ந்தும் வரவர, அம்மக்கள் திரள் தன் னிடையே இருந்து மேன்மேலும் அதிகரித்த எண்ணிக்கையில் ஆற்றலுள்ள கிளர்ச்சியாளர்களை முன்னேற ஊக்குவிப்ப தோடல்லாமல் ஆற்றல் மிக்க அமைப்பாளர்களையும் பிரச் சாரகர்களையும் மிகச் சிறந்த அர்த்தத்தில் ''நடைமுறை ஊழியர்களையும்'' முன்னேற ஊக்குவிக்கிறது (நம் அறிவுஜீவி களிடையே நடைமுறை ஊழியர்கள் மிகவும் குறைவாகத் தான் இருக்கிறார்கள்; ருஷ்ய பாணியில், நம் அறிவுஜீவிகளில் பெரும்பாலோர் தம் பழக்கவழக்கங்களில் கொஞ்சம் அலட்சியமானவர்களாகவும் மந்தமாகவும் இருக்கிறார்கள்). விரிவான தயாரிப்புக்கு ஆளாகி உருப்பெற்ற, தனிச் சிறப்பான பயிற்சி பெற்ற தொழிலாளி புரட்சியாளர்களின் (''சேவையின் எல்லாக் கிளைகளையும் சேர்ந்த'' புரட்சியாளர் களும் இதில் அடங்குவர்) சக்திகள் நமக்குக் கிடைக்கிற

பொழுது உலகத்தில் எந்த அரசியல் போலீசாரும் அச்சக்தி களை எதிர்த்துச் சமாளிக்க முடியாமற் போகும்; ஏனெனில் புரட்சிக்கு முழுக்க முழுக்க அர்ப்பணித்துக்கொண்டுள்ள இச்சக்திகள் மிக விரிவான தொழிலாளர் மக்கள் திர ளின் எல்லையிலா நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருப்பார்கள். தொழிலாளர்களுக்கும் ''அறிவுஜீவிகளுக்கும்'' பொதுவான தாக விளங்கும் முழுநேரப் புரட்சியாளருக்கும் பயிற்சிக் குரிய இந்தப் பாதையில் தொழிலாளர்கள் செல்லும்படி ''ஊக்கிவிடச் செயலாற்றுவது'' மிகக் குறைவாக இருப்பதற் கான பழி நேரடியாக நம்மையே சேரும்; தொழிலாளர் திரள், ''சராசரித் தொழிலாளர்கள்'' என்றெல்லாம் சொல்லப் படுபவர்களுக்கு ''எட்டக்கூடியதாய் இருப்பது'' எது என்பது பற்றி நாம் ஆற்றும் அசட்டுத்தனமான சொற்பொழிவு களால் மிக அடிக்கடி அவர்களைப் பின்னுக்கு இழுத்துச் செல்லும் பழியும் நேராக நம்மையே சேரும்.

மற்றவை போல் இவ்விஷயத்திலும் நம் அமைப்புத் துறைப் பணி குறுகிய செயல் எல்லை, நம் தத்துவங்களையும், நம் அரசியல் பணிகளையும் ஒரு குறுகிய செயற்களத்தில் கட்டுப்படுத்தி விடுவதுடன் சந்தேகத்திற் கிடமின்றி பிரிக்க இயலா வகையில் தொடர்பு கொண்டுள்ளது (''பொருளா தாரவாதிகளில்'' மிகப் பெரும்பான்மையோரும் நடைமுறை வேலைகளில் கற்றுக்குட்டிகளாக இருப்பவர்களில் மிகப் பெரும்பான்மையோரும் இதைப் பார்க்கிறதில்லை). தன்னியல் பிற்கு அடிபணிவதானது மக்கள் திரளுக்கு ''எட்டக்கூடிய தாய் உள்ளதற்கு'' அப்பால் ஓர் அடியேனும் எடுத்து வைக்காதபடி பீதியை உண்டாக்குகிறது போலும். மக்கள் திரளின் உடனடியான நேரடியான தேவைகளைக் கவனித்துக் கொள்வதற்கு அப்பால் வெகுதூரம் மேலே சென்றுவிடு வோமோ என்கிற பீதியை உண்டாக்குகிறது போலும். பெரு மான்களே, பயப்படாதீர்கள்! அமைப்பு மட்டத்தில் நாம் மிகமிகத் தாழ்ந்து உள்ளதால் அளவுக்கு மிஞ்சிய உயரத் திற்கு நாம் ஏறிவிட முடியும் என்கிற கருத்தே அபத்தமானது என்பதை நினைவில் வையுங்கள்!

*1901ம் ஆண்டு இலையுதிர்காலத்தில்—*
*1902ம் ஆண்டு பிப்ரவரியில்*
*எழுதப்பட்டது*

# பெ. கெ. ஸ்மிதோவிச்சுக்குக் கடிதம்

*2. 08. 1902*

அன்புள்ள ச. அவர்களே, உங்கள் மடல் கிடைக்கப் பெற்றேன். தற்போது இரண்டே வார்த்தைகளில் பதிலளிக்கிறேன்: எனக்கு உடல்நிலை மிகவும் சரியில்லை, வாடிக் கிடக்கின்றேன்.

நீங்கள் எழுப்பிய விஷயம் சம்பந்தமாக ஒரு கடிதத்தைக் கூட நான் பார்க்கவில்லை. நீங்கள் சரிவர முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். தொழிலாளர் குழுக்களையும் சங்கங்களையும் ஸ்தாபனங்களையும் பெருக்கி வலுப்படுத்துவதற்குப் பதில் அவற்றின் ''கலைப்பைப்'' பற்றி யார் எண்ணியிருக்க முடியும்? இரகசிய ஸ்தாபனம் தொழிலாளர் வெகுஜனங்களுடன் எவ்வளவு கண்டிப்புடன் தொடர்புகொள்ள வேண்டும் என்று நான் குறிப்பிடவில்லை என நீங்கள் எழுதியிருக்கின்றீர்கள். இது சந்தேகத்திற்கிடமானது, ஏனெனில் (அது vient sans dire* என்றாலும் கூட) 96ஆம் பக்கத்தில் நீங்கள்''மிகப் பரவலான எண்ணிக்கையில்(இது லெனினால் வலியுறுத்தப்படுகிறது) மிகப் பல்வேறான பணிகளைக் கொண்ட'' ''மற்ற ஸ்தாபனங்களில் அனைத்து வெகுஜனங்களின்'' (NB!) [அனைத்து வெகுஜனங்களின்!!] (அதாவது, முழுநேர புரட்சியாளர்களின் மத்திய ஸ்தாபனத்தைத் தவிர) அவசியத்தைப் பற்றிய இடத்தை மேற்கோள் காட்டியிருக்கின்றீர்கள்[18]. ஆனால் நீங்கள், நான் எங்கே வரிசைக்கிரமத்தை மட்டும் நிலைநிறுத்தி இந்த வரிசைக்கிரமத்தின் அதிதப் பிரிவுகளின் எல்லைகளை சுட்டிக் காட்டுகின்றேனே, அங்கே நிபந்தனையற்ற எதிர்மறையை வீணாகக் கண்டுபிடித்திருக்கின்றீர்கள். முழுநேரப் புரட்சியாளர்களின் மிக இரகசிய,

* —சொல்லாமலே அமையும்.—ப-ர்.

நெருக்கமான உட்கருவில் (மையத்தில்) இருந்து வெகுஜன ''உறுப்பினர்களற்ற ஸ்தாபனம்'' வரை ஒரு முழுநீள வரிசைத்தொடரே உள்ளதன்றே! இந்தப் பிரிவுகளின் மாறிவரும் இயல்பின் போக்கை மட்டுமே நான் சுட்டிக்காட்டுகின்றேன்: ஸ்தாபனம் எவ்வளவுக்கெவ்வளவு ''வெகுஜன'' ஸ்தாபனமாக உள்ளதோ, அவ்வளவுக்கவ்வளவு குறைவான உருவுடையதாகவும் அவ்வளவுக்கவ்வளவு குறைவான இரகசியமுடையதாயும் அது இருகக வேண்டும் — இதுவே எனது கருத்தாகும். வெகுஜனங்களுக்கும் புரட்சியாளர்களுக்கும் இடையே இடைப்பட்டவர்கள் தேவையில்லை என்று அதைப் புரிந்து கொள்ள நீங்கள் விரும்புகிறீர்கள்!! கருணை காட்டுங்கள்! எல்லாமே இந்த இடைப்பட்டவர்களில்தான் அடங்கியுள்ளது. அதீதப் பிரிவுகளின் இயல்புகளை நான் சுட்டிக்காட்டி இடைப்பட்டவர்களின் அவசியத்தை வலியுறுத்துகிறேன் (நான் குறிப்பாக வலியுறுத்துகிறேன்) என்ருல், இந்த இடைப்பட்ட பிரிவுகள்தான் ''புரட்சியாளர்களின் ஸ்தாபனத்துக்கும்'' ''வெகுஜன ஸ்தாபனத்துக்கும்'' இடையில், ஸ்தாபனரீதியாக இடையில் நிற்கும் என்பது தானே தெளிவாகிறது; அதாவது அவை மையத்தைவிட பரவலானவைகளாகவும் இரகசியம் குறைவானவையாகவும் ஆனல் ''நெசவாளர்களின் சங்கத்தை'' விட அதிக இரகசியமானவையாக இருக்கும். உதாரணமாக, ''தொழிற்சாலைச் குழுவில்'' (ஒவ்வொரு தொழிற்சாலையிலும் இடைப்பட்டவர்களின் குழு ஒன்று இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும் என்பது சொல்லாமலேயே விளங்கும்) ''இடைநிலை'' ஒன்றைக் கண்டுபிடிக்க வேண்டியது அவசியம்: ஒரு புறம், தொழிற்சாலை முழுவதும் அல்லது பெரும்பான்மையோர் ஏதாவது ஒரு குறிப்பிட்ட முன்னணித் தொழிலாளியை நிச்சயமாகத் தெரிந்து வைத்திருக்க வேண்டும், அவரை நம்பி அவர் சொல்வதைக் கேட்க வேண்டும். மறுபுறம், குழுவின் உறுப்பினர்கள் அனைவரையும் அடையாளம் காட்டாதபடி, வெகுஜனங்களுடன் நெருங்கித் தொடர்பு கொள்பவரை கையுங்களவுமாக பிடிக்க இயலாதபடி, செய்யுங்காரியத்தை நிரூபிக்க இயலாதபடி ''இக்குழு'' காரியங்களைச் செய்ய வேண்டும். லெனின் கூறியதிலிருந்து இது தானே தெளிவாகவில்லையா என்ன?

''தொழிற்சாலைக் குழு''வின் குறிக்கோள் முற்றிலும்

தெளிவானது: நான்கைந்து (உதாரணத்திற்கு கூறுகிறேன்) தொழிலாளர்கள்-புரட்சியாளர்கள் இருக்கின்றனர் என்ருல், இவர்கள் அனைவரும் வெகுஜனங்களுக்குத் தெரிந்திருக்கக் கூடாது. ஒருவரை தெரிந்திருக்கலாம், அவரை அம்பலப் படுத்துவதிலிருந்து காப்பாற்ற வேண்டும்: அவர் நமது ஆள் என்றும் மூளையுள்ளவன் என்றும் புரட்சியில் அவன் பங்கு கொள்ளாவிட்டாலும் அவரை பற்றிக் கூறட்டும். ஒருவர் மையத்துடன் தொடர்புகொள்கிருர். இருவருக்கும் மாற்று ஆள் உண்டு. அவர்கள் பல குழுக்களைத் துவக்குகின்ருர்கள் (தொழிலுக்குரிய, கல்விக்குரிய, வினியோகத்திற்குரிய, வேவு பார்க்கும், ஆயுதந்தங்கிய போன்ற மற்றும் இன்னும் பல குழுக்கள்); ஆனல் உதாரணமாக ஒற்றர்களைக் கண்டுபிடிக்கவும் ஆயுதங்களைத் தேடவும் இருக்கும் குழுவின் இரகசியத் தன்மை, இஸ்க்ரா[19] பத்திரிகையைப் படிப்பதற்கும் சட்ட பூர்வமான இலக்கியத்தையும் மற்றவைகளையும் படிப்பதற்கும் உள்ள குழுவின் இரகசியத்தன்மையிலிருந்து முற்றிலும் மாறுபட்டது, இன்னும் பல, இத்தியாதி. இரகசியத்தன்மை, குழு உறுப்பினர்களின் பெரும் எண்ணிக்கைக்குத் தலைகீழ் விகிதத்திலும் குழுவின் குறிக்கோள் நேரடிப் போராட்டத்திலிருந்து விலகியிருக்கும் தூரத்திற்கு நேர் விகிதத்திலும் இருக்கும்.

இதைப் பற்றிக் குறிப்பாக எழுதுவது அவசியமா என எனக்குத் தெரியாது: அவசியம் என நீங்கள் எண்ணிஞல் இந்தக் கடிதத்தை எனக்கு திருப்பியனுப்புங்கள், உங்கள் கருத்துக்களுடன் சேர்த்து அதைப் பற்றியும் நான் சிந்திப்பேன். பீட்டர்ஸ்பர்க் தோழரைச் சந்தித்து இங்கே விரிவாகக் கலந்துரையாட முடியும் என நம்புகிறேன்.

வாழ்த்துக்கள்,
உங்கள் **லெனின்**

## நமது ஸ்தாபனக் கடமைகளைப் பற்றி தோழருக்கு எழுதிய கடிதத்திலிருந்து

அடுத்து, இரண்டாவது அம்சத்தில் கமிட்டியைப் பற்றிக் குறிப்பிடுகையில், அது ''உள்ளூர் ஸ்தாபனத்தை தலைமை தாங்கி நடத்த'' வேண்டும் (ஒருவேளை, ''உள்ளூர்ப் பணிகள் முழுவதையும் கட்சியின் உள்ளூர் ஸ்தாபன அமைப்புகள் அனைத்தையும்'' என்று கூறுவது சிறப்பாக இருக்கக்கூடும்; ஆனால் எப்படிச் சொல்வது என்பது பற்றிய உள்விவரங்களில் நான் நிறுத்தப் போவதில்லை); இந்தக் கமிட்டியில் தொழிலாளர்களும் அறிவுத்துறையினரும் இருவருமே இடம் பெற்றிருக்க வேண்டும்; இதை விடுத்து இவர்களை இரு கமிட்டிகளாகப் பிரிப்பது கெடுதலாகும் என்று நீங்கள் கூறுகின்றீர்கள். இது முற்றிலும், சந்தேகமின்றி நியாயமானதே, ருஷ்யாவின் சமூக-ஜனநாயக தொழிலாளர் கட்சியின் கமிட்டி ஒரே கமிட்டியாகத்தான் இருக்க வேண்டும்; தங்களை முற்றிலும் சமூக-ஜனநாயகப் பணிக்கு அர்ப்பணித்துக் கொள்ளும் முழு சுய உணர்வுள்ள சமூக-ஜனநாயகவாதிகள்தான் இதில் இருக்க வேண்டும். இயன்ற அளவு அதிக அளவில் தொழிலாளர்கள் முற்றிலும் சுய உணர்வு பெற்று முழுநேரப் புரட்சியாளர்களாகி கமிட்டியில் இடம் பெறுமாறுச்செய்ய குறிப்பாக முயல வேண்டும்.* இரட்டைக் கமிட்டியின்றி ஒரே கமிட்டி நிலவும் பட்சத்தில், கமிட்டியின் உறுப்பினர்கள் பெரும் எண்ணிக்கையிலான தொழிலாளர்களைத் தனிப்பட்ட முறையில் தெரிந்துவைத்திருக்க வேண்டும் என்ற பிரச்சினை குறிப்பான முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது. தொழிலாளர்

* தொழிலாளர்களுடன் அதிக அளவில் தொடர்பு கொண்டிருக்கும், அவர்கள் மத்தியில் மிக நல்ல ''பெயருடன்'' விளங்கும் தொழிலாளர் புரட்சிவீரர்களைக் கமிட்டிக்குக் கொண்டுவர முயல வேண்டும்.

கள் மத்தியில் நடைபெறும் அனைத்தையும் தலைமை தாங்கி நடத்த எல்லா இடத்திற்கும் செல்லும் வாய்ப்பைப் பெற்றிருக்க வேண்டும், ஏராளமானோரைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும், எல்லா வழிகளையும் அறிந்திருக்க வேண்டும். இத்தியாதி, இத்தியாதி. எனவே கமிட்டியில் இயன்ற அளவு, தொழிலாளர்களின் மத்தியிலிருந்து வரும் தொழிலாளர் இயக்கத்தின் எல்லா முக்கியத் தலைவர்களும் இடம் பெற்றிருக்க வேண்டும்; கமிட்டி உள்ளூர் இயக்கத்தின் எல்லாப் பிரிவுகளையும் தலைமை தாங்கி நடத்த வேண்டும்; கட்சியின் உள்ளூர் அமைப்புகள், சக்திகள் மற்றும் சாதனங்கள் அனைத்தையும் மேல்பார்த்து நிர்வகிக்க வேண்டும். கமிட்டியை எப்படி ஏற்படுத்துவது என்பதைப் பற்றி நீங்கள் கூறவில்லை —அநேகமாக இங்கும் கூட நாம் ஒத்துப்போவோம் ஆதலால், இதைப் பற்றிய தனியான விதிகள் அவசியம்தானா? கமிட்டியை எப்படி ஏற்படுத்துவது என்பது உள்ளூர் சமூக-ஜனநாயகவாதிகளின் விஷயம். கமிட்டி உறுப்பினர்களில் பெரும்பான்மையினரின் (மூன்றில் இரு பங்கினரின் அல்லது வேறுவிதங்களில்) முடிவுக்கேற்ப கமிட்டிக்கு உறுப்பினர்கள் சேர்க்கப்படுவார்கள், தனது தொடர்புகளை நம்பிக்கையான (புரட்சிக் கண்ணோட்டத்தில்), பாதுகாப்பான (அரசியல் ரீதியாக) இடத்தில் கொடுப்பதைப் பற்றியும் முன்னதாகவே தனக்கான வேட்பு உறுப்பினர்களைத் தயார்ப்படுத்துவதைப் பற்றியும் கமிட்டி அக்கறை கொள்ள வேண்டும் என்றெல்லாம் சுட்டிக்காட்ட முடியுமா என்ன? மத்திய வெளியீடும் மத்தியக் கமிட்டியும் நம்மிடையே இருக்கும்போது புதிய கமிட்டிகள் அவற்றின் பங்கேற்புடனும் ஒப்புதலுடனுமின்றி வேறு விதத்தில் உருவாகக் கூடாது. கமிட்டி உறுப்பினர்களின் எண்ணிக்கை இயன்றவரை மிக அதிகமான அளவு இல்லாததாகவும் (இந்த உறுப்பினர்களின் தரம் உயர்ந்ததாகவும் புரட்சிப் பணியில் இவர்களது தனிப்பயிற்சி முழுமையானதாகவும் இருப்பதற்காக) ஆனல் அதே சமயம் எல்லாக் காரியங்களையும் மேற்பார்வை பார்த்து நிர்வகிப்பதற்கும், கூட்டங்களின் முழுமைக்கும் முடிவுகளின் உறுதிக்கும் ஏற்ற அளவு உள்ளதாயும் இருக்க வேண்டும். உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாகி இவர்கள் அடிக்கடி கூடுவது ஆபத்தானது என்ற நிலை ஏற்படுமானல், அப்போது இந்தக் கமிட்டியில் இருந்து தனியான ஒரு சிறு நிர்வாகக்

குழுவை (ஐந்து அல்லது அதற்கும் குறைவான ஆட்களடங்கிய) ஏற்படுத்த வேண்டியிருந்திருக்கும்; இக்குழுவில் செயலாளரும் ஒட்டுமொத்தத்தில் அனைத்துப் பணிகளையும் நடைமுறை ரீதியாக நிர்வகிக்க வல்லவர்களும் இடம் பெற்றிருக்க வேண்டும். தோல்வி ஏற்பட்டால், வேலை நின்றுவிடாமலிருக்க வேட்பு உறுப்பினர்களைத் தயாராக வைத்திருப்பது இந்தக் குழுவிற்கு மிக முக்கியமாகும். கமிட்டியின் பொது அமர்வு நிர்வாகக் குழுவின் பணிகளை ஆமோதித்து அக்குழுவின் உள்ளடக்கத்தை வரையறுக்க வேண்டும், இத்தியாதி.

அடுத்து, கமிட்டிக்குப் பின் அதற்குக் கீழ்பட்ட பின்வரும் அமைப்புகளை நீங்கள் முன்மொழிந்திருக்கின்றீர்கள்: 1) விவாதம் (''தலைசிறந்த'' புரட்சியாளர்களின் கூட்டம்), 2) வட்டாரக் குழுக்கள், 3) இவை ஒவ்வொன்றிலும் பிரச்சாரக் குழு, 4) தொழிற்சாலைக் குழுக்கள் மற்றும், 5) ஒவ்வொரு வட்டத்திலும் உள்ள தொழிற்சாலைக் குழுக்களின் பிரதிநிதிகளடங்கிய ''பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட கூட்டங்கள்''. மற்ற எல்லா அமைப்புகளும் (இத்தகைய அமைப்புகள் நீங்கள் குறிப்பிட்டதைத் தவிர ஏராளமானவைகளாகவும் பல்வேறு வகைப்பட்டவைகளாயும் இருக்க வேண்டும்) கமிட்டிக்குக் கீழ்பட்டு இருக்க வேண்டும்; வட்டாரக் குழுக்களும் (மிகப்பெரிய நகரங்களில்), தொழிற்சாலைக் குழுக்களும் (எப்போதும், எங்கும்) இருக்க வேண்டும் என்பது குறித்து உங்களுடன் முற்றிலும் ஒத்துக்கொள்கிறேன். ஆனல் ஒருசில விவரங்களில் உங்களுடன் நான் ஒத்துக் கொள்ளவில்லை என தோன்றுகிறது. உதாரணமாக, ''விவாதக்'' குழுவைப் பொறுத்தவரை, அப்படி ஒரு அமைப்பு முற்றிலும் தேவையே இல்லை என நான் நினைக்கிறேன். ''தலைசிறந்த புரட்சியாளர்கள்'' அனைவரும் கமிட்டியில் இருக்க வேண்டும் அல்லது விசேஷப் பொறுப்பில் இருக்க வேண்டும் (அச்சகம், போக்குவரத்து, வெளியூர் பிரச்சாரம், பாஸ்போர்ட் அலுவலகத்தையோ அல்லது ஒற்றர்கள், ஆத்திரமூட்டுபவர்களுக்கு எதிரான தொண்டர் படைகளையோ அல்லது இராணுவத்தில் குழுக்களையோ ஏற்படுத்துதல் போன்ற பலப்பல பொறுப்புகள்).

''கூட்டங்கள்'' கமிட்டியிலும் ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒவ்வொரு ஆலைக் குழுவிலும் எல்லாப் பிரச்சார, தொழில்முறை (நெசவாளர், இயந்திரத்துறை பணியாளர்,

தோல்துறையினர் போன்றவர்), மாணவர், இலக்கியக் குழுக் களிலும் நடைபெறும். கூட்டத்திற்கென தனியான விசேஷ அமைப்பு எதற்காக?

அடுத்தபடியாக. ''விருப்பமுள்ள அனைவருக்கும்'' இஸ்க்ரா பத்திரிகையுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு தரப்பட வேண்டும் என்று நீங்கள் கோருவது முற்றிலும் நியாயமே. ஆனால் ''நேரடியாக'' என்பதை, ''விருப்பமுள்ள அனைவருக்கும்'' பத்திரிகை காரியாலயத்தின் விலாசத்தைக் கொடுத்து வழியைக் காண்பிக்க வேண்டும் என்று புரிந்துகொள்ளக் கூடாது; மாருக, விருப்பமுள்ள அனைவரின் கடிதங்களையும் கட்டாயம் பத்திரிகைக் காரியால யத்திற்கு தர வேண்டும் (அல்லது அனுப்ப வேண்டும்) என்றுதான் இதைப் புரிந்துகொள்ள வேண்டும். விலாசத்தை கூடியவரை பரவலாகத் தருவது அவசியம்; ஆனாலும் விருப்பப் பட்ட அனைவருக்குமல்லாது, நம்பிக்கை மிக்க புரட்சியாளர் களுக்கும் இரகசியப் பணிகளில் திறமையைக் காட்டுபவர் களுக்கும் மட்டுமே தர வேண்டும்—நீங்கள் விரும்பும் படி ஒரு வட்டத்திற்கு ஒன்று என தராமல், ஒருசிலருக்குத் தரலாம்; வேலையில் ஈடுபட்டுள்ள அனைவரும் எல்லாவிதக் குழுக்களும் தங்களது முடிவுகளையும் விருப்பங்களையும் வினுக் களையும் கமிட்டிக்கு மட்டுமல்லாமல் மத்திய வெளியீட்டுக் கும் மத்தியக் கமிட்டிக்கும் தெரிவிக்கும் உரிமையைப் பெற்றிருக்க வேண்டும். இதை நாம் ஏற்பாடு செய்தால், ''விவாதக் குழு'' போன்ற பெரிய, இரகசியமற்ற அமைப்புகள் இல்லாமலேயே கட்சி உறுப்பினர்கள் கூட்டத்தின் முழுமையை அடைய முடியும். இயன்ற அளவு பெரும் எண்ணிக்கையில் எல்லாவிதத் தொண்டர்களின் தனிப்பட்டக் கூட்டங்களை ஏற் பாடு செய்வதற்காக இன்னமும் முயல வேண்டும் என்பதில் சந்தேகமில்லை—ஆனல் எல்லாமே இரகசியத்தில்தான் அடங்கியுள்ளது. ருஷ்யாவில் பொதுக் கூட்டங்களும் இரக சியக் கூட்டங்களும் அபூர்வமான முறையிலேதான் சாத்திய மானவை, இந்தக் கூட்டங்களுக்குத் ''தலைசிறந்த புரட்சியா ளர்களை'' அனுமதிப்பது குறித்து மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும், ஏனெனில் ஆத்திரமூட்டுபவருக்கும் ஒற்ற னுக்கும் பொதுக் கூட்டத்தில் புகுந்து அதில் கலந்துகொள் பவர்களில் ஒருவரைக் கண்காணிப்பது என்பது எளிது. பின் வருமாறு செய்வது என்பது ஒருவேளை சிறப்பானதாயிருக்

கும் என நான் எண்ணுகிறேன்: பெரிய (30 முதல் 100 பேர்வரை) பொதுக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்ய முடியுமாஞல் (உதாரணமாக கோடைக்காலத்தில் சிறுகாட்டிற்குள் அல்லது விசேஷமாகக் கண்டுபிடிக்கப்பட்ட இரகசிய வீட்டில்) அப்போது கமிட்டி ஒன்று அல்லது இரண்டு ''தலை சிறந்த புரட்சியாளர்களை'' அங்கு அனுப்பி கூட்டம் நன்ருக இருக்கும்படி கவனித்துக் கொள்ளட்டும்; அதாவது, உதாரணமாக, தொழிற்சாலைக் குழுக்களில் இருந்து நம்பிக்கையான உறுப்பினர்களை இயன்றவரை அதிகமாக அழைத்தல் போன்றவைகளைக் கவனித்துக் கொள்ளட்டும். ஆனல் இந்தக் கூட்டங்களைச் சட்டபூர்வமாக்க வேண்டாம், இதை விதிமுறைகளில் சேர்க்க வேண்டாம், இவற்றை முறையான கூட்டங்களாக்க வேண்டாம், கூட்டத்தின் எல்லா உறுப்பினர்களும் அதில் கலந்து கொள்பவர்கள் அனைவரையும் தெரிந்து கொள்ளும்படி செய்ய வேண்டாம், அதாவது, எல்லோரும் குழுக்களின் ''பிரதிநிதிகள்'' என்று மற்றவர்கள் தெரிந்து கொள்ள வேண்டாம்; எனவேதான் நான் ''விவாதத்திற்கு'' மட்டுமின்றி, ''பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டக் கூட்டத்திற்கும்'' எதிராக இருக்கின்றேன். இந்த இரு அமைப்புகளுக்குப் பதிலாக இதுபோன்றதொரு விதியை ஏற்படுத்த நான் முன்மொழிகிறேன். இயக்கத்தில் நடைமுறை ரீதியாகக் கலந்து கொள்பவர்கள் மற்றும் அனைத்து தொழிலாளர்கள் ஆகியோர் இயன்ற அளவு அதிகமாக கலந்து கொள்ளக்கூடிய பெரியக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்வதைப் பற்றி கமிட்டி அக்கறை கொள்ள வேண்டும். நேரம், இடம், கூட்டத்திற்கான காரணம் மற்றும் கூட்டத்தின் அமைப்பு ஆகியவை கமிட்டியால் முடிவு செய்யப்படுகின்றன; இவற்றின் இரகசியத்திற்கு கமிட்டி பொறுப்பேற்கிறது. உலாவச் செல்லும் போதும், சிறு காட்டிற்குள்ளும் மற்ற இடங்களிலும் தொழிலாளர்களால் ஏற்பாடு செய்யப்படும் இன்னமும் சிறியக் கூட்டங்களுக்கு இதனல் சிறிதும் தடையில்லை என்பது தானகவே தெளிவாகிறது. இதைப் பற்றி விதிமுறைகளில் குறிப்பிடாமலேயே இருப்பது இன்னமும் சிறப்பானதாக இருக்கக் கூடும்.

அடுத்து, வட்டாரக் குழுக்களைப் பொறுத்தமட்டில், இவற்றின் கடமைகளில் ஒன்று பிரசுரங்களை விநியோகிக்கும் பணியை சரிவரச் செய்வதாகும் என்பதில் உங்களுடன் முற்றி

லும் ஒத்துக் கொள்கிறேன். வட்டாரக் குழுக்கள் முக்கியமாக கமிட்டிகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் இடைத்தரகர்களாக, ஏன் பெரும்பாலும் வாங்கிக்கொடுக்கும் அமைப்புகளாக இருக்க வேண்டும் என நான் எண்ணுகிறேன். கமிட்டியிலிருந்து பெறப்பட்ட பிரசுரங்களை இரகசியமாகச் சரிவர வினியோகிப்பது அவற்றின் முக்கியக் குறிக்கோளாக இருக்க வேண்டும். இந்தக் குறிக்கோள் மிகவும் முக்கியமானது ஏனெனில், விசேஷ வட்டார வினியோகக் குழுவுக்கும் வட்டாரத்தில் உள்ள எல்லா தொழிற்சாலைகளுக்கும் இயன்றவரை அதிகமான அளவு தொழிலாளர் குடியிருப்புக்களுக்கும் இடையில் முறையான தொடர்புகளை ஏற்படுத்தினுல், அது ஆர்பாட்டங்களுக்கும் எழுச்சிக்கும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும். விரைவாகவும் சரியாகவும் பிரசுரங்களேயும் துண்டுப் பிரசுரங்களையும் அச்சிட்ட காகிதங்களையும் இது போன்றவற்றையும் வினியோகிக்க ஏற்பாடு செய்து அதை ஒழுங்கமைப்பது, இதற்குப் பல ஏஜெண்டுக்களைப் பயிற்றுவிப்பது என்ருல், அது எதிர்காலத்தில் ஆர்பாட்டங்களுக்கு அல்லது எழுச்சிக்காகச் செய்யப்படும் ஏற்பாடுகளில் பெரிய பாதியை செய்து முடித்ததற்கு ஒப்பாகும். ஆத்திரப்பெருக்கு சமயத்தில், வேலைநிறுத்தத்தின் போது, அமைதியின்மை நிலவும்போது பிரசுரங்களின் வினியோகத்தை ஒழுங்கு படுத்துவது ஏற்கெனவே காலங்கடந்ததாகிவிடும், இதை மாதத்திற்கு இரண்டு,மூன்று முறை கட்டாயம் செய்வதன் மூலம் படிப்படியாக இதற்குப் பயிற்றுவிக்க முடியும். பத்திரிகை இல்லாவிடில், இதை துண்டுப் பிரசுரங்களின் மூலம் நிறைவேற்ற முடியும், நிறைவேற்ற வேண்டும்; ஆனுல் இந்த வினியோக அமைப்பு செயலின்றி இருக்க ஒருக்காலும் அனுமதிக்கக் கூடாது. ஒரே இரவில் பீட்டர்ஸ்பர்க்கில் உள்ள தொழிலாளர்கள் அனைவருக்கும் செய்தியறிவித்து அவர்களை ஒன்றுதிரட்டும் அளவிற்கு இந்த அமைப்பை நிறைவுபடுத்த முயற்சி செய்ய வேண்டும். மையத்திலிருந்து சிறிய இடைப்பட்டக் குழுக்களுக்கும் அவற்றிலிருந்து வினியோகஸ்தர்களுக்கும் பிரசுரங்கள் முறையாகச் சென்றுகொண்டிருக்கும் ஒரு சூழ்நிலையில் இது ஒரு கற்பனைவாதக் குறிக்கோளே அல்ல. வட்டாரக் குழுவின் பணியை வெறும் இடைத்தரகர் பணி மற்றும் வினியோகப் பணியோடு கூட மற்றத் துறைகளுக்கு விரிவுபடுத்துவது என்பது எனது கருத்துப்படி

அவசியமல்ல அல்லது சரியாகச் சொன்னால் மிகவும் எச்சரிக்கையாக மட்டுமே இதைச் செய்ய வேண்டும்—இது பணியின் இரகசியத்தையும் முழுமையையும் பாதிக்கக்கூடும். கட்சிப் பிரச்சினைகள் அனைத்தையும் பற்றியக் கூட்டங்கள் வட்டாரக் குழுக்களிலும் நிச்சயமாக நடைபெறும், ஆனால் உள்ளூர் இயக்கத்தைப் பற்றிய எல்லா பொதுப் பிரச்சினைகளிலும் கமிட்டி மட்டுமே முடிவெடுக்கும். பிரசுரங்களைப் பகிர்ந்தளிப்பது, வினியோகிப்பது சம்பந்தமான நுணுக்கங்களில் மட்டுமே வட்டாரக் குழுக்களுக்கு சுதந்திரத்தை வழங்கலாம். வட்டாரக் குழுவின் அமைப்பு கமிட்டியால் நிர்ணயம் செய்யப்படுகிறது; அதாவது, கமிட்டி ஒன்று அல்லது இரண்டு தனது உறுப்பினர்களை (அல்லது தனது உறுப்பினர் அல்லாதவர்களை) ஏதாவது ஒரு வட்டாரத்திற்குத் தூதுவர்களாக நியமித்து வட்டாரக் குழுவை உருவாக்கும் பொறுப்பை அவர்களுக்கு அளிக்கிறது; இந்தக் குழுவின் எல்லா உறுப்பினர்களும் அவரவர் பதவியில்—இவ்வாறு கூறுவது சரியெனில்—கமிட்டியால் மீண்டும் அங்கீகரிக்கப்படுகின்றார்கள். வட்டாரக் குழு—கமிட்டியிலிருந்து மட்டுமே தனது பொறுப்பைப் பெறக்கூடிய கமிட்டியின் கிளையாகும்.

பிரச்சாரக்கர்த்தாக்களின் குழுக்களைப் பற்றியப் பிரச்சினையை பார்ப்போம். மிகக் குறைவான பிரச்சாரச் சக்திகளைக் கொண்டு ஒவ்வொரு வட்டாரத்திலும் தனியாக இக்குழுக்களை அமைப்பது கிட்டத்தட்ட இயலாதது, அது அநேகமாக தேவையுமில்லை. பிரச்சாரம் முழுக் கமிட்டியாலும் ஒரே மூச்சாக நடத்தப்பட வேண்டும், இதைக் கண்டிப்பாக மையப்படுத்த வேண்டும்; எனவே இதை நான் பின்வருமாறு எண்ணிப்பார்க்கிறேன்: தனது ஒரு சில உறுப்பினர்களுக்குப் பிரச்சாரக்கர்த்தாக்கள் குழுவை அமைக்கும் பொறுப்பைக் கமிட்டி அளிக்கிறது (இது கமிட்டியின் கிளையாக அல்லது கமிட்டியின் காரியாலயங்களில் ஒன்றாக இருக்கும்). இந்தக் குழு இரகசிய விஷயத்தில் வட்டாரக் குழுக்களின் சேவைகளைப் பயன்படுத்தி நகரம் பூராவும், கமிட்டிக்குக் ''கீழ்ப்பட்ட'' எல்லா இடங்களிலும் பிரச்சாரம் செய்ய வேண்டும். தேவையேற்பட்டால் இந்தக் குழு மேற்கொண்டு சிறிய உட்பிரிவுகளை ஏற்படுத்தி தனது பணியில் ஏதாவது ஒரு பகுதியை அவற்றிடம் ஒப்படைக்கலாம்; ஆனால் இவையனைத்திற்கும் கமிட்டி அங்கீகாரம் அளிக்க

வேண்டும்; ஒவ்வொரு குழுவிற்கும் அதன் உட்பிரிவுகளுக்கு மற்றும் வட்டங்களுக்கும், இயக்கத்துடன் தொடர்புள்ள ஒவ்வொரு அமைப்பிற்கும் தனது பிரதிநிதியை அனுப்பும் உரிமை எப்போதும், சந்தேகத்துக்கு இடமின்றி கமிட்டிக்கு இருக்க வேண்டும்.

இதே மாதிரியான உத்தரவுகளின்படி, கமிட்டியின் அல்லது அதன் காரியாலயங்களின் கிளைகள், மாதிரி இயக்கத்திற்கு சேவை செய்யும் பல்வேறு விதமான குழுக்கள் அனைத்தும் அமைக்கப்பட வேண்டும்—மாணவர்கள் மற்றும் உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் குழுக்கள், உதவிகளைச் செய்து ஒத்துழைக்கும் உத்தியோகஸ்தர்களின் குழுக்கள், போக்குவரத்து, அச்சக, பாஸ்போர்ட் குழுக்கள், இரகசியச் சந்திப்புக்கான இடங்களை ஏற்பாடு செய்யும் குழுக்கள், ஒற்றர்களைக் கண்காணிக்கும் குழுக்கள், இராணுவ வீரர்களின் குழுக்கள், ஆயுதங்களை வழங்குவதற்கான குழுக்கள், உதாரணமாக ''வருவாய் தரும் நிதியமைப்பை'' ஏற்படுத்தும் குழுக்கள் போன்ற பல குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். இரகசிய வேலையின் சாமர்த்தியம் அனைத்தும், எல்லாவற்றையும் எல்லோரையும் பயன்படுத்துவதிலும் ''அனைவருக்கும் ஒவ்வொருவருக்கும் வேலையைக் கொடுப்பதிலும்'', அதே சமயம் இயக்கம் முழுவதன் தலைமையை அதிகாரத்தாலின்றி, செல்வாக்கால், மனவுறுதியால், நீண்ட அனுபவத்தால், பெரும் பன்முகத்தன்மையால், பெரிய திறமையால் தக்க வைத்துக் கொள்வதிலும்தான் அடங்கியுள்ளது. மையத்தில் தற்செயலாக, ஏராளமான அதிகாரத்துடன் கூடிய திறமையற்ற நபர் ஒருவர் இருப்பாரேயானல், கண்டிப்பான மையப்படுத்துதலினல் காரியம் எளிதில் பாழடைந்து போய்விடும் என்று வழக்கமாகக் கூறப்படும் மறுப்பிற்கும் இந்தக் குறிப்பு பொருந்தும். இவ்வாருன வாய்ப்பு சாத்தியமே என்ருலுங் கூட இதற்கு எதிரான சாதனமாக தேர்வு முறையும் மையக் கலைப்பும் இருக்க முடியாது; இது எந்த ஒரு பெரிய அளவிலும் அனுமதிக்க இயலாதது, மேலும் எதேச்சாதிகார நிலைமையில் புரட்சிப் பணிக்கே நேரடித் தீங்கு விளைவிப்பது. எந்த ஒரு விதிமுறையும் இதற்கு எதிரான சாதனத்தை அளிக்காது; எல்லாக் குழுக்களின் உட்பிரிவுகளில் ஏற்கப்படும் தீர்மானங்களில் துவங்கி மத்திய வெளியீட்டிற்கும் மத்தியக் கமிட்டிக்குமான வேண்டுகோளாகத் தொடர்ந்து

(குறைந்த பட்சம்) முற்றிலும் திறமையில்லாத தலைமையை தூக்கியெறிவது வரையிலான ''தோழமைச் செல்வாக்குள்ள'' நடவடிக்கைகள்தான் இதைத் தரும். புரட்சிப் பணியின் பல்வேறு வேலைகளுக்குப் பலவிதமான திறமைகள் தேவை, சில சமயங்களில் ஸ்தாபன அமைப்பாளனுக வேலை செய்ய முற்றிலும் திறமையற்ற ஒருவர் ஈடு இணையற்ற கிளர்ச்சி யாளராக இருப்பார் அல்லது இரகசிய வேலைகளுக்கான கடுமையான மனேதிடம் இல்லாதவர் தலைசிறந்த பிரச்சாரக் கர்த்தாவாக இருப்பார் என்பவைகளை நினைவிற் கொண்டு உழைப்புப் பிரிவினையை இயன்ற அளவு முழுமையாக நிறை வேற்ற கமிட்டி முயல வேண்டும்.

அதே நேரத்தில் பிரச்சாரக்கர்த்தாக்களின் விஷயத்தில், திறமை குறைவான ஆட்களை வழக்கமாக இத்தொழிலுக்கு அளவிற்கதிகமாகக் கொண்டு வந்து பிரச்சாரத்தின் தரத்தைத் தாழ்த்துவதற்கு எதிராக நான் ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். நம்மத்தியில் சில சமயங்களில் எல்லா மாணவனும் பாகுபாடின்றியே பிரச்சாரக்கர்த்தா வாகக் கருதப்படுகிருன், இளைஞர்கள் அனைவரும் தங்களுக்கு ''குழுவைத் தர வேண்டும்'' என்றெல்லாம் கோருகின்ருர் கள்; இதற்கு எதிராக போராட வேண்டும், ஏனெனில் இதனல் பெரும் தீமை ஏற்படுகிறது. உண்மையிலேயே கோட்பாட்டு ரீதியாக திடம் பெற்ற, திறமையுள்ள பிரச் சாரக்கர்த்தாக்கள் மிகக் குறைவே (இவ்வாருனவராக மாறு வதற்கு நிறையப் பயின்று அனுபவம் பெற வேண்டும்), இத் தகையவர்களுக்கு சிறப்பு பயிற்சியளித்து அவர்களை முற்றி லும் பயன்படுத்தி நன்கு போற்றிப் பாதுகாக்க வேண்டும். இத்தகையவர்களுக்காக வாரந்தோறும் ஒரு சில விரிவுரை களை ஏற்பாடு செய்ய வேண்டும்; இவர்களைத் தக்க நேரத்தில் மற்ற நகரங்களுக்கு அழைக்க வாய்ப்பு இருக்க வேண்டும்; பொதுவாகவே பல நகரங்களுக்குத் திறமை மிக்க பிரச்சாரக் கர்த்தாக்களின் சுற்றுப்பயணத்திற்கு ஏற்பாடு செய்ய வேண் டும். அனுபவம் குறைவான இளைஞர் திரளினரை அதிகமாக நடைமுறை ரீதியான காரியங்களில் ஈடுபடுத்த வேண்டும்; நம்பிக்கை மனப்பான்மையுடன் ''பிரச்சாரம்'' என்றழைக்கப் படும் மாணவர்களின் குழு நடவடிக்கைகளுடன் ஒப்பிடும் போது அது நம்மிடையே இரண்டாம் பட்சமாக உள்ளது. ஆழ்ந்த நடைமுறை ரீதியான நடவடிக்கைகளுக்கு வலிமை

யான தயாரிப்பு அவசியம் என்றாலுங்கூட, ''ஆரம்பக்கர்த் தாக்களுக்கும்'' இங்கே வேலையைக் கண்டுபிடிப்பது எளிது.

இப்போது தொழிற்சாலைக் குழுக்களைப் பற்றி பார்ப்போம். இவை நமக்கு விசேஷமாக முக்கியமானவை: இயக்கத்தின் முக்கியச் சக்தி அனைத்துமே பெரிய தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்களின் ஸ்தாபன ஒற்றுமையில் அடங்கியுள்ளது, ஏனெனில் பெரிய தொழிற்சாலைகளும் (ஆலைகளும்) எண்ணிக்கையில் மட்டுமின்றி, செல்வாக்கிலும் வளர்ச்சியிலும் போராட்டத் திறனிலும் தொழிலாளி வர்க்கத்திலே விஞ்சி நிற்கக் கூடிய பகுதியை உள்ளடக்கியுள்ளன. ஒவ்வொரு தொழிற்சாலையும் நமது கோட்டையாக விளங்க வேண்டும். இதற்கு, மற்ற எந்த புரட்சி ஸ்தாபனத்தையும் போன்றே ''தொழிற்சாலை'' தொழிலாளர் ஸ்தாபனம் உள்ளுக்குள் இரகசியமானதாயும் வெளியில் ''கிளைகள்'' விட்டு படர்ந்ததாகவும் இருக்க வேண்டும், அதாவது தனது வெளித் தொடர்புகளில் தனது உணர் கொம்புகளைப் பல்வேறு திசைகளிலும் அதே அளவுக்கு அதிகமாக வெளியே நீட்ட வேண்டும். இங்கும் உட்கருவாகவும் வழிகாட்டியாகவும் ''எஜமானனாகவும்'' தொழிலாளர் புரட்சிவீரர்களின் குழுதான் கட்டாயம் இருக்க வேண்டும். ''தொழிற்சாலைக்'' குழுக்கள் உள்ளிட்ட சமூக-ஜனநாயக ஸ்தாபனங்களின் வெறும் தொழிலாளி அல்லது தொழிலுக்குரிய பாரம்பரிய வகைகளிலித்து நாம் முற்றிலும் அறுத்துக் கொள்ள வேண்டும். தொழிற்சாலைக் குழு அல்லது தொழிற்சாலைக் (ஆலை) கமிட்டி (ஏராளமான மற்ற குழுக்களிலிருந்து இதைப் பிரிக்க) கமிட்டியிலிருந்து நேரடியாக கட்டளைகளையும் தொழிற்சாலையில் சமூக-ஜனநாயகப் பணி அனைத்தையும் நிறைவேற்றுவதற்கான அதிகாரத்தையும் பெறும் மிகக் குறைந்த அளவு புரட்சியாளர்களைக் கொண்டு அமைக்கப்பட வேண்டும். தொழிற்சாலைக் கமிட்டியின் எல்லா உறுப்பினர்களும், கமிட்டியின் ஆணைகள் அனைத்திற்கும் கீழ்படியக்கூடிய, எந்த ''இயங்கும் இராணுவத்தில்'' அவர்கள் சேர்ந்துள்ளார்களோ, அதன் ''சட்டங்களையும் மரபுகளையும்'' கடைப்பிடிக்க கட்டுப்பட்டவர்களாயும்—போர்க்காலத்தில் தலைமையின் அனுமதியின்றி அவர்களால் அதிலிருந்து வெளியே வர முடியாது—இருக்கக் கூடிய கமிட்டியின் ஏஜெண்டுக்களாக தங்களைக் கருத வேண்டும். எனவே தொழிற்சாலைக் கமிட்டியின் உள்ளடக்கம்

மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது; இந்தக் கமிட்டியின் முக்கியக் கடமைகளில் ஒன்று துணைக் கமிட்டிகளைச் சரிவர அமைப்பதாகும். இந்த விஷயத்தை நான் பின்வருமாறு எண்ணிப் பார்க்கிறேன்: எல்லா இடங்களிலும் தொழிற்சாலைத் துணைக் கமிட்டிகளை அமைக்கும் பொறுப்பை கமிட்டி ஒரு சில குறிப்பிட்ட உறுப்பினர்களுக்கு (இவர்களோடு கூட, ஏதோ குறிப்பிட்ட காரணங்களுக்காக கமிட்டியில் இடம் பெருத, ஆனால் தங்களது அனுபவம், அறிவு, பொதுத் தொடர்புகள் காரணமாக உதவிகரமாக இருக்கக் கூடியவர்களையும் சேர்த்து என்று வைத்துக் கொள்வோம்) அளிக்கிறது. வட்டாரப் பிரதிநிதிகளுடன் ஒரு கமிஷன் கலந்தாலோசித்து பல சந்திப்புக்களுக்கு ஏற்பாடு செய்கிறது; தொழிற்சாலைத் துணைக் கமிட்டிகளுக்கான வேட்பு உறுப்பினர்களை நன்கு சோதித்துப் பார்க்கின்றது; அவர்களை ''பட்சபாதத்துடன்'' குறுக்கு விசாரணைக்கு உட்படுத்துகிறது; தேவையென்றால் அவர்களின் மனோதிடத்தைச் சோதிக்கின்றது; அதே நேரத்தில் ஒவ்வொரு குறிப்பிட்ட தொழிற்சாலையிலும் உள்ள துணைக் கமிட்டிக்கான வேட்பு உறுப்பினர்களில் கூடுமானவரை அதிகமானவர்களைத் தானே பார்த்து சோதிக்க முயலுகிறது; இறுதியாக, ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலைக் குழுவை ஒப்புதலுக்காக முன்மொழிகிறது அல்லது முழு துணைக் கமிட்டியைத் தேர்ந்தெடுக்கும், நியமிக்கும் அதிகாரத்தை ஒரு குறிப்பிட்ட தொழிலாளிக்கு அளிக்கிறது. இவ்வாருக, இந்த ஏஜெண்டுக்களில் யார், எவ்வாறு கமிட்டியுடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்பதை கமிட்டியே நிர்ணயம் செய்யும் (பொதுவிதியின்படி வட்டாரப் பிரதிநிதிகள் மூலம்; ஆனால் இந்த விதிக்கு திருத்தங்களும் மாற்றங்களும் இருக்கக்கூடும்). இந்தத் தொழிற்சாலைத் துணைக் கமிட்டிகளின் முக்கியத்துவத்தை முன்னிட்டு மத்திய வெளியீட்டுடன் தொடர்பு கொள்ளத் தேவையான விலாசத்தையும் தனது தொடர்பு மையத்தையும் ஒவ்வொரு துணைக் கமிட்டியும் பாதுகாப்பான இடத்தில் பெற்றிருக்க நாம் நம்மாலியன்றவரை முயல வேண்டும் (அதாவது, தோல்வி ஏற்படும் பட்சத்தில் உடனடியாக துணைக் கமிட்டியைப் புனரமைப்பதற்குத் தேவையான விவரங்கள் பாதுகாப்பாக வைக்கப்படுவதற்காக, ருஷ்ய அரசியல் போலீஸ் புக சக்தியற்ற கட்சி மையத்திற்குக் கூடுமானவரை அதிக

அளவிலும் முறையாகவும் அனுப்பப்படல் வேண்டும்). இவ்வாறு விலாசங்களைத் தருவது கமிட்டியால், அதன் யோசனைகள், விவரங்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட வேண்டுமேயின்றி, வழக்கில் இல்லாத ''ஜனநாயக'' வினியோக உரிமை முறையின் அடிப்படையில் அல்ல என்பது தானே தெளிவாகிறது. இறுதியாக, சில நேரங்களில் ஒரு சில உறுப்பினர்களடங்கிய தொழிற்சாலைத் துணைக் கமிட்டிக்குப் பதில் கமிட்டியிலிருந்து ஒரு ஏஜெண்டை (அத்தோடு கூட ஒரு வேட்பு உறுப்பினரையும்) நியமிப்பதோடு நிறுத்திக்கொள்வது அவசியமாயிருக்கும் அல்லது வசதியாயிருக்கும் என்று கூறுவது மிகையாகாது. தொழிற்சாலைத் துணைக் கமிட்டி உருவான பின் அது, பல்வேறு கடமைகளுக்காக, பல இரகசிய மட்டங்களில், பல வடிவங்களில் தொழிற்சாலைக் குழுக்களையும் வட்டங்களையும் அமைக்க ஆரம்பிக்க வேண்டும், உதாரணமாக பிரசுரங்களை எடுத்துச் சென்று வினியோகிப்பதற்கான குழுக்கள் (இது மிக முக்கியமான பணிகளில் ஒன்ருகும்; நன்கு செயல்படக்கூடிய தபால் துறை நம்மிடம் உருவாகுமாறு இந்தப் பணி நிறைவேற்றப்பட வேண்டும்; வினியோக முறைகள் சோதிக்கப்படுவதோடு கூட ஒவ்வொரு வீட்டிற்கும் செல்லும் வழிகளும் நன்கு தெரிந்திருக்கும்படியாகப் பிரசுரங்களை எடுத்துச் செல்லும் முறைகளும் சோதித்துப்பார்க்கப்பட வேண்டும்), சட்டவிரோத இலக்கியத்தைப் படிப்பதற்கான குழுக்கள், ஒற்றர்களைக் கண்காணிப்பதற்கான குழுக்கள்,* தொழிற்துறை இயக்கத்தையும் பொருளாதாரப் போராட்டத்தையும் விசேஷமாக தலைமை தாங்கு

---

* ஒற்றர்களையும் ஆத்திரமூட்டுபவர்களையும் காட்டிக் கொடுப்பவர்களையும் கொல்வது என்பது சில நேரங்களில் நிப்ந்தனையற்றத் தேவையாக இருக்கும் என்பதையும் ஆனல் இதை முறையாகச் செய்வது மிகத் தவருனது, தேவையில்லாதது என்பதையும் ஒற்றர்களைக் கண்டுபிடித்து அம்பலப்படுத்தி அவர்களைத் நீங்கற்றவர்களாக்கும் சக்தி வாய்ந்த ஒரு ஸ்தாபனத்தை உருவாக்க நாம் முயல வேண்டும் என்பதையும் நாம் தொழிலாளர்களுக்கு அறிவுறுத்த வேண்டும். ஒற்றர்களைப் படுகொலை செய்வது என்பது கூடாது, ஆனல் இவர்களைக் கண்டுபிடித்து தொழிலாளர்களுக்கு கல்வி புகட்டக் கூடிய ஒரு ஸ்தாபனத்தை அமைப்பது என்பது முடியும், இது அவசியமும் கூட.

வதற்கான குழுக்கள், அபாயமின்றி, வெளிப்படையாகப் பேசவும், மக்களின் மனப்போக்கை அரியவும் நிலைமைகளை உணரவும் உரையாடலைத் துவக்கி (இயந்திரங்களைப் பற்றி, பரிசோதனைகளைப் பற்றி, இத்தியாதி) அதை முற்றிலும் சட்ட பூர்வமாக நீண்ட நேரம் தொடரவல்ல கிளர்ச்சியாளர்கள், பிரச்சாரக்கர்த்தாக்களுக்கான குழுக்கள், இவை போன்ற பல குழுக்களைக் குறிப்பிடலாம்.* பல்வேறு விதமான குழுக்கள் (அல்லது எஜெண்டுக்கள்) மூலம் தொழிற்சாலை முழுவதையும் கூடுமானவரை அதிகமான அளவு தொழிலாளர்களையும் கவர தொழிற்சாலையின் துணைக் கமிட்டி முயல வேண்டும். இத்தகையக் குழுக்களின் அபரிமிதத்தாலும் சுற்றுப்பயணம் செய்யும் பிரச்சாரக்கர்த்தாவிற்கு இவற்றில் நுழையக் கிடைக்கும் வாய்ப்பைக் கொண்டும், முக்கியமாக பிரசுரங்களை விநியோகித்தல், விவரங்களை, தகவல்களைச் சேகரித்தல் ஆகிய முறையான பணிகளின் சரித்தன்மையைக் கொண்டும்தான் துணைக் கமிட்டியின் செயல்முறை வெற்றி அளக்கப்பட வேண்டும்.

ஆக, ஸ்தாபனத்தின் பொது அமைப்பு, எனது கருத்துப்படி, இவ்வாறாக இருக்க வேண்டும்; உள்ளூர் இயக்கம் முழுவதற்கும் உள்ளூர் சமூக-ஜனநாயகப் பணி முழுமைக்கும் கமிட்டி தலைமை தாங்குகிறது. இதற்குக் கீழ்ப்பட்ட காரியாலயங்களும் கிளைகளும் இதிலிருந்து கீழ்க்காணும் வடிவங்களில் பிரிந்து போகின்றன—முதலாவதாக, (இயன்றவரை) தொழிலாளர்கள் அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய, வட்டாரக் குழுக்கள் மற்றும் தொழிற்சாலை (ஆலை) துணைக் கமிட்டிகள் வடிவத்தில் உருவாக்கப்பட்ட நிர்வாக ஏஜெண்டுக்களின் வரிசை. இந்த வரிசை சமாதானக் காலத்தில் துண்டுப் பிரசுரங்களையும் அறிக்கைகளையும் இரகசியத் தகவல்களையும் கொண்டு செல்லும்; போர்க்காலத்தில் ஆர்ப்பாட்டங்கள் போன்ற கூட்டு நடவடிக்கைகளை ஏற்பாடு செய்யும். இரண்டாவதாக, இயக்கம் முழுமைக்கும் சேவை செய்யக்கூடிய பலவித குழுக்களும் வட்டங்களும் கமிட்டியிலிருந்துதான் தோன்றுகின்றன(பிரச்சாரம்,போக்குவரத்து,

* ஆர்பாட்டங்கள், சிறையிலிருந்து விடுவித்தல் ஆகிய காரியங்களுக்காக இராணுவத்தில் பணிபுரிபவர்கள் அல்லது நல்ல வலிமையும் திறமையும் மிக்கத் தொழிலாளர்களைக் கொண்டு அமைக்கப்படும் போர்க் குழுக்களும் அவசியம்.

எல்லாவிதஇரகசிய நிறுவனங்கள் போன்றவை). எல்லாக் குழுக்களும் வட்டங்களும் துணைக் கமிட்டிகளும் கமிட்டிக் காரியாலயங்கள் அல்லது கிளைகளின் வரம்புகளுக்குக் கட்டுப்பட வேண்டும். இவர்களில் சிலர் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியில் சேர நேரடியாக தங்கள் விருப்பத்தை வெளியிடுவார்கள்; இது கமிட்டியால் ஏற்கப்பட்டால் கட்சியில் சேர்ந்து (கமிட்டியின் கட்டளைப்படி அல்லது கமிட்டியின் ஒப்புதலுக்கேற்ப) குறிப்பிட்ட சில பணிகளை ஏற்றுக்கொள்வார்கள், கட்சி ஸ்தாபனங்களின் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பதாக வாக்களிப்பார்கள், கட்சி உறுப்பினர்களின் உரிமைகளைப் பெறுவார்கள், கமிட்டியின் மிக நெருக்கமான வேட்பு உறுப்பினர்களாக கருதப்படுவார்கள், இத்தியாதி. மற்றவர்கள் கட்சி உறுப்பினர்களால் உருவாக்கப்பட்ட அல்லது கட்சியைச் சார்ந்த ஏதாவது ஒரு குழுவின் வரம்பிற்குள்ளேயே அல்லது வேறு எதிலாவது இருந்து கொண்டு ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியில் சேர மாட்டார்கள்.

தங்களது எல்லா உள் விவகாரங்களிலும் இந்தக் குழுக்கள் எல்லாவற்றின் உறுப்பினர்கள், கமிட்டியின் உறுப்பினர்கள் எப்படி ஒருவருடன் ஒருவர் சமமானவர்களோ, அதே போன்று சமமானவர்கள் என்பது சொல்லாமலேயே அமையும். உள்ளூர்க் கமிட்டியுடன் (மத்தியக் கமிட்டி, மத்திய வெளியீடு ஆகியவற்றுடனும்) தனிப்பட்ட முறையில் தொடர்பு கொள்ளும் உரிமை இந்தக் கமிட்டியால் நியமிக்கப்பட்ட நபருக்கு (அல்லது நபர்களுக்கு) மட்டுமே உண்டு என்பதுதான் ஒரே விதிவிலக்காக இருக்கும். மற்ற எல்லா விஷயங்களிலும் இந்த நபர் மற்றவர்களுடன் சமமானவர்; இவர்களும் உள்ளூர் கமிட்டிக்கும் மத்தியக் கமிட்டிக்கும் மத்திய வெளியீட்டிற்கும் மனுக்களை (ஆனால் நேரடியாக அல்ல) தரலாம். இவ்வாறாக, மேலே குறிப்பிட்ட விதிவிலக்கு சமத்துவத்தை மீறுவதைக் குறிக்காது, மாறாக இரகசியத்தைக் காப்பாற்றுவதற்காக வேறு வழியின்றி எடுக்கப்படும் ஒரு அவசியமான இணக்கம்தான். ''தனது'' குழுவின் மனுவை கமிட்டியில், மத்தியக் கமிட்டியில் அல்லது மத்திய வெளியீட்டில் சமர்ப்பிக்காத கமிட்டியின் உறுப்பினர் கட்சிக் கடமையை நேரடியாக மீறியதற்கு பொறுப்பேற்பார். அடுத்து, பல்வேறு குழுக்களின் இரகசியத் தன்

மையையும் வடிவமைப்பையும் பொறுத்தமட்டில், இவை அந்தந்த பணியைப் பொறுத்து அமையும்: இதன்படி இங்கு மிகப் பல்வேறுவிதமான ஸ்தாபனங்கள் இருக்கும் (மிகக் ''கண்டிப்பான'', குறுகிய ஒதுக்கமானதிலிருந்து மிக ''சுதந்திரமான'', பரவலான, திறந்த, நன்கு உருப்பெருதது வரை). உதாரணமாக, வினியோகக் குழுவிற்கு மிகக் கண்டிப்பான இரகசியமும் இராணுவ ஒழுக்கமும் தேவை. பிரச்சாரக்கர்த்தாக்களின் குழுவிற்கும் இரகசியம் அவசியம், ஆனால் இராணுவ ஒழுக்கம் அவ்வளவு அவசியமில்லை. சட்டபூர்வமான பிரசுரங்களைப் படிக்கும் அல்லது தொழில்முறைத் தேவைகளைப் பற்றிய கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்யும் தொழிலாளர் குழுவிற்கு இன்னமும் குறைவான அளவு இரகசியமே போதும், இத்தியாதி. வினியோகஸ்தர்களின் குழுக்கள் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியைச் சார்ந்திருக்க வேண்டும்; அதன் உறுப்பினர்களில் குறிப்பிட்ட பகுதியினரையும் பதவிகளில் இருப்பவர்களையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். தொழில்முறை நிலைமைகளைக் கண்டுணர்ந்து தொழில்முறை கோரிக்கைகளை முன்வைக்கக்கூடிய குழு ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியைச் சேர்ந்திருக்க வேண்டும் என்று அவசியமில்லை. ஒன்றிரண்டு கட்சி உறுப்பினர்கள் பங்கேற்க, தானாகவே கல்வி பயிலும் பணியில் ஈடுபட்டுள்ள மாணவர்கள், இராணுவ அதிகாரிகள், உத்தியோகஸ்தர்களின் குழுக்களுக்கு, அவர் கட்சியைச் சார்ந்தவர் என்ற விவரமே சில சமயங்களில் தெரியக் கூடாது, இத்தியாதி. ஆனால் இந்த விவரத்தில் இந்த எல்லாக் கிளைகளிலும் அதிகபட்ச வடிவமைப்பு வேண்டும் என நிச்சயமாய் நாம் கோர வேண்டும்: இவற்றில் பங்கு கொள்ளும் கட்சியின் ஒவ்வொரு உறுப்பினரும் இந்தக் குழுக்களில் காரியங்கள் செய்யப்படுவதற்கு முறைப்படி பொறுப்பேற்க வேண்டும்; மத்தியக் கமிட்டியிலும் மத்திய வெளியீட்டிலும் ஒவ்வொரு குழுவின் உள்ளடக்கமும் இது இயங்கும் முறையும் இதன் பணிகளின் விவரமும் நன்கு தெரிந்திருக்க தேவையான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். மையத்திற்கு இயக்கத்தைப் பற்றிய ஒரு முழுக் கருத்து ஏற்படவும் மிகப் பரவலான வட்டத்திலிருந்து பல கட்சிப் பதவிகளுக்கான நபர்களைத் தேர்ந்தெடுக்கவும் ஒரு குழுவிடம் அதைப் போன்றே ருஷ்யா

முழுவதும் உள்ள மற்றப் பல குழுக்கள் (மையத்தின் மூலமாக) பயிலவும் ஆத்திரமூட்டுபவர்கள், சந்தேகத்திற்கிடமானவர்கள் தோன்றுவதை எச்சரிக்கவும்— சுருங்கக்கூறின் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இது சந்தேகத்திற்கிடமின்றி மிக அவசியமானது.

இதை எப்படிச் செய்வது? கமிட்டிக்கு முறையான அறிக்கைகள், இயன்ற அளவு அதிகமான இந்த அறிக்கைகளின் கூடுமானவரை அதிகமான உள்ளடக்கத்தை மத்திய வெளியீட்டுக்குத் தெரிவித்தல், எல்லாவிதக் குழுக்களுக்கும் மத்தியக் கமிட்டி மற்றும் உள்ளூர்க் கமிட்டியின் உறுப்பினர்களின் விஜயத்தை ஏற்பாடு செய்தல், இறுதியாக இந்தக் குழுவுடன் உள்ளத் தொடர்புகளை, அதாவது இந்தக் குழு உறுப்பினர்கள் ஒரு சிலரின் பெயர்களையும் விலாசங்களையும் பாதுகாப்பான இடத்திற்கு (கட்சியின் மத்திய வெளியீடு, மத்தியக் கமிட்டியின் அலுவலகங்களுக்கும்) கட்டாயம் அறிவித்தல். அறிக்கைகளும் தொடர்புகளும் எப்போது தெரியப்படுத்தப்படுகின்றனவோ அப்போதுதான் ஒரு குறிப்பிட்ட குழுவில் கலந்து கொண்ட கட்சி உறுப்பினரை தனது கடமையை நிறைவேற்றியவராக அங்கீகரிக்கலாம்; அப்போதுதான் நடைமுறை ரீதியான பணிகளை நிறைவேற்றும் ஒவ்வொரு குழுவிடமும் பயிலக் கூடிய நிலையில் கட்சி முழுவதும் இருக்கும்; அப்போதுதான் தோல்விகள் நமக்கு அச்சத்தை அளிக்காது, ஏனெனில் பல்வேறு விதமான குழுக்களுடன் தொடர்புகள் இருக்கும் ஒரு சூழ்நிலையில் உடனே உதவியாளர்களைக் கண்டுபிடித்து நிலைமையை சீராக்க நமது மத்தியக் கமிட்டியின் பிரதிநிதிக்கு எளிதாக இருக்கும். கமிட்டியின் தோல்வி அப்போது அமைப்பு முழுவதையும் அழிக்காது, யாருக்கு மாற்று நபர் தயாராக உள்ளாரோ அந்த தலைவர்களை மட்டும் மாற்றும். அறிக்கைகளையும் தொடர்புகளையும் தெரியப்படுத்துவது இரகசிய சூழ்நிலைகளின் காரணமாக இயலாது என்று கூறுமலிருக்கட்டும்: விருப்பமிருந்தால் போதும், தகவல்களைத் தெரியப்படுத்தும் (அல்லது அனுப்பும்) வாய்ப்பு எப்போதுமே உள்ளது, நம்மிடம் கமிட்டிகளும் மத்தியக் கமிட்டியும் மத்திய வெளியீடும் உள்ளவரை எப்போதுமே இருக்கும்.

*1902ஆம் ஆண்டு செப்டெம்பர் 1 தேதிக்கும் 11ஆம் தேதிக்கும் இடையில் (14— 24) எழுதப்பட்டது. லண்டனிலிருந்து பீட்டர்ஸ்பர்கிற்கு அனுப்பப்பட்டது. 1902ஆம் ஆண்டு கை அச்சு இயந்திரத்தில் அச்சடிக்கப்பட்டது*

## ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசில் கட்சி விதிமுறையைப் பற்றிய விவாதத்தின் போது நிகழ்த்தப்பட்ட இரண்டாவது உரையிலிருந்து ஆகஸ்ட் 2 (15), 1903

இந்தக் காரியத்தின் உட்பொருளுக்கு வருகையில், தோழர் திரோத்ஸ்கி தோழர் பிளெஹானவின் முக்கியக் கருத்துக்களை முற்றிலும் புரிந்து கொள்ளவில்லை, எனவே தான் தனது ஆலோசனைகளில் பிரச்சினையின் உட்கருத்து முழுவதையுமே தவிர்த்து விட்டார் என்று கூற விரும்புகிறேன். அவர் அறிவுத்துறையினரைப் பற்றியும் தொழிலாளர்களைப் பற்றியும், வர்க்கக் கண்ணோட்டம் மற்றும் வெகுஜன இயக்கத்தைக் குறித்தும் பேசினார், ஆனால் எனது சூத்திரம், கட்சி உறுப்பினரைப் பற்றியக் கருத்தை சுருக்குகிறதா இல்லை விரிவுபடுத்துகிறதா? என்ற ஒரு முக்கியமான கேள்வியைக் கவனிக்கவில்லை. இந்த வினாவை தனக்குத் தானே தொடுத்துக் கொண்டால், எனது சூத்திரம் இந்தக் கருத்தை சுருக்குகிறது என்பதையும் மார்த்தவின் சூத்திரம் (மார்த்தவே உண்மையில் தெரிவித்துள்ளபடி) தனது ''வளைந்துகொடுக்கும் தன்மையால்'' மாறுபட்டிருப்பதால் இதை விரிவுபடுத்துகிறது என்பதையும் எளிதாகக் காண்பார்.[20] கட்சி வாழ்க்கையில் நாம் இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கின்றோமே, இதே போன்ற காலகட்டத்தில் ''வளைந்து கொடுக்கும் தன்மை'' குழப்பம், தடுமாற்றம், சந்தர்ப்பவாதம் ஆகியப் போக்குகள் எல்லாவற்றுக்கும் சந்தேகத்திற்கிடமின்றி கதவைத் திறந்து விடுகின்றது. இந்தச் சாதாரண, வெளிப்படையான முடிவை மறுக்க வேண்டுமானால், அத்தகைய போக்குகள் இல்லை என்று நிரூபிக்க வேண்டும்; ஆனால் தோழர் திரோத்ஸ்கி இதைப் பற்றிச் சிந்திக்கக்கூட இல்லை. இதை நிரூபிக்கக் கூட இயலாது ஏனெனில் இத்தகைய போக்குகளைக் கொண்டவர்கள் நிறையவே இருக்கின்றார்கள், தொழிலாளி வர்க்கத்தினரின் மத்தியிலும்

அவர்களைக் காணலாம் என்பது எல்லோருக்கும் தெரியும். கட்சிக் கொள்கையின் உறுதியையும் கட்சிக் கோட்பாடுகளின் தூய்மையையும் பாதுகாக்க வேண்டியது முக்கியமாக இப்போது இன்றியமையாத காரியமாகிறது; ஏனெனில் ஒருமைப்பாட்டு ரீதியாக புனரமைக்கப்பட்ட கட்சி நிலையற்றவர்களை ஏராளமாகச் சேர்த்துக் கொள்ளும், கட்சி வளர வளர இவர்களது எண்ணிக்கையும் அதிகமாகும். கட்சி ஒரு சதி வேலை ஸ்தாபனம் அல்ல என்று கூறியபோது (இந்த மறுப்பை இன்னும் பலரும் என்னிடம் கூறினர்) தோழர் திரோத்ஸ்கி என்ன செய்ய வேண்டும்? என்ற எனது நூலின் முக்கியக் கருத்தைப் புரிந்து கொள்ளவேயில்லை. எனது நூலில், மிக இரகசியமான, மிகக் குறுகிய ஸ்தாபனத்திலிருந்து பரந்த, ''சுதந்திரமான'' (lose)* ஸ்தாபனம் வரை பல்வேறு வகையான ஸ்தாபனங்களை நான் முன்மொழிந்துள்ளேன் என்பதை அவர் மறந்து விட்டார். கட்சி தொழிலாளி வர்க்கத்தின் மிகப்பெரும் பகுதியினரின் முற்போக்கு அணியாகவும் வழிகாட்டியாகவும் மட்டுமே இருக்க வேண்டும் என்பதை அவர் மறந்து விட்டார்; இந்தத் தொழிலாளி வர்க்கம் முழுவதும் (அல்லது கிட்டத்தட்ட முழுவதும்) கட்சி ஸ்தாபனங்களின் ''கண்காணிப்பின் கீழும் தலைமையின் கீழும்'' பணி புரிகிறது, ஆனல் இது முழுவதும் கட்சியில் இருப்பது இல்லை அவ்வாறு முழுவதும் கட்சியினுள் இருக்கவும் கூடாது. தனது அடிப்படைத் தவறின் விளைவாக தோழர் திரோத்ஸ்கி உண்மையில் எத்தகைய முடிவுகளுக்கு வருகின்ருர் என்பதைப் பாருங்கள். வரிசை வரிசையாகத் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டு அனைத்து தொழிலாளர்களும் கட்சியில் தாங்கள் உறுப்பினர்கள் இல்லை என்று அறிவித்தால், கட்சியின் நிலை விசித்திரமாக இருக்கும் என்று அவர் இங்கே குறிப்பிட்டார்! ஆனல் இது தலைகீழானதாக இல்லையா? தோழர் திரோத்ஸ்கியின் வாதம் விந்தையாக இல்லையா? எந்த ஒரு சிறிய அனுபவம் உள்ள புரட்சிவீரரையும் மகிழ்விக்கக் கூடியதை அவர் துன்பகரமானதாகக் கருதுகின்ருர். வேலைநிறுத்தங்களுக்காகவும் ஆர்பாட்டங்களுக்காகவும் கைது செய்யப்படும் நூற்றுக்கணக்கான, ஆயிரக்

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 1, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1979, பக்கம் 320.

கணக்கான தொழிலாளர்கள் கட்சி ஸ்தாபனங்களின் உறுப்பினர்களாக இல்லாமல் இருப்பார்களேயானல் அது, நமது ஸ்தாபனங்கள் சிறந்தவை என்பதையும் ஏறக்குறைய குறுகிய தலைவர்கள் வட்டத்தை இரகசியப்படுத்தி இயன்றவரை அதிகமான அளவு பரவலான வெகுஜனங்களை இயக்கத்திற்கு இழுக்கும் நமது கடமையை நாம் நிறைவேற்றுகின்ருேம் என்பதையும் மட்டுமே நமக்கு நிருபிக்கும்.

மார்த்தவின் சூத்திரத்திற்குப் பின் நிற்பவர்களுடைய தவறின் அடிப்படை, அவர்கள் நமது கட்சி வாழ்க்கையின் அடிப்படைத் தீமைகளில் ஒன்றைப் புறக்கணிப்பதோடு கூட இதைப் புனிதமாக்குகின்ருர்கள் என்பதில்தான் அடங்கியுள்ளது. கிட்டத்தட்ட பரிபூரணமான அரசியல் அதிருப்தி நிலவும் சூழ்நிலைமையில், வேலை முழு இரகசியமாக நடக்கும் நிலைமையில், வேலையின் பெரும் பகுதியை நெருக்கமான இரகசியக் குழுக்களிலும் ஏன் தனிப்பட்ட சந்திப்புக்களிலும் கூட ஒருமுகப்படுத்தும் நிலைமையில் வெட்டிப் பேச்சு பேசுபவர்களை வேலை செய்பவர்களிடமிருந்து பிரித்துப்பார்ப்பது கிட்டத்தட்ட இயலாதது என்பதில் இந்தத் தீமை அடங்கியுள்ளது. மிக்க தீமையையும் குழப்பத்தையும் தரும் இந்த இரு காரணிகளின் கலப்பும் இவ்வளவு சாதாரணமாக இருக்கக்கூடிய ருஷ்யா போன்ற இன்னெரு நாட்டைக் கண்டு பிடிப்பது அரிதே. அறிவுத்துறையினரிடையே மட்டுமின்றி தொழிலாளி வர்க்கத்தின் மத்தியிலும் இந்தத் தீமையினல் நாம் கடுமையாக வேதனைப்படுகின்ருேம், தோழர் மார்த்தவின் சூத்திரம் இந்தத் தீமையைச் சட்ட பூர்வமாக்குகிறது. இந்தச் சூத்திரம் அனைவரையும் ஒவ்வொருவரையும் கட்சி உறுப்பினர்களாக்க தவிர்க்க இயலாதபடி முயலுகிறது; ''விருப்பமிருந்தால், ஆமாம்'' என்ற ஒரு விளக்கக் குறிப்புடன் தோழர் மார்த்தவ் தானே இதை ஒப்புக்கொண்டிருக்க வேண்டும் என்ருர் அவர். குறிப்பாக இதைத்தான் நாம் விரும்பவில்லை! எனவேதான் நாம் மார்த்தவின் சூத்திரத்திற்கு எதிராக இவ்வளவு உறுதியோடு எழுந்து நிற்கின்ருேம். வெட்டிப் பேச்சு பேசி திரியும் ஒருவர் கட்சியின் உறுப்பினராகும் உரிமையும் வாய்ப்பும் பெறுவதைவிட உண்மையாக வேலை செய்யும் பத்து பேர் தாங்கள் கட்சியின் உறுப்பினர்கள் என்று கூறிக்கொள்ளாமலிருப்பது (உண்மையான உழைப்பவர்கள் பதவிகளுக்குப் பின் ஓட மாட்டார்கள்!)

சிறந்தது. இந்தக் கோட்பாடுதான் மறுக்க முடியாததாக எனக்குத் தோன்றுகிறது, இதுதான் மார்த்தவை எதிர்த்து போராடுமாறு என்னைக் கட்டாயப்படுத்துகிறது. கட்சி உறுப்பினர்களுக்குத்தான் நாம் எந்தவித உரிமையையும் தருவதில்லையே, எனவே துஷ்பிரயோகத்திற்கு இடமில்லை என்று என்னிடம் மறுத்தார்கள். இத்தகைய மறுப்பு முற்றிலும் ஆதாரமற்றது: கட்சி உறுப்பினர் எத்தகைய விசேஷ உரிமைகளைப் பெற வேண்டும் என்பதைப் பற்றி நம்மிடம் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை என்றால், கட்சி உறுப்பினர்களின் உரிமைகளை மட்டுப்படுத்துவதைப் பற்றியும் எந்த விதக் குறிப்பும் நம்மிடம் இல்லை என்பதை கவனியுங்கள். இது முதலாவது. இரண்டாவதாக, இது முக்கியமானது, உரிமைகளைப் பொறுத்து இல்லாமல், கட்சியின் ஒவ்வொரு உறுப்பினரும் கட்சிக்குப் பொறுப்பானவர், கட்சியும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் பொறுப்பானது என்பதை மறக்கக் கூடாது. நமது அரசியல் நடவடிக்கைச் சூழ்நிலைகளில், இன்றைய அரசியல் ஸ்தாபன அமைப்பின் துவக்க நிலையில், ஸ்தாபனத்தில் உறுப்பினர்களாக இல்லாதவர்களுக்கு உறுப்பினர் உரிமையை அளித்து ஸ்தாபனத்தில் இல்லாதவர்களுக்கான (ஒருவேளை வேண்டுமென்றே ஸ்தாபனத்தில் இருக்காத) பொறுப்பைக் கட்சியின் மீது சுமத்துவது நேரடியாக ஆபத்தானது, தீங்கு விளைவிக்கக் கூடியது. நீதி மன்றத்தில் தன்னை கட்சி உறுப்பினர் என்று சொல்லிக் கொள்ள கட்சி ஸ்தாபனத்தில் உறுப்பினராக இல்லாத ஒருவருக்கு, எவ்வளவு தீவிரமாக அவர் பணியாற்றியிருந்தாலும், உரிமையிருக்காது என்பதைக் குறித்து தோழர் மார்த்தவ் அச்சப்படுகின்றார். என்னை இது அச்சுறுத்தவில்லை. மாறாக, எந்த ஒரு கட்சி ஸ்தாபனத்தையும் சேராத ஒருவன் நீதி மன்றத்தில் தன்னை கட்சியின் உறுப்பினன் என்று கூறிக்கொண்டு விரும்பத்தகாத தன்னை வெளிப்படுத்தினால், அது மிக கேடானதாக இருக்கும். இத்தகைய நபர் ஸ்தாபனத்தின் கண்காணிப்பின் கீழ், வழிகாட்டுதலின் கீழ் பணியாற்றினார் என்பதை மறுப்பது வார்த்தையின் தெளிவற்ற தன்மையால் இயலாததாயிருக்கும். உண்மையிலேயே— இதில் எந்த வித சந்தேகமும் தேவையில்லை—''கண்காணிப்பின் கீழ், வழிகாட்டுதலின் கீழ்'' என்னும் வார்த்தைகள் கண்காணிப்பும் கிடையாது, வழிகாட்டலும் இல்லை என்பதில்தான் கொண்டுபோய்

விடும். ஸ்தாபனத்தில் சேராது பணி புரிபவர்கள் அனைவரின் மேலும் கண்காணிப்பைச் செலுத்த மத்தியக் கமிட்டியால் எப்போதுமே முடியாது. உண்மையான கண்காணிப்பை மத்தியக் கமிட்டியின் கையில் தருவதுதான் நமது கடமை. நமது கட்சியின் உறுதியையும் பொறுமையையும் தூய்மையையும் காப்பாற்றுவதே நமது குறிக்கோள். கட்சி உறுப்பினர் எனும் பட்டத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் மிக உயரத் தூக்குவதற்காக நாம் பாடுபட வேண்டும்—எனவேதான் நான் மார்த்தவின் சூத்திரத்தை எதிர்க்கிறேன்.

# "இஸ்க்ரா" பத்திரிகை காரியாலயத்திற்குக் கடிதம்

## பத்திரிகை காரியாலயத்திற்குக் கடிதம்

தனது பத்திரிகையின் பக்கங்களை மனமுவந்து திறந்து விடும்படிக் கோரக்கூடிய பதிப்பாசிரியரின் எந்த ஒரு அழைப்பிற்கும் உடனடியாக செவிமடுக்கும் விருப்பத்தை அடக்கிக் கொள்வது கடினம் என்னும் அளவிற்கு முக்கியமான, குறிப்பாக இந்த காலகட்டத்தில் உடனடியான கட்சி வாழ்க்கைப் பிரச்சினைகளை என்ன செய்ய வேண்டியதில்லை[21] எனும் கட்டுரை இப்போது எழுப்புகிறது—குரல் எழுப்புவதை ஒரு வாரம் தாமதப்படுத்துவது என்பது ஒருவேளை குரல் எழுப்பாமலேயே இருந்து விடுவதற்குச் சமமாகும் என்ற சூழ்நிலையில், இஸ்க்ரா பத்திரிகையில் நிரந்தரமாகப் பங்கேற்பவர்களுக்கு இது குறிப்பாக கடினமாகிறது.

அநேகமாக தவிர்க்க இயலாததாகும் வாய்ப்புள்ள ஒரு சில குழப்பங்களை நீக்கும் பொருட்டு எனது விளக்கத்தைத் தர நான் விரும்புகிறேன்.

முதலாவதாக, எனது கருத்துப்படி கட்டுரையாசிரியர், கட்சியின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்ற வேண்டியதன், புதிய பிளவுகளை—குறிப்பாக கணிசமானவை என்று ஏற்றுக் கொள்ள முடியாத கருத்து மாறுபாடுகளால் ஏற்படக் கூடிய பிளவுகளை—தவிர்க்க வேண்டியதன் அவசியங்களை வலியுறுத்தும் போது அவர் கூறுவது ஆயிரம் மடங்கு சரி. சமாதான நாட்டத்திற்கும் மென்மைக்கும் இணக்கத்திற்கும் தலைவரின் தரப்பிலிருந்து விடப்படும் அறைகூவல் பொதுவாகவும் குறிப்பாக இன்றைய காலகட்டத்திலும் மிக உயர்வான பாராட்டிற்குரியது. முந்தைய பொருளாதாரவாதிகளை மட்டுமின்றி ''ஓரளவு தொடர்ச்சியின்மையால்'' அவதியுறக் கூடிய சமூக-ஜனநாயகவாதிகளின் குழுக்களையும் கடுமையான கண்டனத்திற்கு உட்படுத்துவதோ அல்லது அவர்களை கட்சியிலிருந்து விலக்குவதோ சந்தேகத்திற்கிடமின்றி விவேக

மற்ற ஒரு செயலாகும்; நேரடியான, வளைந்து கொடுக்காத, கட்சியிலிருந்து விலக்குவதற்கு ஆதரவாக நிற்கக் கூடிய முட்டாள்தனமான சபாக்கேவிச்சுகளாகத்[22] தோன்றுபவர்களின் பால் கட்டுரை ஆசிரியருக்குள்ள எரிச்சல் தொனி நமக்கு முற்றிலும் புரிகிறது என்னும் அளவிற்கு இது விவேகமற்றது. நாம் இன்னமும் அதிகமாக சிந்தித்துப் பார்க்கின்றோம்: நம்மிடம் கட்சியின் செயல்திட்டமும் கட்சி ஸ்தாபனமும் இருக்கும் போது, நாம் கட்சி வெளியீட்டின் பக்கங்களைக் கருத்துப் பரிமாற்றத்திற்காக மனமுவந்து திறந்து விடுவதோடு கூட, தொடர்ச்சியின்மையால் சந்தர்ப்பவாதப் போக்கின் ஒரு சில வறட்டுச் சூத்திரங்களைக் காப்பாற்றக் கூடிய, ஏதோ காரணங்களுக்காக தங்களது குழுவின் சிறப்பியல்பையும் தனித்துவத்தையும் வற்புறுத்தக்கூடிய குழுக்களுக்கு அல்லது ஆசிரியரின் கருத்துப்படி சிறு குழுக்களுக்குத் தங்களது கருத்து மாறுபாடுகளை, அவை எவ்வளவு சிறியனவையாக இருந்தாலும் சரி, முறையாக எடுத்துக் கூறவும் வாய்ப்பு அளிக்க வேண்டும். ''அராஜக தனிமனித வாதத்தைப்'' பொறுத்த மட்டில் மிக நேர்மையானதாகவும் சபாக்கேவிச்சைப் போல் கடுமையானதாகவும் இல்லாமல் இருப்பதற்காகத்தான், இந்தச் சிறு குழுக்களுக்குப் பேசுவதற்கான சுதந்திரத்தை அளித்து கருத்து மாறுபாடுகளின் ஆழத்தை அல்லது அவற்றின் மேற்போக்கான தன்மையை எடைபோடும் வாய்ப்பை கட்சி முழுவதற்கும் தந்து குறிப்பாக எங்கு, எதில், யாரிடம் தொடர்ச்சியின்மை தென்படுகிறது என்பதை நிர்ணயம் செய்வதற்காக இயன்ற அனைத்தையும்—மத்தியத்துவத்தைப் பற்றிய அழகிய திட்டத்திலிருந்தும் சந்தேகத்திற்கிடமற்ற கட்டுப்பாட்டிலிருந்தும் சிறிது பிறழ நேரிட்டாலும் கூட—நமது கருத்துப்படி செய்ய வேண்டியது அவசியம்.

உண்மையிலேயே குறுகிய வட்டத்தின் பாரம்பரியத்தை உறுதியாக தூக்கியெறிந்து—வெகுஜனங்களை ஆதாரமாகக் கொண்டு இயங்கும் கட்சியில்—திட்டவட்டமான கோஷத்தை முன்வைக்க வேண்டிய காலம் வந்து விட்டது: அதிக விஷயங்கள் தெரியட்டும், கட்சி எல்லா விவரங்களையும் தெரிந்து கொள்ளட்டும், சகலவிதமான கருத்து மாறுபாடுகள், திருத்தல்வாதத்தை நோக்கிய பின்வாங்கல்கள், கட்டுப்பாட்டை மீறுதல் போன்றவற்றைப் பற்றிய முழு விவரம், முற்று முழு

விவரமும் கட்சிக்கு அளிக்கப்பட வேண்டும். கட்சித் தொண்டர்கள் அனைவரின் சுதந்திரமான அபிப்பிராயத்திற்கு அதிக நம்பிக்கை தரப்பட வேண்டும்: அவர்களால் மட்டுமே பிளவின் மேல் நாட்டமுள்ள குழுக்களின் அளவிற்கதிகமான கோபத்தை மட்டுப்படுத்த முடியும்; அவர்களால் மட்டுமே தங்களது நிதானமான, வெளிப்படையாகத் தெரியாத ஆனால் அதே சமயம் உறுதியான செல்வாக்கின் மூலம் கட்சிக் கட்டுப்பாட்டைக் கடைபிடிக்கும்''சுயவிருப்பத்தைப்'' புகுத்த முடியும்; அவர்களால் மட்டுமே அராஜக தனிமனிதவாத ஆர்வத்தைத் தணிக்க முடியும்; பிளவின்பால் கவரப் படுவர்களால் மிகைப்படுத்தப்படும் கருத்து மாறுபாடுகளின் அற்பத் தன்மையை அவர்களால் மட்டுமே தங்களது கவனிக்காது ஒதுக்கித் தள்ளும் குணத்தால் அறுதியிட்டுக் காண்பித்து நிரூபித்து தெளிவாக்க முடியும்.

''என்ன செய்ய வேண்டியதில்லை?'' என்ற கேள்விக்கு (பொதுவாகவே என்ன செய்யக் கூடாது, பிளவை ஏற்படுத்தாமலிருக்க என்ன செய்யக் கூடாது) நான் முதலில் கீழ்கண்டவாறு பதில் அளிப்பேன்: கட்சியில் தோன்றி வளரும் பிளவிற்கான காரணங்களை, இதற்கான சந்தர்ப்பச் சூழ்நிலைகளை, சம்பவங்களை, எதையுமே கட்சியிடமிருந்து மறைக்கக் கூடாது; கட்சியிடமிருந்து மட்டுமின்றி, வெளியேயுள்ள பொதுமக்களிடமிருந்தும் இயன்றவரை மறைக்கக் கூடாது. இரகசியத் தன்மையின் விளைவாக நாம் மறைக்க வேண்டியவற்றைக் கவனத்தில் கொண்டே நான் ''இயன்றவரை'' என்று கூறுகிறேன்—ஆனால் நமது பிளவுகளில் இத்தகைய சந்தர்ப்பச் சூழ்நிலைகள் குறைந்த பங்கே வகிக்கின்றன. வெளிப்படையான தகவல் முறை—இதுதான் தவிர்க்கக் கூடிய பிளவுகளைத் தவிர்ப்பதற்கான மிகச் சரியான, நம்பிக்கையுள்ள ஒரே சாதனம்; ஏற்கெனவே தவிர்க்க இயலாது போன பிளவுகளின் தீமையை முடிந்தவரை குறைப்பதற்கான ஒரே சாதனமும் இதுதான்.

உண்மையிலேயே, கட்சி வெகுஜனங்களுடன் தொடர்பு கொண்டுள்ளதேயன்றி சிறுசிறு வட்டங்களுடன் அல்ல என்ற நிலைமை கட்சியின் மீது சுமத்தக் கூடிய கடமைகளைப் பற்றிச் சிந்தித்து பாருங்கள். வெறும் வார்த்தைகளில் மட்டும் வெகுஜனக் கட்சியாக இல்லாமல் இருக்க, நாம் மேலும் அதிகமான மக்களைக் கட்சிப் பணிகள் அனைத்திலும் பங்கு கொள்ள

கவர்ந்திழுக்க வேண்டும்; அரசியல் அக்கறையின்மை யிலிருந்து எதிர்ப்பிற்கும் போராட்டத்திற்கும், பொதுப் போராட்ட மனப்பான்மையிலிருந்து சமூக-ஜனநாயகக் கண்ணோட்டத்தை சுய உணர்வோடு ஏற்கும் நிலைக்கு, இக்கண்ணோட்டத்தை ஏற்ற நிலையிலிருந்து இயக்கத்தை ஆதரிக்கும் நிலைக்கு, இதிலிருந்து கட்சியில் ஸ்தாபன ரீதியாகப் பங்கேற்கும் நிலைக்கு அவர்களைப் படிப்படியாக உயர்த்தி தொடர்ந்து பாடுபட வேண்டும். காரியத்திற்கு வெளிப்படையான தகவல் முறையைத் தராது இந்த முடிவை அடைய முடியுமா? வெகுஜனங்களின் மீது செலுத்தப்படும் செல்வாக்கு இந்தக் காரியத்தின் தீர்வைப் பொறுத்தே உள்ளது. சிறிய கருத்து வேற்றுமைகளுக்காக பிளவுகள் ஏற்பட்டால் தொழிலாளர்கள் நம்மைப் புரிந்து கொள்வதை நிறுத்தி விட்டு படைவீரர்களற்ற படைக்காரியாலயமாக்கி நம்மை விட்டு அகன்று விடுவார்கள் என்கிருர் ஆசிரியர்; இது முற்றிலும் நியாயமானதே. தொழிலாளர்கள் நம்மைப் புரிந்து கொள்வதை நிறுத்தி விடாமல் இருக்க வேண்டுமானுல், அவர்களது போராட்ட அனுபவமும் பாட்டாளி வர்க்க உணர்வும் ''தலைவர்களாகிய'' நமக்கும் ஏதாவது சிலவற்றை கற்பிக்க வேண்டுமானுல் அதற்கு ஸ்தாபன ரீதியாக ஒன்றுபட்ட தொழிலாளர்கள் பிளவிற்கான காரணங்கள் தோன்றுவதைக் கண்காணிக்கவும் (இத்தகைய காரணங்கள் எப்போதுமே இருந்தன, எந்த ஒரு வெகுஜனக் கட்சியிலும் இவை திரும்பத்திரும்பத் தோன்றும்) இந்தக் காரணங்களை சுய உணர்வோடு அணுகவும் ஏதாவது ஒரு ருஷ்ய அல்லது வெளிநாட்டு பஷெஹோனியே[23] சம்பவங்களைக் கட்சியின் நலன்களை, மொத்தமாக இயக்கத்தின் நலன்களைக் கருத்தில் கொண்டு மதிப்பிடவும் கற்றுக் கொள்வது அவசியம்.

நமது மையத்திற்கு நிறையத் தரப்படும், அதிலிருந்து நிறைய திருப்பிப் பெற வேண்டும் என்பதை ஆசிரியர் வலியுறுத்துகையில் அவர் கூறுவது மும்முறை சரியானதே. இது முற்றிலும் சரி. எனவே, முழுக் கட்சியும் மையத்தில் தனக்கேற்றவர்களை முறையாக, தன்னிச்சையாக, அயராது பயிற்றுவிக்க வேண்டும்; இந்த உயர்ந்த பதவிக்கான வேட்பு உறுப்பினர் ஒவ்வொருவரின் முழு நடவடிக்கைகளையும் தெளிவாகத் தெரிந்து வைத்திருக்க வேண்டும்; அவர்களது தனிப்பட்ட சிறப்பியல்புகளையும் அவர்களது பலத்தையும் பலவீனத்தை

யும், அவர்களது வெற்றிகளையும் ''தோல்விகளையும்'' அறிந்திருக்க வேண்டும். இதைப் போன்ற தோல்விகளுக்கான ஒரு சில காரணங்களைப் பற்றிய மிகச்சிறந்த நுட்பமான குறிப்புக்களை ஆசிரியர் நல்ல அனுபவத்தின் அடிப்படையில் எடுத்துரைக்கின்றார் போலும். இந்தக் குறிப்புக்கள் அவ்வளவு தூரம் நுட்பமானவை என்பதால், இவற்றைக் கட்சி முழுவதும் பயன்படுத்த வேண்டும்; தனது ''தலைவர்'' ஒவ்வொருவரின் ஒவ்வொரு ''தோல்வியையும்'', அது எவ்வளவு சிறியதாக இருந்தாலும், எப்போதும் காண வேண்டும். எந்த ஒரு அரசியல்வாதியும் தோல்விகளின்றி தனது அரசியல் வாழ்வைக் கழித்ததில்லை; வெகுஜனங்களின் மீதான செல்வாக்கைப் பற்றியும் மக்களின் ''நல்லெண்ணத்தைப்'' பெறுவதைப் பற்றியும் நாம் கண்டிப்பாக பேசினால், அதற்கு நாம், இந்த தோல்விகள் குழுக்களில், சிறுவட்டங்களில் தேங்கி மங்கிவிடாமல், இவற்றை அனைவரின் தீர்ப்பிற்காக வெளிக் கொணர இயன்றவரை முயல வேண்டும். முதற் பார்வையில் இது சங்கடமானதாகப்படும், சில சமயங்களில் ஏதாவது ஒரு தனிப்பட்ட தலைவருக்கு இது ''வருத்தம்'' தரும்—ஆனால் இந்த பொய்யான சங்கட உணர்வை நாம் கடந்தாக வேண்டும், இது கட்சியின் முன், தொழிலாளி வர்க்கத்தின் முன் நமது கடமையாகும். இவ்வாறு மட்டுமே (தற்செயலாக வட்டத்தால் அல்லது சிறு குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இல்லாமல்) செல்வாக்குள்ள கட்சித் தொண்டர்கள் அனைவருக்கும் தங்களது தலைவர்களை அறிந்து இவர்களில் ஒவ்வொருவரையும் அவரவர் இடத்தில் வைக்கும் வாய்ப்பை நாம் தருகின்றோம். வெளிப்படையான தகவல் முறை மட்டுமே எல்லா நேரடியான, ஒரு தரப்பான, சிறுபிள்ளைத்தனமான பிறழ்ச்சிகளையும் திருத்துகிறது, அது மட்டுமே சில நேரங்களில் ''குழுக்களின்'' முட்டாள்தனமான, நகைப்பிற்கிடமான மாறுபட்டக் கருத்துக்களை கட்சியின் சுயகல்விக்கான பயனுள்ள அவசியமான பொருளாக மாற்றுகிறது.

நிறைய வெளிச்சம் பரவட்டும்! நமக்கு மிகப்பெரிய இசை நிகழ்ச்சி தேவை; இதில் பாத்திரங்களைச் சரிவர பகிர்ந்தளிக்க, ஒருவருக்கு உணர்ச்சி பூர்வமான வயலினைத் தரவும் மற்றொருவருக்கு இன்னொரு இசைக் கருவியைத் தரவும் மூன்றாமவரிடம் இயக்குநருக்கான குச்சியைத் தரவும் அனுப

வத்தை நாம் பெற வேண்டும். கட்சிப் பத்திரிகையிலும் கட்சியின் எல்லா வெளியீடுகளிலும் சகலவிதமான கருத்துக்களையும் வரவேற்க வேண்டுமென்ற ஆசிரியரின் சிறந்த அறைகூவல் நடைமுறை ரீதியாக நிறைவேறட்டும்; ஒரு சிலரின் கருத்துப்படி கரகரப்பாக எடுக்கப்பட்ட ''சுரத்திற்கான'', மற்றவர்களின் கருத்துப்படி தவறாக எடுக்கப்பட்ட ''சுரத்திற்கான'', இன்னும் சிலரின் கருத்துப்படி பிறழ்ந்து போன ''சுரத்திற்கான'' நம்முடைய ''விவாதங்களையும் வெட்டிப் பேச்சுக்களையும்'' அனைவரும் ஒவ்வொருவரும் எடை போட்டுப் பார்க்கட்டும். இதைப் போன்ற வெளிப்படையான விவாதங்களில் இருந்து மட்டுமே உண்மையான ஒன்றிணைந்த தலைவர்களின் குழு உருவாக முடியும், அப்போதுதான் தொழிலாளர்கள் நம்மைப் புரிந்து கொள்வதை நிறுத்தாமல் இருக்கும் ஒரு நிலையில் வைக்கப்படுவார்கள், அப்போது மட்டுமே நமது ''தலைமையகம்'', அதைப் பின்பற்றிச் செல்லக்கூடிய, அதே சமயம் அதை வழிகாட்டிச் செல்லக் கூடியப் படையின் நல்ல, தன்னிச்சையான உணர்வை உண்மையிலேயே ஆதாரமாகக் கொண்டு இயங்க முடியும்!

**லெனின்**

*இஸ்க்ரா, இதழ் 53,*
*நவம்பர் 25, 1903*

## அ. அ. பக்தானவிற்கும் எஸ். இ. குசெவிற்கும் எழுதிய கடிதத்திலிருந்து

*11. 02. 1905*

வ்பெரியோத்[24] பத்திரிகையுடன் ஒத்துழைக்கும் நபர்கள் தேவை. நம்மிடையே போதுமானவர்கள் இல்லை. ருஷ்யாவிலிருந்து இரண்டு, மூன்று நிலையானவர்களைக் கூடச் சேர்க்காவிட்டால், இஸ்க்ராவுடனான போராட்டத்தைப் பற்றி வெட்டிப் பேச ஒன்றுமேயில்லை. துண்டுப் பிரசுரங்களும் நோட்டீஸ்களும் தேவை. இவையின்றி ஒன்றுமே நடைபெறாது.

இளம் சக்திகள் நமக்குத் தேவை. மக்கள் இல்லை என்று கூறுபவர்களை அந்த இடத்திலேயே நேரடியாக சுட்டு வீழ்த்துமாறு நான் ஆலோசனை கூறுவேன். ருஷ்யாவில் மக்கள் கூட்டம் கூட்டமாக உள்ளனர், பரந்த அளவிலும் தைரியமாகவும், தைரியமாகவும் பரவலாகவும், இன்னமும் பரவலாகவும் இன்னமும் தைரியமாகவும் இளைஞர்களைக் கண்டு அஞ்சாது அவர்களைச் சேர்க்க வேண்டும். இது போர்க் காலம்.[25] மாணவர்கள்தான், அவர்களைக் காட்டிலும் தொழிலாளி இளைஞர்கள்தான் போராட்டத்தின் போக்கைத் தீர்மானிப்பார்கள். அசைவின்மை, பதவிகளை வழிபடுதல் ஆகியவற்றின் எல்லா பழைய பழக்கங்களையும் மற்றவைகளையும் தூக்கியெறியுங்கள். இளைஞர்களைக் கொண்டு நூற்றுக்கணக்கான வ்பெரியோத் பத்திரிகை வட்டங்களை உருவாக்கி அவைகள் முழு மூச்சுடன் பணியாற்ற ஊக்கமளியுங்கள். இளைஞர்களைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் கமிட்டியை மூன்று மடங்கு விரிவுபடுத்துங்கள், ஐந்து அல்லது பத்து உபகமிட்டிகளை ஏற்படுத்துங்கள், எந்த ஒரு நேர்மையான, உற்சாகமான நபரையும் ''சேர்த்துக் கொள்ளுங்கள்''. எந்த வித இடையூறுகளும் இன்றி பிரசுரங்களை எழுதவும் வெளியிடவும் எல்லா உபகமிட்டிகளுக்கும் உரிமையைத் தாருங்கள் (தவறு

ஏற்பட்டால் ஒன்றும் மோசம் போகாது: வ்பெரியோத் பத்திரிகையில் நாம் அதை ''நாசுக்காக'' திருத்துவோம்). புரட்சிகர முன்முயற்சியுள்ள அனைவரையும் மிக்க விரைவாக ஒன்றிணைத்து இயக்கத்தில் ஈடுபடச் செய்ய வேண்டும். அவர்களது தயாரிப்பின்மையைப் பற்றி அஞ்சாதீர்கள், அவர்களது அனுபவமின்மையைக் குறித்தும் வளர்ச்சியின்மையைக் குறித்தும் கவலைப்படாதீர்கள்.* முதலாவதாக, அவர்களை ஒன்றுபடுத்தி ஊக்கமளிக்காது இருந்தால், அவர்கள் மென்ஷிவிக்குகள்[26] பின்னாலும் கபோன்கள்[27] பின்னாலும் செல்வார்கள்; தங்களது அனுபவமின்மையால் ஐந்து மடங்கு அதிகமாக தீங்கிழைப்பார்கள். இரண்டாவதாக, தற்போது நிகழ்ச்சிகள் நமது மனப்பான்மையில் ஒவ்வொருவருக்கும் போதிக்கும். ஒவ்வொருவரையும் ஏற்கெனவே நிகழ்ச்சிகள் வ்பெரியோத் மனப்போக்கில்தான் போதிக்கின்றன.

சாதாரணமான கமிட்டிகளின் (சடங்கு பூர்வமான) முட்டாள்தனங்களை முற்றிலும் பின்னுக்குத் தள்ளி நூற்றுக்கணக்கான குழுக்களை தவறாது உருவாக்க வேண்டும். இது போர்க்காலம். ஒன்று, எல்லாப் பகுதியினரிடையேயும் எல்லாவிதமான, எல்லா ஏகமான புரட்சிகர சமூக-ஜனநாயகப் பணிக்கும் ஏற்ற புதிய, இளமையான, மாசுபடாத, சுறுசுறுப்பான இராணுவ ஸ்தாபனங்களை எல்லா இடங்களிலும் உருவாக்க வேண்டும்; இல்லையேல் நீங்கள் முத்திரைகளுடன் கூடிய ''கமிட்டி'' நபர்களுக்குரிய புகழுடன் மாண்டு போவீர்கள்.

இதைப் பற்றி வ்பெரியோத் பத்திரிகையில் எழுத இருக்கிறேன், காங்கிரசில் பேசப் போகிறேன். கருத்துப் பரிமாற்றங்களை ஏற்படுத்துவதற்காகவும், சுமாராக பத்து புதிய இளம் தொழிலாளர் (மற்றும் இதர) குழுக்கள் பதிப்பகத்தாருடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளுமாறும் செய்ய மீண்டும் மீண்டும் முயலுவதற்காக நான் உங்களுக்கு எழுதுகிறேன்... என்றாலும் நம்மிடையே கூறுவதென்றால், இத்தகைய தைரியமான விருப்பங்கள் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. ''திட்டத்தின்'' குறிப்பிட்ட மாறு

---

* கையெழுத்துப் பிரதியில் இதையடுத்து அடிக்கப்பட்ட பின்வரும் வார்த்தைகள் உள்ளன: ''அவர்கள் இளந்தளிராக இருப்பதைக் கண்டு விம்மாதீர்கள்''.—ப-ர்.

தல்களுக்கு நான் சம்மதிக்கிறேன் என தந்தி மூலம் பதில் அளிக்கும்படி இரு மாதம் கழித்து என்னைக் கோரப் போகின்றீர்களா என்ன?.. எல்லாவற்றுக்கும் சம்மதிக்கிறேன் என்று முன்னரே கூறுகிறேன்...

காங்கிரசில் சந்திக்கும் வரை விடை பெறுகிறேன்.

லெனின்

P.S. வ்பெரியோத் பத்திரிகையை ருஷ்யாவிற்குக் கொண்டு வருவதைப் புரட்சிகரமாக்குவதை லட்சியமாகக் கொள்ள வேண்டும். பெத்ரோகிராதிலிருந்து சந்தா சேகரிப்பை மிகப் பரவலான முறையில் பிரச்சாரம் செய்யுங்கள். மாணவர்களும் குறிப்பாக தொழிலாளர்களும் பத்துக் கணக்கில் மற்றும் நூற்றுக் கணக்கில் தங்களது சொந்த விலாசத்திற்கே சந்தா கட்டட்டும். தற்போதைய நிலைமைகளில் இதற்காக அஞ்சுவது நகைப்பிற்குரியது. எல்லாவற்றையும் கைப்பற்ற போலீசால் எப்போதுமே முடியாது. அரைப் பங்கோ அல்லது மூன்றில் ஒரு பங்கோதான் எட்டும், ஆனால் இதே மிக அதிகம். வெளிநாட்டிற்கு நூற்றுக்கணக்கான வழிகளைக் கண்டுப்பிடிக்கக் கூடிய எந்த ஒரு இளைஞர் குழுவிற்கும் இந்தச் சிந்தனையை அளியுங்கள். இயன்றவரை வ்பெரியோத் பத்திரிகைக்கான கடிதங்களை அனுப்புவதற்காக அதிகமான அளவு விலாசங்களை பரப்புங்கள்.

# ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் மூன்றுவது காங்கிரஸ்

## சமூக-ஜனநாயக ஸ்தாபனங்களில் தொழிலாளர்கள், அறிவுத்துறையினரின் உறவுகளைப் பற்றிய உரை ஏப்ரல் 20 (மே 3), 1905

பிரச்சினையை விரிவுபடுத்துவது பொருந்தாது என்று கூறிய தோழர்களுடன் நான் ஒத்துக் கொள்ள முடியாது. இது முற்றிலும் சரியானதே. சமூக-ஜனநாயகக் கருத்துக் களை ஏற்றுக்கொள்பவர்கள் பெரும்பாலும் அறிவுத்துறை யினரே என்று இங்கு பேசினுர்கள். இது சரியல்ல. ''பொரு ளாதாரவாத''[28] சகாப்தத்தில் புரட்சிகரக் கருத்துக்களைத் தாங்கிச் செல்பவர்கள் தொழிலாளர்களாக இருந்தார்களே யன்றி அறிவுத்துறையினர் அல்ல. தோழர் அக்செல்ரோத்தின் முன்னுரையோடு வெளியிடப்பட்ட சிறு பிரசுரத்தின்[29] ''தொழிலாளி'' என்னும் ஆசிரியரும் இதை உறுதிப்படுத்து கிருர்.

தோழர் செர்கேயெவ், தேர்தல் கோட்பாடு பெரும் வெளிப்படையான தகவல் முறையைத் தராது என்று இங்கு அறுதியிட்டுக் கூறினுர். இது தவருனது. தேர்தல் கோட்பாடு நடைமுறையில் பின்பற்றப்பட்டிருந்தால், இது நிச்சயமாக பெரும் வெளிப்படையான தகவல் முறையைத் தந்திருக் கும். அடுத்து, பிளவுகளின் தலைமையில் சாதாரணமாக அறிவுத்துறையினர்தான் இருந்தார்கள் என்று சுட்டிக் காட்டினுர்கள். இது மிக முக்கியமானது, ஆனுல் இது பிரச் சினையைத் தீர்க்காது. நான் ஏற்கெனவே நீண்ட காலமாக எனது பிரசுரிக்கப்படும் படைப்புக்களில், கமிட்டிகளுக்கு இயன்றவரை அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்களைச் சேர்க்க வேண்டுமென ஆலோசனை கூறி வந்துள்ளேன். இரண் டாவது காங்கிரசிற்குப் பின் இந்தக் கடமை சரிவர நிறை வேற்றப்படவில்லை—இத்தகையதொரு கருத்தை நடைமுறை வாதிகளுடன் நான் நடத்திய உரையாடல்களில் இருந்து இதை வெளிக் கொணர்ந்தேன். சராத்தவ் நகரில் கமிட்டி

யில் ஒரே ஒரு தொழிலாளியைத்தான் சேர்த்துக் கொண்டார்கள் என்றால், தொழிலாளர்கள் மத்தியிலிருந்து தகுந்த நபர்களைத் தேர்ந்தெடுக்க இயலவில்லை என்று பொருள். கட்சியினுள்ளே ஏற்பட்ட பிளவாலும் இது சந்தேகத்திற்கிடமின்றி நிபந்தனை செய்யப்பட்டது. கமிட்டிகளைப் பாதுகாப்பாற்றுவதற்கான போராட்டம் நடைமுறை பணிக்குத் தீங்கிழைத்தது. எனவேதான் காங்கிரசை விரைவாகக் கூட்ட எல்லா வழிகளிலும் முயன்றோம்.

எதிர்கால மையத்தின் கடமை கணிசமான அளவு நமது கமிட்டிகளைத் திருத்தி அமைப்பதாகும். கமிட்டியில் உள்ளவர்களின் செயலாற்றலற்ற நிலைமையை அகற்றுவது அவசியம். (கைதட்டல்கள், எதிர்ப்பு ஆரவாரங்கள்.)

தோழர் செர்கேயெவ் விசிலடிப்பதையும் கமிட்டியில் இல்லாதவர்கள் கைதட்டுவதையும் நான் கேட்கிறேன். காரியத்தைப் பரந்த நோக்கோடு கூர்ந்து பார்க்க வேண்டுமென நான் நினைக்கிறேன். கமிட்டிகளில் தொழிலாளர்களை நுழைப்பது போதனைக் கடமை மட்டுமின்றி, அரசியல் கடமையுமாகும். தொழிலாளர்களிடம் வர்க்கரீதியான இயல்புணர்ச்சி உள்ளது; எனவே மிகக் குறைந்த அரசியல் அனுபவத்துடனேயே ஓரளவு விரைவாக தொழிலாளர்கள் மனவுறுதிமிக்க சமூக-ஜனநாயகவாதிகளாக மாறிவிடுவார்கள். நமது கமிட்டிகளில் ஒவ்வொரு 2 அறிவுத்துறையினருக்கும் 8 தொழிலாளர்கள் இருப்பதை நான் மிகவும் ஆதரிக்கிறேன். நூல்களில் கூறப்பட்ட ஆலோசனை—இயன்றவரை கமிட்டிகளில் தொழிலாளர்களை நுழைப்பது—போதுமானதாக இல்லையென்றால், அத்தகையதொரு ஆலோசனையை காங்கிரசின் சார்பில் கூறுவது சரியானதாயிருக்கும். நீங்கள் காங்கிரசின் தெளிவான, திட்டவட்டமான கட்டளையைப் பெற்றிருந்தால், அப்போது வாய்வீச்சிற்கெதிரான போராட்டத்திற்கான முக்கிய முறை உங்களிடம் இருக்கும்: இதோ இதுதான் காங்கிரசின் தெளிவான சித்தம்.

# இவான் வசிலியெவிச் பாபுஷ்கின்[30]
(இரங்கல் செய்தி)

முக்கியக் கட்சி ஊழியரும் கட்சிக்கு பெருமை தேடித் தந்தவரும் தொழிலாளர் நலன்களுக்குத் தன்னலம் கருதாது தன் வாழ்க்கை முழுவதையுமே அர்ப்பணித்த ஒரு தோழர் மாயமாய் மறைவது போன்ற ஒரு காரியம் சாத்தியமாகக் கூடிய மிக மோசமான சூழ்நிலைகளில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அவருக்கு என்ன நேர்ந்தது என்று அவரது அன்னை, மனைவி மிக நெருங்கியவர்களுக்கும் மிக நெருக்கமான தோழர்களுக்கும் ஆண்டுக்கணக்கில் தெரியாது: எங்கோ கடுங்காவலில் அவர் அவதியுறுகின்றாரா, ஏதாவது ஒரு சிறையில் மாண்டு போனாரா அல்லது பகைவனுடன் நடைபெற்ற கைகலப்பில் வீரமரணம் எய்தினாரா எனத் தெரியாது. ரென்னென்காம்ப்பால்[31] சுடப்பட்ட இவான் வசிலியெவிச்சுடனும் இவ்வாறுதான் நடந்தது. அவரது மரணத்தைப் பற்றி மிகச் சமீபத்தில்தான் நாம் அறிந்தோம்.

இவான் வசிலியெவிச்சின் பெயர் சமூக-ஜனநாயகவாதிகள் பலருக்கு நெருக்கமானதும் அருமையானதும் ஆகும். அவரை அறிந்த அனைவரும் அவரது சுறுசுறுப்பிற்காகவும் அவர் வாய்சொல் வீரராக இல்லாமல் இருந்ததற்காகவும் அவரது ஆழ்ந்த, உறுதியான புரட்சித்தன்மைக்காகவும் இலட்சியத்தின்பால் உள்ள உள்ளார்ந்த விசுவாசத்திற்காகவும் அவரை நேசித்தார்கள், மதித்தார்கள். பீட்டர்ஸ்பர்க் தொழிலாளியாகிய அவர் 1895ஆம் ஆண்டு நேவ்ஸ்கயா வட்டத்தின் அருகே மற்ற வர்க்க உணர்வு நிரம்பிய தோழர்களுடன் சேர்ந்து செம்யான்னிக்கோவ்ஸ்கி, அலெக்சாந்திரவ்ஸ்கி, ஸ்திக்லான்னி தொழிற்சாலைகளின் தொழிலாளர்கள் மத்தியில் சுறுசுறுப்பாக பணியாற்றினர்; குழுக்களை

உருவாக்கினர்; நூலகங்களுக்கு ஏற்பாடு செய்தார்; தானே எந்நேரமும் ஆர்வத்தோடு படித்து வந்தார்.

அவரது சிந்தனைகள் அனைத்தும் செய்யும் வேலைகளை எப்படி விரிவுபடுத்துவது என்பதில் லயித்திருந்தன. செயின்ட்-பீட்டர்ஸ்பர்க்கில் 1894ஆம் ஆண்டு இலையுதிர்க் காலத்தில் செம்யான்னிக்கோவ்ஸ்கி தொழிலாளர்களுக்காக வெளியிடப்பட்ட முதல் பிரச்சார நோட்டீஸின் தயாரிப்பில் அவர் தீவிரப் பங்கேற்று தானுகவே அதை வினியோகித்தார். செயின்ட்-பீட்டர்ஸ்பர்க்கில் ''தொழிலாளி வர்க்க விடுதலைக்கான போராட்டச் சங்கம்'' உருவான போது, இவான் வசிலியெவிச் அதன் தீவிர உறுப்பினர்களில் ஒருவராகி தான் கைதாகும் வரை அதில் பணியாற்றினர். சமூக-ஜனநாயகக் கட்சியின் ஒருமைப்பாட்டிற்கும் உறுதிக்கும் வழிகோலக்கூடிய வகையில் அயல் நாட்டில் அரசியல் பத்திரிகை ஒன்றை துவக்கும் கருத்து, பீட்டர்ஸ்பர்க்கில் அவருடன் பணியாற்றிய அவரது பழைய சகதோழர்களால் —இஸ்க்ரா பத்திரிகையின் ஸ்தாபகர்களால் — அவருடன் விவாதிக்கப்பட்டது; இதற்கு அவரது பரிபூரண சம்மதம் கிடைத்தது. இவான் வசிலியெவிச் சுதந்திரமாக இருக்கும் வரை, இஸ்க்ரா பத்திரிகை, சுத்தமான தொழிலாளர் செய்திகளின் பற்றுக்குறையை உணராது. இஸ்க்ரா பத்திரிகையின் முதல் 20 இதழ்களைப் புரட்டிப் பாருங்கள், இந்தச் செய்திகள் அனைத்தும் ஷுயா, இவானவோ-வொஸ்னிஸேன்ஸ்க், அரேஹவோ-ஸுயெவோ, மத்திய ருஷ்யாவின் இதர இடங்களில் இருந்து வந்தவை: கிட்டத்தட்ட இவையனைத்துமே இஸ்க்ராவிற்கும் தொழிலாளர்களுக்குமிடையே மிக நெருக்கமான தொடர்பை ஏற்படுத்த முயன்ற இவான் வசிலியெவிச்சின் கைகள் மூலம் சென்றன. இவான் வசிலியெவிச் இஸ்க்ரா பத்திரிகையின் மிகச் சுறுசுறுப்பான நிருபராகவும் அதன் இதய பூர்வமான ஆதரவாளராகவும் விளங்கினர். பாபுஷ்கின், மத்தியப் பிரதேசத்திலிருந்து தெற்கேயுள்ள எக்கதெரினஸ்லாவிற்கு குடியேறினர்; அங்கு அவரைக் கைது செய்து அலெக்சாந்திரவ்ஸ்கில் சிறையிலடைத்தனர். ஜன்னல் கம்பியை அறுத்துக் கொண்டு அவர் அலெக்சாந்திரவ்ஸ்கிலிருந்து மற்ருெரு தோழருடன் தப்பித்து ஓடினர். ஒரு அயல்நாட்டு மொழியைக்கூட அறியாத அவர், அப்போது இஸ்க்ரா பத்திரிகை காரியாலயம் இருந்த லண்டனை

வந்தடைந்தார். அங்கு ஏராளமாக பேசப்பட்டது, ஏராள மான பிரச்சினைகளைக் குறித்து கூட்டாக விவாதிக்கப்பட்டது. ஆனால் கட்சியின் இரண்டாவது காங்கிரசில் கலந்துகொள்ள இவான் வசிலியெவிச்சிற்குக் கொடுத்து வைக்கவில்லை...சிறை யும் நாடுகடத்தலும் இவரை நீண்ட காலத்திற்கு குலைத்து விட்டது. உயரக்கிளம்பிய புரட்சி அலை புதிய தொண்டர்களை யும் புதிய கட்சிப் பிரமுகர்களையும் முன்கொணர்ந்தது. அந்த சமயத்தில் பாபுஷ்கின் கட்சி வாழ்க்கையிலிருந்து பிரிக்கப் பட்டு தொலை வடக்கில் வெர்கயான்ஸ்கில் வாழ்ந்து வந்தார். அவர் வெறுமனே பொழுதைக் கழிக்காமல் தொடர்ந்து படித்தார், போராட்டத்திற்கு தயார்படுத்திக் கொண்டார், தொழிலாளர்களுக்கும் நாடுகடத்தப்பட்ட சகதோழர்களுக் கும் அறிவொளியூட்டி அவர்களை வர்க்க உணர்வுள்ள சமூக-ஜனநாயகவாதிகளாகவும் போல்ஷிவிக்குகளாகவும் மாற்ற முயன்றார். 1905ஆம் ஆண்டு பொதுமன்னிப்பு அளிக்கப் பட்டதும் அவர் ருஷ்யாவிற்கு சென்றார். ஆனால் அந்நேரத்தில் சைபீரியாவிலும் போராட்டம் வெடித்துக்கொண்டிருந்ததால், அங்கும் பாபுஷ்கினைப் போன்றோர் தேவைப்பட்டார்கள். இர்குத்ஸ்க் கமிட்டியில் சேர்ந்து முழு மூச்சுடன் வேலையில் ஈடுபட்டார். கூட்டங்களில் பேசவும் சமூக-ஜனநாயக பிரச்சாரம் செய்யவும் கிளர்ச்சியை ஏற்பாடு செய்யவும் வேண்டியிருந்தது. பாபுஷ்கின் ஐந்து மற்ற தோழர்களுடன் சேர்ந்து—அவர்களின் பெயர்கள் நமக்குத் தெரியாது—சித்தா நகரத்துக்குத் தனி ரயில் பெட்டியில் நிறைய ஆயுதங் களை எடுத்துச் சென்றபோது, புகைவண்டி ரென்னேன்காம்ப் பின் தண்டனைப் படையால் பிடிக்கப்பட்டது. அவசரமாகத் தோண்டப்பட்ட சவக்குழியின் முன் அந்த ஆறுபேர்களையும் நிறுத்தி எந்தவித விசாரணையுமின்றி உடனடியாக சுட்டார் கள். அவர்கள் வீரமரணம் எய்தினர். நேரில் கண்ட போர் வீரர்களும் அந்தப் புகைவண்டியிலிருந்த இருப்புப் பாதைத் துறையினரும் அவர்களின் மரணத்தைப் பற்றிக் கூறினர். பாபுஷ்கின் ஜார் மன்னனுடைய கையாளின் கொடூரமான வதைப்பிற்குப் பலியானார், ஆனால் எந்த லட்சியத்திற்கு அவர் தன் வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்தாரோ அந்த லட்சியம் இறவாதது, இதை நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான மற்ற கரங்கள் தொடர்ந்து நிறைவேற்றும், இந்த லட்சியத்திற்காக மற்ற

தோழர்களும் தொழிலாளர்களும் உயிரைத் தியாகம் செய் வார்கள், வெற்றியடையும் வரை அவர்கள் போராடுவார் கள் என்பதெல்லாம் இறக்கும் போது அவருக்குத் தெரி யும்...

* * *

ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி ''அறிவுத்துறையினரின்'' கட்சி, இதிலிருந்து தொழிலாளர் கள் பிரிக்கப்பட்டிருக்கின்றனர், ருஷ்யாவில் தொழிலாளர் கள்—சமூக-ஜனநாயகச் சித்தாந்தமற்ற சமூக-ஜனநாயக வாதிகள், இவ்வாறுதான் குறிப்பாகப் புரட்சிக்கு முன்னல் இருந்தது, கணிசமான அளவில் புரட்சியின் போதுமிருந்தது என்றெல்லாம் கதை கட்டி பரப்புவோர் இருக்கின்ருர்கள். 1905ஆம் ஆண்டு ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலா ளர் கட்சி எந்த வெகுஜனப் புரட்சிப் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்தியதோ, அந்தப் போராட்டத்தின் மேல் உள்ள வெறுப்பால் மிதவாதிகள் இந்தப் பொய்யைப் பரப்புகின்றனர்; சோஷலிஸ்டுகள் மத்தியில் முட்டாள்தனத் தால் அல்லது கவனக் குறைவால் யாரோ ஒரு சிலர் இந்தப் பொய்யான சித்தாந்தத்தை ஏற்றுக் கொள்கின்றனர். இவான் வசீலியெவிச்சின் வாழ்க்கை வரலாறும் இந்தத் தொழிலாளியின், ''இஸ்க்ரா'' பத்திரிகைவாதியின் பத்தாண்டு கால சமூக-ஜனநாயகப் பணியும் மிதவாதிகளின் பொய்க்குத் தெட்டத்தெளிவான மறுப்பாக விளங்குகிறது. புரட்சிக்குப் பத்தாண்டுகளுக்கு முன்னரே தொழிலாளர் சமூக-ஜனநாயக கட்சியை உருவாக்க ஆரம்பித்த முற்போக்குத் தொழி லாளர்களில் இ. வ. பாபுஷ்கின் ஒருவர். பாட்டாளி மக் களிடையே இத்தகைய முற்போக்காளர்களின் அயராத, வீரஞ்செறிந்த உறுதியான பணியின்றி ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி பத்தாண்டுகள் அல்ல, பத்து மாதங்கள் கூட நிலைத்திருந்திருக்காது. இத்தகைய முற் போக்காளர்களின் செயல் நடவடிக்கையின் பயனுகத்தான், அவர்களது ஆதரவின் பயனுகத்தான் மாபெரும் அக்டோபர் மற்றும் டிசம்பர் தினங்களில் பாட்டாளி வர்க்கத்துடன் பிரிக்க இயலாதவாறு ஒன்றிணைந்த கட்சியாக, இந்தத் தொடர்பை இரண்டாவது மட்டுமின்றி, மூன்ருவது கறுப்பு

நூற்றவர் டூமாவில்[32] தொழிலாளர் பிரதிநிதிகள் வாயிலாக தக்கவைத்துக்கொள்ளும் கட்சியாக 1905ஆம் ஆண்டில் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சி வளர்ந்து நின்றது.

சமீபத்தில் இறந்து போன முதல் டூமாவின் தலைவர் எஸ். ஏ. மூரம்த்செவை மக்கள் வீரனாக மாற்ற மிதவாதிகள் (காடேட்டுகள்)[33] விரும்புகின்றனர். மூரம்த்செவ் போன்ற மிதமான, சாதுவான அலுவலர்களைக் கூட துன்புறுத்திய ஜார் அரசாங்கத்திற்கு எதிரான அதிருப்தியையும் வெறுப்பையும் வெளியிடக் கிடைக்கும் சந்தர்ப்பத்தைச் சமூக-ஜனநாயகவாதிகளான நாம் நழுவ விடக் கூடாது. மூரம்த்செவ் வெறும் மிதவாத அலுவலராக மட்டுமே இருந்தார். அவர் ஜனநாயகவாதியாகக் கூட இருக்கவில்லை. அவர் வெகுஜனங்களின் புரட்சிப் போராட்டத்தைக் கண்டு அஞ்சினார். ருஷ்யாவிற்கு விடுதலை இத்தகைய போராட்டத்திலிருந்து கிடைக்குமென அவர் காத்திருக்கவில்லை; மாறாக எதேச்சாதிகார ஜார் வம்சத்தினரின் நல்லெண்ணத்தாலும் ருஷ்ய மக்களின் மிகக் கொடிய, ஈவிரக்கமற்ற இந்த எதிரியுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்திலிருந்தும் கிடைக்குமென காத்திருந்தார். ருஷ்யப் புரட்சியின் வீரர்களை இத்தகையவர்கள் மத்தியில் பார்ப்பது சிரிப்பிற்கிடமளிக்கக் கூடியது.

ஆனால் இத்தகைய மக்கள் வீரர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் பாபுஷ்கினைப் போன்ற மக்கள். அவர்கள் ஓராண்டு, ஈராண்டல்ல, புரட்சிக்கு பத்து ஆண்டுகட்கு முன்னரே, தொழிலாளி வர்க்க விடுதலைக்கான போராட்டத்திற்குத் தங்களை முற்றிலுமாக அர்ப்பணித்துக் கொண்டவர்கள். அவர்கள், பயனற்ற பயங்கரவாத நடவடிக்கைகளில் தனியேயிருந்து வீணாக்காது, பாட்டாளி வர்க்க மக்களிடையே உறுதியாக, இடையறாது பணியாற்றி அவர்களது வர்க்க உணர்வையும் அவர்களது ஸ்தாபன அமைப்பையும் அவர்களது புரட்சிக் கலையையும் வளர்க்க உதவி புரியும் மக்கள். அவர்கள், நெருக்கடி தோன்றியபோது, புரட்சி வெடித்த போது, லட்சக்கணக்கானோர் இயங்க ஆரம்பித்தபோது ஜார் எதேச்சாதிகாரத்திற்கு எதிரான ஆயுதந்தாங்கிய வெகுஜனப் போராட்டத்தின் தலைமையில் இருந்தவர்கள். ஜார் எதேச்சாதிகாரத்திடமிருந்து வென்று பெறப்பட்ட அனைத்துமே பாபுஷ்கின் போன்ற மக்கள் தலைமை தாங்கி நடத்திய வெகு

ஜனப் போராட்டத்தின் மூலமாக மட்டுமே வெல்லப்பட்டது.

இத்தகைய மனிதர்கள் இன்றி ருஷ்ய மக்கள் எப்போதுமே அடிமைகளாக, கொத்தடிமைகளாகத்தான் இருந்திருப்பார்கள். இத்தகைய மனிதர்கள் இருக்கையில் ருஷ்ய மக்கள் எல்லாவித சுரண்டலில் இருந்ததும் முழு விடுதலையை வெல்வார்கள்.

1905ஆம் ஆண்டு டிசம்பர் எழுச்சி[34] நடைபெற்றதன் ஐந்தாவது ஆண்டு நிறைவு கடந்து விட்டது. எதிரியுடனை போராட்டத்தில் மாண்டு போன முற்போக்குத் தொழிலாளர்களை நினைவு கூர்ந்து இந்த ஆண்டு நிறைவைக் கொண்டாடுவோம். அந்தப் போராட்டத்தைப் பற்றிய நினைவுக் குறிப்புக்களையும் பாபுஷ்கினைப் பற்றிய கூடுதல் விவரங்களையும் 1905ஆம் ஆண்டு கிளர்ச்சியில் உயிர் நீத்த மற்ற சமூக-ஜனநாயக தொழிலாளர்களைப் பற்றிய விவரங்களையும் சேகரித்து அனுப்புமாறு தொழிலாளர் தோழர்களுக்கு நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம். இத்தகைய தொழிலாளர்களின் வாழ்க்கையை விவரித்து சிறு நூலை வெளியிடத் திட்டமிட்டுள்ளோம். ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியைச் சந்தேகிக்கும், தாழ்த்தும் எவருக்கும் இந் நூல் சிறந்த பதிலாக இருக்கும். இத்தகைய நூல் இளம் தொழிலாளர்களுக்கு வாசிப்பதற்கு சிறந்ததாக இருக்கும், வர்க்க உணர்வுள்ள ஒவ்வொரு தொழிலாளியும் எப்படி வாழ வேண்டும், எப்படி செயலாற்ற வேண்டும் என்பதை அதன் மூலம் அவர்கள் படித்து அறிவார்கள்.

ரபோச்சயா கஸேத்தா, இதழ் 2,
*டிசம்பர் 18(31), 1910*

## சோஷலிசமும் போரும்
### என்ற துண்டுப் பிரசுரத்திலிருந்து

## அத்தியாயம் 2. ருஷ்யாவில் வர்க்கங்களும் கட்சிகளும்

### அரசாங்க டூமாவில் உள்ள ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் பிரிவும் போரும்

1913ஆம் ஆண்டு அரசாங்க டூமாவில் இருந்த சமூக-ஜனநாயக பிரதிநிதிகளிடையே பிளவு ஏற்பட்டது. ஒரு புறம் செஹெயித்ஸே தலைமையில் 7 சந்தர்ப்பவாதப் போக்கின் ஆதரவாளர்கள் இருந்தனர். அவர்கள், 2,14,000 தொழிலாளர்கள் இருந்த 7 பாட்டாளி வர்க்கமில்லாத மாகாணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மறு புறம்—6 பிரதிநிதிகள், அனைவரும், 10,08,000 தொழிலாளர்களை உள்ளடக்கிய, ருஷ்யாவின் தொழிற்துறை ரீதியாக அதிக வளர்ச்சியடைந்த மையங்களில் உள்ள தொழிலாளர் தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

புரட்சிகர மார்க்சிய நடைமுறைத் தந்திரமா அல்லது சந்தர்ப்பவாத சீர்திருத்தவாத நடைமுறைத் தந்திரமா என்பதே கருத்து வேறுபாட்டிற்கான முக்கியக் காரணமாக இருந்தது. நடைமுறையில் கருத்து மாறுபாடு எல்லாவற்றையும் விட அதிகமாக வெகுஜனங்களிடையே பாராளுமன்றத்திற்கு வெளியே நடத்தப்படும் பணியைத்தான் பாதித்தது. இப்பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் புரட்சி மண்ணில் இருக்க வேண்டுமென விரும்பினால், இதை ருஷ்யாவில் சட்டவிரோதமாகத்தான் செய்ய வேண்டியிருந்தது. சட்டத்திற்குப் புறம்பான பணியை மறுத்த கலைப்புவாதிகளின்[35] நம்பிக்கைமிக்க கூட்டாளியாக செஹெயித்ஸேயின் பிரிவு இருந்து தொழிலாளர்களுடனான எல்லாக் கலந்துரையாடல்களிலும் எல்லாக் கூட்டங்களிலும் அவர்களை ஆதரித்தது. இதிலிருந்து பிளவு ஏற்பட்டது. 6 பிரதிநிதிகள் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் பிரிவை ஏற்படுத்தினர். மிகப் பெரும்

பான்மையான ருஷ்யத் தொழிலாளர்கள் இதன் பின்னர்தான் நிற்கின்றனர் என்பதை மறுக்க இயலாதவாறு ஓராண்டுப் பணி காட்டுகிறது.

போரின் ஆரம்பத்தில் கருத்து மாறுபாடு அசாதாரண மான தெளிவுடன் தென்பட்டது. செஹெயித்ஸேயின் பிரிவு பாராளுமன்றத்துடன் தன்னை மட்டுப்படுத்திக் கொண்டது. கடன்களுக்காக அது வாக்களிக்கவில்லை, இல்லாவிடில் அது தனக்கு எதிராக தொழிலாளர் தரப்பில் இருந்து எதிர்ப்பலை யைத் தோற்றுவித்திருக்கும். (ருஷ்யாவில் குட்டி முதலாளித் துவ உழைப்புவாதிகள்[36] கூட கடன்களுக்காக வாக்களிக்க வில்லை என்பதை நாம் கண்டோம்.) ஆனல் அது சமூக-தேசிய வெறிக்கு எதிராகவும் எதிர்ப்பை எடுத்துச் செல்லவில்லை.

நமது கட்சியின் அரசியல் கொள்கையைப் பிரதிபலித்த ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் பிரிவு வேறு விதமாக செயல்பட்டது. போர் எதிர்ப்புடன் இப்பிரிவு தொழிலாளர் வர்க்கத்தின் உள்ளே ஊடுருவிச் சென்றது, ஏகாதிபத்தியத்திற்கு எதிரான பிரச்சாரத்தைப் பரந்த ருஷ்ய பாட்டாளி வர்க்கத்திற்கு எடுத்துச் சென்றது.

இப்பிரிவு தொழிலாளர் தரப்பிலிருந்து மிக அனுதாப மான ஆதரவைப் பெற்றது—இது அரசாங்கத்தை அச் சுறுத்தி, சொந்த சட்டதிட்டங்களையே தெளிவாக மீறி நமது தோழர்களான பிரதிநிதிகளைக் கைது செய்து ஆயுள் தண்டனைக்காக சைபீரியாவிற்கு அனுப்பும் படி செய்ய அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்தியது.[37] நமது தோழர்கள் கைது செய்யப்பட்டதைப் பற்றிய முதல் அதிகார பூர்வமான அறிவிப்பிலேயே ஜார் அரசாங்கம் பின்வருமாறு எழுதியது:

''இந்த விஷயத்தில் சமூக-ஜனநாயக அமைப்புகளைச் சேர்ந்த ஒரு சில உறுப்பினர்கள் முற்றிலும் விசேஷமான நிலையை மேற்கொண்டுள்ளார்கள்; இவர்கள் போருக்கெதி ரான கிளர்ச்சியின் மூலமும் தலைமறைவான அறைகூவல் களின் உதவியாலும் வாய் மொழிப் பிரச்சாரத்தின் மூலமும் ருஷ்யாவின் இராணுவ வன்மையை நிலைகுலைக்கச் செய்வதைத் தங்களது செயற்பாட்டின் நோக்கமாகக் கொண்டுள்ளனர்.''

ஜாருக்கு எதிரான போராட்டத்தை ''தற்காலிகமாக'' நிறுத்த வேண்டும் என்ற வண்டர்வேல்டேயின்[38] பிரபல

அறைகூவலுக்கு—அவர் இந்த அறைகூவலைத் தனியாகத் தயாரிக்கவில்லை, மாறாக ஜாரின் தூதரோடு கூட்டாகவே தயாரித்தார் என்பது பெல்ஜியத்திற்கான ஜாரின் தூதுவரான குடாஷெவ் பிரபுவின் சாட்சியத்திலிருந்து இப்போது தெரிகிறது—நமது கட்சி மட்டுமே, அதன் மத்தியக் கமிட்டியின் மூலம் எதிர்மறை பதிலைத் தந்தது. கலைப்புவாதிகளின் தலைமை மையம் வண்டர்வேல்டேயுடன் ஒத்துக் கொண்டு அது ''தனது செயற்பாட்டில் போருக்கு எதிராக இல்லை'' என்று அதிகார பூர்வமாக பத்திரிகையில் அறிவித்தது.

வண்டர்வேல்டேக்கான இந்த எதிர்மறை பதிலைத் தொழிலாளர்கள் மத்தியில் பிரச்சாரம் செய்தார்கள் என்றுதான் நமது தோழர்களான பிரதிநிதிகளை எல்லாவற்றிற்கும் மேலாக ஜார் அரசாங்கம் குற்றம் சாட்டியது.

ஜார் அரசு வழக்கறிஞர் திரு. நெநரோகமொவ் வழக்கு விசாரணையின் போது நமது தோழர்களுக்கு ஜெர்மானிய மற்றும் பிரெஞ்சு சோஷலிஸ்டுகளை மாதிரியாகக் காட்டினர். ''ஜெர்மானிய சமூக-ஜனநாயகவாதிகள் இராணுவ கடன்களுக்காக வாக்களித்து அரசாங்கத்தின் நண்பர்களானார்கள் என்றார் அவர். ஜெர்மானிய சமூக-ஜனநாயகவாதிகள் இவ்வாறு செயல்பட்டனர், ஆனால் ருஷ்ய சமூக-ஜனநாயகத்தின் இரங்கத்தக்க வீரர்கள் இவ்வாறு செய்யவில்லை... பெல்ஜியத்தின், பிரான்சின் சோஷலிஸ்டுகள் மற்ற வர்க்கங்களுடன் தங்களுக்குள்ள சச்சரவுகளை ஒற்றுமையாக மறந்து கட்சித் தகராறுகளை மறந்து ஊசலாட்டமின்றி கொடியின் கீழ் நின்றனர்.'' ஆனால் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் பிரிவின் உறுப்பினர்கள், கட்சி மத்தியக் கமிட்டியின் கட்டளைகளுக்குக் கீழ்ப்பட்டு அவ்வாறு நடக்கவில்லையே...

பாட்டாளி வர்க்க வெகுஜனங்களிடையே போருக்கு எதிராக நமது கட்சி நடத்திய பரந்த சட்டவிரோதமான கிளர்ச்சியின் பிரமிக்கத்தக்கக் காட்சியை நீதிமன்றம் கட்டவிழ்த்தது. இந்தத் துறையில் நமது தோழர்களின் நடவடிக்கை முழுவதையும் ''கண்டுபிடிக்க'' ஜார் நீதிமன்றத்தால் இயலவில்லை என்பது சொல்லாமலேயே விளங்கும். ஆனாலும் கண்டுபிடிக்கப்பட்டவை, மிகக் குறைந்த காலமான ஒரு சில மாதங்களுக்குள்ளாகவே எவ்வளவு அதிகமாகச் செய்யப்பட்டுள்ளது என்பதைக் காண்பித்தன.

போருக்கு எதிராகவும் சர்வதேச நடைமுறை தந்திரத்திற்காகவும் நமது குழுக்களும் கமிட்டிகளும் வெளியிட்ட சட்டவிரோதமான அறைகூவல்கள் நீதிமன்றத்தில் படிக்கப் பட்டன. ருஷ்யா முழுவதும் உள்ள வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்களிடமிருந்து உறவு இழை ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் பிரிவின் உறுப்பினர்களை நாடியது; இப்பிரிவு மார்க்சியக் கண்ணோட்டத்தோடு போரை மதிப்பிட அவர்களுக்கு உதவ இயன்ற வரை முயன்றது.

ஹார்க்கவ் மாகாண தொழிலாளர் பிரதிநிதி தோழர் முரானவ் நீதிமன்றத்தில் பின்வருமாறு பேசினர்:

''டூமாவின் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டிருப்பதற்காக அரசாங்க டூமாவிற்கு மக்களால் நான் அனுப்பப்படவில்லை என்பதைப் புரிந்துகொண்டு தொழிலாளர் வர்க்கத்தின் மனநிலையை அறிய நான் அந்தந்த இடங்களுக்குச் சென்றேன்.'' நமது கட்சியின் சட்டவிரோதமான கிளர்ச்சியாளர் பணியை தான் ஏற்றுக் கொண்டதாகவும் யூராலில் வேர்ஹ்னெயிசேத்ஸ்க் தொழிற்சாலையிலும் மற்ற இடங்களிலும் தொழிலாளர் கமிட்டிகளை ஏற்படுத்தியதாகவும் அவர் நீதிமன்றத்தில் ஒத்துக் கொண்டார். ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் பிரிவின் உறுப்பினர்கள் போர் துவங்கிய பின் பிரச்சார நோக்கத்திற்காக கிட்டத்தட்ட ருஷ்யா முழுவதையும் சுற்றி வந்தனர் என்றும் முரானவ், பெத்ரோவ்ஸ்கி, படாயெவ் மற்றவர்கள் ஏராளமான தொழிலாளர் கூட்டங்களை ஏற்பாடு செய்து அவற்றில் போருக்கு எதிரான தீர்மானங்களைக் கொணர்ந்தனர் என்றும் இது போன்ற பல காரியங்களில் ஈடுபட்டனர் என்றும் நீதிமன்றம் சுட்டிக் காட்டியது.

குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு மரணத் தண்டனை அளிக்கப் போவதாக ஜார் அரசாங்கம் அச்சுறுத்தியது. இதனால் அவர்கள் அனைவரும் நீதிமன்ற விசாரணையில் தோழர் முரானவ் மாதிரி ஆண்மையுடன் பேசவில்லை. கண்டனைத் தீர்ப்பை வழங்குவதை ஜார் அரசு வழக்கறிஞர் தனுக்குக் கடினமாக்க அவர்கள் முயன்றனர். பிரச்சினையின் உள்ளடக்கத்தை மறைக்க ருஷ்ய சமூக-தேசியவெறியர்கள் இப்போது இதைத் தகுதியின்றி பயன்படுத்துகின்றனர்: எந்தவித பாராளுமன்றவாதம் தொழிலாளர் வர்க்கத்திற்குத் தேவை?

பாராளுமன்றவாதத்தை ஜீயுடேகுமும் ஹேய்னெயும், சம்பாவும் வல்யானும், பிஸ்ஸோலாதியும் முஸ்ஸோலினியும், செஹெயித்ஸேவும் பிளெஹானவும்[39] ஆதரிக்கின்றனர். ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் பிரிவைச் சேர்ந்த நமது தோழர்களும் தேசியவெறியினரிடமிருந்து விலகிக் கொண்ட பல்கேரிய, இத்தாலிய தோழர்களும் பாராளுமன்றவாதத்தை ஆதரிக்கின்றனர். பாராளுமன்ற வாதம் பாராளுமன்றவாதத்துக்குப் பேதமாக உள்ளது. ஒரு சிலர் பாராளுமன்ற அரங்கை, தங்களது அரசாங்கத்திற்கு சேவை செய்வதற்காகவும் அல்லது மிக அதிகமாகப் போனால், செஹெயித்ஸேயின் பிரிவைப் போல் கையைக் கழுவுவதற் காகவும் பயன்படுத்துகின்றனர். மற்றவர்கள், இறுதி வரை புரட்சிவீரர்களாக இருக்கவும் மிக சோதனையான சூழ்நிலை களிலும் சோஷலிஸ்டுகளாகவும் சர்வதேசியவாதிகளாகவும் தங்களது கடமையை நிறைவேற்றுவதற்காகவும் பாராளு மன்றவாதத்தைப் பயன்படுத்துகின்றனர். ஒரு சிலரின் பாராளுமன்ற நடவடிக்கை அவர்களை அமைச்சர் பதவி களுக்கு இட்டுச் செல்கிறது, மற்றவர்களின் பாராளுமன்ற நடவடிக்கை அவர்களைச் சிறைக்கும் நாடுகடத்தலுக்கும் கடுங்காவலுக்கும் அனுப்புகிறது. ஒரு சிலர் முதலாளிகளுக்கும் மறு சிலர் பாட்டாளிகளுக்கும் சேவை செய்கின்றனர். ஒரு சிலர் சமூக-ஏகாதிபத்தியவாதிகள், மறு சிலர் புரட்சிகர மார்க்சியவாதிகள்.

*1915ல் ஜூலை — ஆகஸ்டில்*
*எழுதப்பட்டது*

## போல்ஷிவிக்குகள் நீடித்து அரசாள முடியுமா?

### என்னும் கட்டுரையிலிருந்து

...பாட்டாளி வர்க்கம் அரசாங்க இயந்திரத்தை இயக்கிச் செல்ல முடியாது என்று கூறப்படுகிறது.

1905 புரட்சிக்குப் பிறகு 1,30,000 நிலப்பிரபுக்கள் ருஷ்யாவில் ஆட்சி செலுத்தினர். 15 கோடி மக்களின் மீது முடிவற்ற பலாத்காரச் செயல்களைப் புரிந்தும் அம்மக்களை எல்லையற்ற அவமானத்திற்கு உட்படுத்தியும் மிகப் பெரும் பான்மை மக்களை மிகக் கடுமையான உழைப்பிற்கு அடிமைப் படுத்தியும் அரைப் பட்டினி நிலைக்கு விரட்டியும் அவர்கள் ஆட்சி செலுத்தினர்.

அவ்வாறிருந்தும், 2,40,000 உறுப்பினர் கொண்ட போல் ஷிவிக் கட்சி ஏழை மக்களின் நலன் கருதி பணக்காரர்களுக்கு எதிராக ருஷ்யாவில் ஆட்சி செலுத்த முடியாது என்று கூறப் படுகிறது. இந்த 2,40,000 பேருக்கும் வயது வந்த மக்கள் தொகையில் பத்து லட்சம் வாக்குகளுக்கு குறையாத ஆதரவு ஏற்கெனவே கிடைத்திருக்கிறது. இதுதான் கட்சி உறுப்பினர் தொகைக்கும் கட்சிக்குக் கிடைத்த ஓட்டுத் தொகைக்கும் உள்ள விகிதாச்சாரமாகும். ஐரோப்பாவின் அனுபவத்தைக் கொண்டு இந்த விகிதாச்சாரம் அமைக்கப்பட்டுள்ளது, ருஷ்யாவின் அனுபவமும் அதைத்தான் அமைத்துள்ளது. உதாரணமாக, சென்ற ஆகஸ்ட் மாதத்தில் நடந்த பெத் ரோகிராத் டூமா தேர்தல்கள் இந்த விகிதாச்சாரத்தைக் காட்டுகின்றன. ஒவ்வொரு மாதமும் 20ம் தேதியன்று கிடைக்கும் கொழுத்த சம்பளத்துக்காக அல்லாமல் தங் களுடைய இலட்சியங்களுக்காக சோஷலிஸ்டு அரசாங்கத் துக்கு விசுவாசம் பாராட்டுகிற பத்து லட்சம் மக்களைக் கொண்ட ''அரசாங்க இயந்திரம்'' நமக்கு ஏற்கெனவே இருக்கிறது.

அது மட்டுமல்ல. நமது அரசாங்க இயந்திரத்தை

உடனடியாகப் பத்து மடங்கு பெரிதாக்கிக் கொள்ளும் ''மந்திர சாதனமும்'' நமக்கு இருக்கிறது. எந்த முதலாளித்துவ அரசுக்கும் இந்தச் சாதனம் இருந்தது கிடையாது, இருக்கவும் முடியாது. உழைப்பாளிகளை, ஏழை மக்களை அரசு நிர்வாகத்தின் அன்றாட வேலைகளில் ஈடுபடுத்துவதே இந்த மந்திர சாதனமாகும்.

இந்த மந்திர சாதனத்தை உபயோகிப்பது எவ்வளவு எளிது என்பதையும் எவ்வளவு பிசகின்றி அது வேலை செய்யும் என்பதையும் விளக்குவதற்குக் கூடியவரை மிகத் தெளிவான, எளிய உதாரணத்தை எடுத்துக்கொள்வோம்.

அரசு, வீட்டிலிருந்து ஒரு குடும்பத்தைக் கட்டாயப் படுத்தி வெளியேற்றி இன்னொரு குடும்பத்தை அங்கே குடியமர்த்த வேண்டியிருக்கிறது. முதலாளித்துவ அரசு அடிக்கடி இவ்வாறு செய்கிறது. நமது பாட்டாளி வர்க்க அல்லது சோஷலிஸ்டு அரசும் இவ்வாறு செய்யும்.

முதலாளித்துவ அரசு, சம்பாதிக்கிறவனை இழந்து விட்ட காரணத்தால் வீட்டு வாடகை செலுத்தத் தவறி விட்ட ஒரு தொழிலாளர் குடும்பத்தை வீட்டை விட்டு வெளியேற்றுகிறது. போலீஸ் அல்லது மிலீஷியாவுடன், ஒரு முழுப் பட்டாளத்துடன் அமீனு வந்து சேருகிறுன். தொழிலாளர் வாழும் வட்டாரத்தில் யாரையாவது வெளியேற்றம் செய்வதற்கு ஒரு கஸக் இராணுவப் பிரிவே தேவைப்படுகிறது. ஏன்? ஏனென்றுல் அமீனுவோ அல்லது ''மிலீஷியாக்காரர்களோ'' மிகப் பெரிய இராணுவப் படையின் பாதுகாப்பின்றி அங்கே போவதற்குச் சம்மதிப்பதில்லை. மக்களை வெளியேற்றும் காட்சி பக்கத்தில் குடியிருப்பவர்களிடையே, புகலற்ற நிலையில் தவித்துக் கொண்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான மக்களிடையே கடுஞ்சீற்றத்தையும் முதலாளிகள் மீதும் முதலாளித்துவ அரசின் மீதும் கொடிய வெறுப்பையும் கிளப்பிவிடுகிறது. ஆகவே, அமீனுவும் மிலீஷியாக்காரர்களும் எந்த நிமிடத்திலும் பொது மக்களால் தலைவேறு கால்வேருகப் பிய்த்தெறியப்படும் அபாயத்தில் இருக்கிருர்கள் என்று அவர்களுக்குத் தெரியும். பெரிய இராணுவப் படைகள் தேவைப்படுகின்றன. நகரமாயிருந்தால் சில ரெஜிமெண்டுகள் தேவையாகின்றன. அந்த ரெஜிமெண்டுகளும் தொலைவில் தள்ளியிருக்கிற பிரதேசங்களிலிருந்துதான் கொண்டு வரப்பட வேண்டும். அதன் காரணம் என்னவென்றுல், நகர்ப்

புறத்து ஏழை மக்களின் வாழ்க்கை இராணுவத்தினருக்கு அறிமுகமில்லாததாய் இருக்க வேண்டும், அப்போர்வீரர்களை சோஷலிசம் ''தொற்றிக்கொள்ளக்'' கூடாது.

பாட்டாளி வர்க்க அரசு மிகக் கஷ்ட நிலையில் உள்ள ஒரு குடும்பத்தைப் பணக்காரனுடைய வீட்டில் கட்டாயப் படுத்திக் குடியமர்த்த வேண்டும் என்று வைத்துக் கொள் வோம். நமது தொழிலாளர் மிலீஷியாப் படையில் பதினைந்து பேர்கள் இருப்பதாக வைத்துக்கொள்வோம்: இரண்டு மாலுமிகள், இரண்டு போர்வீரர்கள், வர்க்க உணர் வுள்ள இரண்டு தொழிலாளர்கள் (அவர்களில் ஒருவன் மட் டும் நமது கட்சியைச் சேர்ந்தவனாக அல்லது அதன் அனுதா பியாக இருப்பதாக வைத்துக்கொள்வோம்), ஓர் படிப்பா ளர், ஏழை உழைப்பாளிகள் எட்டுப் பேர்—அவர்களில் குறைந்த பட்சம் ஐவர் பெண்கள், வீட்டு வேலைக்காரி கள், தேர்ச்சியில்லாத தொழிலாளர்கள், முதலியோர். இப்படை பணக்காரனுடைய மனைக்கு வந்து சேருகிறது; பார்வையிடுகிறது. அதில் இரண்டு ஆண்களும் இரண்டு பெண்களும் வசித்துவருகிற ஐந்து அறைகள் இருக் கின்றன என்பதைக் கண்டு கொள்கிறது. ''ஐயா, இந்தக் குளிர்காலத்திற்கு நீங்கள் இரண்டு அறைகளுக்குள் நெருக்கி வசித்துக்கொண்டு இப்போது நிலவறைகளில் வசித்து வரும் இரண்டு குடும்பங்களுக்கு மற்ற இரண்டு அறைகளைக் காலி செய்து கொடுக்க வேண்டும். எஞ்சினீயர்களின் உதவியால் (நீங்களும் ஓர் எஞ்சினீயர்தானே?) எல்லோருக்கும் நல்ல வீடுகள் கட்டித் தரும் வரையில் நீங்கள் சிறிது நெருக்கிக் கொண்டுதான் வசித்து வர வேண்டும். உங்களுடைய டெலி போனைப் பத்து குடும்பங்கள் உபயோகிக்கும். கடைக்கு ஓடி சாமான்கள் வாங்கி வருவது போன்ற சில்லறைக் காரியங் களுக்குச் செலவாகும் நேரத்தில் இது நூறு மணி வேலை நேரத்தை மிச்சமாக்கிக் கொடுக்கும். மேலும், உங்களுடைய குடும்பத்தில் எளிய வேலை செய்யக்கூடிய இருவர்— ஐம் பத்து ஐந்து வயது மாதும் பதினான்கு வயதுப் பையனும்— இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலையில்லை, ஆனால் ஏதா கிலும் இலேசமான வேலை செய்யலாம். இருவரும் நாளொன்றுக்கு மூன்று மணி நேரம் வேலை பார்த்து இந்தப் பத்து குடும்பங்களுக்கும் உணவுப் பண்டங்கள் வினியோ கம் சரியாக நடக்கிறதா என்று மேற்பார்வை செய்து

அதற்குச் சரியான கணக்குகள் வைத்துக் கொள்ள வேண்டும். எங்கள் படையிலுள்ள மாணவர் இப்பொழுதே இந்த அரசு உத்தரவின் இரண்டு பிரதிகளை எழுதிக் கொடுப்பார். சரியாக அதன்படி நடந்து வருவோம் என்று உறுதிச் சீட்டு தயை செய்து எழுதிக் கையொப்பமிட்டு எங்களிடம் தருவீர்களாக.''

பழைய பூர்ஷ்வா அரசு இயந்திரம், அரசு நிர்வாகம் ஆகியவற்றுக்கும் புதிய சோஷலிஸ்டு அரசு இயந்திரம், அரசு நிர்வாகம் ஆகிய இரண்டுக்கும் இடையிலுள்ள ஒப்புநிலையைத் தெளிவான உதாரணங்களால் நன்கு எடுத்துக்காட்ட முடியும் என்பது என் அபிப்பிராயம்.

நாம் கற்பனாவாதிகள் அல்ல. ஒவ்வொரு தேர்ச்சியில்லாத தொழிலாளியும் சமையற்காரியும் உடனடியாக அரசு நிர்வாக வேலையை மேற்கொள்ள முடியாது என்பது நமக்குத் தெரியும். இவ்விஷயத்தில் நாம் காடேட்டுகள், பிரெஷ்கோவ்ஸ்கயா, தெஸெரெத்தேலி[10] ஆகியோர் கூறுவதை ஒப்புக்கொள்கிறோம். ஆனால் பணக்காரர்களோ, பணக்காரக் குடும்பங்களிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட அலுவலர்களோதான் அரசை நிர்வகிக்க, நிர்வாகத்தின் சாதாரணமான அன்றாட வேலையைப் பார்க்கத் திறனுள்ளவர்கள் என்ற குருட்டு நம்பிக்கையை உடனடியாகக் கைவிட வேண்டும் என்று நாம் கோருகிறோம். அதில் தான் நமக்கும் மேற்கூறிய கனவான்களுக்கும் வித்தியாசம் உள்ளது. வர்க்க உணர்வுள்ள தொழிலாளிகளும் படையாளிகளும் அரசு நிர்வாக வேலைக்குப் பயிற்சி அளிக்க வேண்டும், அதை உடனடியாகத் தொடங்க வேண்டும், அதாவது எல்லா உழைப்பாளி மக்களையும் எல்லா ஏழை மக்களையும் இந்த வேலைக்காகப் பயிற்றுவிப்பதை உடனடியாகத் தொடங்க வேண்டும் என்று நாம் கோருகிறோம்.

காடேட்டுகளுங்கூட மக்களுக்கு ஜனநாயக முறையைப் போதிக்கத் தயாராயிருக்கின்றனர் என்பதை நாம் அறிவோம். காடேட்டுச் சீமாட்டிகள் சிறந்த ஆங்கில, பிரெஞ்சு ஆதாரங்களுக்கிணங்க பெண்களுக்குச் சம உரிமைகள் வேண்டும் என்பது பற்றி வீட்டு வேலைக்காரிகளிடையே சொற்பொழிவாற்றத் தயாராயிருக்கின்றனர். அடுத்தாற் போல வரும் சங்கீதக் கூட்டத்தில், ஆயிரக்கணக்கான மக்களின் முன்னிலையில், மேடைமீது முத்தங்கள் பரிமாறுதல் ஏற்பாடு

செய்யப்படும்: சொற்பொழிவாற்றிய காடேட்டுச் சிமாட்டி பிரெஷ்கோவ்ஸ்கயாவை முத்தமிடுவாள், பிரெஷ்கோவ்ஸ்கயா மாஜிமந்திரி தெஸெரெத்தேலியை முத்தமிடுவாள்; இப்படியாகத்தானே குடியாட்சியின் சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் பற்றி ஓர் உதாரணபூர்வமான படிப்பினையை நன்றியுள்ள மக்கள் பெறுகிருர்கள்...

ஆமாம், காடேட்டுகள், பிரெஷ்கோவ்ஸ்கயா, தெஸெரெத்தேலி ஆகியோர் தங்களுக்கே உரித்தான சொந்த வழியில் ஜனநாயகவாதத்தில் ஈடுபாடுடையவர்கள் என்பதையும் அதனை அவர்கள் மக்களிடையே பிரச்சாரம் செய்து வருகிருர்கள் என்பதையும் நாம் ஒப்புக்கொள்கிறோம். ஆனல் ஜனநாயகவாதம் பற்றிய நமது கருத்து அவர்களின் கருத்திலிருந்து சிறிது வேறுபட்டிருக்கிறது என்ருல் அதற்கு என்ன செய்வது?

நமது கருத்தின்படி, போரால் விளைந்துள்ள, கேட்டறியாத துன்ப துயரங்களைத் தணிப்பதற்கும் அதே சமயத்தில் போரால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பயங்கரமான புண்களை ஆற்றுவதற்கும் புரட்சிகரமான ஜனநாயகவாதம் தேவை; ஏழைகளுக்குக் குடியிருப்பு இடங்களைப் பகிர்ந்து கொடுப்பது பற்றி மேற்சொல்லிய உதாரணத்தில் விவரித்தது போன்ற புரட்சிகரமான நடவடிக்கைகள் தேவை. நகரத்திலும் நாட்டுப்புறத்திலும் உணவுப் பண்டங்கள், ஆடைகள், செருப்புகள் முதலியவற்றின் வினியோகத்திலும் நாட்டுப்புறப் பகுதிகளில் நிலம் முதலியவை சம்பந்தமாயும் முற்றிலும் இதே விதமான வழிமுறை அனுசரிக்கப்பட வேண்டும். இந்த உணர்வில் அரசு நிர்வாக வேலையை நடத்துவதற்கு இரண்டு கோடி இல்லாவிட்டாலும் ஒரு கோடி மக்களைக் கொண்ட அரசு இயந்திரத்தை, எந்த முதலாளித்துவ அரசிலும் ஒருபோதும் காணக் கிடைத்திராத இயந்திரத்தை உடனடியாக இயங்கச் செய்ய முடியும். நம்மால் மட்டுமே இவ்வித இயந்திரத்தைப் படைக்க முடியும், ஏனெனில் மக்கள் தொகையில் மிகப் பெரும்பாலானவரின் பூரணமான, தன்னலங் கருதாத அனுதாபம் நமக்கு நிச்சயமாக உண்டு. நம்மால் மட்டுமே இவ்வித இயந்திரத்தைப் படைக்க முடியும், ஏனெனில் நீண்ட காலமாக முதலாளித்துவம் தந்த ''பயிற்சியினுல்'' (முதலாளித்துவத்தின் பள்ளியில் நாம் படிக்கச் சென்றது வெட்டியாக அல்ல) கட்டுப்பாடுள்ள,

வர்க்க உணர்வு கொண்ட தொழிலாளர்கள் நம்மிடம் இருக்கின்றனர். இந்தத் தொழிலாளர்கள் தொழிலாளர் மிலீஷியாவை அமைக்கவும் அதைப் படிப்படியாய்ப் பெரிதாக்கி (அதை உடனே விரிவாக்கத் தொடங்கி) முடிவில் சர்வஜன மிலீஷியாவாகச் செய்யவும் முடியும். வர்க்க உணர்வுள்ள தொழிலாளிகள் தலைமை தாங்க வேண்டும், ஆனால் நிர்வாக வேலையில் உழைப்பாளி மக்கள் திரளையும் ஒடுக்கப்பட்ட மக்கள் திரளையும் அவர்கள் ஈடுபடுத்தலாம்.

இப்புதிய இயந்திரம் எடுத்துக்கொள்ளும் முதல் நடவடிக்கைகளில் தவிர்க்க முடியாதபடி தவறுகள் ஏற்படும். ஆனால் விவசாயிகள் பண்ணையடிமை முறையிலிருந்து விடுதலை பெற்றுத் தங்கள் காரியங்களைத் தாங்களே மேற்கொண்டு நடத்தப் புறப்பட்டபொழுது தவறுகள் செய்யபடவில்லையா? நடைமுறையைத் தவிர, மக்களின் உண்மையான சுயாட்சியை நோக்கி உடனடியாகச் செல்வதைத் தவிர, மக்கள் தாங்களே ஆட்சி புரியப் பயிற்சி பெறுவதற்கும் தவறுகளைத் தவிர்ப்பதற்கும் வேறு வழி ஏதாவதுண்டா? தங்களது சமூக நிலை முழுவதின் காரணமாக மூலதனத்தையே முற்றிலும் சார்ந்து கிடக்கிற விசேஷ உத்தியோகஸ்தர்கள் மட்டுமே அரசை நிர்வகிக்க முடியும் என்பது பூர்ஷ்வா படிப்பாளிகளின் குருட்டு நம்பிக்கையாகும். அதைக் கைவிட வேண்டும்; அதுதான் இன்றையப் பிரதான விஷயம். முதலாளி வர்க்கத்தினர்களும் அதிகார வர்க்கத்தினரும் ''சோஷலிஸ்டு'' மந்திரிகளும் பழைய முறைப்படியே ஆட்சி நடத்த முயற்சிசெய்து வருகிறார்கள்; ஆனால் அவர்களால் ஆட்சி நடத்த முடியவில்லை. ஏழு மாதங்கள் ஆனபிறகும் விவசாய நாட்டிலே விவசாயிகளின் எழுச்சி ஏற்பட்டு வருவதுதான் அவர்கள் கண்ட பலன்!! இப்படிப்பட்ட நிலைமைக்கு முற்றுப் புள்ளி வைப்பதுதான் பிரதான விஷயம் ஆகும். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு, உழைப்பாளி மக்களுக்கு அவர்கள் பலத்தில் நம்பிக்கை உண்டாகும்படி செய்வதும் ரொட்டி, உணவுப்பொருள், பால், துணிமணிகள், குடியிருக்கும் வீடுகள் முதலியவற்றை ஏழைகளின் நலன்களைக் கருதி மிகக் கட்டுத் திட்டமும் ஒழுங்கும் வாய்ந்த சரியான முறையில் வினியோகிப்பதற்குரிய வேலையை அவர்கள் தாங்களே எடுத்து நடத்த முடியும், எடுத்து நடத்த வேண்டும் என்பதை அவர்களுக்கு நடைமுறையில் மெய்ப்பித்துக் காட்டுவதும்தான்

பிரதான விஷயம். இவற்றைச் செய்தாலொழிய ருஷ்யாவை நிலை குலைவினின்றும் அழிவினின்றும் காப்பாற்ற முடியாது. நிர்வாகத்தைப் பாட்டாளிகளிடமும் அரைப் பாட்டாளிகளிடமும் ஒப்படைக்கின்ற வேலையை மனப்பூர்வமாக, தைரியமாக எங்கும் தொடங்குவது மக்களிடையே வரலாற்றில் இதற்குமுன் கண்டிராத புரட்சிப் பேருக்கத்தைக் கிளப்பி துன்பங்களை எதிர்த்துப் போராடுவதற்குரிய மக்கள் சக்திகளைப் பெருவாரியாகப் பெருக்கித் தரும். இம்மக்கள் முதலாளிகளுக்காகவோ, நிலப்பிரபுக்களுக்காகவோ, அதிகார வர்க்கத்தினருக்காகவோ இன்றி, தண்டனை கிட்டும் எனப் பயப்படுவதால் இன்றி, தங்களுக்காகவே வேலை செய்யத் தொடங்கிவிடுவார்கள். அதனால் பழைய, குறுகிய கருத்துடைய அதிகார வர்க்கச் சக்திகளுக்கு அசாத்தியமானவை என்று தோன்றிய பற்பல காரியங்கள் கோடிக்கணக்கான பொது மக்களுக்குச் சாத்தியமானவை ஆகிவிடும்.

*1917ல் செப்டெம்பர் கடைசியில்—*
*அக்டோபர் 1(14)ல் எழுதப்பட்டது*

## போட்டியை எவ்வாறு ஒழுங்கமைப்பது?

முதலாளித்துவப் போட்டி, தனியார் முன்முயற்சி, முதலாளிகள் மற்றும் முதலாளித்துவ அமைப்பு முறையின் இதர நேர்த்தியான நற்பண்புகளையும் வரப்பிரசாதங்களையும் பற்றிப் புகழ்ந்து பூர்ஷ்வா நூலாசிரியர்கள் எழுதியிருக்கிறார்கள். இந்த நற்பண்புகளின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள மறுப்பதாயும் ''மானுட இயல்பைப்'' புரிந்து கொள்வதில் அசட்டை செய்வதாயும் சோஷலிஸ்டுகள் மீது குற்றம் சாட்டப்படுகிறது. ஆனால் உண்மையில் முதலாளித்துவம் நீண்டகாலம் முன்பே சிறுவீத சுயேச்சையான பண்ட உற்பத்தியைப் பெருவீத, மிகப் பெருவீத ஆலை உற்பத்தி, கூட்டுப்பங்கு நிறுவனங்கள், சிண்டிக்கேட்டுகள் மற்றும் இதர ஏகபோகங்களால் பதிலீடு செய்து விட்டது. சிறுவீதப் பண்ட உற்பத்தி முறையின் கீழ் முதலாளித்துவப் போட்டி மூலப் செயல்திட்பம், ஊக்கம், துணிச்சலான முன்முயற்சி ஆகியவை கணிசமான அளவுக்கு வளர வாய்ப்பு இருந்தது. ஆனால் இத்தகைய பெருவீத முதலாளித்துவத்தின் கீழ் முதலாளித்துவப் போட்டி என்பதன் பொருள் மக்கள் திரளின், அதன் மிகப் பெரும் பெரும்பான்மையின், நூறு உழைப்பாளிகளில் தொண்ணூற்றென்பது பேரின் செயல்திட்பம், ஊக்கம், துணிச்சலான முன்முயற்சி ஆகியவற்றை நம்பற்குரிய முறையில் கொடுமையாக ஒடுக்குவது என்பதாகும். மேலும் முதலாளித்துவப் போட்டியானது நிதி மோசடி, தனிச் சலுகை, சமுதாய ஏணியின் உயர்படியில் இருப்போரிடம் கொத்தடிமைத்தனம் ஆகியவையாகும்.

சோஷலிசம் போட்டியை அவித்து மறைத்து விடுவதில்லை. மாறாக அதை உண்மையிலேயே விரிவான அளவில், வெகுஜன அளவில் செயல்படுத்தவும், உழைக்கும் மக்களை அவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தவும் ஆற்றல்

களை வளர்த்துக் கொள்ளவும் முதலாளித்துவத்தால் லட்சக் கணக்கில் நசுக்கப்பட்டு அடக்கப்பட்டு நெரிக்கப்பட்டு வந்த, மக்களிடம் அமோகமாக இருந்த அந்தத் தனி ஆற்றல்களை வெளிக்கொணரவும் உரியதான செயல் துறையில் உள்ள படியே ஈர்ப்பதற்குமான வாய்ப்பினை சோஷலிசம் முதல் தடவையாகப் படைத்துருவாக்குகிறது.

இப்போது ஒரு சோஷலிஸ்டு அரசாங்கம் ஆட்சியில் இருப்பதால் நமது பணி நேசப் போட்டியை ஒழுங்கமைப்பதாகும்.

முதலாளி வர்க்கத்தினை அண்டிவாழ்வோரும் கெஞ்சிப் பிழைப்போரும் சோஷலிசத்தை ஒரே மாதிரியான, பழகிப் படிந்து போன, சலிப்பூட்டுகிற, கவர்ச்சியற்ற ஒரு பாசறை அமைப்பு என்று வருணித்தார்கள். பண மூட்டைகளின் அடிவருடிகளும் சுரண்டலாளரிடம் இச்சகம் பேசுவோருமான முதலாளித்துவ அறிவுத்துறை கனவான்கள் சோஷலிசத்தை மக்களைக் ''கிலியூட்டுவதற்கான'' ஒரு பூச்சாண்டியாகப் பயன்படுத்தினர்கள். மக்களோ முதலாளித்துவத்தின் கீழே கடுமையான சலிப்புத்தரும் உழைப்பு, கொடிய வறுமையும் அரைப்பட்டினியுமான வாழ்க்கை ஆகியவற்றை உள்ளடக்கிய கடுஞ்சிறை வாசத்திற்கும் பாசறைபாணிக் கட்டுப்பாட்டிற்கும் ஆளாக்கப்பட்டிருந்தார்கள். இந்தக் கடுஞ்சிறை வாசத்தில் இருந்து உழைக்கும் மக்களை விமோசனப்படுத்துவதற்கான முதல் நடவடிக்கை நிலப்பிரபுக்களின் நிலங்களைப் பறிமுதல் செய்தல், தொழிலாளர் கண்காணிப்பைக் கொண்டு வருதல், வங்கிகளைத் தேசவுடைமையாக்குதல் ஆகியவை ஆகும். அடுத்த நடவடிக்கைகள்: ஆலைகளைத் தேசவுடைமையாக்குதல், மக்கள் தொகை முழுவதையும் நுகர்வாளர் சங்கங்களில் கட்டாயமாக ஒழுங்கமைத்தல் (இந்தச் சங்கங்கள் அதே சமயம் விளைபொருட்களின் விற்பனைச் சங்கங்களாக இருக்கும்), தானியம் மற்றும் இதர அவசியப் பொருள் வர்த்தகத்தினை அரசு ஏகபோகமாக்குதல்.

ஊக்கம், நேசப்போட்டி, துணிச்சலான முன்முயற்சி ஆகியவற்றை உண்மையிலேயே பேரளவில் வெளிக்காட்டுவதற்கான வாய்ப்பு இப்போதுதான் உருவாக்கப்பட்டுள்ளது. முதலாளியை வெளியேற்றியுள்ள அல்லது மெய்யான தொழிலாளர் கண்காணிப்பு மூலம் மட்டுப்படுத்தியுள்ள ஒவ்வொரு ஆலையும் நிலவுடைமைச் சுரண்டலாளரை வெளியேற்றி

அவரது நிலம் பறிமுதல் செய்யப்பட்ட ஒவ்வொரு கிராமமும் இப்போதுதான் உழைக்கும் மனிதன் தனது சிறப்பாற்றல்களை வெளிப்படுத்தவும் முதுகைச் சற்றே நிமிர்த்தவும் முழு ஆகிருதியுடன் எழுச்சியுற்று நிற்கவும் தான் ஒரு மானுடஜீவி என்று உணரவுமான ஒரு துறையாக விளங்குகிறது. நூற்றுண்டுகளாக பிறருக்குப் பாடுபட்டும், சுரண்டலாளருக்காகக் கட்டாய உழைப்பைச் செய்தும் வந்த பிறகு முதல் தடவையாகத் தனக்காகவே உழைப்பது என்பது சாத்தியமாகியுள்ளது. மேலும் வேலையில் நவீனத் தொழில்நுட்பத்தின் மற்றும் கலாசாரத்தின் சகல சாதனைகளையும் ஈடுபடுத்துவது சாத்தியமாகியுள்ளது.

இயல்பாகவே, கட்டாயத்தின் கீழ் உழைப்பது என்பதில் இருந்து தனக்காகவே உழைப்பது என்னும் நிலைக்கு மனிதகுல வரலாற்றில் ஏற்பட்ட இந்த மகத்தான மாற்றம் பிணக்கு, இடர்ப்பாடுகள், மோதல்கள், வேரூன்றி விட்ட புல்லுருவிகள் மற்றும் அவர்களை அண்டிப்பிழைப்போருக்கு எதிரான பலப்பிரயோகம் இன்றி நிகழ முடியாது. இந்த விஷயத்தில் எந்தத் தொழிலாளிக்கும் எவ்விதப் பிரமைகளும் கிடையாது. கொடிய வறுமையாலும் சுரண்டலாளர்களுக்குப் பல்லாண்டுகள் புரிந்த அடிமை உழைப்பு மூலமும் அவர்களிடமிருந்து பெற்ற எண்ணற்ற வசைகள் மற்றும் அவமானம் மூலமும் வயிரமடைந்த தொழிலாளர்களும் ஏழ்மை மிக்க விவசாயிகளும் அந்தச் சுரண்டலாளர்களின் எதிர்ப்பைத் தகர்ப்பதற்கு அதிகக் காலம் பிடிக்கும் என்பதை அறிந்திருக்கிருர்கள். தொழிலாளர்களும் விவசாயிகளும் நோவயா ஷீஸ்ன்[41] ஆதரவாளர்கள் அல்லது இதர சக்தியைச் சேர்ந்த அறிவுத்துறை கனவான்களின் உணர்ச்சிப் பசப்புப் பிரமைகளால் கிஞ்சிற்றும் பீடிக்கப்படவில்லை. இந்தக் கனவான்கள் முதலாளிகளை ''கண்டனம் செய்து'' தொண்டை கம்மக் ''கூக்குரலிட்டவர்கள்'', அவர்களை எதிர்த்து ''பாவலா காட்டியவர்கள்''. ஆனுல் செயல்களுக்கு வரும் போது, அச்சுறுத்தல்களைச் செயல்படுத்த வரும் போது, முதலாளிகளை அகற்றும் வேலையை நடைமுறையில் நிறைவேற்ற வரும் போது கண்ணீர் விட்டுக் கரைந்து அடிபட்ட நாய்க்குட்டியைப் போல நடந்து கொள்வார்கள்.

கட்டாயத்தின் கீழ் உழைப்பது என்பதில் இருந்து தனக்காகவே உழைப்பது என்ற நிலைக்கு, பிரம்மாண்டமான தேசிய

(ஓரளவுக்கு சர்வதேசிய, உலக) விதத்தில் உழைப்பைத் திட்டமிட்டு ஒழுங்கமைக்கும் நிலைக்கு ஏற்படும் மகத்தான மாற்றத்துக்கு—சுரண்டலாளர் எதிர்ப்பை ஒடுக்குவதற்கான "இராணுவ" நடவடிக்கைகளுடன்—பாட்டாளி வர்க்கமும் ஏழ்மை மிக்க விவசாயிகளும் எடுக்கும் மிகப் பெரிய ஒழுங்கமைப்பு, அமைப்பாளருக்குரிய முயற்சிகளும் தேவை. இந்த ஒழுங்கமைப்புப் பணி, நேற்றைய அடிமையுடைமையாளர்களையும் (முதலாளிகளையும்) முதலாளித்துவ அறிவுத்துறையைச் சேர்ந்த அவர்களது அடிவருடிக் கூட்டத்தையும் தாட்சணியமின்றி இராணுவ முறைகளால் ஒடுக்கும் பணியுடன் பின்னிப் பிணைந்து ஓர் உருவமாகச் சமைந்துள்ளது. நேற்றைய அடிமையுடைமையாளர்களும் அவர்களது அறிவுத்துறைக் கையாட்களும், நாங்கள் எப்போதும் அமைப்பாளர்களாயும் தலைவர்களாயும் இருந்தவர்கள், நாங்கள் நாட்டாண்மை செய்தவர்கள், தொடர்ந்து அவ்வாறே செய்ய விரும்புகிறோம்; "சாமானிய மக்களுக்கு", தொழிலாளர் விவசாயிகளுக்கு நாங்கள் கீழ்ப்படிய மறுக்கிறோம், நாங்கள் அவர்களுக்கு அடிப்பட மாட்டோம்; பண மூட்டைகளின் தனியுரிமைகளையும் மக்கள் மீதான மூலதனத்தின் ஆட்சியையும் பாதுகாப்பதற்காக அறிவை ஆயுதமாக மாற்றுவோம் என்று கூறுகிறார்கள், நினைக்கிறார்கள்.

இவ்வாறுதான் முதலாளிகளும் முதலாளித்துவ அறிவுஜீவிகளும் கூறுகிறார்கள், நினைக்கிறார்கள், செய்கிறார்கள். சுயநலத்தின் கருத்து நிலையில் இருந்து பார்த்தால் அவர்களது நடத்தைப் புரிந்து கொள்ளக் கூடியதேயாகும். பிரபுத்துவ நிலவுடைமையாளர்களை அண்டிவாழ்பவர்களும் கெஞ்சிப் பிழைப்பவர்களும் பாதிரிகளும் எழுதுகோலர்களும் கோகல் சித்திரித்த அதிகார வர்க்கத்தினரும் பெலின்ஸ்கியைப்[12] பகைத்த "அறிவுஜீவிகளும்" கூட பண்ணை அடிமை முறையில் இருந்து விட்டுப் பிரிவது "கடினம்" என்று கண்டனர். ஆனால் சுரண்டலாளர்கள் மற்றும் அவர்களது அறிவுத்துறை ஏவலாட்களின் லட்சியம் கவைக்குதவாதது. தொழிலாளர்களும் விவசாயிகளும் அவர்களின் எதிர்ப்பைத் தகர்க்கத் தொடங்குகின்றனர். துரதிருஷ்டவசமாக இன்னும் போதியளவு உறுதியாகவும் வைராக்கியமாகவும் தாட்சணியமின்றியும் செயல்படவில்லை, ஆனால் அதை அவர்கள் தகர்த்தெறிவது திண்ணம்.

உழைக்கும் மக்கள் மீது சோஷலிஸ்டுப் புரட்சியால் சுமத்தப்படும் ஒழுங்கமைப்புப் பணிகளை—உலக வரலாற்றுப் பொருளில் மகத்தான உண்மையிலேயே வீரம் செறிந்ததான பணிகளை—''சாமானிய மக்களும்'' ''சாமானிய'' தொழிலாளர்களும் ஏழ்மை மிக்க விவசாயிகளும் செய்து சமாளிக்க முடியாது என்று ''அவர்கள்'' கருதுகிறார்கள். தமக்குத் தாமே தேறுதல் சொல்லிக் கொள்வதற்கு முதலாளிகளுக்கும் முதலாளித்துவ அரசுக்கும் வழக்கமாகச் சேவை புரியப் பழகிவிட்ட அறிவுஜீவிகள்: ''நாங்கள் இல்லாமல் உங்களால் முடியாது'' என்று கூறுகிறார்கள். ஆனால் அவர்களது திமிரான வன்கூற்று வீண் முயற்சியாகும். கல்வி கற்ற மனிதர்கள் மக்களின் பக்கம், உழைப்பாளி மக்களின் பக்கம் ஏற்கெனவே வந்து கொண்டு இருக்கிறார்கள். மூலதனத்தின் ஏவலாட்களது எதிர்ப்பைத் தகர்க்க உதவி புரிகிறார்கள். விவசாயிகள் மற்றும் தொழிலாளி வர்க்கத்தினரின் மத்தியில் பல ஆற்றல் மிகுந்த ஒழுங்கமைப்பாளர்கள் உள்ளனர். அவர்கள் தம்மைத் தாமே உணர்ந்து கொள்ளவும் மாபெரும் ஜீவாதாரமான படைப்பாற்றல் பணியினை நோக்கி விழிப்புற்று முழுமுயற்சி செய்யவும் தமது சொந்த சக்திகளைக் கொண்டு சோஷலிஸ்டு சமூக அமைப்பைக் கட்டும் பணியினை நிறைவேற்றவும் இப்பொழுதுதான் தொடங்கியிருக்கிறார்கள்.

இன்றுள்ள முக்கியமான கடமைகளில் ஒன்று, ஒருவேளை ஆக முக்கியமான கடமை தொழிலாளரின், பொதுவாக எல்லா உழைக்கும் சுரண்டப்படும் மக்களின் இந்தச் சுயேச்சையான முன்முயற்சியை வளர்ப்பது, படைப்பாற்றல் முறையிலான ஒழுங்கமைப்பு வேலையில் அதை சாத்தியமான அளவுக்கு விரிவாக வளர்ப்பது என்பதேயாகும். ''உயர்ந்த வர்க்கங்கள்'' என்று அழைக்கப்படுபவர்கள் மட்டுமே, செல்வந்தர்கள் மட்டுமே, செல்வந்தர் பள்ளியில் பயின்றவர்கள் மட்டுமே அரசை நிர்வாகம் செய்யவும் சோஷலிஸ்டு சமுதாயத்தின் ஒழுங்கமைப்பு வேலையை நெறியாக்கம் செய்யவும் வல்லவர்கள் என்றதான பழைய, அபத்தமான, காட்டுத்தனமான, வெறுக்கத்தக்க, அருவருப்பான தப்பெண்ணத்தை எதுவும் செய்து நாம் உடைத்தெறிதல் வேண்டும்.

இந்தத் தப்பெண்ணம் அழிகேடான மாமூல், மரத்துப் போன மனப்பாங்கு, அடிமைத்தனமான பழக்கங்கள் ஆகிய

வற்றாலும் இதற்கும் மேல் முதலாளிகளின் மோசமான சுயநலத்தாலும் வளர்க்கப்பட்டது. முதலாளிகளின் நலன், கொள்ளை செய்து ஆதிக்கம் செலுத்துவதும் ஆதிக்கம் செலுத்திக் கொள்ளை செய்வதும் ஆகும். இல்லை. தமக்கு அறிவின் சக்தி அவசியம் என்பதைத் தொழிலாளர்கள் ஒரு கணமும் மறக்க மாட்டார்கள். தொழிலாளர்கள் இப்போது குறிப்பாயும் அறிவைப் பெறுவதில் அசாதாரணமான ஆர்வம் காட்டி வருகிறார்கள். இதைப் பற்றி பாட்டாளிகளின் மத்தியில் தவறான கருத்துக்கள் இல்லை, இருக்கவும் முடியாது என்பதை இது புலப்படுத்துகிறது. படிக்கவும் எழுதவும் தெரிந்த, மக்களை எடைபோடத் தெரிந்த, நடைமுறை அனுபவம் பெற்றுள்ள ஒவ்வொரு சாமானிய தொழிலாளியும் விவசாயியும் அமைப்பாளர் வேலையைச் செய்யும் திறனுடையவராவார். முதலாளித்துவ அறிவுஜீவிகள் யாரைப் பற்றி அத்தகைய ஆணவத்தோடும் வெறுப்போடும் பேசுகிறார்களோ அந்த ''சாமானிய மக்கள்'' மத்தியில் இத்தகைய பல ஆடவரும் மகளிரும் உள்ளனர். தொழிலாளி வர்க்கம் மற்றும் விவசாயிகள் மத்தியில் நிறைந்து விளங்கும் இது போன்ற செழுமையான ஆற்றல், இது வரை பயன்படுத்தப்படாத ஆதார சக்தியாகும்.

தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் இன்னும் ''அஞ்சியவர்களாக'' உள்ளனர். அவர்கள்தாமே இப்போது ஆளும் வர்க்கம் என்ற கருத்துக்கு இன்னும் வழக்கப்பட்டு விடவில்லை. அவர்கள் இன்னும் போதியளவு உறுதிப்பாடு அடையவில்லை. தமது வாழ்க்கை முழுவதும் அடிக்குப் பயந்து வேலை செய்தும் வறுமையாலும் பட்டினியாலும் கட்டாயப்படுத்தப் பட்டும் வந்த லட்சோப லட்சம் மக்கள் உள்ளங்களில் இந்தப் பண்புகளைப் புரட்சியால் ஒரே வீச்சில் புகுத்த முடியாது. ஆனால் 1917 அக்டோபர் புரட்சி வலுவானது, நிலைத்து நிற்கக் கூடியது, வெல்லற்கரியது. காரணம், அது இந்தப் பண்புகளை எழுப்பியுள்ளது, பழைய எல்லாத் தடைகளையும் தகர்க்கிறது, தேய்ந்து போன தளைகளை அகற்றுகிறது, உழைக்கும் மக்களைப் புது வாழ்வினை சுயேச்சையாகப் படைத்துருவாக்கும் பாதையில் தலைமை தாங்கி நடத்திச் செல்கிறது.

கணக்குப் பதிவு, கண்காணிப்பு—இதுவே தொழிலாளர்கள், படையாளர்கள் மற்றும் விவசாயிகள் பிரதிநிதிகளின்

ஒவ்வொரு சோவியத்தின், ஒவ்வொரு நுகர்வாளர் சங்கத்தின், 'ஒவ்வொரு வழங்கீடு ஒன்றியம் அல்லது கமிட்டியின், ஒவ்வொரு ஆலைக் கமிட்டியின் அல்லது பொதுவாகத் தொழிலாளர் கண்காணிப்பு அமைப்பின் பிரதான பொருளாதாரப் பணியாகும்.

உழைப்பின் அளவையும் உற்பத்தி சாதனங்களையும் பழைய வழக்கப்படி ஓர் அடிமையின் நோக்கு நிலையில் இருந்து கருதிப் பார்ப்பதை எதிர்த்து நாம் போராட வேண்டும். அந்த அடிமையின் ஏகக் குறிக்கோள் உழைப்பின் கடுமையைச் சற்றே குறைப்பது அல்லது முதலாளி வர்க்கத்திடமிருந்து குறைந்தபட்சம் ஏதோ சில சிறு சலுகை பெறுவது என்பதாக இருந்தது. முன்னேறிய வர்க்க உணர்வுடைய தொழிலாளர்கள் இந்தப் போராட்டத்தை ஏற்கெனவே தொடங்கி விட்டார்கள். அவர்கள் புதிதாக வந்தவர்களுக்கு உறுதியான எதிர்ப்புக் காட்டி வருகின்றார்கள். இந்தப் புதியவர்கள் ஆலை உலகத்தை நோக்கி போரின் போது பிரத்தியேகமாயும் பெருந் தொகையில் திரண்டு வந்தார்கள். அவர்கள் இப்போது மக்களது உடைமைக்குள் வந்துவிட்ட மக்கள் ஆலைகளைப் பழைய முறையிலேயே நடத்த விரும்புகிறார்கள். அவர்களது ஒரே நோக்கம் ''சாத்தியமான அளவு பெரிய லாபத்தைத் திரட்டிக் கொண்டு பிறகு வெளியேறுவது'' என்பதே. இந்தப் போராட்டத்தில் முன்னேறிய தொழிலாளர் பக்கம் ஆதரவாக வர்க்க உணர்வுள்ள, நேர்மையான, சிந்திக்கிற விவசாயிகளும் உழைக்கும் மக்களும் சேருவார்கள்.

உயர் அரசு அதிகாரம் என்ற முறையில் தொழிலாளர்கள், படையாளர்கள், விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துக்களாலோ, அல்லது அந்த ஆட்சியதிகாரத்தின் நெறிமுறைகள் அல்லது ஆணையுரிமையின் பேரிலோ கணக்கு வைத்தலும் கண்காணித்தலும் நடத்தப்படும் பட்சத்தில்— இது விரிந்து பரந்த பொதுவான சர்வப்பொது கணக்கு வைத்தலும் கண்காணிப்புமாகும், செய்யப்பட்ட உழைப்பின் அளவு மற்றும் உற்பத்தியான பொருட்களின் வினியோகம் மீதான கணக்கு வைத்தலும் கண்காணிப்புமாகும்— இது பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட்டு உறுதிப்பட்ட பிறகான சோஷலிஸ்டு மாற்றத்தின் சாரமாகும்.

சோஷலிசத்தை நோக்கி மாறிச் செல்வதற்கு இன்றிய

மையாது தேவைப்படும் கணக்கு வைத்தலும் கண்காணிப்பும் மக்கள் திரளால் மட்டுமே செயல்படுத்த முடியும். பெருந்திரளான தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் செல்வந்தர்கள், கயவாளிகள், சோம்பேறிகள் மற்றும் போக்கிரிகள் விஷயத்தில் கணக்கு வைத்தல் மற்றும் கண்காணிப்பில் சுயவிருப்பமான மனச்சான்று பூர்வமான ஒத்துழைப்பைத் தோற்றுவிக்க வேண்டும். இந்த ஒத்துழைப்பு புரட்சிகர ஊக்கம் கொண்டதாக இருத்தல் வேண்டும். இதனுல் மட்டுமே, முதலாளித்துவத்திடமிருந்து சோஷலிசம் மரபாகப் பெற்றதான சாபக்கேடான முதலாளித்துவ சமூக அமைப்பின் மீதமிச்சங்களை, மனிதகுலத்தின் கசடுகளை, இந்தப் படுமோசமான சிதிலப்பட்டுத் தேய்ந்து போன உறுப்புகளை, இந்தத் தொத்து நோயை, பிளேக் நோயை, சீழ்ப்புண்ணை வென்று ஒழிக்க முடியும்.

தொழிலாளர்களே விவசாயிகளே, உழைக்கும் சுரண்டப்படும் மக்களே! நிலம், வங்கிகள் மற்றும் ஆலைகள் இப்போது மக்கள் அனைவரின் சொத்துக்களாகி விட்டன! நீங்கள் நீங்களே பொருட்களின் உற்பத்தி மற்றும் வினியோகம் குறித்துக் கணக்கு வைக்கவும் கண்காணிப்புச் செய்யவும் வேலை தொடங்க வேண்டும். இது மட்டுமே சோஷலிசத்தின் வெற்றிக்கான பாதை, அதன் வெற்றிக்கான ஒரே உத்தரவாதம், எல்லாச் சுரண்டலையும் எல்லா வறுமையையும் எல்லா ஏழ்மையையும் எதிர்த்து வெல்வதற்கான ஒரே உத்தரவாதம்! எல்லோருடைய தேவைகளையும் திருப்தி செய்வதற்குப் போதுமான ரொட்டி, இரும்பு, வெட்டு மரம், கம்பளி, பருத்தி மற்றும் மென்சணல் ருஷ்யாவில் இருக்கிறது. ஆனுல் இதற்கு உழைப்பும் அதன் விளைபொருட்களும் சரியானபடி வினியோகிக்கப்பட வேண்டும். இந்த வினியோகத்தின் மீது அனைத்து மக்களின் காரியகரமான நடைமுறை கண்காணிப்பு நிலைநாட்டப்பட வேண்டும். மக்களின் விரோதிகளான செல்வந்தர்கள், அவர்களை அண்டிவாழ்பவர்கள், கயவர்கள், சோம்பேறிகள், போக்கிரிகளை அரசியலில் மட்டுமின்றி, அன்றுடப் பொருளாதார வாழ்விலும் தோற்கடிக்க வேண்டும்.

இந்த மக்களின் விரோதிகளுக்கு, சோஷலிசத்தின் விரோதிகளுக்கு, உழைக்கும் மக்களின் விரோதிகளுக்கு எவ்விதக் கருணையும் காட்டக் கூடாது. செல்வந்தர் மற்றும் அவர்களை

அண்டிவாழ்வோர், முதலாளித்துவ அறிவுஜீவிகளை எதிர்த்து அழிக்கும் வரைப் போர், கயவர்கள், சோம்பேறிகள், போக்கிரிகளை எதிர்த்துப் போர்! அவர்கள் அனைவரும் ஒரே இனம், முதலாளித்துவத்தின் கான்முளைகள், பிரபுக்குல மற்றும் முதலாளித்துவ சமூக அமைப்பின் ஈற்றுக்கள். இந்தச் சமூக அமைப்பில் விரல் விட்டு எண்ணத்தக்க சிலர் மக்களைக் கொள்ளையடித்தார்கள், அவமதித்தார்கள். இந்தச் சமூக அமைப்பின் வறுமையும் இன்மையும் ஆயிரம் ஆயிரம் பேர்களைப் போக்கிரித்தனம், ஊழல் மற்றும் கயமைப் பாதையில் போகும்படி நிர்ப்பந்தித்து அவர்கள் தமது மானுடச்சாயல்கள் அனைத்தையும் இழக்கும்படிச் செய்தது. இந்தச் சமூக அமைப்பு உழைக்கும் மனிதனிடம், ஏமாற்று மூலமாவது சுரண்டலில் இருந்து தப்பிக்கவும் அதிலிருந்து விடுபடவும், ஒரு கணமேனும் சரி விருப்பமற்ற உழைப்பில் இருந்து தப்பிக்கவும், சாத்தியமான எந்த வழியிலாவது எதைச் செய்தும் குறைந்த பட்சம் ஒரு துண்டு ரொட்டியாவது பெற்று பட்டினி கிடக்காமல் தானும் தனது சுற்றமும் பசி வேதனையைச் சற்றே தணித்துக் கொள்ளவும் வேண்டும் என்ற விருப்பத்தைத் தவிர்க்க முடியாத வகையில் வளர்த்தது.

செல்வந்தர்களும் கயவாளிகளும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்களே ஆவர். அவர்கள் முதலாளித்துவம் வளர்த்த புல்லுருவிகளின் இரண்டு பிரதான வகை இனங்களே. அவர்கள் சோஷலிசத்தின் பிரதான விரோதிகள். இந்த விரோதிகளை மக்கள் அனைவரின் விசேஷக் கவனக் கண்காணிப்பின் கீழ் வைக்க வேண்டும். சோஷலிஸ்டு சமூக அமைப்பின் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளைச் சிறிதளவு மீறினாலும் கூட அவர்கள் தாட்சணியமின்றித் தண்டிக்கப்பட வேண்டும். இந்த விஷயத்தில் பலவீனத்தின் வெளிப்பாடோ, தயக்கமோ, உணர்ச்சிப் பசப்போ எதுவும் சோஷலிசத்துக்கு எதிரான அளப்பரிய பாதகச் செயலாகும்.

இந்தப் புல்லுருவிகளை சோஷலிஸ்டு சமூக அமைப்புக்குத் தீங்கற்றவர்களாக மாற்ற வேண்டுமானால், அனைத்து மக்களும் லட்சோபலட்சம் தொழிலாளர்களும் விவசாயிகளும் சுயவிருப்பத்தோடும் ஊக்கத்தோடும் புரட்சிகர உற்சாகத்தோடும் பங்கேற்கும் முறையில், செய்யப்பட்ட உழைப்பின் அளவு, பொருள் உற்பத்தி மற்றும் வினியோகம் குறித்த கணக்கு வைத்தலையும் கண்காணிப்பையும் நாம் ஒழுங்கமைத்

தல் வேண்டும். நேர்மையான, அறிவுடைய, திறமையுள்ள ஒவ்வொரு தொழிலாளி மற்றும் விவசாயியின் ஆற்றலுக்குள் முற்றும் அடங்கியதான கணக்கு வைத்தலையும் கண்காணிப்பையும் ஒழுங்கமைக்கும் பொருட்டு நாம் அவர்களது சொந்த ஒழுங்கமைக்கும் தனி ஆற்றல்களை, அவர்கள் மத்தியில் காணப்படும் ஆற்றல்களை எழுச்சியுறச் செய்ய வேண்டும். அவர்கள் மத்தியில் ஸ்தாபனத்துறையிலான சாதனைகள் விஷயத்திலான நேசப்போட்டியை எழுச்சியுற வைத்து தேசிய அளவில் ஒழுங்கமைக்க வேண்டும். படித்த மனிதனின் அவசியமான அறிவுரைக்கும் ''படித்தவர்'' மத்தியில் மிக வழக்கமாக நிலவும் மடிமை மீதான ''சாமானிய'' தொழிலாளி மற்றும் விவசாயி மேற்கொள்ளும் அவசியமான கண்காணிப்புக்கும் இடையிலான வேறுபாட்டைத் தொழிலாளர்களும் விவசாயிகளும் தெளிவாகக் காணுமாறு செய்தல் வேண்டும்.

இந்த மடிமை, இந்தக் கவனமின்மை, துப்புரவின்மை, அமைதி இழந்த அவசரக் கோலம், செயலுக்குப் பதில் விவாதத்தையும் வேலைக்குப் பதில் பேச்சையும் மாற்றீடு செய்யும் விருப்பம், எதையும் முழுமையாகச் செய்து தீர்க்காமல் உலகிலுள்ள சகலத்தையும் எடுத்துச் செய்வதற்கான விருப்பம் ஆகியவை ''படித்தவர்களின் இனப்'' பண்புகளில் சில. இதற்குக் காரணம் அவர்கள் இயல்பாகவே மோசமானவர்கள் என்பது அல்ல, அவர்களது தீய சித்தமும் அல்ல. இதற்குக் காரணம் அவர்களது வாழ்க்கையின் பழக்கங்கள், அவர்களது வேலை நிலைமைகள், சோர்வடைதல், மூளை உழைப்பை உடல் உழைப்பில் இருந்து சகஜங்கெட்ட நிலையில் பிரிவினை செய்தல் ஆகிய இத்தியாதிகள் அனைத்துமாகும்.

நமது புரட்சியின் பிழைகள், குறைபாடுகள் மற்றும் தவறுகளின் இடையில், நமது மத்தியில் இருக்கும் அறிவுஜீவிகளின்—தற்போது தவிர்க்கவியலாத—இந்த வருந்தத்தகுந்த இனப்பண்புகளின் விளைவாக ஏற்பட்ட பிழைகள் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. அதோடு அறிவுஜீவிகளின் ஒழுங்கமைக்கும் வேலை மீது தொழிலாளர்களின் மேற்பார்வை போதியளவு இல்லாததும் இப்பிழைகளின் பாற்படும்.

தொழிலாளர்களும் விவசாயிகளும் இன்னும் ''பயந்த நிலையில்'' இருக்கிறார்கள். அவர்கள் இந்தப் பயத்தை ஒழிக்க

வேண்டும், அதை அவர்கள் நிச்சயமாயும் ஒழிப்பார்கள். படித்த நபர்கள், அறிவுஜீவிகள் மற்றும் நிபுணர்களின் அறிவுரைகள், நெறிமுறைகளை நாம் தவிர்க்க முடியாது. நல்லறிவுடைய ஒவ்வொரு தொழிலாளியும் விவசாயியும் இதை முற்றிலும் நன்ருகப் புரிந்து கொள்கிருர். தொழிலாளர், விவசாயிகள் சார்பில் இருந்து போதிய கவனமோ தோழமை பூர்வமான மரியாதையோ குறைந்து விட்டதாக நமது மத்தியில் உள்ள அறிவுஜீவிகள் புகார் செய்ய முடியாது. ஆனல், அறிவுரைகள் மற்றும் நெறிமுறைகள் என்பன ஒரு விஷயம், நடைமுறையில் கணக்கு வைத்தல் மற்றும் கண்காணிப்பை ஒழுங்கமைத்தல் என்பன இன்னெரு விஷயம் ஆகும். மிகப் பெரும்பாலும் அறிவாளிகள் அருமையான அறிவுரைகளையும் நெறிமுறைகளையும் தருகின்றனர். ஆனல் சொற்களைச் செயலாகப் பெயர்க்கும் காரியத்தின் மீது நடைமுறைக் கண்காணிப்பைச் செயல்படுத்துவதில் இந்த அறிவுரைகள் மற்றும் நெறிமுறைகளை நிறைவேற்று வதில் அவர்கள் படுமோசமாக, அபத்தமான முறையில், வெட்கக்கேடான அளவில் ''வாய்ப்பு இழந்தவர்கள்'', ஆற்றல் அற்றவர்கள் என்பதை நிதர்சனப்படுத்தி விடுகிருர்கள்.

இந்தக் குறிப்பிட்ட விஷயத்தில் ''மக்கள்'' மத்தியில் இருந்தும் ஆலைத் தொழிலாளர்கள் மற்றும் உழைக்கும் விவசாயிகள் இடையில் இருந்தும் வரும் நடைமுறை அமைப்பாளர்களின் உதவியும் தலைமைப் பாத்திரமும் வேண்டாம் என்று ஒழிப்பது அறவே சாத்தியமல்ல. ''பானைகள் செய்வது கடவுள்கள் அல்ல''—இந்த உண்மையைத் தொழிலாளர்களும் விவசாயிகளும் தமது மனங்களில் நன்ருகப் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். இப்போதைய முழு விவகாரமும் நடைமுறை வேலை என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். தத்துவம் நடைமுறையாக மாற்றப்படும், நடைமுறையால் உயிர்க்களை ஊட்டப்படும், நடைமுறையால் சரிபார்க்கப்படும், நடைமுறையால் சோதிக்கப்படும் அந்த வரலாற்றுத் தருணம் வந்து விட்டது. இப்பொழுது, ''மெய்யான இயக்கத்தின் ஒவ்வொரு படியும் ஒரு டஜன் வேலைத் திட்டங்களை விடவும் அதிக முக்கியமானது'' என்ற மார்க்சின் சொற்கள் குறிப்பாயும் மெய்மையாகின்றன. செல்வந்தர்களையும் கயவாளிகளையும் நடை

முறையில் மெய்யாகவே மட்டுப்படுத்தி கட்டுப்படுத்தி முழு மையாக அகத்தே பதிவு செய்து அவர்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது சோஷலிசம் பற்றிய அருமையான ஒரு டஜன் வாதங்களை விடவும் மதிப்புடையதாகும். ஏனெனில் ''எனது நண்பரே, தத்துவம் நரை கண்டது, ஆனால் வாழ்க்கையின் கற்பகத்தரு பசுமையானது.''[43]

தொழிலாளர்கள், விவசாயிகளிடையிலான நடைமுறை அமைப்பாளர்களிடை நேசப்போட்டி ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அறிவாளிகள் மிகவும் விரும்பிச் செய்ய முனையும் மாறா நிலைப்படி உருவடிவங்களை நிலைநாட்டவும் மேலிருந்து ஒரே மாதிரித்தன்மையைத் திணிக்கவும் செய்யப்படும் எல்லா முயற்சிகளையும் எதிர்த்துப் போரிட வேண்டும். மாறா நிலைப் படி உருவடிவங்களுக்கும் மேலே இருந்து திணிக்கப்படும் ஒரே மாதிரித் தன்மைக்கும், ஜனநாயக மற்றும் சோஷலிஸ்டு மத்தியத்துவத்துக்கும் இடையே பொதுவான அம்சம் எதுவுமே கிடையாது. விவரங்களில், பிரத்தியேக வட்டார இயல்புகளில், அணுகும் முறைகளில், கண்காணிப்பைச் செயல் படுத்தும் முறைகளில், புல்லுருவிகளை(செல்வந்தர்கள், கயவர் கள், அக்கறையற்ற, உணர்ச்சி வெறி பிடித்த அறிவாளிகள் இத்தியாதி) அழித்தொழித்து அவர்களைத் தீங்கற்றவர்கள் ஆக்குவதற்கான வழிகளில் பல்வகைத் தன்மை இருப்பதால் தலையாய கூறுகளின், அடிப்படைகளின், சாரத்தின் ஒற்றுமை குலைக்கப்படுவதில்லை ஆனால் உறுதிப்படுத்தப்படுகிறது.

அடிமட்டத்தில் இருந்து வரும் முன்முயற்சி, சுயேச்சைப் போக்கு, செயல் சுதந்திரம் மற்றும் ஊக்கத்தை எவ்வாறு மாறாநிலைப்படி உருக்களில் இருந்து விடுபட்ட சுயவிருப்ப மான மத்தியத்துவத்தோடு இணைப்பது என்பதற்குப் பாரிஸ் கம்யூன்[44] ஒரு மகத்தான உதாரணத்தினை வழங்கியது. நமது சோவியத்துக்கள் அதே பாதையைப் பின்பற்றுகின்றன. ஆனால் அவை இன்னும் ''அஞ்சியவையாக உள்ளன''. அவை இன்னும் தமது தொடக்க நிலை கடந்து முன்னேறவில்லை, சோஷலிச அமைப்பைக் கட்டுவது என்ற தமது புதிய மகத் தான படைப்பாற்றல் பணியில் இன்னும் ''ஒரு பிடிப்புப் பெறவில்லை''. சோவியத்துக்கள் மேலும் துணிவுடன் செயல் படத் தொடங்க வேண்டும், மேலும் அதிக முன்முயற்சியைத் தோற்றுவிக்க வேண்டும். எல்லா ''கம்யூன்களும்''—ஆலைகள், கிராமங்கள், நுகர்வாளர் சங்கங்கள், வழங்கீடுக் கமிட்டி

கள்—உழைப்பு மற்றும் உற்பத்திப் பொருட்களை வினியோகிப்பதைக் கணக்கு வைக்கும், கண்காணிக்கும் நடைமுறை அமைப்பாளர்களாக ஒன்றுக்கொன்று நேசப்போட்டியிட வேண்டும். இந்தக் கணக்கு வைத்தல் மற்றும் கண்காணிப்பு வேலைத் திட்டம் எளிதானது, தெளிவானது, எல்லோருக்கும் புரியக் கூடியது. எல்லோருக்கும் ரொட்டி, எல்லோருக்கும் சீரான காலணி, நல்ல உடை, எல்லோருக்கும் குளிருக்கு அடக்கமான இருப்பிடங்கள். எல்லோரும் மனச் சாட்சிப்படி வேலை செய்ய வேண்டும், (தமது வேலையைத் தட்டிக் கழிப்பவன் உட்பட) கயவாளி ஒருவன் கூட சுதந்திரமாக இருக்க அனுமதிக்கக் கூடாது, அவன் சிறையிலடைக்கப்பட வேண்டும் அல்லது மிகவும் கடுமையான வகைப்பட்ட கட்டாய உழைப்புத் தண்டனை அனுபவிக்கவிட வேண்டும். சோஷலிசத்தின் சட்டங்கள், விதிமுறைகளை மீறும் எந்த ஒரு செல்வந்தனும் கயவாளி அடைந்த கதியில் இருந்து தப்பி விட அனுமதிக்கக் கூடாது, நீதிப்படிச் செல்வந்தனுக்கும் அதே கதிதான் ஏற்பட வேண்டும். ''வேலைசெய்யாதவனுக்கு உணவில்லை''. இதுவே சோஷலிசத்தின் நடைமுறைக் கட்டளையாகும். இவ்வாறுதான் காரியங்கள் நடைமுறையில் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். நமது ''கம்யூன்கள்'', நமது தொழிலாளர் விவசாயி அமைப்பாளர்கள் பெருமிதம் கொள்ள வேண்டிய நடைமுடை வெற்றிகள் இவையே. இது குறிப்பாயும் அறிவாளிகளிடையிலான அமைப்பாளர்களுக்குப் பொருந்தியதாகும் (குறிப்பாயும், காரணம், அவர்கள் தமது பொதுவான கட்டளைகள் மற்றும் தீர்மானங்கள் பற்றி மிகவும் அதிகமாக, அளவுக்கு மேல் மிகவும் அதிகமாகப் பெருமிதம் கொள்ளும் வழக்கமுடையவர்கள்).

கணக்கு வைக்கவும் செல்வந்தர்கள், கயவாளிகள் மற்றும் சோம்பேறிகளைக் கண்காணிக்கவும் ஆயிரக்கணக்கான நடைமுறை வடிவங்களும் முறைகளும் வகுக்கப்பட வேண்டும், கம்யூன்களாலேயே, நகரத்திலும் நாட்டுப் புறத்திலுமான சிறிய அலகுகள் மூலமே நடைமுறையில் சோதிக்கப்பட வேண்டும். பல்வகைத் தன்மை இங்கு பயனுறுதித்தன்மைக்கு உத்தரவாதமாக, தனியொரு பொது நோக்கத்தைச் சாதனையாக்குவதற்கான வெற்றிக்கு வாக்குறுதியாக, ருஷ்யா என்னும் நிலப்பரப்பில் கயவாளிகள், செல்வந்தராகிய மூட்டைப் பூச்சிகள், இத்தியாதி எல்லா கேடுசூழ் பூச்சி புழுக்

களை அகற்றிச் சுத்தப்படுத்தும் சாதனமாக விளங்குகிறது. ஓர் இடத்தில் பத்துச் செல்வந்தர்கள், ஒரு டஜன் கயவாளிகள், வேலைக்கு மட்டம் போடும் (போக்கிரிகளைப் போல பெத்ரோகிராதில் குறிப்பாகக் கட்சி அச்சகங்களில் வேலைக்கு மட்டமடிக்கும் அச்சுக் கோப்போர் தோரணையில்) அரை டஜன் தொழிலாளர்கள் சிறையில் தள்ளப்படுவர். இன்னொரு இடத்தில் அவர்கள் கக்கூசுகளைக் கழுவும்படி ஏவப்படுவர். மூன்றாவது இடத்தில் அவர்கள் தண்டனைக் காலம் முடிந்து வந்த பின் ''மஞ்சள் சீட்டுகள்'' வழங்கப்பட்டு அவர்கள் திருந்தும் வரை தீங்கு விளைவிக்கும் நபர்கள் என்பதாக எல்லோரும் கண்காணிக்கும்படி வைக்கப்பட்டிருப்பர். நாலாவது இடத்தில் சோம்பேறிகளில் பத்தில் ஒருவர் அந்த இடத்திலேயே சுடப்படுவர். ஐந்தாவது இடத்தில் கலவையான முறைகள் கையாளப்படும். தற்காலிக விடுதலை மூலம் திருந்தக் கூடியவர்களான செல்வந்தர்கள், பூர்ஷ்வா அறிவு ஜீவிகள், கயவாளிகள், போக்கிரிகள் விரைவில் திருந்திக் கொள்வதற்கு உரிய வாய்ப்பு அளிக்கப்படுவர். எந்த அளவுக்கு அதிகமாகப் பல்வகைத் தன்மை இருக்குமோ அந்த அளவுக்கு நமது பொது அனுபவம் மேலும் சிறப்பாகவும் அதிகச் செழுமையாகவும் இருக்கும், சோஷலிசத்தின் வெற்றி மேலும் உறுதியானதாயும் அதிக துரிதமானதாயும் விளங்கும். நடைமுறையால்—நடைமுறையால் மட்டுமே வகுக்க முடியும்—போராட்டத்துக்கான சிறந்த முறைகளையும் வழிகளையும் மேலும் எளிதாக வகுக்க முடியும்.

பட்டினியால் வாடும் மக்கள் இல்லாத, வேலையின்றித் திண்டாடுவோர் இல்லாத, சோம்பேறிச் செல்வந்தர் இல்லாத, அறிவுஜீவிகள் என்று தம்மை அழைத்துக் கொள்ளும் முதலாளி வர்க்கத்தின் வெறுக்கத்தக்க அடிவருடிகளும் நாச வேலை செய்வோரும் இல்லாத எந்தக் கம்யூன், எந்தப் பெரு நகர வட்டாரம், எந்த ஆலை அல்லது எந்தக் கிராமம் இருக்கிறது? தொழிலாளர் உற்பத்தித் திறனை உயர்த்தவும் ஏழைகளுக்கு நல்ல புதிய வீடுகள் கட்டித் தரவும் செல்வந்தர் வீடுகளில் ஏழைகளைக் குடி வைக்கவும் ஏழைக் குடும்பங்களின் ஒவ்வொரு குழந்தைக்கும் முறையாக ஒரு போத்தல் பால் வழங்கவும் எங்கே பெரும்பணி ஆற்றப்பட்டுள்ளது? இந்த அம்சங்களில்தான் கம்யூன்கள், குடி வாழ் கூட்டுகள், உற்பத்தியாளர்-நுகர்வாளர் சங்கங்கள், இணைப்புகள்,

தொழிலாளர்கள், படையாளர்கள், விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துக்கள் ஆகியவற்றுக்கிடையே நேசப்போட்டி வளர வேண்டும். இந்தப் பணியில் நடைமுறையில் தொண்டாற்ற தனி ஆற்றல் படைத்த அமைப்பாளர்கள் முன்வர வேண்டும், அரசு நிர்வாகத்தில் வேலை செய்ய அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும். மக்கள் மத்தியில் ஏராளமான தனி ஆற்றல் படைத்த அமைப்பாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கேவலம் அடக்கப்பட்டுக் கிடக்கிறார்கள். தமது ஆற்றல்களைப் பயன்படுத்த அவர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். அவர்களே அவர்கள் மட்டுமே மக்களின் ஆதரவுடன் ருஷ்யாவைப் பாதுகாக்க முடியும், சோஷலிச லட்சியத்தைப் பாதுகாக்க முடியும்.

*டிசம்பர் 24-27, 1917ல்*
*(ஜனவரி 6-9, 1918)* எழுதப்பட்டது

## கட்சிச் செயல்திட்ட நகலின் முதற்குறிப்பிலிருந்து மார்ச் 6—8, 1918

## சோவியத் ஆட்சியைப் பற்றிய பத்து ஆய்வுரைகள்

### சோவியத் ஆட்சியை வலுப்படுத்தி வளர்த்தல்

பாட்டாளி வர்க்கத்தினர் மற்றும் ஏழை விவசாயிகளின் (அரைகுறை பாட்டாளியின்) சர்வாதிகார வடிவமாக—அனுபவத்தால் சரிபார்க்கப்பட்ட, வெகுஜன இயக்கத்தாலும் புரட்சிகரப் போராட்டத்தாலும் முன்வைக்கப்பட்ட வடிவமாக—சோவியத் ஆட்சியை வலுப்படுத்தி வளர்த்தல்.

இந்த அரசாட்சி வடிவத்தின் மீது, இந்த புதிய அரசு முறையின் மீது வரலாற்று ரீதியாக விழுந்துள்ள கடமைகளை நிறைவேற்றுவதில்தான் (அதிக பரவலான, பூரணமான, திட்டமிட்ட நிறைவேற்றத்தில்தான்) வலுப்படுத்தலும் வளர்ச்சியும் அடங்கியிருக்க வேண்டும். அந்தக் கடமைகளாவன:

*(1)* முதலாளித்துவத்தால் ஒடுக்கப்பட்ட உழைப்பாளிகளையும் சுரண்டப்பட்ட வெகுஜனங்களையும் அவர்களை மட்டுமே, அதாவது தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள், அரைகுறைப் பாட்டாளிகள் ஆகியோரை மட்டுமே ஒன்று திரட்டி ஒழுங்கமைத்தல்; சுரண்டும் வர்க்கங்களையும் குட்டி முதலாளித்துவ பணக்காரப் பிரதிநிதிகளையும் இயல்பாகவே விலக்கிவிட வேண்டும்.

*(2)* ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் மிக செயல் பூர்வமான, சுறுசுறுப்பான, வர்க்க உணர்வுள்ள பகுதியையும் அரசு நிர்வாகத்தில் தத்துவ ரீதியாக இல்லாமல் நடைமுறை ரீதியாக சுதந்திரமாகப் பங்கேற்க ஒட்டுமொத்தமாக உழைக்கும் மக்கள் அனைவரையும் பயிற்றுவிக்க வேண்டிய அவர்களது முன்னணிப் படையையும் ஒன்றிணைத்தல்.

*(4) (3)* பாராளுமன்றவாதத்தை (சட்டமியற்றும் பணியை நிர்வாகப் பணியிலிருந்து பிரிக்கும் பொருளில்) ஒழித்தல்; சட்டமியற்றும் மற்றும் நிர்வாக அரசுப் பணிகளை இணைத்

தல். நிர்வாகத்தை சட்டமியற்றும் அமைப்புடன் ஒன்றிணைத்தல்.

(3) (4) அரசாட்சி, அரசு நிர்வாகத்தின் முழு இயந்திரத்திற்கும் வெகுஜனங்களுக்குமிடையே முந்தைய ஜனநாயக முறைகளில் இருந்ததைக் காட்டிலும் அதிக நெருக்கமான தொடர்பு.

(5) மக்களிடமிருந்து மிகக் குறைவாகப் பிரிக்கப்பட்ட தொழிலாளர் விவசாயிகளின் ஆயுதப் படையை அமைத்தல் (சோவியத்துக்கள் = ஆயுதந்தாங்கிய தொழிலாளர்களும் விவசாயிகளும்). மக்கள் அனைவரையும் ஆயுதபாணிகளாக்குவதை முழுமையாக நிறைவேற்றுவதற்கான முதல் நடவடிக்கையாக பொதுமக்களின் ஆயுதத்தரிப்பை ஒழுங்கமைத்தல்.

(6) குறைவான சம்பிரதாயங்கள், எளிய தேர்வு, திரும்பியழைத்தல் மூலம் அதிக முழுமையான ஜனநாயகம்.

(7) தொழில்களுடனும் பொருளாதார உற்பத்தி அலகுகளுடனும் நெருக்கமான (மற்றும் நேரிடையான) தொடர்பு (தொழிற்சாலைகளில், ஸ்தல விவசாய மற்றும் குடிசைத் தொழில் வட்டங்களில் தேர்தல்கள்). இந்த நெருங்கிய தொடர்பு ஆழ்ந்த சோஷலிச மாற்றங்களை நிறைவேற்றும் வாய்ப்பினைத் தருகிறது.

(8) (முழுமையாக இல்லாவிட்டாலும் இது ஓரளவு முன்னதில் அடங்கியுள்ளது)—அலுவலகச் சடங்குகளை அகற்றும் வாய்ப்பு, அதைத் தவிர்த்தல், இந்த வாய்ப்பை நிறைவேற்றத் துவங்குதல்.

(9) ஜனநாயகத்தைப் பற்றியப் பிரச்சினைகளில் மையக் கருத்தை, முதலாளிகளுக்கும் பாட்டாளிகளுக்கும், ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் இடையிலுள்ள அதிகாரப் பூர்வமான சமத்துவத்தை அதிகாரப்பூர்வமாக ஒத்துக் கொள்ளும் சடங்கிலிருந்து, உழைப்பாளிகளும் சுரண்டப் படும் மக்கள் அனைவரும் சுதந்திரத்தை (ஜனநாயகத்தை) பயன்படுத்துவதற்கான நடைமுறை ரீதியான நிறைவேற்றத்திற்கு மாற்றுதல்.

(10) சோவியத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் சோவியத்தின் கூட்டங்களில் பங்கேற்பதோடு கூட அரசு நிர்வாகத்தில் நிலையான வேலையைக் கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டும் என்பதிலும்—பின்னர், சோவியத் ஸ்தாபனத்தில்

பங்கேற்பதற்கும் (உழைப்பாளிகளின் ஸ்தாபனங்களுக்குக் கட்டுப்பட்டிருக்கும் நிபந்தனையின் கீழ்) அரசு நிர்வாகத்திற்கு சேவை புரியவும் மக்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக படிப்படியாகக் கவரப்பட வேண்டும் என்பதிலும் சோவியத் அரசு முறையின் இனிமேலான வளர்ச்சி அடங்கியிருக்க வேண்டும்.

*1918ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில்*
*எழுதப்பட்டது*

## தேசியப் பொருளாதாரக் கவுன்சில்களின் முதலாவது அகில ருஷ்யக் காங்கிரசில் ஆற்றிய உரை மே 26, 1918

(லெனினது வருகையைத் தொடர்ந்து பலத்த கரவொலி முழக்கம்.) தோழர்களே, முதன் முதலாக மக்கள் கமிசாரவையின் பேரால் தேசியப் பொருளாதாரக் கவுன்சில்களின் காங்கிரசுக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். (கரவொலி.)

தோழர்களே, தேசியப் பொருளாதாரத் தலைமைக் கவுன்சிலுக்கு இப்போது மிகவும் கடினமான ஆனால் மிகவும் கைமாறு தருகிற ஒரு பணி உள்ளது. அக்டோபர் புரட்சியின் ஆதாயங்கள் இன்னும் முன்செல்லும் அளவுக்கு, அது தொடங்கிவைத்த எழுச்சி மேலும் திர்க்கமடையும் அளவுக்கு, சோஷலிஸ்டுப் புரட்சியின் சாதனைகள் மேலும் உறுதியாக நாட்டப்படும் அளவுக்கு, சோஷலிஸ்டு அமைப்பு கெட்டிப்படும் அளவுக்குத் தேசியப் பொருளாதாரக் கவுன்சில்களின் பங்கு அதிகமாகும், உயர்வுபெறும் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை; அரசு நிறுவனங்களில் எல்லாம் வைத்து இவை மட்டுமே நிலைத்திருக்கும். சோஷலிஸ்டு அமைப்பு நிறுவப்படுவதை நாம் நெருக்கமாக அணுகி வரும் போது, முற்றிலும் நிர்வாகம் சார்ந்த பொறியமைவின், நிர்வாகத்தில் முழுமையாக ஈடுபட்டுள்ள ஒரு பொறியமைவின் தேவை குறையும் போது இவற்றின் நிலை மேலும் நிலைத்து நிற்கக் கூடியதாக மாற்றமுறும். சுரண்டலாளர்களின் எதிர்ப்பு இறுதியாகத் தகர்க்கப்பட்ட பிறகு, உழைக்கும் மக்கள் சோஷலிஸ்டு உற்பத்தியை ஒழுங்கமைக்கத் தெரிந்து கொண்ட பிறகு இந்த நிர்வாகப் பொறியமைவு, இச்சொல்லின் சரியான, கறாரான, குறுகிய பொருளில் பழைய அரசின் இந்தப் பொறியமைவு மடிந்தழிவது திண்ணம். அதேபோதில் தேசியப் பொருளாதாரத் தலைமைக் கவுன்சில் மாதிரியான பொறியமைவு நிச்சயமாயும் வளரும்

வளமுறும் வலிமையடையும், ஸ்தாபனத் திரட்சியுள்ள சமூகத்தின் எல்லாப் பிரதானச் செயல்களையும் நிறைவேற்றும்.

இதனுல்தான் தோழர்களே, நாம் நமது தேசியப் பொருளாதாரத் தலைமைக் கவுன்சில் மற்றும் வட்டாரக் கவுன்சில்களின் அனுபவத்தை, அவை நெருக்கமாயும் பிரிக்கவொண்ணு முறையிலும் தொடர்பு பூண்டுள்ள செயல்களுடன் சேர்த்துப் பார்க்கும் போது, பல காரியங்கள் முடிவுருமல், முழுமையடையாமல், ஒழுங்கமையாமல் இருந்த போதிலும் நாம் நம்பிக்கை இன்மை சார்ந்த முடிவுகளுக்கு வருவதற்கான அற்பமான அடிப்படை கூட இல்லை என்று நான் கருதுகிறேன். தேசியப் பொருளாதாரத் தலைமைக் கவுன்சில் தனக்குத்தானே வகுத்து வைத்துக் கொள்ளும் பணி, பிராந்திய மற்றும் வட்டாரக் கவுன்சில்கள் எல்லாம் தமக்குத்தாமே வகுத்து வைத்துக் கொள்ளும் பணி மிகப் பேரளவானதாயும் சர்வாம்சமானதாயும் இருப்பதன் காரணமாக, நாம் எல்லோரும் உற்று நோக்குவதில் கவலைதரக் கூடிய எதுவும் அறவே இல்லை. மிகப் பல தடவை—நமது கருத்து நிலையில் இருந்து நிச்சயமாயும் ஒருவேளை மிகவும் அடிக்கடி—''மூன்று முறை அள ஒரு தரம் வெட்டு'' என்ற பழமொழி பிரயோகிக்கப்படவில்லை. துரதிருஷ்டவசமாக அந்தப் பழமொழியில் வெளியிட்டிருப்பது போன்று சோஷலிஸ்டு வழிகளில் பொருளாதாரத்தை ஒழுங்கமைப்பது சம்பந்தமான காரியம் அத்தனை எளிதானதல்ல.

சகல ஆட்சியதிகாரமும்—இந்தத் தடவை அரசியல், பிரதானமாயும் அரசியல் ஆட்சியதிகாரம் மட்டுமல்ல, ஆனுல் பொருளாதார ஆட்சியதிகாரமும், அதாவது அன்ருட மானுட வாழ்க்கையின் ஆக ஆழமான அடித்தளங்கள் மீதே பாதிப்புச் செலுத்தும் ஆட்சியதிகாரம்—ஒரு புதிய வர்க்கத்திடம் மாற்றி ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த வர்க்கம் மனிதகுல வரலாற்றில் முதல் தடவையாக மக்கள் தொகையின் மிகப்பெரிய பெரும்பான்மையின், உழைக்கும் மற்றும் சுரண்டப்படும் மக்களின் முழுத் திரளுக்கும் தலைவனுகத் திகழ்கிறது. இந்த நிலையில் நமது கடமைகள் மேலும் சிக்கலுறுகின்றன. கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையின் ஆக ஆழமான அடித்தளங்களை முற்றிலும் புதிய வழிகளில் நாம் ஒழுங்கமைக்க வேண்டியுள்ள போது நம்மை எதிரிடும் ஸ்தாபனக் கடமைகளின் ஆக உயர் முக்கியத்துவமும்

உயர் கடினமும் காரணமாக ''மூன்று முறை அள ஒரு தரம் வெட்டு'' என்ற பழமொழியில் போன்று அவ்வளவு எளிதாகக் காரியங்களை ஏற்பாடு செய்வது சாத்தியமல்ல என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஒரு சாதனத்தை எண்ணற்ற தடவைகள் அளந்து விட்டுப் பிறகு இறுதியாக அளக்கப்பட்டுப் பொருத்தப்பட்டதை வெட்டிவிட்டுப் பொருத்தும் நிலையில் நாம் நிச்சயமாயும் இல்லை. நாம் முன்னேறிச் செல்லும் போக்கில் நமது பொருளாதாரக் கட்டமைவை நிர்மாணிக்க வேண்டும். பல்வேறு நிறுவனங்களைத் தேர்ந்து ஆராய வேண்டும், அவற்றின் வேலையைக் கவனிக்க வேண்டும், உழைக்கும் மக்களின் பொது அனுபவத்தால், எல்லாவற்றுக்கும் மேலாக அவற்றின் வேலையின் பலன்களை வைத்துப் பரிசிலிக்க வேண்டும். நாம் முன்னேறிச் செல்லும் போக்கில், மேலும் சுரண்டலாளர்களின் ஆவேசமான போராட்டமும் வெறித்தனமான எதிர்ப்பும் உள்ள நிலைமையில் இதைச் செய்ய வேண்டும். முதலாளித்துவச் சுரண்டலின் கடைசிச் சொத்தைப் பல்லைப் பிடுங்கி எடுக்கக் கூடிய தருணத்தை—நமது பொருளாதாரக் கட்டமைவைக் கட்டுவதை—நாம் எந்தளவு நெருங்கி வருகிறோமோ அந்தளவு சுரண்டலாளர்களின் வெறியாட்டமும் அதிகரிக்கிறது. ஒரு குறுகிய காலகட்டத்திற்கு உள்ளேயே தேசியப் பொருளாதாரத்தின் பல்வேறு கிளைகளின் மாதிரிகள், ஒழுங்கு விதிகள், நிர்வாக அமைப்புகளைப் பல தடவைகள் நாம் மாற்றம் செய்ய வேண்டி ஏற்பட்ட போதிலும், இந்த நிலைமைகளில் நம்பிக்கையின்மைக்குச் சிறிதளவும் ஆதாரம் இல்லை என்பது புரிந்து கொள்ளக் கூடியதே. இருப்பினும் முதலாளி வர்க்கத்தினரும் தமது சிறந்த உணர்வுகள் புண்படுத்தப்பட்டதாகக் கருதும் சுரண்டலாளர்களும் வன்மத்துடன் வெடித்துக் குமுறுவதற்கு இது பெருமளவு இடம் தருகிறது. இந்த வேலையில்—உதாரணமாக, பிரதான தண்ணீர் வாரியத்தில்—மிகவும் நெருக்கமான, மிகவும் நேரடியான பங்கு வகிப்போர் ஒழுங்கு விதிகளையும் நிர்வாகத்தின் நியதிகள் மற்றும் சட்டங்களையும் மூன்று தடவை மாற்றுவதை எப்போதும் திருப்திகரமாக இருப்பதாகக் கருத முடியாது. இத்தகைய வேலையில் இருந்து பெறும் திருப்தி பெரிதல்ல. அரசாணைகளை மிகவும் அடிக்கடி மாற்றும் நேரடியான பொல்லாங்கில் இருந்து நாம் ஓரளவுக்கு நம்மை நாமே விலக்கிக் கொண்

டும், அதன் சொந்தமான, இன்னும் போதாததாக இருக்கும் சக்திகளின் உதவிகொண்டு ருஷ்யப் பாட்டாளி வர்க்கம் செய்து முடிக்க வேண்டியிருக்கும் பேரளவான, உலக வரலாற்று முக்கியத்துவம் உள்ள கடமையை மேலும் சற்று ஆழமாகப் பார்ப்போமானால், பல்வேறு நிர்வாக முறைகளிலும் பல்வேறு வடிவிலான கட்டுப்பாட்டிலும் இன்னும் பல மாற்றங்களைச் செய்வதும் அவற்றை நடைமுறையில் சோதிப்பதும் தவிர்க்க முடியாதது என்பது உடனடியாகப் புரிந்துகொள்ளக் கூடியதாகும். இத்தகைய பிரம்மாண்டமான பணியில் நாம் முன்கூட்டியே நிர்ணயம் செய்த நெறிமுறைகளுக்கு ஏற்ப ஒரே அடியில் புதிய சமுதாய அமைப்பின் ஸ்தாபன வடிவங்களை உடனடியாக நிலைநாட்டி உருவாக்க முடியும் என்று என்றுமே உரிமை பாராட்டி இருக்க முடியாது; எதிர்காலத்தின் வாய்ப்புகள் குறித்து என்றேனும் எழுதியுள்ள விவேகமுள்ள சோஷலிஸ்டு எவரும் இதை என்றுமே கருதி இருக்க முடியாது.

நமக்குத் தெரிந்திருந்தது அனைத்தும், முதலாளித்துவ சமூகம் பற்றிய சிறந்த நிபுணர்கள், அதன் வளர்ச்சியை முன்னறிந்து கூறிய மாபெரும் சிந்தனையாளர்கள் நமக்குத் துல்லியமாகச் சுட்டிக் காட்டியதுமான எல்லாம் என்னவெனில், இந்த மாற்றம் வரலாற்று ரீதியாகத் தவிர்க்க முடியாதது என்பதும் இது ஒரு குறிப்பிட்ட முக்கியமான வழியில் நடைபெற வேண்டும் என்பதும் உற்பத்தி சாதனங்களிலான தனியார் உடைமை உரிமை வரலாற்று ரீதியில் அழிந்தே திரும் என்பதும் அது நிச்சயம் தகர்ந்தழிய வேண்டும், சுரண்டலாளர்கள் தவிர்க்க முடியாத வகையில் உடைமை நீக்கம் செய்யப்படுவார்கள் என்பதும் ஆகும். இது விஞ்ஞான ரீதியான துல்லியத்துடன் நிலைநாட்டப்பட்டது. நாம் சோஷலிசத்தின் பதாகையைப் பற்றிக் கொண்ட போது, நாம் நம்மை சோஷலிஸ்டுகள் என்று பறைசாற்றிக் கொண்ட போது, நாம் சோஷலிஸ்டுக் கட்சிகளை நிறுவிக் கொண்ட போது, நாம் சமுதாயத்தை மாற்றி அமைத்த போது—இதை நாம் அறிந்திருந்தோம். சோஷலிஸ்டு மறு சீரமைப்பை நோக்கிச் செயல்படும் நோக்கத்துடன் ஆட்சியதிகாரத்தை மேற்கொண்ட போது நாம் இதை அறிந்திருந்தோம். ஆனால் நமக்கு மாற்றங்களின் வடிவங்கள் பற்றியோ ஸ்தூலமான மறு சீரமைப்பின் வளர்ச்சி விகிதம் பற்றியோ தெரிந்திருக்க

முடியாது. இந்த விஷயத்தில் கூட்டு அனுபவம், லட்சோப லட்சம் பேரின் அனுபவம் மட்டுமே நமக்கு நிர்ணயமான வழிகாட்டுதலே வழங்க முடியும். நமது பணிக்கு, சோஷலிசத்தை நிர்மாணிக்கும் பணிக்கு, நிலப்பிரபுத்துவ சமுதாயத்திலும் முதலாளித்துவ சமுதாயத்திலும் வரலாற்றைப் படைத்தவர்களான அந்த உயர் பகுதிகளைச் சேர்ந்த நூறாயிரம் பேர்களின் அனுபவம் போதுமானதல்ல என்பதே இதற்குக் குறிப்பான காரணமாகும். அவர்களது இந்த வழியில் நாம் முன்னேறிச் செல்ல முடியாது என்பதற்குத் திட்டவட்டமான காரணம், நாம் கூட்டு அனுபவத்தை, லட்சோப லட்சம் உழைக்கும் மக்களின் அனுபவத்தைச் சார்ந்து நிற்கிறோம் என்பதாகும்.

எனவே, சோவியத்துக்களின் பிரதான அடிப்படை பணியான ஸ்தாபனப் பணி நம் மீது பரந்த அளவிலான சோதனைகள், பரந்த அளவிலான நடவடிக்கைகள், பரந்த அளவிலான மாற்றங்கள், பரந்த அளவிலான இடர்ப்பாடுகள் ஆகியவற்றை தவிர்க்க முடியாத வகையில் சுமத்தும் என்பதையும் குறிப்பாயும் ஒவ்வொரு நபரையும் அவருக்கு உரிய சரியான இடத்தில் எப்படிப் பொருத்துவது என்ற பிரச்சினை சம்பந்தமாக இந்த இடர்ப்பாடுகள் சுமத்தப்படும் என்பதையும் நாம் அறிவோம். ஏனென்றால் இதைப் பற்றிய அனுபவம் நமக்கு இல்லை, இங்கு ஒவ்வொரு நடவடிக்கையையும் நாமே வகுத்துக் கொள்ள வேண்டும். இந்தப் பாதையில் நாம் செய்யும் தவறுகள் எந்தளவுக்குக் கடுமையாக இருக்கின்றனவோ அந்த அளவுக்கு அதிகமாக உறுதி நம்பிக்கை அதிகரிக்கும். தொழிற்சங்கங்களில் அங்கத்தினர் தொகை அதிகரிக்குந்தோறும், கூடுதலாக வரும் ஒவ்வொரு ஆயிரம் பேரும், கூடுதலாக வரும் ஒவ்வொரு நூறாயிரம் பேரும் இதுகாறும் மரபுக்கும் வழக்கத்திற்கும் ஏற்ப வாழ்ந்தவர்களான உழைக்கும் மக்களின், சுரண்டப்படும் மக்களின் முகாமில் இருந்து சோவியத் அமைப்புகளை நிர்மாணிப்போர் முகாமில் சேர்ந்து வரும்போது தகுதியானோர் என்று நிரூபிக்கப்பட்டு சரியான வழியில் வேலையை ஒழுங்கமைக்கக் கூடியவர்களான மக்களின் தொகை அதிகரித்துவரும்.

தேசியப் பொருளாதாரக் கவுன்சில், தேசியப் பொருளாதாரத் தலைமைக் கவுன்சில் முன்பாக குறிப்பாயும் அடிக்கடி எழுந்து வரும் இரண்டாம் பட்சமான பணிகளில் ஒன்றை,

பூர்ஷ்வா நிபுணர்களைப் பயன்படுத்துவது சம்பந்தமான பணியை எடுத்துக் கொள்வோம். நாம் எல்லோரும், குறைந்த பட்சம் விஞ்ஞானம் மற்றும் சோஷலிசத்தின் அடிப்படை மீது தமது நிலையை மேற்கொள்வோர், சர்வதேச முதலாளித்துவம் உழைப்பின் பொருளாயத தொழில்நுட்ப முன் தேவைகளை எந்தளவுக்கு வளர்த்திருக்கிறதோ, அதை விஞ்ஞானத்தை அடிப்படையாக்கிப் பேரளவில் ஒழுங்கமைத்து மிகப் பெருமளவிலான விஞ்ஞான போதனை பெற்ற நிபுணர்களைப் பயிற்றுவித்துள்ளதோ அந்த அளவுக்கு மட்டுமே, அப்போது மட்டுமே இப்பணியை நிறைவேற்ற முடியும் என்பதை அறிவோம். இது இல்லாமல் சோஷலிசம் சாத்தியம் அல்ல என்பதை நாம் அறிவோம். கடந்த அரை நூற்றாண்டு காலமாக முதலாளித்துவத்தின் வளர்ச்சியை உன்னிப்பாகக் கவனித்து வந்துள்ளவர்களும் சோஷலிசம் தவிர்க்கவொண்ணாதது என்ற முடிவுக்கு மீண்டும் மீண்டும் வந்திருப்பவர்களுமான அந்தச் சோஷலிஸ்டுகளின் நூல்களை நாம் திரும்பவும் படிப்போமானால் அவர்கள் அனைவரும் எவ்விதமான விதிவிலக்கும் இன்றி, விஞ்ஞானத்தை அதன் பூர்ஷ்வாத் தளைகளில் இருந்து, மூலதனத்துக்கு அடிமைப் பட்டுக் கிடப்பதில் இருந்து, நீசத்தனமான முதலாளித்துவப் பேராசையின் நலன்களுக்கு அடிமையாக இருப்பதில் இருந்து விடுவிக்க வல்லது சோஷலிசம் மட்டுமே என்று சுட்டியுரைத்து வந்திருக்கிறார்கள் என்பதை நாம் காண முடியும். சமூக உற்பத்தியும் பொருள்களின் வினியோகமும் விஞ்ஞான பூர்வமான வழிகளில் பரவலாக விஸ்தரிக்கப்படுவதும் அவை உழைக்கும் மக்களின் வாழ்க்கையை எளிதாக்கி கூடுமான வரை அவர்களது நல்வாழ்வை மேம்படுத்தும் நோக்கத்துக்கு உண்மையில் கீழடங்கியதாக இருக்கும்படி செய்வதும் சோஷலிசத்தால் மட்டுமே சாத்தியம். சோஷலிசத்தால் மட்டுமே இதை அடைய முடியும். இதை அது நிச்சயம் அடைய வேண்டும் என்பதை நாம் அறிவோம். இந்த உண்மையைப் புரிந்து கொள்வதில் தான் மார்க்சியத்தின் முழுமையான இடர்ப்பாடும் அதன் முழு வலிமையும் காணக்கிடக்கின்றன.

அதை எதிர்க்கும் நபர்களைச் சார்ந்து நிற்கும் அதே பொழுதில் இதை நாம் அடைந்தாக வேண்டும். காரணம், மூலதனம் எந்த அளவுக்குப் பெரிதாக மாறுகிறதோ அந்த

அளவுக்கு முதலாளி வர்க்கம் தொழிலாளர்களை அதிகமாக அடக்குகிறது. இப்போது ஆட்சியதிகாரம் தொழிலாளர்கள், ஏழை விவசாயிகளின் கரங்களில் இருப்பதாலும், அரசாங்கம் மக்களின் ஆதரவோடு தனக்குத்தானே பணிகளை வகுத்துக் கொள்வதாலும், நாம் இந்த சோஷலிஸ்டு மாற்றங்களை, பூர்ஷ்வா சமூகத்தில் பயிற்சி பெற்ற, வேறு நிலைமைகளை அறியாத, வேறு எந்த ஒரு சமூக அமைப்பைப் பற்றியும் கருதிப் பார்க்க முடியாத பூர்ஷ்வா நிபுணர்களின் உதவியுடன் சாதனையாக்க வேண்டும். எனவே இந்த நிபுணர்கள் தமது வேலையில் முற்றமுழு நேர்மையோடும் விசுவாசத்தோடும் இருக்கும் இடங்களில் கூட அவர்கள் ஆயிரக்கணக்கான பூர்ஷ்வாத் தப்பெண்ணங்களால் நிரம்பிக் கிடக்கிறார்கள், தாமே காணவியலாத ஆயிரக்கணக்கான பந்தங்களால் பூர்ஷ்வாச் சமூகத்துடன் தொடர்பு பூண்டிருக்கிறார்கள். இந்தச் சமூகம் மடிந்து வருகிறது, அழிவுற்று வருகிறது, எனவே மூர்க்கமான எதிர்ப்பைத் தோற்றுவித்து வருகிறது.

இந்த முயற்சிகள், சாதனைகள் சம்பந்தமான இடர்ப்பாடுகளை நாம் நம்மிடமிருந்தே மறைத்துக்கொள்ள முடியாது. இதைக் குறித்து எழுதியுள்ள சோஷலிஸ்டுகள் பலர். ஆனால் தொழிலாளி வர்க்கம் ஆட்சியதிகாரத்தை எடுத்துக் கொள்ளும் போது, மிகவும் செழுமையான, வரலாற்று முறையில் தவிர்க்க முடியாத நமக்கு அவசியமான, முதலாளித்துவத்தால் சேகரம் செய்யப்பட்ட கலாச்சாரம், ஞானம் மற்றும் தொழில் நுணுக்கக் களஞ்சியத்தின் ஒட்டு மொத்தத்தையும் முதலாளித்துவத்தின் கருவி என்பதில் இருந்து சோஷலிசத்தின் கருவியாக மாற்றும் கடமையினை தொழிலாளி வர்க்கம் தனது பணியாக மேற்கொள்ளும் போது, அதை எதிரிடும் இந்த ஸ்தூலமான நடைமுறை இடர்ப்பாடு சம்பந்தமாக எதிர்கால சோஷலிஸ்டு சமூக அமைப்புப் பற்றிய எந்த ஒரு சோஷலிஸ்டின் நூலிலோ எந்த ஒரு பிரபல சோஷலிஸ்டின் கருத்திலோ சுட்டிக் காட்டப்பட்டிருப்பதைக் கண்டதாக எனக்கு நினைவு இல்லை. இதை ஒரு பொது சூத்திரத்தில், கருத்தியலான அறிவாய்வில் செய்வது எளிது. ஆனால் உடனே மடிந்துவிடாமல் மரணம் நெருங்க நெருங்க மிகவும் மூர்க்கமான எதிர்ப்பினைத் தொடுக்கும் முதலாளித்துவத்தை எதிர்த்த போராட்டத்தில் இந்தப் பணியைச் செய்யப் பிரம்மாண்ட முயற்சிகள் தேவை. இந்தத் துறையில் சோதனை

கள் நடைபெற்று ஏராளவான பிழைகளை நாம் திரும்பத் திரும்பத் திருத்திக் கொள்வோமானால் இது தவிர்க்க முடியாதது. காரணம், நாம் தேசியப் பொருளாதாரத்தின் இந்த அல்லது அந்தத் துறையில் நிபுணர்களை முதலாளித்துவத்தின் ஊழியர்களாக இருப்பதில் இருந்து உழைக்கும் மக்களின் ஊழியர்களாக, அவர்களது ஆலோசகர்களாக உடனடியாக மாற்ற முடியாது. இதை உடனடியாகச் செய்ய முடியாததால் அது மிகச்சிறிய அளவு நம்பிக்கை இன்மைக்குக் கூட இடமளித்தல் கூடாது. ஏனெனில் நாம் நமக்கென ஒருங்கு வித்துள்ள பணி உலக வரலாற்று இடர்ப்பாடும் முக்கியத்து வமும் உடைய பணியாகும். தனி ஒரு நாட்டில், ருஷ்யாவை விடக் குறைந்த அளவே பின்தங்கிய நாடாக அது இருந்த போதிலும், நாலாண்டுகள் நீடித்த முன் என்றும் கண்டிராத வேதனைமிகுந்த கடுமையான நாசகரமான போருக்குப் பிந்திய நிலைமைகளில் அன்றி மிகவும் சிறந்த நிலைமைகளில் நாம் வாழ்ந்து கொண்டிருந்த போதிலும் சரி, நாம் முற்றிலும் சொந்த முயற்சிகள் மூலமே சோஷலிஸ்டுப் புரட்சியைப் பூர்த்தி செய்திருக்க முடியாது என்பதை நாம் 'ார்க்காமல் இருக்கவில்லை. தற்போது ருஷ்யாவில் நடைபெற்றுவரும் சோஷலிஸ்டுப் புரட்சியுடன் மாறுபாடுற்று ்திகளின் தெட்டத்தெளிவான பொருத்தக் கேடைச் சுட்டிக்காட்டும் நபர் பழமைவாதியான ''கூட்டில் அடைத்த மனிதனை'' ஒத்தவனாக இருப்பார். அவரால் தமது இயலுணர்வுக்கு மிகையாகப் பார்க்க முடியாது. சக்திகளின் பொருத்தக் கேடுள்ள பல சம்பவங்கள் இல்லாமல் முக்கியத்துவம் உள்ள எந்த வரலாற்று மாற்றமும் ஏற்படுவதில்லை என்பதை அவர் மறந்து விடுகிறார். சக்திகள் புரட்சி வளரும் விதத்தில் போராட்டத்தின் போக்கில் வளர்கின்றன. ஒரு நாடு மிக ஆழமான மாற்றம் கொண்டுவரும் பாதையினை மேற்கொண்டு விட்டதெனில், முன்னாட்களில் கருத்தியலாயும் தத்துவார்த்த முறையிலும் எழுப்பப்பட்ட பணிகளை நடைமுறைப் பாங்கில் மேற்கொள்வது அந்த நாட்டுக்கும் அந்த நாட்டில் வெற்றியீட்டிய தொழிலாளி வர்க்கத்தின் கட்சிக்கும் பெருமை தருவதாகும். இந்த அனுபவம் என்றுமே மறக்கப் பட மாட்டாது. பொருள் உற்பத்தி முழுவதையும் தேசிய அளவில் ஒழுங்கமைக்கும் நடைமுறை வேலையில் தொழிற் சங்கங்களிலும் வட்டார அமைப்புகளிலும் இப்போது ஒன்று

சேர்ந்துள்ள தொழிலாளர்கள் பெற்றுவரும் அனுபவத்தை, ருஷ்யப் புரட்சியும் சர்வதேச சோஷலிஸ்டுப் புரட்சியும் கடந்து செல்லும் நிலைமாற்றங்கள் எத்துணை கடினமாக இருந்த போதிலும் சரி, பறித்துவிட முடியாது. இது வரலாற்றில் சோஷலிசத்தின் சாதனை என்று ஏற்கப்பட்டு விட்டது. இதன் மீது வருங்கால உலகப் புரட்சி தனது சோஷலிஸ்டு கட்டுமானத்தை நிறுவும்.

இன்னொரு பிரச்சினையை, ஒருக்கால் மிகவும் கடினமான ஒரு பிரச்சினையை, தேசியப் பொருளாதாரத் தலைமைக் கவுன்சில் நடைமுறைத் தீர்வு காண வேண்டிய பிரச்சினையை நான் குறிப்பிட விரும்புகிறேன். இது உழைப்புக் கட்டுப்பாடு பற்றிய பிரச்சினையாகும். சுருராகச் சொன்னல் இந்தப் பிரச்சினையைக் குறிப்பிடும் போது தொழிற்சங்கங்கள் தான், அவற்றின் ஆகப் பெரிய அமைப்புகளான உலோகத் தொழிலாளர் சங்கத்தின் மத்தியக் கமிட்டியும் அகில ருஷ்யத் தொழிற்சங்கக் கவுன்சிலும் தான், லட்சக்கணக்கான உழைக்கும் மக்களை ஒற்றுமைப்படுத்தியுள்ள உயர் தொழிற் சங்க அமைப்புகள் தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முதலில் சுதந்திரமாக வேலைசெய்யத் தொடங்கின என்பதை —இப்பிரச்சினை உலக வரலாற்று முக்கியத்துவம் உடையது—நாம் ஒப்புக்கொள்ள வேண்டும், மன நிறைவுடன் வற்புறுத்த வேண்டும். இதைப் புரிந்து கொள்ளும் பொருட்டு நாம் அந்த ஓரளவு தோல்விகள், சிறு தோல்விகளில் இருந்தும், தனிப்பட எடுத்துக் கொண்டால் வென்று சமாளித்தற்கரியது என்று தோன்றும் நம்பற்கரிய இடர்ப்பாடுகளில் இருந்தும் நம்மை நாமே விலக்கிக் கொள்ள வேண்டும். நாம் மேலும் உயர் மட்டத்திற்கு எழுச்சியுற்று சமூகப் பொருளாதார அமைப்பு முறைகளின் வரலாற்று மாற்றங்களை ஆய்வு செய்தல் வேண்டும். இந்தக் கோணத்தில் இருந்து மட்டுமே நாம் மேற்கொண்டுள்ள பணியின் அளப்பரிய தன்மையை சரியாகக் கணிக்க முடியும். இது வரையில் பண்ணை அடிமை ருஷ்யாவில் 1861 வரை இது தமது சொந்த விவகாரம் என்று கருதிய ஒரு சில நிலச்சுவாந்தர்களால் தீர்வு காணப்பட்டதான இந்தப் பணியை இந்தச் சந்தர்ப்பத்தில் சமூகத்தின் ஆக முன்னேறிய பிரதிநிதிகள், உழைக்கும், சுரண்டப்படும் மக்கள் தமது சொந்த முன்முயற்சியின் மீது தாமே மேற்கொண்டுள்ளனர் என்ற மெய் விவரத்தின்

பேரளவான முக்கியத்துவத்தை இதற்குப் பிறகு மட்டுமே சரியாகக் கணிப்பது சாத்தியமாகும். அந்த சமயத்தில் அரசு இணைப்பாக்கத்தையும் கட்டுப்பாட்டையும் கொண்டுவருவது அவர்களது விவகாரமாக இருந்தது.

இந்தக் கட்டுப்பாட்டைப் பண்ணையடிமைகளின் சொந்தக்காரர்களாயிருந்த நிலச்சுவாந்தர்கள் எப்படி உருவாக்கினார்கள் என்பதை நாம் அறிவோம். அது பெரும்பான்மையான மககளுக்கு ஒடுக்குமுறையாக, மானக்கேடாக, கடுங்காவல் சிறைத் தண்டனையின் நம்பற்கரிய கடும்வதையாக இருந்தது. பண்ணை அடிமை முறையில் இருந்து முதலாளித்துவப் பொருளாதாரத்திற்கான இந்த மாறுதல் கட்டம் முழுவதையும் நினைவுக்குக் கொண்டு வாருங்கள். நீங்கள் நேரடியாகப் பார்த்ததில் இருந்து—உங்களில் பெரும்பான்மையினர் நேரடியாகப் பார்த்திருக்க முடியாது என்ற போதிலும்—பழைய தலைமுறையினரிடமிருந்து நீங்கள் அறிந்து கொண்டதிலிருந்து 1861க்குப் பிறகு புதிய முதலாளித்துவப் பொருளாதாரத்துக்கான மாற்றம், பழைய பண்ணை அடிமை கட்டுப்பாட்டு குண்டாந்தடியிலிருந்து ஏற்பட்ட மாற்றம், மிகவும் அறிவற்றதான ஆணவம்பிடித்த மிருகத்தனமான மானமிழக்கச் செய்யும் மனிதர்களின் மீதான வன்முறையின் கட்டுப்பாட்டில் இருந்து முதலாளித்துவக் கட்டுப்பாட்டுக்கு, பட்டினியின் கட்டுப்பாட்டுக்கு, உண்மையில் முதலாளித்துவ அடிமைத்தனத்தின் கட்டுப்பாடான கட்டற்ற கூலிக்கமர்த்தல் எனப்படுவதற்கு மாறிச் செல்வது வரலாற்று ரீதியாக எவ்வளவு எளிதாகத் தோற்றமளித்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். இதற்குக் காரணம் மனிதகுலம் ஒரு சுரண்டலாளரிடமிருந்து இன்னொரு சுரண்டலாளருக்குக் கடந்து சென்றது. மக்கள் உழைப்பைச் சூறையாடும் சுரண்டும் ஒரு சிறுபான்மை மக்கள் உழைப்பைச் சூறையாடும் சுரண்டும் இன்னொரு சிறுபான்மைக்கு இடம் கொடுத்தது, நிலப்பிரபுக்கள் முதலாளிகளுக்கு இடமளித்தார்கள், ஒரு சிறுபான்மை இன்னொரு சிறுபான்மைக்கு இடமளித்தது. அதே போதில் உழைக்கும் சுரண்டப்படும் மக்கள் திரளினர் ஒடுக்கப்பட்டுக் கிடந்தனர். ஒரு சுரண்டலாளரின் கட்டுப்பாட்டிலிருந்து இன்னொரு சுரண்டலாளரின் கட்டுப்பாட்டுக்கு மாறுவதற்கும் கூட முயற்சி மிக்க பல ஆண்டுகள், பல பத்தாண்டுகள் இடைக்காலம் பிடித்தது. இந்தக் காலப் பகுதியில் பழைய

நிலச்சுவாந்தர்களான பண்ணையடிமைச் சொந்தக்காரர்கள், எல்லாம் பாழாகி அழிந்து வருகிறது எனவும் நாட்டைப் பண்ணை அடிமை முறை இல்லாமல் நிர்வகிக்க முடியாது எனவும் முற்றிலும் மனமாரக் கருதினர். அதே போதில் புதிய முதலாளித்துவ அதிபர் ஒவ்வொரு படியிலும் நடைமுறை இடர்ப்பாடுகளை எதிரிட்டு தனது முயற்சியால் பலன் இல்லை என்று அதைக் கைவிடலானுர். இந்த மாறுதல் கட்டத்தின் போதான இடர்ப்பாடுகளுக்கு முக்கியமான சான்று, உருப்படியான நிரூபணங்களில் ஒன்று, அந்தச் சமயத்தில் பயன்படுத்துவதற்குச் சிறந்த இயந்திரங்கள் வேண்டும் என்பதால் ருஷ்யா வெளிநாடுகளில் இருந்து இயந்திரங்களை இறக்குமதி செய்து இந்த இயந்திரங்களைக் கையாள ஆட்கள் இருக்கவில்லை, நிர்வாகிகள் இல்லை என்பது தெரிய வந்ததாகும். ருஷ்யா முழுதும் அருமையான இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமல் கிடந்ததை எவரும் பார்க்க முடிந்தது. பழைய பண்ணையடிமைக் கட்டுப்பாட்டில் இருந்து புதிய பூர்ஷ்வா-முதலாளித்துவக் கட்டுப்பாட்டுக்கு மாறிச் செல்வது இத்தனை கடினமாக இருந்தது.

எனவே, தோழர்களே, இந்த விவரத்தை இந்தக் கோணத்தில் இருந்து பார்ப்பீர்களானுல், நீங்கள் அந்தப் பேர்வழிகளால், அந்த வர்க்கங்களால், அந்த முதலாளி வர்க்கத்தினரால், அவர்களை அண்டிப்பிழைப்பவர்களால் தவருக வழிநடத்தப்பட மாட்டீர்கள். இவர்களது ஏகப் பணி பீதியை விதைப்பதும் மனச்சோர்வை விதைப்பதும் நமது வேலை முழுதையும் பொருத்தவரையில் பூரண மனச்சோர்வை ஏற்படுத்துவதும் அது பயனற்றது என்று தோன்றும்படி செய்வதும் ஆகும். இவர்கள் கட்டுப்பாடின்மை மற்றும் ஊழலின் ஒவ்வொரு சம்பவத்தையும் சுட்டிக்காட்டி அந்தக் காரணத்திற்காக புரட்சி பயனற்ற வேலை என்று அதைக் கைவிடுகின்றனர். மக்கள் திரளினர் ஒரு புதிய கட்டுப்பாட்டைப் படைத்து வரும்போது உலகில், வரலாற்றில் ஊழல் இல்லாத, கட்டுப்பாடின்மை இல்லாத, வேதனை தரும் சோதனைப் படிகள் இல்லாத உண்மையிலேயே மகத்தான தனி ஒரு புரட்சி என்றே இருந்தது போலக் கருதுகின்றனர் போலும். ஒரு புதிய கட்டுப்பாடு, உழைப்புக் கட்டுப்பாடு, தோழமைத் தொடர்பின் கட்டுப்பாடு, சோவியத் கட்டுப்பாடு லட்சக்கணக்கான உழைக்கும் சுரண்டப்

படும் மக்களால் உண்மையில் படைத்துருவாக்கப்படும் இந்தத் தொடக்க கட்டம் வரலாற்றில் முதல் தடவையாக எய்தப் பெற்றது என்பதை நாம் மறந்து விடக் கூடாது. இந்தத் துறையில் துரிதமான வெற்றி ஏற்பட்டுவிடும் என்று நாம் உரிமை பாராட்டவில்லை, எதிர்பார்க்கவும் இல்லை. இந்தப் பணி முழுமையுற ஒரு முழு வரலாற்று சகாப்தம் பிடிக்கும் என்பதை நாம் அறிவோம். இன்னும் பூர்ஷ்வா அமைப்பாக இருக்கும் ஒரு நாட்டில் முதலாளித்துவ சமூகத்தின் கட்டுப்பாட்டை உடைத்துவரும் இந்த வரலாற்று சகாப்தத்தை நாம் துவக்கிவிட்டோம். இந்த அழிக்கும் பணியில் வர்க்க உணர்வுடைய எல்லாத் தொழிலாளர்களும் மற்ற முழுமையான பாடுபடும் விவசாயிகள் அனைவரும் இயன்ற வகைகளில் எல்லாம் உதவிவருவது கண்டு பெருமை அடைகிறோம். உழைப்பாளிகளின் சுரண்டல் மற்றும் அடிமை முறையினை அடிப்படையாக்கிய இந்தக் கட்டுப்பாட்டை மாற்றி அதனிடத்தில் ஒன்றுபட்ட உழைப்பின் புதிய கட்டுப்பாட்டை, கோடிக்கணக்கான மக்கள் தொகை கொண்ட நாடான ருஷ்யா முழுவதன் ஒன்றுபட்ட ஸ்தாபனத் திரட்சியுள்ள தொழிலாளர்கள், உழைக்கும் விவசாயிகளின் கட்டுப்பாட்டை நிலைநாட்ட வேண்டும், இதை மேலிருந்து வரும் நெறிமுறைகள் விளைவாகவன்றி தமது சொந்த ஜீவிய அனுபவத்தின் நெறிமுறைகளின் மீது புரிதல் வேண்டும் என்று மக்கள் சுயவிருப்பமாகத் தமது சொந்த முன்முயற்சியால் உணர்வு வளர்ந்துவரும் சகாப்தத்தை நாம் துவங்கிவிட்டோம். இந்தப் பணியில் பேரளவான இடர்ப்பாடு உள்ளது. ஆனால் இது ஒரு பயனுள்ள பணியுமாகும். காரணம், இதை நாம் நடைமுறையில் நிறைவேற்றினால் மட்டுமே நாம் குழி தோண்டிப் புதைத்து வரும் முதலாளித்துவ சமூகத்தின் சவப்பெட்டியின் மீது கடைசி ஆணியை அறைந்தவர்களாவோம். (கரவொலி.)

*1918, மே 26ல் சொற்பொழிவாற்றியது*

# ருஷ்ய சோவியத் சமஷ்டி சோஷலிச குடியரசின் உயர் கல்வி நிலையங்களில் சேர்த்துக் கொள்வதைக் குறித்து

### மக்கள் கமிசாரவையின் தீர்மான நகல்

உயர் கல்வி நிலையங்களில் சேர விரும்புவர்களின் எண்ணிக்கை சாதாரணமான காலியிடங்களின் எண்ணிக்கையை விட அதிகமாயிருக்கும் பட்சத்தில் விருப்பமுள்ள அனைவருக்கும் கல்வி பயிலும் வாய்ப்பை அளிக்கக் கூடிய மிக அவசரமான நடவடிக்கைகளை எடுக்கவும் பணம் படைத்த வர்க்கங்களுக்கு சட்டரீதியாக மட்டுமின்றி நடைமுறை ரீதியாகவும் எந்தவித சலுகைகள் இல்லாமல் இருக்கவும் வகை செய்யக் கூடிய ஒரு சில தீர்மானங்களையும் நடவடிக்கைகளையும் எடுக்கும் பொறுப்பை மக்கள் கல்வி கமிசாரகத்துக்கு மக்கள் கமிசாரவை அளிக்கின்றது. முதலாவதாக, பாட்டாளி வர்க்கத்தினரின் மத்தியிலிருந்தும் மிக ஏழ்மையான விவசாயிகள் மத்தியிலிருந்தும் நபர்கள் கட்டாயம் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்; இவர்களுக்குப் பரவலான அளவில் உதவிப் பணம் வழங்கப்படும்.

*1918ஆம் ஆண்டு ஆகஸ்டு 2ஆம் தேதி எழுதப்பட்டது*

# தொழிற்சங்கங்களின் கடமைகளைப் பற்றி
## என்னும் ஆய்வுரைகளிலிருந்து

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த காலகட்டத்தில், குறிப்பிட்ட நிலைமைகளில் இருந்து தொழிற்சங்கங்கள் சம்பந்தமான கீழ்கண்ட கடமைகள் வெளிப்படுகின்றன.

தொழிற்சங்கங்களின் எந்தவிதமான ''நடுநிலைமையைப்'' பற்றிய பேச்சுக்கே இடமில்லை. நடுநிலைமையைப் பற்றிய எல்லாப் பிரச்சாரமும் ஒன்று எதிர்ப்புரட்சியைப் பாசாங்குத்தனமாக மூடி மறைப்பதாக இருக்கும், அல்லது முழு வர்க்க உணர்வின்மையின் தோற்றமாக இருந்திருக்கும்.

தொழிற்சங்கங்களில் உள்ள பின்தங்கிய அல்லது செயலற்ற, கம்யூனிஸ்டுகள் அல்லாதவர்களையும் ஒரு சில விவரங்களில் இன்னமும் குட்டிமுதலாளித்துவ தன்மையுடையவர்களாக இருக்கக்கூடிய உழைப்பாளிகளையும் நமது செல்வாக்கிற்கும் பொது பாட்டாளி வர்க்க கட்டுப்பாட்டிற்கும் உட்படுத்தும் வாய்ப்பினைத் தரும் அளவிற்கு தொழிற்சங்க இயக்கத்தின் முக்கியமான உட்கருவில் தற்போது நாம் போதுமான வலுவுள்ளவர்களாக இருக்கின்றோம்.

எனவே இப்போது முக்கியக் கடமை பலமுள்ள எதிரியின் எதிர்ப்பை முறியடிப்பதில் இல்லை, ஏனெனில் இப்போது சோவியத் ருஷ்யாவில் பாட்டாளி வர்க்க மற்றும் அரைகுறை பாட்டாளி வர்க்க வெகுஜனங்களிடையே இத்தகைய எதிரி இல்லை; இந்த முக்கியக் கடமை, உறுதியான, விடாமுயற்சியுள்ள, இன்னும் பரந்த கல்வி மற்றும் ஸ்தாபனப் பணியின் மூலம் பாட்டாளி வர்க்கத்திலும் அரைகுறைப் பாட்டாளி வர்க்கத்திலும் உள்ள குறிப்பிட்ட குட்டிமுதலாளித்துவ பிரிவினரின் தப்பெண்ணங்களைக் களைவதிலும் சோவியத் ஆட்சியின் இன்னமும் போதுமான அளவு இல்லாத பரந்த அடித்தளத்தை இடையறாது விரிவுபடுத்துவதிலும் (அதாவது அரசு நிர்வாகத்தில் நேரடியாகப் பங்கேற்கும் தொழிலாளிகள்,

மிக ஏழ்மையான விவசாயிகளின் எண்ணிக்கையை அதிகப் படுத்துவதிலும்)உழைப்பாளிகளின் பின்தங்கிய பிரிவினருக்குப் போதிப்பதிலும் (நூல்கள், விரிவுரைகள், பத்திரிகைகள் மூல மாக மட்டுமின்றி, நிர்வாகத்தில் நடைமுறை ரீதியாகப் பங்குகொள்வதன் மூலமாகவும்) பொதுவாக தொழிற்சங்க இயக்கத்தின் இந்தப் புதிய கடமைகளுக்காகவும் ஒப்பிட முடியா அளவிற்கு அதிகமான அரைகுறை பாட்டாளி வர்க்க வெகுஜனங்களை, உதாரணமாக மிக ஏழ்மையான விவசாயிகளைக் கவர்ந்திழுப்பதற்காகவும் புதிய ஸ்தாபன வழிமுறைகளைத் தேடிக் கண்டுபிடிப்பதிலும் அடங்கியுள்ளது.

உதாரணமாக, தொழிற்சங்க உறுப்பினர்கள் ஒருவர் பாக்கியில்லாமல் அனைவரையும் கமிசார் அலுவலகங்களின் மூலமாகவும் பறக்கும் கண்காணிப்புக் குழுக்களில் பங்கு கொள்வதன் மூலமாகவும் இன்னும் பல வழிகளிலும் கவர வேண்டும். வீட்டு வேலைக்காரர்களைக் கவர வேண்டும்—முதலில் கூட்டுறவுகளின் வேலையில், மக்களுக்கு மளிகைப் பொருட்கள் வினியோகத்தில், உணவுப் பொருள் உற்பத்திக் கண்காணிப்பில், போன்றவைகளில் பங்குகொள்ள, பின்னர் இன்னமும் பொறுப்பான, குறைந்த அளவு ''குறுகலான'' வேலைக்குக் கவர வேண்டும்—தேவையான அளவு இதைப் படிப்படியாகச் செய்ய வேண்டும் என்பது சொல்லாமலேயே அமையும்.

அரசு பணிக்குத் தொழிலாளர்களுடன் சேர்த்து ''நிபுணர்களையும்'' ஈடுபடுத்தி நிபுணர்களை மேற்பார்வையிட வேண்டும்.

மாறுநிலை வடிவங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ளப் புதிய ஸ்தாபன வரம்புகள் தேவைப்படுகின்றன. உதாரண மாக, கிராமப்புறத்தில் ஏழைகளின் கமிட்டிகள் மகத்தான பங்காற்றுகின்றன. எங்காவது சோவியத்துக்களுடன் இவற் றின் இணைப்பு, அரைகுறை பாட்டாளி வர்க்க வெகுஜனங்களை நிரந்தரமான ஸ்தாபன அமைப்பு வரம்பிற்கு வெளியே தள்ளி வைத்துவிடும் என்று அஞ்சுவதற்கு இடமுண்டு. கிராமங்களில் ஏழைகளை, அவர்கள் கூலித் தொழிலாளர்கள் இல்லை என்ற சாக்கை வைத்து ஸ்தாபனரீதியாக ஒன்றுபடுத் தும் கடமையிலிருந்து நாம் விலகக் கூடாது. உதாரணமாக, மிக ஏழ்மையானவர்களின் கூட்டமைப்புகள் போன்ற ஏழை களின் கூட்டமைப்புகளை (அவைகள் அதே ஏழைகள் கமிட்டி

களாக இருக்கட்டும்) உருவாக்குவதன் மூலம் புதிய முறைகளைக் கண்டுபிடிக்கலாம், கண்டுபிடிக்கத் தான் வேண்டும்; (a) ரொட்டி கள்ள வியாபாரத்திலும் ரொட்டியின் மீதான அதிக விலைகளிலும் நம்பிக்கையில்லாதவர்கள், (b) எல்லோருக்கும் பொதுவான நடவடிக்கைகள் மூலம் தங்களது வாழ்க்கையை மேம்படுத்த விழைபவர்கள், (c) பொதுவாக ஒன்றுசேர்ந்து நிலம் உழுவதை வலுப்படுத்த முயலுபவர்கள், (d) நகர்ப்புற தொழிலாளர்களுடன் நிரந்தர கூட்டைத் தேடுபவர்கள், இவர்களைப் போன்றவர்களைக் கொண்ட கூட்டமைப்புகளை உருவாக்கலாம்.

கிராமப்புற ஏழைகளின் இத்தகைய கூட்டமைப்பு அகில ருஷ்யத் தொழிற்சங்கக் கவுன்சிலின் தனி பிரிவாகி அது முற்றிலும் பாட்டாளி வர்க்க நபர்களை நசுக்கிவிடாமலிருக்கச் செய்யலாம். வடிவத்தை மாற்றலாம்; நடைமுறைக்கேற்ற வடிவத்தைத் தேட வேண்டும், அதாவது புதிய இடைக்காலச் சமூக வகைகளைக் கவரும் புதிய கடமைக்கு உட்படுத்த வேண்டும் (கிராமப்புற ஏழைகள் பாட்டாளிகள் அல்ல, இப்போது அரைகுறை பாட்டாளிகள் கூட அல்ல; இன்னமும் முதலாளித்துவம் இறக்காததால், அரைகுறை பாட்டாளிக்கு வெகு அருகே நிற்கக் கூடியவர்கள், அதே நேரத்தில் சோஷலிசத்தை நோக்கிய மாற்றத்திற்கு மிக அதிகமாக அனுதாபம் காட்டுகின்றவர்கள் ஆவார்கள்)...*

*1918ஆம் ஆண்டு டிசம்பரிலும்*
*1919ஆம் ஆண்டு ஜனவரி மாத*
*முதல் பகுதியிலும் எழுதப்பட்டது*

---

* இந்த இடத்தில் கையெழுத்துப் பிரதி நிற்கிறது.—ப-ர்.

## இரண்டாவது அகில ருஷ்ய தொழிற்சங்கக் காங்கிரசில் நிகழ்த்திய உரையிலிருந்து ஜனவரி 20, 1919

பாட்டாளி வர்க்கம் ஒரு சில ஆயிரக்கணக்கான, ஒரு வேளை ஒரு சில பத்தாயிரக்கணக்கான பாட்டாளிகளை அரசு நிர்வாக காரியத்திற்கு முன்மொழிந்துள்ளது என்பது நமக்கு இப்போது தெரியும். அரசு நிர்வாகத்தின் ஒவ்வொரு துறையிலும் சோஷலிசமயப்படுத்தப்பட்ட அல்லது சோஷலிசமயப்படுத்தப்படும் ஆலையின் அல்லது பொருளாதாரத் துறையின் ஒவ்வொரு பிரிவிலும் புதிய வர்க்கமாகிய பாட்டாளி வர்க்கம் தனது பிரதிநிதிகளைக் கொண்டுள்ளது என்பதை நாம் அறிவோம். இதை பாட்டாளி வர்க்கம் அறியும். நடைமுறை ரீதியாகக் காரியத்தை மேற்கொண்டுள்ள பாட்டாளி வர்க்கம், இதே பாதையைத் தொடர வேண்டும், உழைப்பாளிகளின் தொழிற்முறை ரீதியிலான கூட்டமைப்புகள் அரசு நிர்வாக அமைப்புடன் முடிவாக ஒன்றிணைந்து விட்டன என்று கூறுவதற்கு முன்னர் இன்னமும் பல அடிகள் எடுத்து வைக்கப்பட வேண்டும் என்பதை இப்போது காண்கிறது. ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்திற்கு மேலாக வைத்திருக்கும் பலாத்கார அமைப்புகளைத் தொழிலாளிகள் எப்போது கைப்பற்றுகின்றார்களோ அப்போதுதான் இது நடக்கும். இது நடக்கும், இதை நாம் அறிவோம்.

நாம் இப்போது, உடனடியான நடைமுறைக் காரியத்தில் உங்களது கவனத்தை ஒருமுனைப்படுத்த விரும்புகின்றோம். பொருளாதார நிர்வாகத்திலும் புதிய உற்பத்தியை உருவாக்குவதிலும் உழைப்பாளிகளின் பங்கை மேலும் மேலும் விரிவுபடுத்துவது அவசியம். இந்தக் கடமையை நாம் நிறைவேற்றுவிடில், அரசு நிர்வாகத்தில் நேரடியாக பங்குகொள்வதற்காக இப்போதுள்ளதைவிட பத்து மடங்கு அதிகமான பரந்த வெகுஜனங்களுக்குக் கல்விபுகட்டுவதற்கான அமைப்புகளாக தொழிற்சங்கங்களை நாம் மாற்று

விடில், கம்யூனிசக் கட்டுமான இலட்சியத்தை நம்மால் இறுதி வரை எடுத்துச் செல்ல முடியாது. இது நமக்குத் தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. நமது தீர்மானத்தில் இது இடம் பெற்றுள்ளது, இந்த இறுதி அம்சத்தின் மேல்தான் எல்லா வற்றையும் விட அதிகமாக உங்கள் கவனத்தைத் திருப்ப நான் விரும்புகிறேன்.

பாட்டாளி வர்க்கம் தனது கைகளில் அரசாட்சியைக் கைப்பற்றியதும் வரலாற்றில் ஏற்பட்ட மாபெரும் திருப்பு முனையுடன் தொழிற்சங்கங்கள் தங்களது செயற்பாட்டில் மாபெரும் மாறுதலை உணருகின்றன. அவை புதிய சமுதாயத் தின் முக்கியப் படைப்பாளியாக மாறுகின்றன, ஏனெனில் இந்தச் சமுதாயத்தின் படைப்பாளிகளாக லட்சக்கணக்கான வெகுஜனங்கள் மட்டுமே இருக்க முடியும். பண்ணையடிமை முறை நிலவிய சகாப்தத்தில் நூற்றுக்கணக்கானோர் இத்தகைய படைப்பாளிகளாக எப்படி இருந்தார்களோ, முதலாளித்துவ சகாப்தத்தில் ஆயிரக்கணக்கானோர் அரசை எப்படி கட்டினார்களோ, அதே போன்று கோடிக்கணக்கான மக்கள் அரசு நிர்வாகத்தில் சுறுசுறுப்பாக, நேரடியாக, நடைமுறை ரீதியாக பங்குகொள்வதன் மூலம் மட்டுமே சோஷலிச மாற்றத்தை நிறைவேற்ற முடியும். நாம் இதை நோக்கி செல்கின்றோம் ஆனால் இதை நாம் இன்னமும் அடைய வில்லை.

முன்வைக்கப்படும் ஒரு சில கடமைகளோடு கூட, விட்டு விடப்படும் ஒரு சில கடமைகளோடு கூட, அப்படியே இருந் தாலும் இவைகள் நமக்கு சிறியவைகளாக இல்லாமலிருக்க முடியாது, இந்தக் கணக்கு வைத்தல், வேலையளவை நிர்ண யித்தல் மற்றும் ஸ்தாபன ஒருமைப்பாட்டுக் கடமைகளோடு கூட அருகே இன்னமும் உயர்வான, முக்கியமான கடமை முன்வைக்கப்படுகிறது என்பதை, தொழிற்சங்கங்கள் அறிந் திருக்க வேண்டும்: வெகுஜனங்களுக்கு நூல்கள், விரிவுரைகள், பொதுக் கூட்டங்கள் மூலம் இல்லாமல், அனுபவத்தின் மூலம் நிர்வகிப்பதைப் போதிக்க வேண்டும்; கட்டளையிட வும் ஸ்தாபனரீதியாக ஒன்றுபடுத்தவும் பாட்டாளி வர்க்கம் தனது மத்தியிலிருந்து தந்த முற்போக்குப் பிரிவினரின் இடத்தில் மேன்மேலும் அதிகமாக புதிய புதிய தொழி லாளர்கள் இந்த இலாகாக்களில் சேருமாறும், இந்தப் புதிய பிரிவின் இடத்தில் இதைப் போன்ற பத்து பிரிவுகள் வரு

மாறும் செய்ய வேண்டும். இந்தக் கடமை எல்லையற்றதாக வும் கடுமையானதாகவும் தோன்றுகிறது. புரட்சி அனுபவம் அக்டோபரிலிருந்து முன்வைக்கப்பட்ட மிக எல்லையற்ற கடமைகளை நிறைவேற்றும் வாய்ப்பை எவ்வளவு விரைவாகத் தந்தது என்பதையும், எந்த தொழிலாளர்களுக்கு ஞானம் எட்டாததாகவும் தேவையில்லாததாகவும் இருந்ததோ அவர்கள் ஞானத்தை எப்படி நாடுகின்றார்கள் என்பதையும், இதை பற்றியெல்லாம் நாம் எண்ணிப் பார்த்தால்— இக்கடமை எல்லையற்று காட்சியளிப்பது நின்றுவிடும்.

இந்தக் கடமையை நம்மால் தீர்க்க முடியும் என்பதை யும் அரசாங்க நிர்வாகம், தொழிற்துறை நிர்வாகம் போன்ற விஷயங்களைக் கணக்கிட முடியாத அளவு பெரும்பாலான உழைப்பபாளி வெகுஜனங்களுக்குப் போதிக்க முடியும் என் பதையும் நடைமுறை ரீதியான வேலையை வளர்க்க முடியும் என்பதையும் அரசு நிர்வாகம் தனிச் சலுகையுடையவர் களின் விஷயம், இது ஒரு தனிக் கலை என்று தொழிலாளர் வெகுஜனங்களிடையே நூற்றாண்டுகளாக, பத்தாண்டுகளாக வேரூன்றியுள்ள தீய மூடநம்பிக்கையை அழிக்க முடியும் என் பதையும் நாம் காணப் போகிறோம். ஆனால் அது ஒரு தனிக் கலை என்பது உண்மையல்ல. நாம் தவிர்க்க இயலாது தவறு களைச் செய்வோம், ஆனால் இப்போது ஒவ்வொரு தவறிலும் ஏதாவது ஒரு அரசு நிர்வாகம் சம்பந்தமான பாடதிட்டத் தைத் தத்துவரீதியாக பயிலும் மாணவர் குழுக்கள் படிப் பினையைக் கற்கப் போவதில்லை, மாறாக லட்சக்கணக்கான உழைப்பாளிகள் படிப்பினையைப் பெறுவார்கள், இவர்கள் ஒவ்வொரு தவறின் விளைவுகளையும் தாங்களாகவே உணரு வார்கள், மளிகைப் பொருட்களைக் கணக்கெடுத்து வினி யோகிப்பது, உழைப்புத் திறனை உயர்த்துவது என்ற ஒத்தி வைக்கப்பட முடியாத கடமைகள் தங்கள் முன் நிற்பதை இவர்கள் காண்பார்கள்; ஆட்சியதிகாரம் தங்கள் கைகளில் உள்ளது என்பதையும் இவர்கள் தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்ளாவிடில் யாரும் அவர்களுக்கு உதவி செய்ய மாட்டார்கள் என்பதையும் அனுபவ பூர்வமாக பார்க்கின்றார்கள்—இதோ இதுதான் தொழிலாளி வர்க்கத் தில் தோன்றும் புதிய மனநிலை, இதோ இதுதான் பாட்டாளி வர்க்கத்தின் முன் நிற்கக்கூடிய, தொழிற்சங்கங்களின், தொழிற்சங்க இயக்கப் பிரமுகர்களின் உணர்வில் எல்லா

வற்றையும் விட அதிகமாகப் புக வேண்டிய மகத்தான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புதியக் கடமை. அந்தச் சங்கங்கள் வெறும் தொழில்முறை ரீதியானவை மட்டுமல்ல. இன்று, பழைய முதலாளித்துவத்துடன் தொடர்பு கொண்ட ஒரே சாத்தியமான எல்லைக்குள் ஒன்றிணைந்து மிக அதிகமான உழைப்பாளிகளை ஒன்றுசேர்த்திருப்பதால் அவை தொழில்முறை சங்கங்களாக இருக்கின்றன. இவற்றின் கடமை லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான இந்தத் தொழிலாளர்களை எளிய ஒரு செயற்பாட்டிலிருந்து இன்னமும் உயர்வான செயற்பாட்டிற்கு முன்னேற்ற வேண்டும்; எப்போதும் அயராது உழைப்பாளிகளின் சேமிப்பிலிருந்து புதிய பிரிவுகளை கொணர வேண்டும், அயர்ச்சியின்றி அவர்களை மிகக் கடினமையான கடமைகள் வரை இட்டுச் செல்ல வேண்டும்; இவ்வாறாக மேலும் மேலும் பரவலான வெகுஜனங்களை அரசு நிர்வாகத்திற்குப் பயிற்றுவிக்க வேண்டும்; நாள்தோறும் அனைத்து நாடுகளிலும் தொழிற்சாலைத் தொழிலாளர்களையும் சோஷலிஸ்டுகளையும் சமூக-துரோகிகள் மற்றும் சமூக-பாதுகாப்புவாதிகளின் கட்டளைகளை நேற்று வரை தாங்கியிருந்து விட்டு இப்போது மேலும் மேலும் அதிகமாக கம்யூனிச, கம்யூனிஸ்டு அகிலத்தின் பதாகையின் கீழ் வரக்கூடியவர்களையும் கவர்ந்து முழு அதிகாரத்தையும் தனது கைகளில் எடுத்துக் கொண்டு உலகின் முன் அதை வைத்திருக்கும் பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத்துடன் ஒன்றிணைய வேண்டும்.

இந்தப் பதாகையைத் தாங்கிப் பிடித்து அத்தோடு கூட சோஷலிசக் கட்டுமானிகளின் வரிசைகளை இடையறாது விரிவுபடுத்த வேண்டும், தொழிற்சங்கங்களின் கடமை, புதிய வாழ்க்கையின் சிற்பிகளாக இருப்பதும் புதிய கோடிக்கணக்கானவர்களுக்குப் பயிற்சியாளராக இருப்பதும் ஆகும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்; இவர்கள் தவறுகளைச் செய்யாமல் இருக்கவும் பழைய மூடநம்பிக்கைகளைத் தூக்கியெறியவும் சொந்த அனுபவத்தில் கற்றுக்கொள்ள வேண்டும், அரசை நிர்வகிக்கவும் உற்பத்தியை நிர்வகிக்கவும் தங்களது அனுபவத்தில் கற்றுக்கொள்ள வேண்டும்—பின்னோக்கித் திரும்புவதற்கான எல்லாவித வாய்ப்புக்களையும் தவிர்த்து சோஷலிச லட்சியம் முற்றிலும் வெற்றியடையும் என்பதற்கான சரியான உத்தரவாதம் இதில் மட்டும்தான் உள்ளது.

## ‘‘தொழிலாளர் மற்றும் விவசாயிகளின் மேற்பார்வையைப் பற்றிய பத்திரத்தின்’’ திட்டநகல்களுக்கான குறிப்பும் சேர்க்கையும்

தோழர் ஸ்தாலினுக்கு. பிரதிகள் அவனேசவிற்கு, தோம்ஸ்கிக்கு, அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் தலைமைக் குழு உறுப்பினர் கிசெல்யோவிற்கு.

மத்தியக் கமிட்டியால் தரப்பட்ட கட்டளையின் அடிப்படையில் எனது கருத்துப்படி 3 திட்டநகல்களையும் ஒரே திட்டநகலாக மாற்றியமைக்க வேண்டும்.

எனது கருத்துப்படி கீழ்கண்டவற்றைச் சேர்க்க வேண்டும்:

*1)* அரசு கண்காணிப்புக் குழுவின் கீழுள்ள தொழிலாளர்-விவசாயி மேற்பார்வைப் ‘‘பிரிவு’’, தொழிலாளர்-விவசாயி மேற்பார்வையை அரசு கண்காணிப்பு குழுவின் எல்லாப் பிரிவுகளிலும் புகுத்துவதை நோக்கமாகக் கொண்ட தற்காலிக அமைப்பாக இருக்க வேண்டும், அப்போது இது விசேஷ பிரிவாக இருக்காது மறைந்து விடும்.

*2)* நோக்கம்: உழைப்பாளி வெகுஜனங்கள் அனைவரையும், ஆண்களையும் குறிப்பாக பெண்களையும் தொழிலாளர்-விவசாயி மேற்பார்வையில் பங்குகொள்ள இட்டுச் செல்ல வேண்டும்.

*3)* இதற்காக ஆங்காங்கே பெயர்ப் பட்டியல்களை (அரசியல் சட்டத்தின்படி) தயாரிக்க வேண்டும், உத்தியோகஸ்தர்களை நீக்க வேண்டும், இன்னும் பலப்பல.

—எஞ்சியவர்களை வரிசைப்படி அனைவரையும் தொழிலாளர்-விவசாயி மேற்பார்வையில் பங்குகொள்ள இட்டுச் செல்ல வேண்டும்.

*4)* பங்கேற்பவர்களின் வளர்ச்சித் தரத்தைப் பொறுத்து பங்குகொள்வதை பலவாறானதாகச் செய்ய வேண்டும்: கல்வியறிவில்லாத, முற்றிலும் வளர்ச்சியடையாத தொழி

லாளர்கள், விவசாயிகளுக்காக மாணுக்கன் அல்லது பயிற்சியாளன் அல்லது துணைவன் அல்லது உதவியாளன் என்பதிலிருந்து கல்வியறிவுள்ள, வளர்ச்சியடைந்த, ஏதோ ஒரு வகையில் சோதிக்கப்பட்டவர்களுக்காக எல்லாவித (அல்லது கிட்டத்தட்ட எல்லாவித) உரிமைகளையும் தருவது வரை செய்ய வேண்டும்.

5) தொழிலாளர்-விவசாயி மேற்பார்வையை, மளிகைப் பொருட்கள், பண்டங்கள், சேமிப்புக் கிடங்குகள், கருவிகள், மூலப்பொருள், எரிபொருள் போன்ற பலவற்றிற்கான (உணவு விடுதிகள் போன்றவைகள் குறிப்பாக) கண்காணிப்பிற்குப் பரவலாக புகுத்துவதில் குறிப்பாகக் கவனம் செலுத்த வேண்டும் (மிக திட்டவட்டமான விதிமுறைகளைக் கொண்டு நிலைநாட்ட வேண்டும்).

இதற்குக் கட்டாயம் பெண்களை, ஒருவர் விடாமல் கவர வேண்டும்.

6) வெகுஜனங்களின் மத்தியிலிருந்து பங்கேற்பவர்களை ஈர்க்கும்போது குழப்பங்கள் ஏற்படாமலிருக்க, படிப்படியாக அழைக்கும் முறையையும் வரிசைகளையும் இது போன்றவைகளையும் ஏற்படுத்த வேண்டும். எந்த வடிவத்தில் பங்கேற்க வேண்டும் என்பதைப் பற்றி தீர யோசிப்பதும் அவசியம் இரண்டு—மூன்று பேராக, விசேஷ சந்தர்ப்பங்களில் ுரிதாக இன்னும் அதிகமானோர்; தேவையின்றி அவர்கள் -த்தியோகஸ்தர்களை அவர்களது வேலையிலிருந்து திசை திருப்பக் கூடாது).

7) விவரமான கட்டளைகள் வகுக்கப்பட வேண்டும்.

8) அரசு கண்காணிப்புக் குழுவின் உத்தியோகஸ்தர்கள் (விசேஷ உத்தரவின்படி) முதலாவதாக, தங்களது நடவடிக்கைகள் அனைத்திற்கும் தொழிலாளர்-விவசாயி மேற்பார்வையின் பிரதிநிதிகளை (அல்லது குழுக்களை) ஈர்க்கவும் இரண்டாவதாக, தொழிலாளர்கள், விவசாயிகளின் கட்சி சார்பற்ற மகாநாடுகளில் விரிவுரையாற்றவும் (விசேஷமாக அங்கீகரிக்கப்பட்ட செயல்திட்டத்தின்படி, மக்களுக்கு புரியும் படியான, அரசு கண்காணிப்புக் குழுவின் அடிப்படைகளையும் அதன் நடவடிக்கைகளையும் பற்றிய விரிவுரைகள்: விரிவுரைகளுக்குப் பதில் நாம் வெளியிடவிருக்கும் (அதாவது அரசு கண்காணிப்புக் குழு, ஸ்தாலினும் அவனேசவும் கட்சியின் விசேஷ பங்கேற்பின் மேல் வெளியிடும்) பிரசுரத்தையும்

அதற்கான விளக்கவுரையையும் பயன்படுத்தலாம்) கட்டாயப்படுத்தப்பட வேண்டும்.

9) படிப்படியாக அந்தந்த இடங்களில் இருந்து விவசாயிகளை (கட்டாயமாக கட்சியைச் சேராத விவசாயிகளை) மையத்தில் அரசு கண்காணிப்புக் குழுவில் பங்கேற்பதற்காக அழைக்க வேண்டும்: (அதிகம் இல்லாவிட்டாலும்) குறைந்த பட்சம் மாகாணத்திலிருந்து ஒன்று அல்லது இருவரை அழைப்பதிலிருந்து துவங்கி பின்னர் போக்குவரத்தையும் மற்ற சூழ்நிலைகளையும் பொறுத்து விரிவுபடுத்த வேண்டும். இதேதான் கட்சியைச் சாராத தொழிலாளர்களுக்கும் பொருந்தும்.

10) அரசு கண்காணிப்புக் குழுவில் பங்கேற்பை கட்சியின் மூலமாகவும் தொழிற்சங்கங்கள் மூலமாகவும் கண்காணிப்பதைப் படிப்படியாக அமலுக்குக் கொண்டுவர வேண்டும், அதாவது எல்லோரும் பங்கேற்கின்றார்களா என்பதையும் பங்கேற்பவர்களை அரசு நிர்வாகத்திற்குப் பயிற்றுவிக்கும் நோக்கிலிருந்து பார்த்தால் என்ன பயன்கள் கிடைத்துள்ளன என்பதையும் அவை மூலம் சோதித்துப் பார்க்க வேண்டும்.

லெனின்

*24/I. 1920.*

## தேசியப் பொருளாதாரக் கவுன்சில்களின் மூன்றாவது அகில ருஷ்யக் காங்கிரசில் நிகழ்த்திய உரையிலிருந்து ஜனவரி 27, 1920

எல்லாவற்றையும் நமது சக்திகளைக் கொண்டு நாமே செய்ய வேண்டுமென கனவுகாண்பதில்தான் நமது குற்றம் உள்ளது. நம்மிடமுள்ள மிகக் கடுமையான பற்றுக்குறை ஊழியர்கள் இல்லாததாகும்; சாதாரணத் தொழிலாளிகள், விவசாயிகள் மத்தியிலிருந்து இவர்களை எடுத்துக்கொள்ள நமக்குத் தெரியாது—இவர்கள் மத்தியில் ஏராளமான நிர்வாக மற்றும் ஸ்தாபன அமைப்புத் திறமைகள் மறைந்து கிடக்கின்றன. பொதுவான, பெரும்பாலும் முற்றிலும் பயனற்ற விவாதங்களை விடுத்து விரைவாக விஷயத்திற்கு வருவோமேயானால், அது மிகச் சிறந்ததாக இருக்கும். அப்போது நாம், முற்போக்கு வர்க்கத்தின் ஸ்தாபன அமைப்பாளர்கள் என்ற கடமையை நிறைவேற்றுவோம், நூற்றுக் கணக்கான, ஆயிரக்கணக்கான புதிய ஸ்தாபன அமைப்புத் திறமைகளைக் கண்டெடுக்கலாம். அவர்களை நாம் முன்மொழிந்து சோதனைக்குள்ளாக்கி கட்டளைகளை இட வேண்டும், அக் கட்டளைகளை சிக்கலாக்க வேண்டும். தேசியப் பொருளாதாரக் கவுன்சில்களின் காங்கிரசுக்குப் பின், பணிகளைத் தொகுத்து ஆராய்ந்தபின்னர் நாம் இந்தப் பாதையில் செல்வோம், இந்த இரு ஆண்டுகளாகத் துன்புறுத்திய அபரிதமான குறுகிய பிரிவை நிரப்பி அதிகப்படுத்துவதற்காக ஸ்தாபன அமைப்பாளர்களின் எண்ணிக்கையை விரிவுபடுத்துவோம், பெருக்குவோம்; ஏனெனில், ருஷ்யாவை ஏழ்மையிலிருந்தும் பட்டினியிலிருந்தும் குளிரிலிருந்தும் மீட்பதற்காக நாம் முன்வைக்கக் கூடிய இலட்சியங்களுக்காக, கோடிக்கணக்கான மக்களின் முன் பொறுப்பாக இருக்கக்கூடிய ஸ்தாபன அமைப்பாளர்கள் பத்துமடங்கு அதிகமாக நமக்குத் தேவை.

## பிளாகுஷே-லெபோர்த்தவ்ஸ்கி வட்டத்தின் கட்சியைச் சாராதோர் மகாநாட்டில் நிகழ்த்திய உரையிலிருந்து பிப்ரவரி 9, 1920

எனது கருத்துப்படி ஆழ்ந்த கவனம் செலுத்த வேண்டிய அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் முக்கியத் தீர்மானங்களில் ஒன்று நமது நிறுவனங்களில் அதிகார வர்க்க மனப்பான்மையுடனுன போராட்டத்தைப் பற்றிய தீர்மானம் ஆகும். அரசு கண்காணிப்பு இயந்திரத்தைத் தொழிலாளர்-விவசாயி கண்காணிப்பு இயந்திரமாக அல்லது தொழிலாளர் மேற்பார்வையமைப்பாக மாற்றியமைப்பதைப் பற்றிய இந்தக் கமிட்டியின் தீர்மானம் இதற்கான நடவடிக்கைகளில் ஒன்று. பழைய அதிகாரிகளை விரட்டியடிக்காது, இராணுவத்திலிருந்து எப்படி நிபுணர்களை விரட்டியடிக்காது, அவர்களுடன் தொழிலாளர் கமிஸார்களை இணைத்தோமோ அதே போன்று இந்தப் பூர்ஷ்வா நிபுணர்களுடன் தாங்களே கூர்ந்து நோக்கி கற்று இந்த வேலையை தங்கள் கைகளில் எடுத்துக்கொள்ளும் தொழிலாளர் குழுக்களை இணைக்க வேண்டும். தொழிலாளர்கள் எல்லா அரசு நிறுவனங்களிலும் புகுமாறு செய்வதும் அவர்கள் அரசு இயந்திரம் முழுவதையும் கண்காணிக்குமாறு செய்வதும் அவசியம்; இதை கட்சியைச் சாராத தொழிலாளர்கள் செய்ய வேண்டும், இவர்கள் கட்சியைச் சாராத தொழிலாளர்-விவசாயி மகாநாடுகளில் தங்களது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். சக்திக்கு மீறிய சுமை தாங்காது சோர்ந்து போகும் கம்யூனிஸ்டுகளுக்கு உதவ வர வேண்டும். இந்த இயந்திரத்தில் இயன்றவரை அதிகமான அளவு தொழிலாளர்களையும் விவசாயிகளையும் புகுத்த வேண்டும். நாம் இதை ஏற்றுக் கொள்வோம், இதை நிறைவேற்றுவோம், அதன் மூலம் நமது நிறுவனங்களில் இருந்து அதிகார வர்க்கப் போக்கை விரட்டுவோம். கட்சியைச் சாராத பரவலான வெகுஜனங்கள் அரசு காரியங்கள் அனைத்தையும் சரிபார்த்து தாங்களே நிர்வகிக்கக் கற்றுக் கொள்வது அவசியம்.

## மாஸ்கோ தொழிலாளர் மற்றும் செஞ்சேனை பிரதிநிதிகளின் சோவியத்தின் கூட்டத்தில் நிகழ்த்திய உரையிலிருந்து
## மார்ச் 6, 1920

...நமது அரசாங்கம் முழுவதையும் ஏற்படுத்த வேண்டிய தொழிலாளர் மற்றும் விவசாயி வெகுஜனங்கள் இப்போது அரசுக் கண்காணிப்பை உருவாக்க வேண்டும். இந்த இயந்திரத்தைத் தொழிலாளர் மற்றும் விவசாயி வெகுஜனங்களின் மூலமாகவும் அரசு நிர்வாகத்தைத் தாங்களே எடுத்துக் கொள்வதற்கான தன்னிச்சையான வேட்கையையும் தயார் நிலையையும் உறுதியையும் இதுவரை கண்டறியாத அளவிற்குக் கொண்டு விளங்கும் தொழிலாளர்-விவசாயி இளைஞர்கள் மூலமாகவும் நீங்கள் பெறலாம். போரின் அனுபவங்களில் இருந்து அறிவைப் பெற்று சோவியத் பள்ளியைக் கடந்த, அரசாங்கத்தை நிர்வகிக்கவல்ல ஆயிரக் கணக்கானவர்களை நாம் முன்மொழிவோம். தொழிலாளர் மேற்பார்வை அமைப்பிற்கு மிக பயந்த சுபாவமுள்ள, வளர்ச்சியடையாத, மிகக் கூச்சமுள்ள தொழிலாளர்களை ஈர்த்து அவர்களை மேல் நோக்கி உயர்த்த வேண்டும். அவர்கள் இந்த வேலையிலேயே உயரட்டும். அரசுக் காரியங்களில் தொழிலாளர் மேற்பார்வை எப்படிப் பங்கேற்கிறது என்பதைப் பார்த்து அவர்களால் முடிந்த எளிய காரியங்களிலிருந்து—முதலில் பயிற்சியாளர்களில் இருந்து துவங்கி—மேற்கொண்டு படிப்படியாக அரசு விவகாரங்களில் அதிக முக்கியத்துவம் வாய்ந்த பாத்திரங்களுக்குச் செல்லட்டும். தன்மேல் அரசுச் சுமையை ஏற்றுக் கொள்ளக் கூடிய உதவியாளர்கள் பரவலான தோற்றுவாய்களிலிருந்து உதவி செய்யவும் வேலை செய்யவும் வருவார்கள். பல்லாயிரக்கணக்கான புதிய முற்போக்கான தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர். கட்சியைச் சாராத தொழிலாளர்களையும் விவசாயிகளையும் ஆதாரமாகக் கொண்டு செயல்படுங்கள், அவர்களை ஆதாரமாகக் கொண்டு செயல்படுங்கள், ஏனெனில்

நமது கட்சி எல்லாப் பக்கங்களிலும் எதிரிகளால் சூழப்பட்ட நிலையில் குறுகியதாக இருக்க வேண்டும். தீய சக்திகள் எல்லா வித போராட்ட முறைகள், ஏமாற்றுதல், ஆத்திரமூட்டுதல் மூலம் கட்சியை உறிஞ்சுபவர்களாக மாறி அரசாங்கத்தி லுள்ள கட்சி நன்கறிந்த சலுகைகளைத் தரும் என்ற நிலை மையைத் தவருகப் பயன்படுத்த முயற்சி செய்யும் காலகட் டத்தில் கட்சியைச் சாராதவர்களுடன் தொடர்பு கொண்டு செயல்பட வேண்டியது அவசியம். தொழிலாளர்-விவசாயி மேற்பார்வை அமைப்பைப் பற்றிய சட்டங்கள், கட்சியைச் சாராத தொழிலாளர்களையும் விவசாயிகளையும், அவர்களது மகாநாடுகளையும் அரசு நிர்வாகத்திற்கு ஈர்க்கும் உரிமை யைத் தருகின்றன. உள்நாட்டு களத்தில் ஒரு சில ஆண்டுகளில் வெற்றியைப் போராடிப் பெறுவதற்காக தொழிலாளர் கள், விவசாயிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் வாய்ப்பைத் தரக்கூடிய வழிமுறைகளில் ஒன்றை நீங்கள் இந்த இயந்திரத்தில் பெற்று இருக்கின்றீர்கள். போர்க் களத்தில் கிடைப்பது போன்றே இந்த வெற்றியும் அவ்வளவு எளிதாக, உறுதியாக, தெளிவாக நீண்ட காலத்திற்குக் கிடைக்காது. இந்த வெற்றிக்கு விழிப்புணர்ச்சியும் முயற்சி யும் தேவைப்படுகின்றன; மாஸ்கோ மற்றும் அதன் சுற்றுப் புறங்களின் கட்டுமானக் கடமைகளை நிறைவேற்றுவதன் மூலமும், பொதுப் போக்குவரத்தைப் புனரமைக்கவும், கள்ள வியாபாரம் செய்பவர்களின் நேரடியான, மறைமுகமான தாக்கத்திலிருந்து மீளவும் முதலாளித்துவத்தின் பழைய பாரம்பரியங்களை வெற்றிகொள்ளவும் துணை செய்யக்கூடிய அந்த பொது பொருளாதார ஸ்தாபன அமைப்பைப் புனர மைக்கவும் உதவி புரிவதன் மூலமாகவும் இதற்கு நீங்கள் வகை செய்ய முடியும். இதற்காக ஒரு சில ஆண்டுகளைச் செலவிடுவதில் தவறில்லை. இத்தகைய சந்தர்ப்பச் சூழ்நிலை களில் கூட இதுபோன்ற சமூக மாற்றங்கள் இதுவரை கண்டறியப்படாதவைகளாக இருக்கும்; இங்கே குறுகிய காலகட்டத்திற்கான கடமைகளை முன்வைப்பது என்பது பெரிய தவருக இருக்கும்...

## உள்ளூர் சோவியத்துக்களுக்கு உழைப்பு மற்றும் பாதுகாப்புக் கவுன்சிலின் உத்தரவிலிருந்து

### 7. பொருளாதாரக் கட்டுமானத்திலுள்ள அரசுப் பணியாளர்களின் வட்டத்தை விரிவாக்குதல்

இந்த விரிவாக்கம் நமக்கு குறிப்பாகத் தேவைப்படுகிறது; இத்தகைய விரிவாக்கத்தை அடைவதற்கான முயற்சிகளில் முறைமையை நாம் மிகக் குறைவாகவே காண்கின்றோம். முதலாளித்துவத்தில் தனிப்பட்ட ''எஜமானர்கள்''—மற்றவர்களிடமிருந்து மறைந்து அவர்களது காலை வாரி—தங்களுக்கு நல்ல கடைச் சிப்பந்திகளையும் நிர்வாகிகளையும் இயக்குநர்களையும் பெற முயன்றனர்; பல பத்தாண்டுகளாக இதில் ஈடுபட்டிருந்தனர்; ஒரு சில தலை சிறந்த ''கம்பெனிகள்'' மட்டும் இதில் நல்ல பயன்களைப் பெற்றன. இப்போது தொழிலாளர்-விவசாயி அரசு ''எஜமானனாக'' உள்ளது; பொருளாதாரக் கட்டுமானப் பணியாளர்களையும், விசேஷ மற்றும் பொது, உள்ளூர் மற்றும் அரசு அளவிலான நிர்வாகிகளையும் ஸ்தாபன அமைப்பாளர்களையும் தேர்வு செய்யும் காரியத்தை அது பரவலாக திட்டமிட்டு முறைப்படி வெளிப்படையாகச் செய்ய வேண்டும். சோவியத் ஆட்சியின் முதல் காலகட்டத்தின் விளைவுகளை அருகருகே நாம் காண்கின்றோம்: மிகக் கடுமையான உள்நாட்டு யுத்தமும் உக்கிரமமான சீர்குலைவு நடவடிக்கைகளும் உள்ள காலகட்டத்தை, கம்யூனிஸ்டுகள் குறுகிய ஆளும் வட்டமாக ஒதுங்கிக்கொண்டு தேவையான அளவில் கட்சியைச் சாராதவர்களைக் காரியத்திற்கு ஈர்க்க இயலாத அல்லது அஞ்சும் ஒரு நிலையைக் காண்கின்றோம்.

இந்தக் குறையை நிவர்த்தி செய்ய அவசரமாக, எல்லாச் சக்திகளையும் உட்படுத்தி செயலில் இறங்க வேண்டும். தொழிலாளர்கள், விவசாயிகள், அறிவுத்துறையினர் மத்தியிலிருந்து திறமை மிக்க, நேர்மையான கட்சி சார்பற்ற நபர்கள் பலர் முன்மொழியப்படுகின்றனர்; தேவையான கண்காணிப்பையும் வழிகாட்டலையும் கம்யூனிஸ்டுகளிடம் தக்க வைத்துக் கொண்டு பொருளாதாரக் கட்டுமானத்தின் அதிக உயர்வான பதவிகளில் இவர்களை வைக்க வேண்டும்.

மறு புறத்தில் கம்யூனிஸ்டுகளின் மேல் கட்சி சார்பற்றவர்களின் கண்காணிப்பும் அவசியம்; இதற்கு நேர்மை சோதனைக்குட்பட்ட கட்சி சார்பற்ற தொழிலாளர்களையும் விவசாயிகளையும் தொழிலாளர்-விவசாயி மேற்பார்வை அமைப்புக்கு ஈர்க்க வேண்டும்; எல்லாவித பதவிகளோடு கூட வேலையை சரிபார்க்கவும் மதிப்பிடவும் மரபியல் சடங்கின்றி ஈர்க்க வேண்டும்.

தொழிலாளி மற்றும் விவசாயி வெகுஜனங்களைப் பற்றி எல்லோரையும் விட நன்கு அறிந்த உள்ளூர் அமைப்புகள், குறிப்பாக மாவட்டங்கள், தாலுக்காக்கள், வட்டங்கள் ஆகியன உழைப்பு மற்றும் பாதுகாப்புக் கவுன்சிலுக்கான தமது அறிக்கைகளில், வேலையில் தமது நேர்மையை நிரூபித்தவர்கள் அல்லது கட்சி சார்பற்றவர்களின் மகாநாடுகளில் சாதாரணமாக முன்மொழியப்பட்டவர்கள் அல்லது ஆலை, கிராமம், மாவட்டம் போன்றவற்றின் மறுக்கமுடியாத மரியாதையைப் பெறுபவர்கள் ஆகிய கட்சி சார்பற்றவர்களின் பெயர்ப்பட்டியல்களைத் தர வேண்டும்—பின்னர் பொருளாதாரக் கட்டுமானத் துறையில் இந்த நபர்கள் எந்த வேலைக்கு ஈர்க்கப்படுகின்றார்கள் என்பதைக் குறிப்பிட வேண்டும். ''வேலை'' என்பதன் கீழ் பதவிகளுக்குரிய வேலையையும் எந்தவிதமான பதவிகளுமின்றி கண்காணிப்பிலும் சரிபார்த்தலிலும் பங்கேற்பதையும் முறையான சாதாரணக் கூட்டங்களையும் இது போன்றவற்றையும் பொருள் கொள்ள வேண்டும்.

இதைப் பற்றிய கேள்விகளுக்கான பதில்கள் முறையாக கட்டாயமானவை. இது இல்லாமல் சோஷலிச அரசு பொருளாதாரக் கட்டுமானத்தில் வெகுஜனங்களை ஈடுபடுத்தும் காரியத்தை சரிவரச் செய்ய முடியாது. புதியப் பணியாளர்கள் இருக்கின்றார்கள், அவர்கள் நேர்மையானவர்கள், தங்களை அர்ப்பணித்தவர்கள் கட்சியைச் சாராதவர்களிடையே இத்தகையவர்கள் நிறைய உள்ளனர். அவர்களை நமக்குத் தெரியாது. உள்ளூர் அறிக்கைகள் மட்டுமே இவர்களை அறியவும் பரந்த, படிப்படியாக விரிவடையும் வேலையில் இவர்களைச் சோதிக்கவும், கம்யூனிஸ்டுக் குழுக்கள் வெகுஜனங்களிடமிருந்து பிரிந்து போவது போன்ற தீமையை (இந்தத் தீமை பல இடங்களில் காணப்படுகிறது). அகற்றவும் உதவும்.

## கட்சியைத் தூய்மைப்படுத்துவதைப் பற்றி

கட்சியைத் தூய்மைப்படுத்தும் பணி அநேகமாக கருத்தாழமுள்ள, மிக முக்கியமான பணியாக வளர்ந்து விட்டது.

முக்கியமாக அனுபவத்தையும் கட்சியைச் சாராத தொழிலாளர்களின் குறிப்புக்களையும் ஆதாரமாகக் கொண்டு அவர்களது குறிப்புக்களின் வழி நின்று கட்சியைச் சாராத வெகுஜனங்களின் பிரதிநிதிகளைக் கணக்கில் கொண்டு கட்சியைத் தூய்மைப்படுத்திய இடங்கள் உண்டு. இதுதான் மிக மதிப்புள்ளதும் மிக முக்கியமானதுமாகும். இவ்வாறுக ''முகஸ்துதி பார்க்காது'' மேலிருந்து கீழாக கட்சியைத் தூய்மைப்படுத்த உண்மையிலேயே நம்மால் முடிந்தால் மெய்யாகவே புரட்சியின் வெற்றி மகத்தானதாயிருக்கும்.

ஏனெனில் புரட்சியின் வெற்றிகள் முன்பிருந்ததைப் போன்றே இப்போது இருக்க இயலாது. போர்க் களத்திலிருந்து பொருளாதாரக் களத்தை நோக்கிய மாறுகாலத்தைப் பொறுத்தும் புதிய பொருளாதாரக் கொள்கையை நோக்கிய மாறுகாலத்தைப் பொறுத்தும், உழைப்பின் உற்பத்தி திறனை உயர்த்தவும் உழைப்புக் கட்டுப்பாட்டை உயர்த்தவும் முதற்கண் தேவைப்படும் சூழ்நிலைகளைப் பொறுத்தும் இவை தமது தன்மையை நிச்சயம் மாற்றிக்கொள்ளும். இந்தக் காலத்தில் புரட்சியின் முக்கிய வெற்றியாக உள் மேம்பாடு, பிரகாசமற்ற, கண்ணில் படாத, உடனடியாகத் தெரியாத உழைப்பு மேம்பாடு, அதன் அமைப்பின், அதன் முடிவுகளின் மேம்பாடு உள்ளது; இந்த மேம்பாடு பாட்டாளி வர்க்கத்தையும் கட்சியையும் சிதைக்கக் கூடிய குட்டிமுதலாளித்துவ மற்றும் குட்டிமுதலாளித்துவ-அராஜகவாதக் கட்டுப்பாடற்ற சூழ்நிலையின் தாக்கத்திற்கு எதிரான போராட்டத்தைக் குறிக்கிறது. இத்தகைய மேம்பாட்டை நடைமுறையாக்க வெகுஜனங்களிடமிருந்து பிரிந்து போகு

பவர்களை அகற்றி கட்சியைத் தூய்மைப்படுத்த வேண்டும் (வெகுஜனங்களின் கண்களின் முன் கட்சியை இழிவுபடுத்து பவர்களைப் பற்றிக் கூறவே வேண்டியதில்லை). இவெகுஜனங் களின் எல்லா குறிப்புக்களுக்கும் நாம் கீழ்படிய வேண்டிய தில்லை என்பது உண்மையே, ஏனெனில் வெகுஜனங்கள் கூட சில நேரங்களில்—குறிப்பாக மிக அயர்ச்சியான ஆண்டு களிலும், அபரிதமான பாரமும் வேதனையும் தரும் அளவிற் கதிகமான களைப்பேற்படும் ஆண்டுகளிலும்—சிறிதும் முற் போக்கில்லாத மனநிலைக்கு உட்படுவார்கள். ஆனால் மக்களை எடை போடுவதில், ''கட்சியில் வந்து ஒட்டிக்கொண்ட'', ''கட்டளையிடும் மனப்பான்மையுள்ள'', ''அதிகாரமனப்பாங் குடைய'' நபர்களின் மேலான எதிர்மறையான தொடர்பில் கட்சியைச் சாராத பாட்டாளி வர்க்க வெகுஜனங்களின் குறிப்புக்களும், பல சந்தர்ப்பங்களில் கட்சியைச் சாராத விவசாயி வெகுஜனங்களின் குறிப்புக்களும் மிகவும் மதிப்பு வாய்ந்தவை. உழைப்பாளி வெகுஜனங்கள், நேர்மையான, தங்களை அர்ப்பணித்த கம்யூனிஸ்டுகளுக்கும் நெற்றி வியர் வையை சிந்தி உணவைப் பெறும் மனிதனுக்கு, எந்தவித மான சலுகைகளும், எந்தவிதமான ''தலைமையதிகாரிகளுக் கான வழிகளும்'' இல்லாத மனிதனுக்கு அருவருப்பை ஊட்டுபவர்களுக்கும் இடையேயுள்ள மாறுபாட்டை மிகக் கூர்மையாகப் புரிந்து கொள்கின்றார்கள்.

கட்சியைச் சாராத உழைப்பாளிகளின் கருத்துக்களைக் கணக்கில் கொண்டு கட்சியைத் தூய்மைப்படுத்துவது ஒரு மாபெரும் செயலாகும். இது நமக்குக் கருத்தாழமுடைய பயன்களைத் தரும். இது கட்சியை முன்பிருந்ததைவிட பன் மடங்கு அதிக சக்திவாய்ந்த வர்க்க முன்னணிப்படையாக, வர்க்கத்தோடு அதிக உறுதியாக தொடர்பு கொண்டுள்ள முன்னணிப்படையாக, அதை பல்வேறு இன்னல்கள், ஆபத்து களுக்கிடையே வெற்றியை நோக்கி இட்டுச் செல்லும் திறமை வாய்ந்ததாக செய்யும்.

கட்சியை முந்தைய மென்ஷிவிக்குகளிடமிருந்து தூய் மைபடுத்த வேண்டியதை, கட்சியை தூய்மைப்படுத்தும் பணியில் ஒரு தனிப்பட்ட கடமையாக நான் குறிப்பிடுவேன். எனது கருத்துப்படி 1918ஆம் ஆண்டின் ஆரம்பத்திற்குப் பிறகு கட்சியில் சேர்ந்த மென்ஷிவிக்குகளிலிருந்து, கிட்டத் தட்ட நூற்றில் ஒருவருக்கு மேற்படாத விகிதத்தில்தான்

கட்சியில் வைத்திருக்க வேண்டும், அப்போது கூட அவ்வாறு தக்கவைக்கும் ஒவ்வொருவரையும் மூன்று முறை, நான்கு முறை சோதித்துப் பார்க்க வேண்டும். ஏன்? ஏனெனில் மென்ஷிவிக்குகள், ஒரு போக்கு என்ற முறையில் 1918க்கும் 1921க்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் தங்களது இரு குணங்களை நிரூபித்தார்கள்: முதலாவது —தொழிலாளர்கள் மத்தியில் ஓங்கியிருக்கக் கூடிய போக்குடன் கைதேர்ந்த முறையில் பழகி ''ஒட்டிக்'' கொள்வது; இரண்டாவது— இன்னமும் திறமையாக நம்பிக்கையோடு, உண்மையோடு வெண்படையினருக்குச் சேவை செய்வது, வார்த்தைகளால் அவர்களிடமிருந்து விலகி செயல் மூலம் உண்மையிலேயே அவர்களுக்குச் சேவை செய்வது. இந்த இரு குணங்களுமே மென்ஷிவிக்வாதத்தின் முழு வரலாற்றில் இருந்து வெளிப் படுகிறது: அக்செல்ரோதின் ''தொழிலாளர் காங்கிரசையும்''[45] காடேட்டுகள் பால் (முடியாட்சியின் பாலும்) மென்ஷிவிக்குகளுக்கு வார்த்தைகளில் உள்ள உறவையும் நடைமுறையில் உள்ள தொடர்பையும், இதைப் போன்ற பல விஷயங்களையும் நினைவு கூர்வது தகும். மென்ஷிவிக்குகள் ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியுடன் ''இழைவது'' மக்கியாவெல்லிசத்தினால்[46] மட்டுமின்றி, ஏன், இந்த அளவிற்கு மட்டுமின்றி (பூர்ஷ்வா ராஜதந்திர நடவடிக்கைகளின் படி 1903ஆம் ஆண்டிலிருந்தே மென்ஷிவிக்குகள் இத்துறையில் முதல் தரமான நிபுணர்கள் என்பதை நிரூபித்துள்ளார்கள்), அவர்களது ''பழக்கத் திறமையாலும்'' ஆகும். எந்த ஒரு சந்தர்ப்பவாதியும் தனது பழக்கத் திறமையால் மாறுபட்டு நிற்கிறார் (ஆனால் எல்லா பழக்கத் திறமையும் சந்தர்ப்பவாதம் ஆகாது), சந்தர்ப்பவாதிகளான மென்ஷிவிக்குகள், தொழிலாளர்கள் மத்தியில் மேலோங்கியிருக்கும் போக்கிற்கு ''கோட்பாட்டு ரீதியாக'' தங்களைப் பழக்கப்படுத்திக் கொள்கின்றனர், பனிக்காலத்தில் முயல் வெந்நிறமாக ஆவது போல் பாதுகாப்பு நிறத்தை மீண்டும் பூசிக்கொள்கின்றனர். மென்ஷிவிக்குகளின் இந்த தனிக்குணத்தைத் தெரிந்து அதைக் கணக்கில் கொள்ள வேண்டும். இதைக் கணக்கில் கொள்வது என்றால்—ருஷ்யாவின் கம்யூனிஸ்டும் கட்சியில் 1918ஆம் ஆண்டிற்குப் பின், அதாவது போல்ஷிவிக்குகளின் வெற்றி முதலில் சாத்தியமானதாயும் பின்னர் சந்தேகத்திற்கிடமற்றதாயும் ஆனதே அதற்குப் பின்னால், சேர்ந்த மென்ஷிவிக்கு

களில் கிட்டத்தட்ட நூறில் தொண்ணூற்று ஒன்பது பேரிட மிருந்து கட்சியைத் தூய்மைபடுத்துவது என்று பொருள்.

கட்சியைப் பித்தலாட்டக்காரர்களிடமிருந்தும் அதிகார வர்க்க மனப்பாங்கு கொண்ட, நேர்மையற்ற, உறுதியற்ற கம்யூனிஸ்டுகளிடமிருந்தும் ''முகப்பை'' மட்டும் மாற்றி விட்டு உள்ளத்தால் மென்ஷிவிக்குகளாக இருப்பவர்களிட மிருந்தும் தூய்மைபடுத்த வேண்டும்.

செப்டெம்பர் *20, 1921*

பிராவ்தா, இதழ் *210*,
செப்டெம்பர் *21, 1921*

## ஒன்பதாவது அனைத்து ருஷ்ய சோவியத்துக்களின் காங்கிரசால் ஏற்கப்பட்ட பொருளாதாரப் பணியின் பிரச்சினைகளைப் பற்றிய கட்டளையிலிருந்து டிசம்பர் 28, 1921

6. குறிப்பிட்ட துறையில் அரசுப் பணிக்குக் கட்சியைச் சாராத தொழிலாளர்கள், விவசாயிகளின் வரிசைகளிலிருந்து இயன்ற அளவு அதிகமாக தலை சிறந்தவர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் பொருளாதாரப் பணியை நிர்வகிக்கின்ற அனைத்து நிறுவனங்கள், அமைப்புகளிடமிருந்து சோவியத்துக்களின் ஒன்பதாவது காங்கிரஸ் இதுவரை இருந்ததோடு ஒப்பிட முடியாத அளவு அதிகமான கவனத்தையும் ஆற்றலையும் செலுத்தக் கோருகிறது.

இந்த விஷயத்தில் நாம் பின்தங்கி விட்டோம் என்றும்; —இந்த விஷயத்தில் தேவையான அளவு ஒழுங்குமுறையும் விடாமுயற்சியும் கடைப்பிடிக்கப்படுவதில்லை என்றும்;— இதன் தொடர்பாக பொருளாதாரத் துறை மற்றும் அரசுத் துறை பிரமுகர்களின் வட்டத்தை விரிவுபடுத்துவது என்பது கட்டாயமானது, இன்றியமையாத தேவையுமாகும் என்றும்; —பொருளாதாரத்தை உயர்த்தும் காரியத்தில் ஒவ்வொரு வெற்றியும் முறையாக உழைப்புப் பதாகை விருதளித்தும் பரிசுத்தொகைகள் அளித்தும் கௌரவிக்கப்பட வேண்டும் என்றும் காங்கிரஸ் நிர்ணயிக்கிறது.

பொருளாதாரக் கட்டுமானத்திற்கு நிபுணர்களை, அதாவது விஞ்ஞான, தொழில்நுட்பத் துறையினரையும் நடைமுறை ரீதியாக வர்த்தகத்திலும் பெரும் நிறுவனங்களைக் கட்டுவதிலும் பொருளாதார காரியங்களைக் கண்காணிப்பதிலும் அனுபவத்தையும் ஞானத்தையும் பெற்றவர்களையும் கவர்ந்திழுப்பதற்காக இன்னமும் அதிக அளவு விடாமுயற்சியுடன் வேலை செய்ய வேண்டியதன் முழு அவசியத்தின் மேல் கவனத்தை செலுத்த சோவியத்துக்களின் காங்கிரஸ் சகல பொருளாதார நிறுவனங்கள், வெறும் அரசு நிறுவனங்கள் அல்லாத வர்க்க நிறுவனங்கள் ஆகியவற்றைக் கோருகின்றது.

நிபுணர்களின் நிலைமையை மேம்படுத்துவதிலும் அவர்களது தலைமையின் கீழ் பரந்த அளவு தொழிலாளர்களையும் விவசாயிகளையும் பயிற்றுவிப்பதிலும் ருஷ்ய சோவியத் சமஷ்டிச் சோஷலிசக் குடியரசின் மத்திய மற்றும் உள்ளூர் நிறுவனங்கள் நிரந்தர அக்கறை செலுத்த வேண்டும்.

7. சட்டத்துறை மக்கள் கமிசாரகத்திடமிருந்து சோவியத்துக்களின் 9வது காங்கிரஸ் இரு விஷயங்களில் ஒப்பற்ற அதிக அளவு ஆற்றலைக் கோருகிறது:

முதலாவதாக, தங்களது நடவடிக்கையில் சிறிதும் கூச்சத்தை அனுமதியாது, அதே சமயம் குடியரசின் சட்டங்களை இடைவிடாது கடைபிடிப்பதிலிருந்து பிறழ்வதற்காகச் செய்யப்படும் எந்த ஒரு சிறிய முயற்சியையும் கண்டிப்புடன் தண்டித்துக் குடியரசின் அடிமட்ட நீதிமன்றங்கள் தனியார்த் துறை வர்த்தகர்கள், தொழிலதிபர்களின் நடவடிக்கைகளை கண்டிப்புடன் கண்காணிக்க வேண்டும்; சட்டநியதிகளை கடைபிடிப்பதைக் கண்காணிப்பதில் தன்னிச்சையாக, விரைவாக, காரியரீதியாக பங்கேற்க பரந்த அளவு தொழிலாளர்களையும் விவசாயிகளையும் பயிற்றுவிக்க வேண்டும்.

இரண்டாவதாக, அதிகாரவர்க்க மனப்பாங்கு, காரியாலயங்களில் ஏற்படும் இழுத்தடிப்பு, திறமையற்ற பொருளாதார நிர்வாகம் ஆகியவற்றுக்கு எதிராக வழக்கு தொடர வேண்டியதன் மேல் அடிமட்ட நீதிமன்றங்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். நமது சூழ்நிலைகளில் எதிர்த்துப் போரிடக் கடினமாக உள்ள தீமைக்கான பொறுப்பை உயர்த்தவும் தொழிலாளர், விவசாயி வெகுஜனங்களின் கவனத்தை இந்த மிக முக்கியப் பிரச்சினையின்பால் திருப்பவும் நடைமுறை லட்சியமாகிய பெரும் பொருளாதார வெற்றிகளை அடையவும் இத்தகைய விஷயங்களுக்கான வழக்குகள் அவசியம்.

புதிய கட்டத்தில் கல்வித்துறை மக்கள் கமிசாரகத்தின் கடமை மிகக்குறுகிய காலகட்டத்தில் தொழிலாளர், விவசாயிகள் மத்தியிலிருந்து எல்லாத் துறைகளிலும் நிபுணர்களாகத் தக்கவர்களை உருவாக்குவதில் அடங்கியுள்ளது என்று 9வது காங்கிரஸ் கருதுகிறது; பள்ளி மற்றும் பள்ளிக்கு வெளியேயான கல்விப் பணிகளுக்கும் குடியரசு முழுவதன் மற்றும் அந்தந்தப் பிரதேசத்தின் உடனடியான பொருளாதாரக் கடமைகளுக்கும் இடையேயுள்ள தொடர்பை இன்ன

மும் அதிகமாக வலுப்படுத்த முன்மொழிகிறது. உதாரணமாக, சோவியத்துக்களின் 9வது காங்கிரஸ், ருஷ்யாவை மின்சாரமயப்படுத்தும் திட்டத்தைப் பற்றிய பிரச்சாரம் குறித்து சோவியத்துக்களின் 8வது காங்கிரசால் ஏற்கப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்ற இன்னமும் தேவையான அளவு காரியங்கள் செய்யப்படவில்லை என நிர்ணயிக்கிறது; ஒவ்வொரு மின்நிலையத்திலும் இயன்ற சக்திகள் அனைத்தையும் ஒன்றுதிரட்டி முறையாக கலந்துரையாடல்களையும் விரிவுரைகளையும், தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் மின்சாரத்தைப் பற்றியும் அதன் முக்கியத்துவத்தைப் பற்றியும் மின்சாரமயமாக்கும் திட்டத்தைப் பற்றியும் அறிமுகப்படுத்துவதற்கான செய்முறை வகுப்புக்களையும் ஏற்பாடு செய்ய வேண்டும் என கோருகிறது; ஒரு மின்நிலையம் கூட இல்லாத தாலுக்காக்களில் இயன்ற அளவு விரைவாக சிறிய மின்நிலையங்களாவது கட்டப்பட வேண்டும், இவை குறிப்பிடப்பட்ட பிரச்சார மற்றும் கல்விப் பணியின் ஸ்தல மையமாக, அந்தத் துறையில் சகலவித முன்முயற்சிகளின் ஊக்குவிப்புமையமாக மாற வேண்டும்.

*1921ஆம் ஆண்டு டிசம்பர் 25ல்*
*எழுதப்பட்டது*

# புதிய பொருளாதாரக் கொள்கை சூழ்நிலைகளில் தொழிற்சங்கங்களின் பங்கு, கடமைகளைப் பற்றிய ஆய்வுரைகளின் நகல்

## 7. பாட்டாளி வர்க்க அரசின் பொருளாதார மற்றும் அரசு நிறுவனங்களில் தொழிற்சங்கங்களின் பங்கும் பங்கேற்பும்

முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்தை நோக்கிய மாற்றத்தை நிகழ்த்தக்கூடிய அரசின் வர்க்க அடித்தளமாக பாட்டாளி வர்க்கம் விளங்கும். சின்னஞ் சிறிய விவசாயிகள் மிகுதியான அளவில் விஞ்சி நிற்கும் நாட்டில், மிகப் பெரும் பான்மையான விவசாயிகளுடன் அசாதாரணமான திறமை யுடன் எச்சரிக்கையாக, படிப்படியாக ஐக்கியத்தை ஏற் படுத்தக்கூடிய சூழ்நிலையில் மட்டுமே பாட்டாளிகளால்இந்தக் கடமையை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும். தொழிற் சங்கங்கள் அரசாட்சியின் நெருங்கிய, அத்தியாவசியமான துணைவனாக இருக்க வேண்டும்; அரசாட்சியின் சகல அர சியல் மற்றும் பொருளாதாரப் பணியில் அதை, தொழிலாளி வர்க்கத்தின் வர்க்க உணர்வுள்ள முன்னணிப்படையாகிய கம்யூனிஸ்டு கட்சி தலைமைதாங்கி வழிநடத்தும். பொதுவாக கம்யூனிசப் பள்ளியாக விளங்கும் தொழிற்சங்கங்கள், தொழி லாளி வர்க்க வெகுஜனங்கள் அனைவருக்கும், பின்னர் உழைப் பாளி மக்கள் அனைவருக்கும் குறிப்பாக சோஷலிச தொழிற் துறை நிர்வாகத்தை (பின்னர் படிப்படியாக விவசாய நிர்வாகத்தை) போதிக்கும் பள்ளியாக விளங்க வேண்டும்.

இந்தக் கோட்பாடுகளின் வழிநின்று பாட்டாளி வர்க்க அரசின் பொருளாதார மற்றும் அரசு நிறுவனங்களில் தொழிற்சங்கங்களின் பங்கேற்பைப் பற்றிய கீழ்கண்ட முக்கிய வடிவங்களை நிர்ணயிக்க வேண்டும்:

(1) பொருளாதாரத்தோடு தொடர்பு கொண்ட சகல வித பொருளாதார மற்றும் அரசு நிறுவனங்களை உரு வாக்குவதில் வேட்பாளர்களை முன்மொழிந்தும் வாக் குரிமையின்றி கருத்தை வெளியிட்டும் தொழிற்சங்கங்கள் பங்கேற்கும்; தொழிற்சங்கங்கள், நேரடியாக இல்லாது,

அவைகளால் முன்மொழியப்பட்டு கம்யூனிஸ்டு கட்சியாலும் சோவியத் ஆட்சியாலும் அங்கீகரிக்கப்பட்ட உயர் அரசு நிறுவனங்களின் உறுப்பினர்கள் மூலமாகவும் பொருளாதார சபைகளின் உறுப்பினர்கள் மூலமாகவும் தொழிற்சாலை நிர்வாகத்தின் (இத்தகையதொரு கூட்டு முறை எங்கே அனுமதிக்கப்பட்டுள்ளதோ அங்கே) உறுப்பினர்கள் மூலமாகவும் நிர்வாகிகள் மூலமாகவும் அவர்களது உதவியாளர்கள் மூலமாகவும் இன்னும் பல வழிகளிலும் இந்த நிறுவனங்களில் பங்கேற்கும்.

(2) தொழிற்சங்கங்களின் முக்கியக் கடமைகளில் ஒன்று தொழிலாளர்கள் மத்தியிலிருந்து, பொதுவாக உழைப்பாளி வெகுஜனங்களிடமிருந்து நிர்வாகிகளை முன்மொழிவதும் அவர்களை தயார்ப்படுத்துவதுமாகும். தற்போது நம்மிடையே முற்றிலும் திருப்திகரமான தொழிற்துறை நிர்வாகிகள் பத்துக்கணக்கிலும் ஓரளவு திருப்திகரமானவர்கள் நூற்றுக்கணக்கிலும் இருக்கின்றார்கள் என்றால், கூடியவிரைவிலேயே நமக்கு முதலாமவர்கள் நூற்றுக்கணக்கிலும் இரண்டாமவர்கள் ஆயிரக்கணக்கிலும் தேவைப்படுவார்கள். இத்தகைய வேலைக்கு ஏற்ற எல்லா தொழிலாளர்கள், விவசாயிகளை முறையாகக் கணக்கெடுப்பதும் அவர்களது நிர்வாகப் பயிற்சியின் வெற்றிகளை முழுவிவரங்களடங்கிய, பன்முகத்தன்மை வாய்ந்த, காரியரீதியான சோதனைக்கு உட்படுத்துவதும் தொழிற்சங்கங்களால் இப்போதைக் காட்டிலும் மிக அதிக அளவு கவனத்துடனும் விடாமுயற்சியுடனும் நிறைவேற்றப்பட வேண்டும்.

(3) பாட்டாளி வர்க்க அரசின் எல்லா திட்ட நிறுவனங்களிலும் தொழிற்சங்கங்கள் பங்கேற்பது சிறிதும் குறையாத முக்கியத்துவம் வாய்ந்தது. கலாச்சார போதனைப் பணி முழுவதிலும் உற்பத்தி பிரச்சாரத்திலும் தொழிற்சங்கங்கள் பங்குகொள்வதோடுகூட, தொழிற்சங்கங்களின் இத்தகைய நடவடிக்கை இன்னமும் பரவலாகவும் ஆழமாகவும் தொழிலாளி வர்க்கத்தையும் உழைப்பாளி வெகுஜனங்களையும் முழு அரசுப் பொருளாதாரக் கட்டுமானத்திற்கு இழுக்க வேண்டும்; அவர்களைப் பொருளாதார வாழ்க்கையின் அனைத்து வட்டத்துடனும் மூலப்பொருள் சேகரிப்பிலிருந்து உற்பத்தி செய்த பொருளை

விற்பது வரையிலான தொழிற்துறைப் பணியின் சகல அம்சங்களுடனும் அறிமுகம் செய்து அவர்களுக்குச் சோஷலிசப் பொருளாதாரத்தின் ஒரே அரசுத் திட்டத்தைப் பற்றியும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் தொழிலாளிக்கும் விவசாயிக்கும் உள்ள நடைமுறை ரீதியான ஆர்வத்தைப் பற்றியும் இன்னும் அதிக திட்டவட்டமான கருத்தைத் தர வேண்டும்.

(4) கட்டண பட்டியல், சப்ளை விகிதங்கள் போன்றவற்றை நிர்ணயிப்பது என்பது சோஷலிசக் கட்டுமானத்திலும் தொழிற்துறை நிர்வகிப்பிலும் பங்கேற்கும் தொழிற்சங்கங்களின் பணியில் உள்ள அவசிய அம்சங்களில் ஒன்ருகும். உதாரணமாக, பொதுவாக அடிமட்ட நீதிமன்றங்களின் பணியிலும் நிர்வாகப் பணியிலும் தலையிடாதவாறு கட்டுப்பாட்டு நீதிமன்றங்கள் உழைப்புக் கட்டுப்பாட்டையும் இதற்கான மற்றும் உற்பத்தியை அதிகரிப்பதற்கான போராட்டத்தின் கலாச்சார முறைகளையும் இடையருது உயர்த்த வேண்டும்.

சோஷலிசப் பொருளாதாரக் கட்டுமானத்தில் தொழிற்சங்கங்களின் முக்கியப் பணிகளைப் பற்றிய இந்தப் பட்டியல் தொழிற்சங்கங்களின், சோவியத் ஆட்சியின் குறிப்பிட்ட நிறுவனங்களால் விவரமாக விளக்கப்படும் என்பது சொல்லமலேயே விளங்கும். முக்கியமானது என்னவென்ருல், பதிமைகளைத் தோற்றுவித்த நேரடியான, தயாரிப்பற்ற, திறமையற்ற, பொறுப்பற்ற நிர்வாகத் தலையீட்டை விடுத்து நாடு முழுவதற்குமான தேசிய பொருளாதாரத்தை நிர்வகிப்பதற்கு தொழிலாளர்களையும் உழைப்பாளிகள் அனைவரையும் நடைமுறை ரீதியாகப் பயிற்றுவிக்கும் உறுதியான, காரியரீதியான, பல்லாண்டுப் பணிக்கு தொழிற்சங்கங்கள் சுய உணர்வுடன், உறுதியுடன் மாற வேண்டும் என்பதேயாகும்.

## 8. தொழிற்சங்கங்களின் எந்தவிதப் பணிக்கும் வெகுஜனங்களுடன் உள்ள தொடர்பு முக்கிய நிபந்தனை

வெகுஜனங்களுடன், அதாவது மிகப்பெரும்பான்மையான தொழிலாளர்களுடன் (பின்னர் உழைப்பாளி மக்கள் அனைவருடன்) உள்ள தொடர்பு, தொழிற்சங்கங்களின் எந்த ஒரு நடவடிக்கையாயிருந்தாலும் அதன் வெற்றிக்கான மிக

முக்கியமான, மிக அடிப்படையான நிபந்தனையாகும். தொழிற்சங்கங்களின் ஸ்தாபன அமைப்பிலும் அதன் நிர்வாக இயந்திரத்திலும் கீழிருந்து மேல்மட்டம் வரை பொறுப்பான தோழர்கள் அடங்கிய முழு அமைப்பு முறையைத் தோற்றுவித்து அதை பல்லாண்டு அனுபவத்தில் சோதித்துப்பார்க்க வேண்டும்; தொழிலாளர்களின் மத்தியில் வாழக்கூடிய, அவர்களைப் பரிபூரணமாக அறிந்திருக்கக் கூடிய, எந்த நேரத்திலும் , எந்த ஒரு பிரச்சினையிலும் தவறின்றி வெகுஜனங்களின் உண்மையான தேவைகளையும் அபிலாஷைகளையும் சிந்தனைகளையும் நிர்ணயிக்கக்கூடிய, தவறான லட்சியக் குழப்பங்களின் சுவடின்றி வெகுஜனங்களின் வர்க்க உணர்வின் அளவையும் அந்தந்த மூடப்பழக்கங்கள், பழமையின் மிச்ச சொச்சங்களின் தாக்கத்தையும் நிர்ணயிக்கக் கூடிய, தோழமையுணர்வுள்ள தொடர்பாலும் தேவைகளை அக்கறையுடன் திருப்திபடுத்தும் குணத்தாலும் வெகுஜனங்களின் எல்லையற்ற நம்பிக்கையைப் பெறக்கூடிய இவர்கள் கம்யூனிஸ்டுகளின் மத்தியிலிருந்து இருக்க வேண்டும் னக் கட்டாயமில்லை. தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் டையாக இருந்து (இதுவரை அதிக முற்போக்கான ாடுகளின் நேரடி ஆதரவின்றி) சோஷலிசத்தை நோக்கிய மாற்றத்தை நிறைவேற்றிக்கொண்டிருக்கும் ஒரு மிகப் பெரிய நாட்டை தலைமைதாங்கி வழி நடத்தும் எண்ணிக்கை ரீதியாக அடக்கமான கம்யூனிஸ்டுக் கட்சிக்கான மிகப் பெரிய, கொடிய அபாயங்களில் ஒன்று, வெகுஜனங்களிடமிருந்து பிரிந்து போகும் அபாயமாகும்; அதாவது, ''முன்னணியை சரிபடுத்தாது'', உழைப்புப் படையுடன், அதாவது மிகப் பெரும்பான்மையான தொழிலாளி, விவசாயி வெகுஜனங்களுடன் நிலையான தொடர்பைத் தக்கவைக்காது, முன்னணிப்படை அளவிற்கதிகமாக வெகுதூரம் முன்னால் சென்றுவிடும் அபாயமாகும். தலைசிறந்த என்ஜினையும் முதல்தரமான இயந்திரங்களையும் உடைய மிகச் சிறந்த தொழிற்சாலை ஒன்றில் என்ஜினிலிருந்து இயந்திரங்களுக்குச் செல்லும் இணைப்புப் பகுதி பழுதுபட்டால் தொழிற்சாலை எப்படி இயக்கமின்றி நின்றுவிடுமோ அதே போல் கம்யூனிஸ்டுக் கட்சியிடமிருந்து வெகுஜனங்களுக்கு செல்லக்கூடிய இணைப்புப் பாலமாகிய தொழிற்சங்கங்கள் சரிவர கட்டப்படாதிருந்தாலோ அல்லது சரியாக இயங்காதிருந்தாலோ, நமது

சோஷலிசக் கட்டுமானத்தின் விபத்து தவிர்க்க இயலாததாகிவிடும். இந்த உண்மையை விளக்கினாலும், நினைவுபடுத்தினாலும், மெய்ப்பித்தாலும் மட்டும் போதாது; தொழிற் சங்கங்களின் அமைப்பு முழுவதிலும் அவற்றின் அன்றாடப் பணியிலும் இது ஸ்தாபன ரீதியாக நிலைப்படுத்தப்பட வேண்டும்.

## 9. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தில் தொழிற்சங்கங்களின் நிலையிலே உள்ள முரண்பாடுகள்

மேலே குறிப்பிடப்பட்ட அனைத்திலுமிருந்து தொழிற் சங்கங்களின் பல்வேறு கடமைகளுக்கிடையே பல முரண்பாடுகள் வெளிப்படுகின்றன. ஒரு புறத்தில் அவற்றின் முக்கிய இயக்க முறை—நம்பவைப்பதும் போதிப்பதுமாகும்; மறு புறம், அரசாட்சியில் பங்கேற்பவர்கள் என்ற முறையில் கட்டாயப்படுத்தலை அவற்றினால் மறுக்கவும் முடியாது. ஒரு புறத்தில் அவற்றின் முக்கியக் கடமை மிக நேரடியான நெருக்கமான பொருளிலே சொல்வதென்றால் உழைப்பாளி வெகுஜனங்களின் நலன்களைக் காப்பாற்றுவதாகும்; மறு புறத்தில் அரசாட்சியில் பங்கேற்பவர்கள் என்ற முறையிலும் மொத்தத்தில் தேசிய பொருளாதாரத்தின் கட்டுமானிகள் என்ற முறையிலும் அவற்றினால் நிர்ப்பந்தத்தை மறுக்க முடியாது. ஒரு புறத்தில் அவை போர்க்காலப்படி இயங்க வேண்டும். ஏனெனில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது வர்க்கங்களுக்கிடையேயான மிகக் கடுமையான, மிக விடாப்பிடியான, மிகத் துணிவான போராகும்; மறுபுறத்தில் விசேஷப் போர்க்கால வேலை முறைகள் குறிப்பாகத் தொழிற்சங்கங்களுக்குத்தான் குறைவாகப் பொருந்திவரும். ஒரு புறத்தில் அவைகள் வெகுஜனங்களுடன், அவர்களின் குறிப்பிட்ட மட்டத்துடன் தங்களைப் பழக்கப்படுத்திக்கொள்ளத் தக்கவையாய் இருக்க வேண்டும்; மறு புறத்தில் அவை வெகுஜனங்களின் மூடநம்பிக்கைகளுக்கும் பின்தங்கிய நிலைமைக்கும் எவ்விதத்திலும் ஆமோதிக்காது, அவர்களது தரத்தை மேலும் மேலும் தொடர்ந்து உயர்த்த வேண்டும். இது போல் இன்னமும் பலப்பல.

இந்த முரண்பாடுகள் தற்செயலானவையல்ல, இயற்றைப் பல பத்தாண்டுகளில் நீக்கவும் முடியாது. ஏனெனில் முதலாவதாக, இது எந்த ஒரு பள்ளிக்கும் உரிய முரண்பாடுகளா

கும். தொழிற்சங்கங்களோ—கம்யூனிசத்தின் பள்ளியாகும். ஒரு சில பத்தாண்டுகளுக்கு முன்னதாக பெரும்பான்மையான உழைப்பாளிகள், வயது வந்தவர்களுக்கான ''பள்ளியைப்'' பற்றிய தடயங்களையும் நினைவுகளையும் அகற்றக்கூடிய மிக உயர்ந்த வளர்ச்சியை அடைவார்கள் என்று கணக்கிடுவது இயலாது. இரண்டாவதாக, முதலாளித்துவத்தின், சிறு உற்பத்தியின் மிச்சசொச்சங்கள் இருக்கும் வரை, சமுதாய அமைப்பு முழுவதிலும் இந்த மிச்சசொச்சங்களுக்கும் சோஷலிசத் தளிர்களுக்கும் இடையேயுள்ள முரண்பாடுகள் தவிர்க்க இயலாதவை.

இதிலிருந்து கிடைக்கும் நடைமுறை ரீதியான முடிவுகள் இரு விதமானவை. முதலாவது: தொழிற்சங்கங்களின் வெற்றி கரமான இயக்கத்திற்கு அவற்றின் கடமைகளைச் சரியாகப் புரிந்து கொண்டால் மட்டும் போதாது; அவற்றைச் சரிவர கட்டினுல் மட்டும் போதாது; இவற்ருேடு கூட தனி நயப் பாங்கும், ஒவ்வொரு குறிப்பிட்ட திட்டவட்டமான சந்தர்ப் பத்திலும் வெகுஜனங்களை விசேஷ முறைப்படி அணுகி குறைந்த அளவு உராய்வுடன் கலாச்சார, பொருளாதார, அரசியல் ரீதியாக வெகுஜனங்களை மேலும் ஒரு படி உயர்த் தும் திறமையும் அவசியம்.

இரண்டாவது முடிவு: குறிப்பிடப்பட்ட முரண்பாடுகள் சச்சரவுகளையும் இணக்கமின்மையையும் உராய்வையும் இன்னும் பலவற்றையும் தவிர்க்க இயலாது தோற்றுவிக்கும். இவற்றை உடனடியாகத் தீர்ப்பதற்கான போதுமான அளவு செல்வாக்கு வாய்ந்த மேல் நிர்வாகப் பிரிவு அவசியம். இத்தகைய மேல் நிர்வாகப் பிரிவாக கம்யூனிஸ்டுக் கட்சி யும் எல்லா நாட்டு கம்யூனிஸ்டுக் கட்சிகளின் சர்வதேச ஒருங்கிணைப்பாகிய கம்யூனிஸ்டு அகிலமும் விளங்குகின்றன.

### 10. தொழிற்சங்கங்களும் நிபுணர்களும்

இந்தப் பிரச்சினையைப் பற்றிய அடிப்படைக் கருத்துக் கள் ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் வேலைதிட்டத் தில் கூறப்பட்டுள்ளன. இவற்றை நடைமுறைப்படுத்தும் அளவைக் காட்டக் கூடிய விவரங்களின் மேல் மீண்டும் கவனத்தை செலுத்தாது இருந்தால் இவைகள் காகிதத்தி லேயே இருந்து விடும். இத்தகைய விவரங்களாகக் கடந்த

காலத்தில் தன்பாசில் மட்டுமின்றி யூராலிலும் உள்ள தேச உடைமையாக்கப்பட்ட சுரங்கங்களில் பொறியியலர்களைத் தொழிலாளர்கள் கொன்ற நிகழ்ச்சிகளும், இரண்டாவதாக, மாஸ்கோ குடிநீர் வாரியத்தின் தலைமைப் பொறியியலர் வி. வி. ஒல்டென்போர்கெரின் தற்கொலையும் விளங்கு கின்றன.

இத்தகைய நிகழ்ச்சிப் போக்குகளுக்கான குற்றம் தொழிற்சங்கங்களின் மேலிருப்பதை விட ஒப்பிட முடியாத அளவு அதிகமாக கம்யூனிஸ்டுக் கட்சியின் மேலும் மொத்த மாக சோவியத் ஆட்சியின் மேலும் உள்ளது. ஆனால் அரசியல் குற்றத்தின் அளவை நிர்ணயிப்பதைப் பற்றி இப்போது பேசப்படவில்லை, மாறாக குறிப்பிட்ட அரசியல் முடிவுகளைப் பற்றி பேசப்படுகிறது. நமது எல்லா தலைமை நிறுவனங் களும், அதாவது கம்யூனிஸ்டுக் கட்சியும் சோவியத் ஆட்சி யும் தொழிற்சங்கங்களும், சித்தாந்த ரீதியாக முற்றிலும் கம்யூனிசத்திற்கு அந்நியனாக இருந்தாலும் நேர்மையாக, தான் செய்யும் காரியத்தைப் பற்றிய அறிவுடன், அதன் மீது விருப்பத்தோடு வேலை செய்யும் எந்த ஒரு நிபுணனை யும் கண்ணுங் கருத்துமாக காப்பாற்றுவிட்டால், சோஷலிசக் கட்டுமானத்தின் ஆழ்ந்த வெற்றிகளைப் பற்றிய பேச்சிற்கே இடம் இருக்காது. நம்மால் இன்னமும் விரைவில் நிறை வேற்ற இயலாது போகலாம் என்றாலும், என்னவானாலும் சரி, விசேஷ சமுதாயப் பிரிவு என்ற முறையில் நிபுணர்களுக்கு— கம்யூனிச சமுதாயத்தின் மிக உயர் வளர்ச்சி மட்டம் வரை இவர்கள் தொடர்ந்து விசேஷ சமுதாயப் பிரிவாகத்தான் இருப்பார்கள்—பொருளாதார ரீதியாகவும் சட்ட ரீதியாக வும், தொழிலாளர்கள் விவசாயிகளுடனான தோழமை ஒத் துழைப்பு விஷயத்திலும், சித்தாந்த ரீதியாகவும், அதாவது தனது பணியைக் குறித்த திருப்தி விஷயத்திலும் முதலாளி களின் வர்க்கத்தின் தன்னல நலன்களைச் சார்ந்தில்லாத சூழ் நிலையில் அப்பணியின் சமுதாயப் பயனைக் குறித்த சுய உணர்வு ரீதியாகவும் முதலாளித்துவத்தை விட சோஷலிசத்தில் சிறப் பாக வாழ வகை செய்ய வேண்டும். நிபுணர்களுக்கு சர்வாம்ச ரீதியாக அனைத்தையும் அளிப்பது, அவர்களில் சிறந்த வர்களுக்குப் பரிசளிப்பது, அவர்களது நலன்களைப் பேணிப் பாதுகாப்பது போன்றவற்றில் நடைமுறை ரீதியான பயன் களைத் தரக்கூடிய, திட்டமிடப்பட்ட வேலைகள் எங்கே

நடைபெறவில்லையோ அந்த நிறுவனத்தை ஓரளவாவது ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனமாக ஒருவரும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். அந்தக் குறிப்பிட்ட இலாக்காவினுடைய நலன்களின் கண்ணோட்டத்தில் பார்க்காது, உழைப்பின், மொத்தமாக தேசிய பொருளாதாரத்தின் நலன்களின் கண்ணோட்டத்தில் பார்த்து தொழிற்சங்கங்கள் இத்தகைய வகைகள் எல்லாவற்றின் முழு வேலையையும் செய்ய வேண்டும் (அல்லது எல்லா இலாக்காக்களின் குறிப்பிட்ட வேலையிலும் முறையாகப் பங்கேற்க வேண்டும்). நிபுணர்களின்பால் உழைப்பாளிகளுக்குச் சரியான பரஸ்பர உறவுகளை ஏற்படுத்துவதற்காக மிகப் பரவலான உழைப்பாளி மக்கள் மீது அன்றுடம் செல்வாக்கைச் செலுத்தும் மிகக் கடுமையான வேலை நிபுணர்கள் விஷயத்தில் தொழிற்சங்கங்களின் மேல் உள்ளது; இத்தகைய வேலைதான் உண்மையிலேயே ஆழ்ந்த நடைமுறை ரீதியான முடிவுகளைத் தரும்.

### 11. தொழிற்சங்கங்களும் தொழிலாளி வர்க்கத்தின் மீதான குட்டி முதலாளித்துவத் தாக்கங்களும்

தொழிற்சங்கங்கள் எப்போது கட்சியைச் சாராத மிகப் பரவலான தொழிலாளர்களை ஒன்றிணைக்கின்றதோ அப்போது தான் அவை உண்மையானவை. இதிலிருந்து, குறிப்பாக மிகப் பெரும்பான்மையான அளவு விவசாயிகளைக் கொண்டுள்ள நாட்டில், முதலாளித்துவ மிச்சசொச்சங்களின், சிறு உற்பத்தியின் மேல்கட்டுமானமாக விளங்கக்கூடிய அரசியல் போக்குகள் குறிப்பாகத் தொழிற்சங்கங்களின் மத்தியில் ஓரளவு நிலைப்பு பெற்று விடுவது என்பது தவிர்க்க இயலாது அமைந்து விடுகிறது. இவை குட்டி முதலாளித்துவ தாக்கங்களாகும், அதாவது ஒரு புறம் சோஷலிஸ்டு-புரட்சியாளர் மற்றும் மென்ஷிவிக்குகளின் (இரண்டாம் மற்றும் இரண்டரையாம் அகிலக் கட்சிகளின் ருஷ்யாவின் வகையினர்) மறு புறம் அராஜகவாதிகளின் தாக்கங்களாகும். இந்தப் போக்குகளுக்கு மத்தியில்தான், தன்னல வர்க்க காரணங்களுக்காக இல்லாது சித்தாந்த ரீதியாக முதலாளித்துவத்தைப் பாதுகாக்கக் கூடிய, அவர்களால் பிரச்சாரம் செய்யப்படும் பொதுவான ''ஜனநாயகம்'', ''சமத்துவம்'', ''சுதந்திரம்'' ஆகியவற்றின் வர்க்கத்தன்மையற்ற அர்த்தத்தைத் தொடர்ந்து

நம்பும் எவ்வளவேனும் தெளிவான எண்ணிக்கையிலான நபர்கள் எஞ்சியுள்ளனர்.

மேலே கூறப்பட்ட சமூக-பொருளாதாரக் காரணத்தைக் கொண்டுதான் தொழிற்சங்கங்களின் மத்தியில் காணப்படும் இத்தகைய குட்டி முதலாளித்துவ சித்தாந்தங்களின் மிச்ச சொச்சங்களை (அரிதாக அவற்றின் புத்துயிர்ப்பையும்) விளக்க வேண்டுமேயன்றி, தனிப்பட்ட குழுக்கள், இன்னமும் குறைவாக தனி நபர்களின் பங்கை வைத்து விளக்கக் கூடாது. எனவே, கம்யூனிஸ்டுக் கட்சியும் கலாச்சாரப் போதனைப் பணிகளை நிறைவேற்றக்கூடிய சோவியத் நிறுவனங்களும் தொழிற்சங்கங்களில் இருக்கும் கம்யூனிஸ்டுகள் எல்லோரும் தொழிற்சங்கங்களில் உள்ள குட்டி முதலாளித்துவ தாக்கங்களுக்கும் போக்குகளுக்கும் திரிபுகளுக்கும் எதிரான சித்தாந்தப் போராட்டத்தின் மேல் அதிக கவனம் செலுத்த வேண்டும்—மேலும் புதிய பொருளாதாரக் கொள்கை முதலாளித்துவத்தை ஓரளவு பலப்படுத்துவதில் கொண்டு போய் விடாமல் இருக்காது. பாட்டாளி வர்க்கத்தின் மீதான குட்டி முதலாளித்துவ தாக்கங்களுக்கு எதிரான போராட்டத்தை வலுப்படுத்தும் வடிவத்தில் இதற்கு எதிர்மறை இன்றியமையாத தேவையாகும்.

*1921ஆம் ஆண்டு டிசம்பர் 30—*
*1922ஆம் ஆண்டு ஜனவரி 4ல்*
*எழுதப்பட்டது*

# சோவியத் குடியரசின் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிலைமை பற்றி

உலோகத் தொழிலாளிகளின்
அனைத்து ருஷ்யக் காங்கிரசின் கம்யூனிஸ்டுப் பிரிவின்
கூட்டத்தில் ஆற்றிய உரையிலிருந்து
மார்ச் 6, 1922

நேற்று நான் தற்செயலாக இஸ்வேஸ்தியா பத்திரிகையில் அரசியல் பொருளைப் பற்றி மயக்கோவ்ஸ்கியின் கவிதையைப் படித்தேன்.[47] இந்தத் துறையில் எனது தகுதியின்மையை முற்றிலும் ஒத்துக் கொள்கிறேன் என்றாலும் நான் அவரது கவிதைத் திறமையை வழிபடுபவன் அல்ல. ஆனால் அரசியல் மற்றும் நிர்வாகக் கண்கொண்டு பார்க்கையில் இத்தகையதொரு திருப்தியை நான் நீண்ட காலமாக உணர்ந்ததில்லை. தனது கவிதையில் அவர் ஆதியோடு அந்தமாக கூட்டங்களை கேலி செய்து கம்யூனிஸ்டுகள் கூடிகூடிப் பேசுகின்றார்கள் என்று அவர்களைப் பார்த்து எள்ளி நகைபாடுகின்றார். கவி நயத்தைப் பற்றி எனக்கு தெரியாது, ஆனால் அரசியல் நோக்கில் இது முற்றிலும் சரி என்று நான் உத்திரவாதம் அளிக்கிறேன். நாம் உண்மையிலேயே இப்போது இருக்கும் நிலை மிகவும் முட்டாள்தனமானது என்று கூற வேண்டும்—முடிவின்றி எல்லோரும் கூட்டம் போடுகின்றனர், குழுக்களை நியமிக்கின்றனர், திட்டங்களைத் தீட்டுகின்றனர். இத்தகைய ருஷ்ய வாழ்க்கை முறையைக் கொண்ட ஒப்லோமவ்[48] என்றொருவன் இருந்தான். அவன் எப்போதும் கட்டிலில் படுத்துக்கொண்டு திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருந்தான். இது நடந்து நீண்ட காலம் கடந்து விட்டது. ருஷ்யா மூன்று புரட்சிகளை நடத்திவிட்டது என்றாலும் இத்தகைய ஒப்லோமவ்கள் இன்னமும் இருக்கின்றார்கள், ஏனெனில் ஒப்லோமவ் நிலப்பிரபுவாக மட்டுமில்லாது விவசாயியாகவும், விவசாயியாக மட்டுமில்லாது அறிவுஜீவியாகவும், அறிவுஜீவியாக மட்டுமில்லாது தொழிலாளியாகவும் கம்யூனிஸ்டாகவும் இருந்தான். நாம் எப்படிக் கூட்டங்களை நடத்துகின்றோம், குழுக்களில் எப்படி வேலை

செய்கின்ருேம் என்பதைப் பார்த்தாலே, பழைய ஒப்லோமவ் இன்னமும் இருக்கின்ருன், ஏதாவது பயன் ஏற்பட வேண்டுமானல் அவனை நீண்ட காலம் கழுவி சுத்தப்படுத்தி நார் நாராகப் பிரிந்து போரிட்டாக வேண்டும் என்று கூறுவதற்குப் போதும். இதற்கு நாம், நமது நிலைமையை எந்தவித மாயையும் இல்லாமல் பார்க்க வேண்டும். சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் செய்வதைப் போன்று ''புரட்சி'' எனும் சொல்லை பெரிய எழுத்துக்களால் எழுதும் எவரையும் நாம் பின்பற்றி நடக்கவில்லை. ஆனல் நாம், புரட்சியின் போது சற்றும் குறையாத அளவிற்கு, ஏன் சமயங்களில் அதிகமாகவே முட்டாள்தனமான செயல்கள் செய்யப்படும் என்ற மார்க்சின் வார்த்தைகளைத் திரும்பச் சொல்லலாம். இந்த முட்டாள்தனங்களை நாம் தெளிந்த அறிவுடன், அச்சமின்றி பார்க்க வேண்டும்— இதற்குப் புரட்சிவீரர்களாகிய நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

இந்தப் புரட்சியில் நாம் பிரிக்க இயலாக் காரியங்கள் பலவற்றை ஆற்றியுள்ளோம்; இவை ஏற்கெனவே இறுதி வெற்றி அடையப்பட்டு விட்டன, இதைப் பற்றி உலகம் முழுவதற்கும் ஏற்கெனவே தெரியும், எனவே எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் கலங்கவோ, பதட்டப்படவோ தேவையில்லை. நம்மால் மேற்கொள்ளப்பட்ட சோதனையை ஆதாரமாகக் கொண்டு நாம் ஏற்கெனவே செய்தவற்றை சரிபார்க்கின்ருேம் என்ற ஒரு நிலைமை தற்போது உள்ளது— இந்த சோதனை மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது, இதிலிருந்துதான் நாம் மேற்கொண்டு செல்ல வேண்டும். முதலாளிகளுடனை போராட்டத்தை சமாளிக்க வேண்டியிருக்கையில், நமது புதிய பாதையை உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். வியாபார நிறுவனங்களின் தலைமையில் இத்துறையில் அனுபவமே இல்லாத நபர்கள் வராதவாறு நமது ஸ்தாபனம் முழுவதையும் வேண்டுவது அவசியம். நம்மிடையே எல்லா இடங்களிலும் நிறுவனங்களின் தலைமையில் கம்யூனிஸ்டுகள்—முற்றிலும் நேர்மையான, கம்யூனிசத்திற்கான போராட்டத்தில் சோதிக்கப்பட்ட, சிறைசென்று வந்த நபர்கள்—இவர்களால் வர்த்தகம் செய்ய இயலாது —அரசு டிரஸ்டின் தலைமையில் அமர்த்தப்பட்டனர். இவர்களுக்குக் கம்யூனிஸ்டு என்ற முறையில் சகலவித தெட்டத் தெளிவான நற்குணங்களும் உள்ளன, ஆனல் வணிகனே

இவர்களை நன்றாக நொறுக்கி விடுவான்—இதை அவன் மிகச் சரியாக செய்துவிடுவான், ஏனெனில், சுறுசுறுப்பான, காரிய நேர்மை மிகுந்த, விசுவாசமிக்க கம்யூனிஸ்டை விட அதிகச் சிறப்பாக வேலையை சமாளிக்கக் கூடியக் கடைச் சிப்பந்திக்குப் பதிலாக, புத்திசுவாதீனமற்றவர்களைத் தவிர வேறு எவரும் சந்தேகிக்க முடியாத விசுவாசத்தை உடைய மிக மதிப்பு வாய்ந்த, தலைசிறந்த கம்யூனிஸ்டுகளை அநாவசியமாக அங்கே அமர்த்தினர். இதோ இதில்தான் நமது ஒப்லோமவ் இயல்பு வெளிப்படுகிறது.

நடைமுறை ரீதியான வேலையை நிறைவேற்றுவதற்கு அழகிய குண நலன்களையுடைய கம்யூனிஸ்டுகளை, ஆனால் இந்த வேலைக்கு முற்றிலும் சரிப்பட்டு வராதவர்களை நாம் அமர்த்தினோம். அரசு நிறுவனங்களில் எவ்வளவு கம்யூனிஸ்டுகள் உள்ளனர்? துல்லியம் மிக்க ஜெர்மானிய விஞ்ஞானியைக் கூட ஆச்சரியத்தில் மூழ்கடிக்கக் கூடிய அளவிற்கு ஏராளமான ஆராய்ச்சிப் பொருட்களும் பெரும் படைப்புக்களும் நம்மிடம் உள்ளன; நம்மிடம் காகித மலைகள் உள்ளன, இதை அனைத்தையும் அலசிப்பார்க்க கட்சியின் வரலாற்றைப் பற்றி ஆராயும் குழுவின்[49] ஐம்பதாண்டு வேலையை ஐம்பதால் பெருக்கினால் எவ்வளவு வேலை வருமோ, அவ்வளவு வேலை தேவை. நடைமுறை ரீதியாக அரசு டிரஸ்டில் உங்களால் ஒன்றுமே அடைய முடியாது, யார் எதற்கு பொறுப்பு என்பதைப் பற்றி ஒன்றுமே தெரிந்து கொள்ள முடியாது. நம்மிடம் தேவைக்கு அதிகமாக இருக்கிற, மயக்கோவ்ஸ்கி சித்தரித்தபடி நாம் பரபரப்புடன் உருவாக்கக் கூடிய அரசாணைகள் நடைமுறைரீதியாக நிறைவேற்றப்படுவதற்கு சோதனையே கிடையாது. பொறுப்புள்ள கம்யூனிஸ்டு பணியாளர்களின் கட்டளைகள் நம்மிடையே நிறைவேற்றப்படுகின்றனவா? இந்தக் காரியத்தை சரிவரச் செய்ய அவர்களால் இயலுமா? இல்லை, இது இயலாது, எனவேதான் நமது உள்நாட்டு கொள்கையின் பிரதான அம்சம் மாறுகிறது. நமது குழுக்களும் கூட்டங்களும் எதைக் காட்டுகின்றன? மிக அடிக்கடி இது விளையாட்டாகும். நாம் கட்சியை தூய்மைப்படுத்தத் துவங்கி "தன்னல நோக்கோடு கட்சியில் வந்து ஒட்டிக்கொண்ட ஒட்டுண்ணிகளும் திருடர்களும் ஒழிக" என்று கூறியதும் நிலைமை சீரடைந்தது. சுமார் நூறாயிரம் நபர்களை நாம் வெளியே தள்ளினோம், இது மிக நல்லது,

ஆனால் இது துவக்கம் மட்டுமே. கட்சிக் காங்கிரசில் இந்தப் பிரச்சினையைத் தேவையான முறையில் விவாதிப்போம். அப்போது, எந்தவித நடைமுறை வேலையையும் செய்யாது, செய்ய இயலாது, வெறும் குழுக்களை மட்டும் உருவாக்கி வரும் பத்தாயிரக்கணக்கானோர் இதே தலைவிதிக்கு ஆளாவார்கள் என நான் எண்ணுகிறேன். இவ்வாறாக நாம் எப்போது தூய்மைப்படுத்துகின்றோமோ அப்போது நடைமுறை வேலைகளைக் கட்சி மேற்கொள்ளும், போர்த்துறையில் இதைக் கட்சி எவ்வாறு புரிந்து கொண்டுள்ளதோ, அதே போன்று இதைப் புரிந்து கொள்ளும். இந்த வேலை ஒரு சில மாதங்களிலோ அல்லது ஓராண்டிலோ செய்யத்தக்கதல்ல. இந்தப் பிரச்சினையில் நாம் பாறையைப் போன்று உறுதியாக இருக்க வேண்டும். நமது வேலையின் தன்மை மாறியுள்ளது என்று கூற நாம் அஞ்சவில்லை. நமது மிக மோசமான உள்நாட்டு எதிரி—அதிகார வர்க்க மனப்பாங்கு கொண்டவன், இது பொறுப்பு வாய்ந்த (பின்னர் பொறுப்பில்லாத) சோவியத் பதவியில் அமர்ந்து நேர்மையான ஊழியன் என்ற முறையில் பரவலான மதிப்பைப் பெறும் கம்யூனிஸ்டாகும். அவன் அளவிற்கதிகமாகக் கண்டிப்பானவன் ஆனால் குடிப்பழக்கம் அறவே இல்லாதவன். அவன் காரியாலய இழுத்தடிப்புடன் போரிடக் கற்கவில்லை, இத்தோடு போரிடவும் அவனால் இயலாது, அவன் அதை மூடி மறைப்பவன். இந்த எதிரியிடமிருந்து நாம் தூய்மைப்படுத்தியாக வேண்டும், வர்க்க உணர்வுள்ள சகல தொழிலாளர்கள், விவசாயிகள் மூலம் இவனை எட்டிப்பிடிப்போம். இந்த விரோதிக்கு எதிராக, மந்தப்புத்தியுள்ள கும்பலுக்கு, ஒப்லோமவ்வாதிகளுக்கு எதிராக முற்போக்குப் படையாகிய கம்யூனிஸ்டுக் கட்சியின் பின்னால் கட்சியைச் சாராத தொழிலாளி-விவசாயி வெகுஜனங்கள் அனைவரும் வரிசை வரிசையாகச் செல்வார்கள். இந்த விஷயத்தில் எந்தவித ஊசலாட்டங்களும் இருக்க முடியாது.

உரையின் இறுதியில் சுருக்கமாகத் தொகுத்துரைக்க விழைகின்றேன். ஜெனோவாவைச் சுற்றியுள்ள குழப்பம்[50] நம்மை சிறிது கூட ஊசலாடும்படி வைக்காது. இப்போது நம்மை பிடிக்க முடியாது. நாம் வணிகர்களை நோக்கிச் செல்கின்றோம்; விட்டுக்கொடுக்கும் நமது கொள்கையைத் தொடர்ந்து ஒப்பந்தங்களுக்காக நாம் செல்வோம், ஆனால் அவற்றின் எல்லைகள் ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டு விட்டன. நமது ஒப்பந்தங்களில் இதுவரை நாம் வணிகர்களுக்கு அளித்ததை நமது சட்டத்

தொகுப்பில் ஒரடி பின்நோக்கி செல்லும் பொருளில் அளித்தோம், மேற்கொண்டு நாம் செல்ல மாட்டோம்.

இதனல் உள்நாட்டு கொள்கையில், குறிப்பாக பொருளாதாரக் கொள்கையில் நமது முக்கியக் கடமைகள் மாறுகின்றன. புதிய அரசாணைகளோ, புதிய நிறுவனங்களோ, புதிய போராட்ட முறைகளோ நமக்குத் தேவையில்லை. மக்களின் பயனையும் நடைமுறை ரீதியாக நிறைவேற்றப்படுவதையும் சரிபார்க்கும் சோதனை நமக்கு அவசியம். அடுத்தபடியாக தம்மை நிர்வாகிகளாகக் கருதும் கம்யூனிஸ்டுகளிடமிருந்து கட்சி தூய்மைப்படுத்தப்படும். இந்தக் குழுக்களிலும் கூட்டங்களிலும் பேசிக்கொண்டு சாதாரண காரியத்தைச் செய்யாமலிருக்கும் அனைவரையும் பிரச்சார, கிளர்ச்சித் துறைக்கும் வேறு பயனுள்ள துறைக்கும் அனுப்புவது சிறந்தது. ஏதாவது விசேஷமான, சிக்கலான ஒன்றைத் தோற்றுவித்து புதிய பொருளாதாரக் கொள்கையாதலால், புதிதாக ஏதாவது ஒன்றை உருவாக்க வேண்டும் என்று கூறி அதை நியாயப்படுத்துகின்றனர். அதே சமயம் அவர்களுக்கு அளிக்கப்பட்ட காரியம் நிறைவேற்றப்படுவதில்லை. அவர்களுக்கு அளிக்கப்பட்ட ஒரு கோப்பெக்கைக் காப்பாற்ற அவர்கள் அக்கறை கொள்வதில்லை; அதை இரண்டு கோப்பெக்காக மாற்ற முயலுவதில்லை, மாருக பில்லியன், திரில்லியன் சோவியத் பணத்திற்கான திட்டங்களைத் தீட்டுகின்றனர். இந்தக் கேட்டிற்கு எதிராகத்தான் நாம் நமது போராட்டத்தை நடத்துவோம். ஆட்களைச் சோதித்துப் பார்ப்பதிலும் நடைமுறைரீதியாக காரியம் நிறைவேற்றப்படுவதை சரிபார்ப்பதிலும்தான், இதில் மட்டும் தான் நமது வேலை அனைத்தின், முழு கொள்கையின் பிரதான அம்சம் உள்ளது. இது ஒரு சில மாதங்களுக்கோ அல்லது ஓராண்டிற்கோ ஏற்ற காரியமல்ல; இது ஒரு சில ஆண்டுகளுக்கான காரியம். இப்போதைய வேலையின் பிரதான அம்சம் என்னவென்று நாம் கட்சியின் சார்பில் அதிகாரபூர்வமாக அறிவித்து அதற்கேற்றவாறு கட்சி வரிசைகளை மாற்றியமைக்க வேண்டும். அப்போதுதான் நாம், விவசாயி வெகுஜனங்களின் ஆதரவைப் பெற்ற போல்ஷிவிக் பாட்டாளி வர்க்க ஆட்சி சகல துறைகளிலும் இதுவரை மேற்கொண்ட வேலைகளில் வெற்றியாளர்களாக இதுவரை இருந்தது போன்றே இந்தப் புதிய துறையிலும் வெற்றி வீரர்களாக இருப்போம். (கரவொலி.)

## ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் (போல்ஷிவிக்) பதினொன்ருவது காங்கிரசில் மத்தியக் கமிட்டியால் சமர்ப்பிக்கப்பட்ட அரசியல் அறிக்கையிலிருந்து மார்ச் 27, 1922

...மேற்பார்வை நிறுவனங்கள் தலைசிறந்தவைகளாக இருந்தாலும், இவை சோவியத் மற்றும் கட்சி நிறுவனங்களின் அமைப்பில் இருந்தாலும், அவை கிட்டத்தட்ட அற்புதமான மேற்பார்வை நிறுவனங்களாயிருந்தாலும், கம்யூனிஸ்டுகளாலேயே தோற்றுவிக்கப்பட்ட மேற்பார்வை நிறுவனங்களின் வழியே செல்லக்கூடிய சோதனை முறையில்லாத நமது வேலையை ஆழ்ந்து சோதனை செய்யும் முறையை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் இப்போது விஷயமாகும்; விவசாயப் பொருளாதாரத்தின் உண்மையான தேவைகளின் கண்ணேட்டத்தில் பார்த்தால் இத்தகைய சோதனை கேலிக்கூத்தாக இருக்கும், ஆனல் நமது கட்டுமான நோக்கில் பார்க்கையில் இது கேலிக்கூத்தல்ல. இத்தகைய மேற்பார்வை நிறுவனங்களை நாம் இப்போது தோற்றுவித்து வருகின்ருேம், ஆனல் நான் தற்போது அந்தச் சோதனையைப் பற்றிக் கூறவில்லை, வெகுஜனப் பொருளாதார நோக்கில் பார்க்கும்போது சோதனையாக விளங்கக் கூடியதைப் பற்றித்தான் கூறுகிறேன்.

முதலாளியால் சப்ளை செய்ய முடிந்தது. அவன் இதை மோசமாகச் செய்தான், இதை அவன் கொள்ளைப்போக்காகச் செய்தான், அவன் நம்மை இழிவுபடுத்தினன், கொள்ளையடித்தான். கம்யூனிசம் என்னவென்றே அறியாத, அதைப் பற்றி சிந்திக்காத சாதாரண தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் இது தெரியும்.

''என்ருலும் முதலாளிகளால் சப்ளை செய்ய முடிந்தது. உங்களால் முடியுமா? உங்களால் முடியாது.'' இம்மாதிரியான கூக்குரல்கள் சென்ற ஆண்டு வசந்தகாலத்தில்—எப்போதும் தெளிவாக இல்லாவிடினும்—கேட்டன, ஆனல் இவை

சென்ற ஆண்டு வசந்தகால நெருக்கடியின் அடிப்படையாக இருந்தன. ''நீங்கள் மிகச்சிறந்த மனிதர்கள்தான், ஆனால் நீங்கள் மேற்கொண்டுள்ள பொருளாதாரக் காரியத்தை செய்ய உங்களால் முடியாது.'' இதோ இதுதான் சென்ற ஆண்டு விவசாயி வர்க்கமும் விவசாயி வர்க்கத்தின் மூலமாக தொழிலாளி வர்க்கத்தின் பல்வேறு பிரிவுகளும் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு எதிராகக் கூறிய மிக எளிய, மிகக் கொலைப் பாதகமான கண்டனம். எனவேதான் புதிய பொருளாதாரக் கொள்கை பிரச்சினையில் இந்தப் பழைய அம்சம் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது.

மெய்யான சோதனை தேவை. அருகிலேயே முதலாளி கொள்ளை நோக்கோடு இயங்குகிறான், அவன் லாபத்தை எடுத்துக் கொள்கிறான், ஆனால் அவனுக்குத் தெரியும். ஆனால் நீங்கள் புதிய முறைப்படி முயலுகிறீர்கள்: உங்களிடம் லாபங்கள் கிடையாது, உங்கள் கோட்பாடுகள் கம்யூனிசக் கோட்பாடுகள், உங்கள் லட்சியங்கள் நல்ல லட்சியங்கள்—புனிதமான மக்களே, உயிருடன் சொர்க்கத்திற்குச் செல்ல வேண்டுகின்றீர்களே, காரியத்தை செய்ய உங்களால் முடியுமா? சோதனை தேவை, மெய்யான சோதனை தேவை, மத்தியக் கண்காணிப்புக் கமிஷன் ஆராய்ந்து கண்டிக்க, அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி ஒழுங்கு நடவடிக்கையை எடுக்கும் மாதிரியிலான சோதனை தேவையில்லை; மக்கள் பொருளாதாரக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில் மெய்யான சோதனை தேவை.

எல்லாவிதமான ஒத்திவைப்புக்களும் கம்யூனிஸ்டுகளுக்குத் தரப்பட்டன, எந்த ஒரு அரசாங்கத்திற்கும் தரப்படாத அளவிற்கு கடன் தரப்பட்டிருந்தது. முதலாளிகளிடமிருந்தும் நிலப்பிரபுக்களிடமிருந்தும் தப்புவதற்குக் கம்யூனிஸ்டுகள் உதவினார்கள் என்பது உண்மையே, விவசாயி வர்க்கம் இதை மதிக்கின்றது, அது கடனாக ஒத்திவைப்பைத் தந்தது, ஆனால் ஒரு குறிப்பிட்ட கால வரம்பு வரைதான் இது தரப்பட்டது. பின்னர் சோதனை: மற்றவர்களை விட எந்த விதத்திலும் மோசமின்றி உங்களால் நிர்வகிக்க இயலுமா? பழைய முதலாளிக்குத் தெரியும், உங்களுக்குத் தெரியாது.

இதுதான் முதல் பாடமும் மத்தியக் கமிட்டியின் அரசியல் அறிக்கையின் முதல் முக்கியப் பகுதியுமாகும். நமக்கு நிர்வகிக்கத் தெரியாது. ஒரு வருடத்தில் இது நிரூபிக்கப்பட்டு

விட்டது. ஒரு சில அரசு டிரஸ்டுகளின் (துர்கேனெவ் பாராட்டிய இந்த அழகிய ருஷ்ய மொழியில் சொல்வதென்ருல்) உதாரணத்தை எடுத்துக் கொண்டு நமக்கு எப்படி நிர்வகிக்கத் தெரியும் என்று காட்ட மிகவும் விரும்புகின்றேன்.

துரதிர்ஷ்டவசமாக பல காரணங்களால், குறிப்பாக நோய்வாய்ப்பட்டதன் காரணமாய் உரையின் இந்தப் பகுதியை என்ஞல் தயாரிக்க இயலவில்லே; நடப்பு நிகழ்ச்சிகளே நான் கவனித்ததை ஆதாரமாகக் கொண்ட எனது நம்பிக்கையை வெளிப்படுத்திக் கொள்வதோடு என்னே மட்டுப்படுத்திக்கொள்ள வேண்டியுள்ளது. இந்த வருடத்தில், நமக்கு நிர்வகிக்கத் தெரியாது என்பதைத் தெட்டத்தெளிவாக நிரூபித்துவிட்டோம். இது முக்கியப் படிப்பினேயாகும். அடுத்த வருடம் ஒன்று இதற்கு நேர்மாருனதை நிரூபிப்போம் அல்லது சோவியத் ஆட்சியால் நிலேத்திருக்க இயலாது. எல்லோரும் இதை உணரவில்லே என்பதே மிகப் பெரிய அபாயம். நமக்குத் தெரியாவிடில் முதலில் பயிலுவோம் வாருங்கள், அப்போது காரியத்தில் வெற்றி பெறுவோம் என்பதை எல்லாக் கம்யூனிஸ்டுகளும், பொறுப்புள்ள வேலேயாட்களும் தெளிவாக உணர்ந்தால், எனது கருத்துப்படி இதுவே முக்கிய, அடிப்படையான முடிவாக இருக்கும். ஆனுல் இதைப் பலர் உணரவில்லே; இவ்வாறு யாராவது எண்ணிஞல், அவர்கள் வளர்ச்சியுருத மக்களாய் இருப்பார்கள், அவர்கள் கம்யூனிசத்தைப் பயிலவில்லே, ஒருவேளே அவர்கள் பின்னர் புரிந்து கொண்டு பயிலுவார்கள் என்று நம்புகிருர்கள். இல்லே, மன்னியுங்கள், விவசாயியும் கட்சியைச் சாராத தொழிலாளியும் கம்யூனிசத்தைப் பயிலவில்லே என்பதல்ல விஷயம், வேலேத்திட்டத்தை வளர்த்து இந்த மாபெரும் வேலேத்திட்டத்தை நிறைவேற்ற மக்களே அறைகூவி அழைக்கும் காலம் கடந்துவிட்டது என்பதுதான் விஷயம். இந்தக் காலம் கடந்து விட்டது, இப்போதையக் கடினமான சூழ்நிலேயில், நீங்கள் போட்டியை சமாளித்தீர்கள் என்பதை தொழிலாளர்களும் விவசாயிகளும் அறியுமாறு நடைமுறை ரீதியாக அவர்களது பொருளாதாரத்திற்கு உதவி செய்ய முடியும் என்பதை நிரூபிக்க வேண்டும்.

நாம் தோற்றுவிக்கத் துவங்கியுள்ளோமே, ருஷ்ய மற்றும் அந்நிய தனிப்பட்ட முதலாளிகள், கம்யூனிஸ்டுகள் ஆகியோர் உள்ள கலப்புக் குழுமங்கள், இவை போட்டிக்குச்

சரிவர ஏற்பாடு செய்யத்தக்க, முதலாளிகளுக்கு எந்த விதத்திலும் குறையாமல் விவசாயப் பண்ணைகளுடன் தொடர்பை நம்மால் ஏற்படுத்த முடியும், அவற்றின் தேவைகளை நம்மால் திருப்திபடுத்த முடியும், இப்போதுள்ள அறியாமை நிலையிலேயே இருந்தாலும் விவசாயி முன்னேற அவனுக்கு நம்மால் உதவி செய்ய முடியும், ஏனெனில் அவனைக் குறைந்த காலத்தில் மாற்றுவது என்பது இயலாதது என்றெல்லாம் காண்பித்து கற்றுக்கொள்ளத் தக்க வடிவங்களில் ஒன்று.

ஒத்திவைக்கபட முடியாத முழுக் கடமையாக எத்தகைய போட்டி நம்முன் நிற்கிறது பார்த்தீர்களா. இதில்தான் புதிய பொருளாதாரக் கொள்கையின் பிரதான அம்சமும் எனது திடநம்பிக்கையின்படி கட்சிக் கொள்கையின் உட்கருத்தும் அடங்கியுள்ளது. சுத்தமான அரசியல் பிரச்சினைகளும் இன்னல்களும் போதுமான அளவிற்கு நம்மிடம் உள்ளன. உங்களுக்கு இவற்றைத் தெரியும்: ஜெனேவாவும் ஆக்கிரமிப்பு அபாயமும். இன்னல்கள் பெரியன, ஆனால் இந்த இன்னலோடு ஒப்படுகையில் அவை அற்பமானவை. இது எப்படி செய்யப்படுகிறது என்பதை நாம் ஏற்கெனவே அங்கே பார்த்தோம், அங்கே நாம் பலவற்றைப் கற்றுக் கொண்டோம், பூர்ஷ்வா ராஜதந்திரத்தை அனுபவித்தோம். மென்ஷிவிக்குகள் 15 ஆண்டுகள் நமக்கு போதித்த விஷயமாகும் இது, ஒரு சில பயனுள்ள அம்சங்களை கற்பித்தனர். இது ஒன்றும் புதிதல்ல.

ஆனால் பொருளாதாரத்தில் நாம் செய்ய வேண்டியிருப்பது இதுதான்: சாதாரண கடைச் சிப்பந்தியுடன், சாதாரண முதலாளியுடன், வணிகனுடன் நடைபெறும் போட்டிக்கு ஈடு கொடுக்க வேண்டும்; இவர்கள் விவசாயியிடம் சென்று கம்யூனிசத்தைப் பற்றி வாதிட மாட்டார்கள்—ஆம், கம்யூனிசத்தைப் பற்றி வாதிட மாட்டார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன் — மாறாக கேட்பார்கள்: ஏதாவது கொண்டு வர வேண்டுமென்றால், சரியாக வர்த்தகம் செய்ய வேண்டுமெனில், கட்ட வேண்டுமெனில், நான் வேண்டுமானால் விலையதிகமாகக் கட்டுவேன், ஆனால் ஒருவேளை கம்யூனிஸ்டுகள் பத்து மடங்கு அதிகமாக இல்லாவிட்டாலும், என்னை விட விலையதிகமாகக் கட்டக்கூடும் என்பார்கள். இத்தகையதொரு கிளர்ச்சிதான் காரியத்தின் உட்பொருள், இதில்தான் பொருளாதாரத்தின் வேர் உள்ளது.

மீண்டும் கூறுகிறேன், ஒத்திவைப்பையும் கடனையும் மக்களிடமிருந்து நாம் நமது சரியான கொள்கையின் பயனைப் பெற்றோம்; புதிய பொருளாதாரக் கொள்கைப்படிக் கூறினால் இது—உண்டியல்களாகும், ஆனால் இந்த உண்டியல்களின் மேல் கெடுக்கள் எதுவும் எழுதப்படவில்லை, கட்டாயம் திரும்பப் பெறுவதற்காக இவை எப்போது காண்பிக்கப்படும் என்று அடையாளம் காண முடியாது. இதில்தான் அபாயம் உள்ளது, இந்த சிறப்புத்தன்மைதான் இந்த அரசியல் உண்டியல்களைச் சாதாரண வர்த்தக உண்டியல்களில் இருந்து வேறுபடுத்துகிறது. இதன் மேல் நாம் நமது கவனம் அனைத்தையும் செலுத்த வேண்டும், அரசு டிரஸ்டுகளிலும் கலப்பு ஸ்தாபனங்களிலும் எங்கும் பொறுப்பில் இருப்பவர்களும் சிறந்தவர்களும் கம்யூனிஸ்டுகள் என்பதற்காக அமைதியடைந்து விடக்கூடாது—இதனால் எந்தப் பயனும் இல்லை, ஏனெனில் அவர்களால் நிர்வகிக்க இயலாது, இந்த விஷயத்தில் அவர்கள், பெரிய தொழிற்சாலை, பெரிய கம்பெனி ஆகிய பள்ளியைக் கடந்த சாதாரண முதலாளித்துவ கடைச் சிப்பந்திகளை விட மோசமானவர்கள். இதை நாம் உணருகிறதில்லை, இதில் கம்யூனிச இறுமாப்பு, மாபெரும் ருஷ்ய மொழியில் கூறினால் கம்யூனிச கர்வம் தங்கிவிட்டது. பொறுப்பு வாய்ந்த கம்யூனிஸ்டுக்கு—தலைசிறந்த, சந்தேகத்திற்கிடமின்றி நேர்மையான, விசுவாசமுள்ள, நாடுகடத்தியதைத் தாங்கிய, சாவைக் கண்டு அஞ்சாத கம்யூனிஸ்டுக்கு—வர்த்தகம் செய்யத் தெரியாது ஏனெனில் அவன் காரியவாதியல்ல, இதை அவன் கற்கவில்லை, இதைப் பயிலவும் அவன் விரும்பவில்லை, அரிச்சுவடியிலிருந்து அவன் பயில வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளவும் இல்லை என்பதில்தான் பிரச்சினையே உள்ளது. அவன் கம்யூனிஸ்டு, புரட்சிவீரன், உலகிலேயே மாபெரும் புரட்சியை செய்தவன்; இவனை நாற்பது பிரமீடுகள் பார்க்காவிட்டாலும், நாற்பது ஐரோப்பிய நாடுகள் முதலாளித்துவத்திலிருந்து தப்பிக்கும் நம்பிக்கையோடு இவனைப் பார்க்கின்றன; பத்து ஆண்டுகள் கடைக்கு ஓடிய, இந்தக் காரியத்தைத் தெரிந்த சாதாரண கடைச் சிப்பந்தியிடமிருந்து அவன் கற்க வேண்டும்; பொறுப்புள்ள கம்யூனிஸ்டும் விசுவாசமுள்ள புரட்சிவீரனுமாகிய அவனுக்கு இது தெரியாதது மட்டுமல்ல, இது தனக்குத் தெரியாது என்ற விஷயம் கூட தெரியாது.

தோழர்களே, நாம் இந்த முதல் அறியாமையையாவது திருத்தினல் அது மிகப்பெரும் வெற்றியாக இருக்கும். இது நமக்குத் தெரியாதிருந்தது, அரிச்சுவடியிலிருந்து பயிலுவோம் என்ற உறுதியுடன் நாம் இந்தக் காங்கிரசில் இருந்து வெளியே செல்ல வேண்டும். என்ன இருந்தாலும் நாம் புரட்சிவீரர்களாயிருப்பதை இன்னமும் விடவில்லை (பலர் நாம் அதிகார வர்க்க குணமுடையவர்களாகி விட்டோம் என்று அடிப்படைகளோடு கூறினலும்), புதிய, அசாதாரண மாக கடினமான காரியத்தில் பல முறை துவங்க இயன்றவர் களாயிருக்க வேண்டும் என்ற எளிய விஷயத்தை நம்மால் புரிந்து கொள்ள முடியும்: துவங்கி முட்டுக்கட்டை ஏற் பட்டால், மீண்டும் துவங்க வேண்டும்—இவ்வாருக பத்து தடவை திரும்பத்திரும்பச் செய், நீ விரும்பியதை அடை, பிகு பண்ணுமலிரு, நீ ஒரு கம்யூனிஸ்டு என்று இறுமாப்புக் கொள்ளாமலிரு; எது எப்படியானலும் பொருளாதார ரீதியாக செய்தாக வேண்டிய ஒன்றை அங்கே ஏதோவொரு கட்சியைச் சாராத கடைச் சிப்பந்தியால் அல்லது ஒருவேளை வெண்படையினல்—அநேகமாக வெண்படையினல்—செய்ய முடிந்திருப்பதை உன்னல் செய்ய முடியாது. நீ ஒரு பொறுப்புள்ள கம்யூனிஸ்டாக இருந்தால், நூற்றுக்கணக் கான பதவிகளையும் பட்டங்களையும், கம்யூனிச மற்றும் சோவியத் ''விருதுகளையும்'' பெற்றிருந்தால், இதை நீ புரிந்து கொண்டால் உனது இலட்சியத்தை அடைவாய், ஏனெனில் இதைப் பயில முடியும்.

இந்த ஆண்டில், மிகச் சிறியவைகளாயிருந்தாலும், ஏதொ சில வெற்றிகள் நம்மிடம் உள்ளன, ஆனல் இவை மிகச் சிறியவை. இப்போது நம்மிடம், பொறுப்புள்ள, விசுவாசம் மிக்க ருஷ்யக் கம்யூனிஸ்டிடம், இந்தத் திறமை எந்த ஒரு பழைய கடைச் சிப்பந்தியை விடக் குறைவு என் பதைப் பற்றிய சுய உணர்வும் பரவலாக வியாபித்திருக்கக் கூடிய, எல்லாக் கம்யூனிஸ்டுகளாலும் ஒப்புக்கொள்ளப்படக் கூடிய கருத்தும் இல்லை என்பதுதான் முக்கியமானது. மீண்டும் கூறுகிறேன், முதலிலிருந்தே பயிலத் துவங்க வேண்டும். இதை நாம் உணர்ந்தால் தேர்விற்கு நாம் ஈடுகொடுப் போம்; இந்தத் தேர்வோ, நெருங்கி வரும் நிதி நெருக்கடி ஏற்படுத்தக் கூடிய கடுமையான தேர்வாகும், ருஷ்ய மற்றும் சர்வதேச சந்தை ஏற்பாடு செய்யும் தேர்வாகும்; இந்தச்

சந்தையை நாம் சார்ந்தவர்கள், இதோடு நாம் தொடர்புடையவர்கள், இதிலிருந்து நம்மால் பிரிந்து போக முடியாது. இது ஒரு கடுமையான தேர்வாகும், ஏனெனில் இதில் நம்மை பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் அழித்துவிடலாம்.

பிரச்சினை இவ்வாறு மட்டும், இவ்வாறு மட்டுமே உள்ளது, ஏனெனில் இங்கே போட்டி கடுமையானது, இந்தப் போட்டி தீர்மானகரமானது. நமது பொருளாதார, அரசியல் இன்னல்களிலிருந்து மீள்வதற்கான சகலவித வழிகளும் முறைகளும் ஏராளமாக நம்மிடம் இருந்தன. இந்த வழிகளையும் முறைகளையும் இதுவரை பல இணைப்புக்களில், பல்வேறு சந்தர்ப்பச் சூழ்நிலைகளுக்கேற்றவாறு பயன்படுத்த நம்மால் முடிந்தது என்பதைப் பற்றி நாம் சர்வமாக பெருமையடித்துக் கொள்ளலாம், ஆனால் தற்போது நம்மிடம் வேறு எந்த வழிகளும் இனி கிடையாது. எந்த வித மிகைப்படுத்தலுமின்றி இதைக் கூறுவதற்கு அனுமதியுங்கள்; இந்தப் பொருளில் உண்மையிலேயே ''இறுதியான தீர்மானகரமான போர்'' சர்வதேச முதலாளித்துவத்துடன் அல்ல—அங்கே ''இறுதியான தீர்மானகரமான போர்கள்'' இன்னமும் நிறைய இருக்கின்றன — இல்லை, இந்தப் போர் சிறிய விவசாயப் பண்ணையிலிருந்து வளரக்கூடிய, அதனால் ஆதரிக்கப்படக்கூடிய ருஷ்ய முதலாளித்துவத்துடனானது. இதோ இங்கேதான் வெகு விரைவிலேயே போர் நடைபெற உள்ளது; இதன் கால வரையறைகளைச் சரியாக நிர்ணயிப்பது என்பது இயலாதது. இங்கேதான் ''இறுதியான, தீர்மானகரமான போர்'' நடைபெற உள்ளது, இங்கே அரசியல் அல்லது மற்ற எந்தவித சுற்றுவழிகளும் இனி கிடையாது, ஏனெனில் இது தனியார் மூலதனத்துடனான போட்டியில் கடுமையான தேர்வாகும். தனியார் மூலதனத்துடனான போட்டித் தேர்வில் நாம், ஒன்று வெற்றி பெறுவோம், இல்லாவிடில் இது முழு தோல்வியாக இருக்கும். இந்தத் தேர்விற்கு ஈடுகொடுக்க நம்மிடம் அரசியல் அதிகாரமும் சகலவித பொருளாதார மற்றும் இதர ஆதாரங்களும், திறமையைத் தவிர அனைத்தும் உள்ளன. திறமை இல்லை. இந்த எளிய பாடத்தைக் கடந்த ஆண்டு அனுபவத்திலிருந்து கற்று இதை 1922ஆம் ஆண்டு முழுவதற்கும் நமக்கான வழிகாட்டியாக்கினால், முந்தைய இன்னலை விட இது பன்மடங்கு பெரியது என்றாலும்

ஏனெனில் இது நம்முள்ளேயே உள்ளது) இந்த இன்னலையும் நாம் வெற்றி கொள்வோம். ஒரு வெளி எதிரியல்ல. நம் மீது சுமத்தப்பட்டுள்ள இந்த விரும்பத்தகாத உண்மையை உணர நாமே விரும்பவில்லை என்பதிலும் ஆரம்பத்திலிருந்து பயிலத் துவங்கு என்ற விரும்பத்தகாத ஆனால் கட்டாயம் வர வேண்டிய நிலைக்கு வர விரும்பவில்லை என்பதிலும்தான் இந்த இன்னல் அடங்கியுள்ளது. இது எனது கருத்துப்படி புதியப் பொருளாதாரக் கொள்கையிலிருந்து பெறப்படும் இரண்டாவது படிப்பினையாகும்.

...இங்கேயும் கேள்வியைத் தெளிவாக முன்வைக்க வேண்டும்: நமது சக்தி என்ன, எது நமக்குப் போதாது? அரசியல் அதிகாரம் முற்றிலும் போதும். இந்த ஒரு நடைமுறை ரீதியான பிரச்சினையில், இந்த ஒரு காரியரீதியான நிறுவனத்தில் கம்யூனிஸ்டுகளுக்கும் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் அதிகாரம் போதாது என்று சுட்டிக்காட்டக் கூடிய யாராவது ஒருவர் இங்கே இருப்பாரா என்பதே சந்தேகம். இதைப் பற்றி இன்னமும் சிந்திக்கக் கூடியவர்கள் இருக்கின்றார்கள், ஆனால் அவர்கள் முன்னோக்கிப் பார்க்க வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளாது, நம்பிக்கையின்றி பின்னோக்கிப் பார்ப்பவர்கள். அடிப்படை பொருளாதார பலம் நமது கைகளில் உள்ளது. எல்லா தீர்மானகரமான பெரிய நிறுவனங்களும் இருப்புப் பாதைகளும் இது போன்றவைகளும் நமது கைகளில் உள்ளன. குத்தகை ஆங்காங்கே பரவலாக வளர்ந்து இருந்தாலும், அது மிக அற்பமான பங்கையே வகிக்கிறது; பொதுவாக இது முற்றிலும் அற்பமான கூறு. கம்யூனிசத்தை நோக்கிய மாற்றத்தை நிறைவேற்ற ருஷ்யாவின் பாட்டாளி வர்க்க அரசின் கைகளிலுள்ள பொருளாதார பலம் முற்றிலும் போதுமானது. என்னதான் போதாது? என்ன போதாது என்பது தெளிவு: நிர்வாகத்தில் இருக்கின்ற கம்யூனிஸ்டுகளுக்குக் கலாச்சாரத் தரம் போதாது. மாஸ்கோவையும் 4,700 பொறுப்புள்ள கம்யூனிஸ்டுகளையும்—மற்றும் அந்த அதிகார வர்க்கப் போக்குடைய குவியலையும் எடுத்துக் கொண்டால் யார் யாரை வழிநடத்திச் செல்கின்றார்கள்? கம்யூனிஸ்டுகள் இந்தக் குவியலை வழிநடத்திச் செல்கின்றார்கள் என்று கூற நான் மிகவும் சந்தேகப்படுகின்றேன்

உண்மையைச் சொல்வதென்றால், அவர்கள் வழிநடத்திச் செல்லவில்லை, மாறாக அவர்களை வழிநடத்திச் செல்கின்றார்கள். குழந்தைப்பருவத்தில் நமக்குச் சரித்திரத்தில் சொல்லிக் கொடுத்தார்களே, முற்றிலும் அதைப் போன்ற ஏதோ ஒன்று இங்கு நடந்துள்ளது. ஒரு நாட்டு மக்கள் மற்ற நாட்டு மக்களைக் கைப்பற்றினால், கைபற்றிய மக்கள் வெற்றியாளர்களாகவும் கைப்பற்றப்பட்ட மக்கள் வெற்றி கொள்ளப்பட்டவர்களாகவும் இருப்பார்களென நமக்குப் போதித்தார்கள். இது மிகவும் சாதாரணமானது, அனைவருக்கும் புரியக் கூடியது. ஆனால் இந்த மக்களின் கலாச்சாரத்திற்கு என்ன நேரிடும்? இது அவ்வளவு எளிதானதல்ல. கைப்பற்றிய மக்கள் வெற்றி கொள்ளப்பட்ட மக்களை விட மேன்மையான கலாச்சாரத்தை உடையவர்களாயிருந்தால், அவர்கள் தமது கலாச்சாரத்தைக் கைப்பற்றப்பட்ட மக்களின் மேல் சுமத்துவார்கள்; இவ்வாறின்றி வேறுவிதமாயிருந்தால், கைப்பற்றப்பட்ட மக்கள் தங்கள் கலாச்சாரத்தைக் கைப்பற்றிய மக்களின் மேல் சுமத்துவது உண்டு. இதைப் போன்ற ஏதோ ஒன்று ருஷ்ய சோவியத் சமஷ்டி சோஷலிசக் குடியரசின் தலைநகரில் ஏற்பட்டதா என்ன? 4,700 கம்யூனிஸ்டுகள் (கிட்டத்தட்ட முழு படைத்தொகுதி, அனைவரும் மிகச் சிறந்தவர்கள்) வேறொரு கலாச்சாரத்திற்குக் கீழ்படிந்தவர்களாகிவிட்ட ஒரு நிலைமை ஏற்பட்டுவிட்டதா என்ன? வெற்றி கொள்ளப்பட்டவர்களிடம் உயர்ந்த கலாச்சாரம் இருந்தது போன்ற ஒரு எண்ணம் இங்கே உண்மையிலேயே தோன்றக் கூடும். அதெல்லாம் ஒன்றுமில்லை. அவர்களிடம் உள்ள கலாச்சாரம் மட்டமானது, கீழ்த்தரமானது என்றாலும் நம்மிடம் உள்ளதை விடப் பெரியது. அது எவ்வளவு அற்பமானதாயிருந்தாலும் எவ்வளவு மட்டமானதாயிருந்தாலும், நமது பொறுப்புமிக்க பணியாளர்களான கம்யூனிஸ்டுகளிடம் உள்ளதை விட பெரியது ஏனெனில் அவர்களிடம் நிர்வாகம் செய்யப் போதுமான திறமை கிடையாது. நிறுவனங்களின் தலைமையில் வரும் கம்யூனிஸ்டுகள்—நிறுவனக் குறிப் பலகையைப் பெறுவதற்காக அவ்வப்போது நாசக்காரர்கள் இவர்களை வேண்டுமென்றே திறமையாக இவ்வாறு அமர்த்துவார்கள்—அடிக்கடி ஏமாற்றப்பட்டவர்களாகின்றனர். இதை ஒத்துக் கொள்வது மிகவும் விரும்பத்தகாதது அல்லது குறைந்த பட்சம் இது மிகவும் நல்லதல்ல, ஆனால் இதைச் செய்ய வேண்டும்

என எனக்குத் தோன்றுகிறது, ஏனெனில் தற்போது இதில் தான் பிரச்சினையின் பிரதான அம்சம் உள்ளது. எனது கருத்துப்படி ஆண்டிற்கான அரசியல் படிப்பினை இதற்குத் தான் கொண்டு விடுகிறது, இந்தக் குறியின் கீழ்தான் 1922ஆம் ஆண்டின் போராட்டம் நடக்கும்.

தமக்கு நிர்வகிக்கத் தெரியாது என்பதை ருஷ்ய சோவியத் சமஷ்டி சோஷலிசக் குடியரசின், ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் பொறுப்புள்ள கம்யூனிஸ்டுகளால் புரிந்து கொள்ள இயலுமா? அவர்களை உண்மையிலேயே வழிநடத்திச் செல்கையில், அவர்கள் தாம் வழிநடத்திச் செல்வதாக நினைப்பது கற்பனை என்பதை அவர்களால் புரிந்து கொள்ள இயலுமா? அவர்களால் புரிந்து கொள்ள முடிந்தால், அவர்கள் பயிலுவார்கள், ஏனெனில் பயில முடியும், அதற்குப் பயில வேண்டும், ஆனால் நம்மிடையே பயிலுவதில்லை. நம்மிடையே வலப்புறமாகவும் இடப்புறமாகவும் உத்தரவுகளையும் அரசாணைகளையும் வீசுகின்றனர், ஆனால் விரும்புவது நடப்பதில்லை.

புதிய பொருளாதாரக் கொள்கையைப் பிரகடனம் செய்து நாம் முன்வைத்தோமே போட்டி, அது ஆழ்ந்த போட்டியாகும். எல்லா அரசு நிறுவனங்களிலும் இந்தப் போட்டி உள்ளது என தோன்றுகிறது; உண்மையில் இது, சமரசப்படுத்த முடியாது ஒன்றின் மேல் ஒன்று விரோதம் பாராட்டும் இரு வர்க்கங்களுக்கிடையேயான போராட்டத்தின் இன்னுமொரு வடிவமேயாகும். இது முதலாளிக்கும் பாட்டாளிக்குமிடையே நடக்கும் போராட்டத்தின் இன்னுமொரு வடிவம்; இது இன்னமும் முடிவடையாத போராட்டம், மாஸ்கோவின் மத்திய நிறுவனங்களில் கூட கலாச்சார ரீதியாக மிஞ்சவில்லை. ஏனெனில் எங்கும் எப்போதும், அதிகாரம் முழுவதையும் சகல வாய்ப்புக்களையும் வைத்துக் கொண்டு தனது உரிமைகளுடனும் அதிகாரத்துடனும் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாத நமது தலைசிறந்தக் கம்யூனிஸ்டுகளைவிட பூர்ஷ்வா பிரமுகர்களுக்குக் காரியம் நன்கு தெரியும்.

அலெக்சாந்தர் தோடர்ஸ்கியின் புத்தகத்திலிருந்து ஒரு மேற்கொள் காட்ட விரும்புகிறேன். அந்தப் புத்தகம் வெஸ்யெகோன்ஸ்க் நகரத்தில் (இத்தகையதொரு மாவட்ட தலைநகரம் திவேர் மாகாணத்தில் உள்ளது) ருஷ்யாவில் நடை

பெற்ற சோவியத் புரட்சியின் முதலாண்டு நிறைவு நாளன்று —1918ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம் தேதி, நீண்ட நீண்ட காலத்திற்கு முன் வெளிவந்தது. இந்த வெஸ்யெகோன்ஸ்க் தோழர் அநேகமாக கட்சி உறுப்பினராயிருக்க வேண்டும். இந்தப் புத்தகத்தை நான் நீண்ட நாட்களுக்கு முன் படித்தேன் ஆதலால், இந்த விஷயத்தில் தவறு செய்யமாட்டேன் என்று உறுதி கூற இயலாது. அவர், இரண்டு சோவியத் தொழிற்சாலைகளை இயந்திரமயப்படுத்த ஆரம்பித்ததைப் பற்றியும் இரண்டு பூர்ஷ்வாக்களை, அப்போதைய முறைப்படி கைதுசெய்வதாயும் சொத்துக்களைப் பறிமுதல் செய்வதாயும் அச்சுறுத்தி எப்படி இந்த வேலையில் ஈடுபடுத்தினுர் என்பதைப் பற்றியும் கூறுகின்ருர். தொழிற்சாலையைப் புனரமைக்கும் பணிக்கு அவர்கள் கவரப்பட்டனர். 1918ஆம் ஆண்டு முதலாளிகளை எப்படிக் கவர்ந்திழுத்தார்களென நமக்குத் தெரியும் (சிரிப்பு), எனவே இதை விவரிக்கத் தேவையில்லை: இப்போது நாம் முதலாளிகளை மற்ற வழிகளில் கவர்ந்திழுக்கின்ருேம். ஆனுல் இதோ அவரது முடிவு: ''இது பாதிக்காரியம்தான்—முதலாளிகளை வெல்வதும் முற்றிலுமாகத் தோற்கடிப்பதும் மட்டும் போதாது, அவர்கள் நமக்காக வேலை செய்யும்படி செய்ய வேண்டும்''.

இது மிகச் சிறந்த வார்த்தைகள். வெஸ்யெகோன்ஸ்க் நகரத்திலும் 1918ஆம் ஆண்டிலும் கூட வெற்றி பெற்ற பாட்டாளிக்கும் வெல்லப்பட்ட முதலாளிக்குமிடையே உள்ள உறவுகளைப் பற்றிய சரியான புரிவு இருந்தது என்பதைக் காட்டக் கூடிய மிகச் சிறந்த வார்த்தைகள் இவை.

சுரண்டலாளரை தண்டித்து நிராயுதபாணியாக்கி அழித்தால் அது இன்னமும் பாதிக்காரியம்தான். ஆயினும் மாஸ்கோவில் பொறுப்புள்ள வேலையாட்களில் நூற்றுக்கு கிட்டத்தட்ட 90 பேர்கள் இதில்தான், அதாவது அழிப்பதிலும் நிராயுதபாணியாக்குவதிலும் தண்டிப்பதிலும்தான் எல்லாம் அடங்கியுள்ளது எனக் கற்பனை செய்கின்ருர்கள். மென்ஷிவிக்குகளைப் பற்றியும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களைப் பற்றியும் வெண்படையினரைப் பற்றியும் நான் கூறியதெல்லாம், அவர்களை நிராயுதபாணியாக்குவது, தண்டிப்பது (இது பல வகைப்பட்ட தண்டனை முறைகளாக இருக்கலாம்) மற்றும் முற்றிலுமாகத் தோற்கடிப்பது ஆகியவற்றில்தான் மிக அடிக்கடி கொண்டுபோய்விடும். ஆனுல் இது பாதிக்காரியம்தான்.

1918ஆம் ஆண்டிலேயே, வெஸ்யெகோன்ஸ்க் தோழரால் கூறப்பட்டபோது அது பாதிக்காரியமாக இருந்தது, இப்போதோ—இன்னமும் குறைவு, இது நான்கில் ஒரு பங்கு காரியம்தான். பொறுப்புள்ள கம்யூனிஸ்டுகள் பதவிகளைப் பெற்று தலைமை தாங்கி முதலாளிகளுடன் சேர்ந்து ஒரே வெள்ளத்தில் நீந்திச் செல்லாமல் மாருக அவர்களைத் தங்கள் கைகளாலேயே நமக்கு வேலை செய்யும்படி செய்ய வேண்டும். இதில்தான் உட்கருத்து முழுவதுமே உள்ளது.

கம்யூனிச சமுதாயத்தைக் கம்யூனிஸ்டுகளின் கைகளாலேயே கட்டிவிட முடியும் என்பது சிறுபிள்ளைத்தனமான, முற்றிலும் சிறுபிள்ளைத்தனமான கருத்தாகும். கம்யூனிஸ்டுகள்—கடலில் உள்ள, மக்கள் கடலில் உள்ள ஒரு துளி. அனைத்துலக வரலாற்றுப் போக்கின் பொருளில் மட்டுமின்றி மற்ற அர்த்தங்களிலும் அவர்கள் பாதையைச் சரியாக நிர்ணயித்தால்தான், அவர்களால் மக்களைத் தங்கள் பாதையில் இட்டுச் செல்ல முடியும். இந்த அர்த்தத்தில் நமது பாதையை நாம் மிகச் சரியாக நிர்ணயித்துள்ளோம், இதை நாம் சரிவர நிர்ணயித்துள்ளோம் என்று ஒவ்வொரு அரசும் ஊர்ஜிதத்தைக் கொண்டு வருகின்றது; நமது தாய்நாட்டில் இந்தப் பாதையை நாம் சரியாக நிர்ணயிக்க வேண்டும். இது இதனுல் மட்டுமின்றி, ஆக்கிரமிப்பு இருக்காது என்பதை வைத்தும் விவசாயிக்கு ரொட்டிக்கேற்ற பண்டத்தைத் தர முடியும் என்பதை வைத்தும்தான் நிர்ணயிக்கப்படுகிறது. ''நீ மிக நல்ல மனிதன், நீ நமது தாயகத்தைக் காப்பாற்றினுய், இதற்காக நாங்கள் உனக்குப் பணிந்திருந்தோம், ஆனுல் உன்னுல் ஆள முடியாவிட்டால் இடத்தை விட்டு வெளியேறு'' என்று விவசாயி கூறுவான். ஆம், விவசாயி இப்படித்தான் கூறுவான்.

கம்யூனிஸ்டுகள் பொருளாதாரத்தை மற்றவர்களின் கைகளைக் கொண்டு கட்ட முடிந்தால், முதலாளிகளிடம் பயின்று அவர்கள் விருப்பப்பட்ட பாதையில் முதலாளிகளை வழிநடத்திச் செல்வார்களேயானுல், பொருளாதாரத்தை நம்மால் நிர்வகிக்க இயலும். எனக்கு எல்லாம் தெரியும், ஏனெனில் நான் பொறுப்புள்ள கம்யூனிஸ்டு, ஏதோவொரு கடைச் சிப்பந்தி போன்றவர்களை மட்டுமா நான் வெற்றி கொண்டேன், நாங்கள் போர்க்களத்தில் போரிட்டோமே, இத்தகையவர்களையா அடித்தோம் என்றெல்லாம் கம்யூ

னிஸ்டு கற்பனை செய்தால்,—இந்த மிகுந்திருக்கக் கூடிய மனப்போக்குதான் எங்களை வெட்டுகிறது.

சுரண்டலாளரை நிராயுதபாணியாக்கி தண்டித்து மட்டுப்படுத்துவது என்பது காரியத்தின் மிகுந்த முக்கிய மற்றப் பகுதியாகும். இதைச் செய்ய வேண்டும். நமது அரசு அரசியல் நிறுவனமும் நமது நீதிமன்றங்களும் இதுவரை செய்வது போல் உற்சாகமற்று செய்யக் கூடாது; அவை உலக விரோதிகளால் சூழப்பட்ட பாட்டாளி வர்க்க நீதிமன்றங்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இது கடினமானதல்ல, பெரும்பாலும் இதனை நாம் கற்றுக்கொண்டு விட்டோம். இங்கே சிறிதளவு அழுத்தம் தேவைப்படுகிறது, ஆனால் இதைச் செய்வது எளிதானது.

வெற்றியின் இரண்டாவது பகுதி—கம்யூனிஸ்டல்லாதவரின் கைகளால் கம்யூனிசத்தைக் கட்டுவது, பொருளாதார ரீதியாக செய்ய வேண்டி வருவதை நடைமுறை ரீதியாகச் செய்யத் தெரிந்திருப்பது—அது விவசாயப் பண்ணைகளுடன் இணக்கத்தைக் காண்பதும், ''எவ்வளவு கடினமாக இருந்தாலும் எவ்வளவு வேதனையாக இருந்தாலும் பட்டினி எவ்வளவு துன்புறுத்தினாலும் ஆட்சி வழக்கத்திற்கு மாறானதாக, அசாதாரணமானதாக இருந்தாலும், அதனிடமிருந்து நடைமுறை ரீதியான, உண்மையாக உணரக்கூடிய உதவி கிடைக்கின்றது'' என்று விவசாயி சொல்லத் தக்கவாறு விவசாயியை திருப்திபடுத்துவதுமாகும். நாம் ஒத்துழைப்புக் கொண்டுள்ள, நம்மை பன்மடங்கு விஞ்சக் கூடிய ஏராளமான நபர்களை, அவர்களது வேலையை நாம் மேற்பார்வை பார்க்கும்படியும் நாம் அந்த வேலையைப் புரிந்து கொள்ளும் படியும் அவர்களது கரங்களால் கம்யூனிசத்திற்குப் பயனுள்ள ஏதாவது தோற்றுவிக்கும்படியும் வேலை வாங்குமாறு செய்ய வேண்டும். இதில்தான் இப்போதைய நிலைமையின் பிரதான அம்சம் உள்ளது, ஏனெனில் தனிப்பட்ட கம்யூனிஸ்டுகள் இதைப் புரிந்து கொண்டு பார்த்தாலும், நமது கட்சியின் பரவலான உறுப்பினர்களிடையே கட்சியைச் சாராதவர்களை வேலை செய்ய கவர்ந்திழுப்பதன் அவசியத்தைப் பற்றிய இந்த உணர்வு இல்லை. இதைப் பற்றி எவ்வளவு சுற்றறிக்கைகள் எழுதப்பட்டன, எவ்வளவு பேசப்பட்டது, ஆனால் ஓராண்டில் ஏதாவது செய்யப்பட்டதா? ஒன்றுமில்லை. நமது கட்சியின் நூறு கமிட்டிகளில் ஐந்து கமிட்டி

களால் கூட நடைமுறை ரீதியான பயன்களைக் காட்ட இயலாது. இப்போதைய உடனடித் தேவைகளிலிருந்து எந்த அளவிற்குப் பின்தங்கியுள்ளோம், 1918, 1919ஆம் ஆண்டு களின் பாரம்பரியத்திலேயே எந்த அளவிற்கு வாழ்கின்றோம், பார்த்தீர்களா? அவை மகத்தான ஆண்டுகளாக, மகத்தான உலக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாக இருந்தன. அந்த ஆண்டுகளைப் பின்னோக்கிப் பார்த்து தற்போது எந்த கடமை முன்நிற்கிறது என்பதைப் பார்க் காமலிருந்தால், அது சந்தேகத்திற்கிடமற்ற முழு அழிவாக இருக்கும், இதை உணர நாம் விரும்பவில்லை என்பதில்தான் முழு பிரதான அம்சமும் உள்ளது...

## "இரட்டைக்" கீழ்ப்படிதலேயும் சட்டத்தைப் பின்பற்றுதலேயும் பற்றி

பொலிட்பீரோவிற்காக தோழர் ஸ்தாலினுக்கு

அரசு வழக்கறிஞர் அலுவலகத்தைப் பற்றிய பிரச்சினே அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி அமர்வின் வேலேகளேத் தலேமை தாங்கி நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட மத்திய கமிட்டியின் குழுவில் கருத்து வேறுபாடுகளேத் தோற்றுவித்தது. இந்தக் கருத்து வேறுபாடுகள் பிரச்சினேயைத் தாஞகவே பொலிட்பீரோவிற்கு கொண்டுவராமலிருந்தால், நான் எனது தரப்பிலிருந்து இந்தப் பிரச்சினே அவ்வளவு முக்கியமானது எனக் கருதுவதால், இதை பொலிட்பீரோவின் முடிவிற்குக் கொண்டுவர பிரேரேபிக்கின்றேன்.

கருத்து வேறுபாடுகளின் உட்பொருள் இதுதான்: அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியால் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவின் பெரும்பான்மை, அரசு வழக்கறிஞர் அலுவலகத்தைப் பற்றியப் பிரச்சினேயில், அரசு வழக்கறிஞர் அலுவலகத்தின் உள்ளூர் பிரதிநிதிகள் மையத்தால் மட்டுமே நியமிக்கப்பட வேண்டும், மையத்திற்கு மட்டுமே கட்டுப்பட வேண்டும் என்பதற்கு எதிராகக் கருத்து தெரிவித்தது. எல்லா ஸ்தல வேலேயாட்களுக்காகவும் பொதுவாக ஏற்படுத்தப்பட்டுள்ள ''இரட்டைக்'' கீழ்ப்படிதலேப் பெரும்பான்மைக் கோருகிறது; அதாவது, ஒரு புறம் அந்தந்த மக்கள் கமிசாரகத்தின் மூலம் மையத்திற்கும் மறு புறம் ஸ்தல மாகாண நிர்வாகக் கமிட்டிக்கும் கீழ்ப்படிய வேண்டும்.

ஸ்தல மாகாண நிர்வாகக் கமிட்டிகளின், பொதுவாக ஸ்தல ஆட்சியின் எந்த ஒரு முடிவையும் சட்ட நோக்கில் எதிர்த்து அப்பீல் செய்ய அரசு வழக்கறிஞர் அலுவலகத்தின் உள்ளூர் பிரதிநிதிகளுக்கு உள்ள உரிமையை அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் குழுவின் இதே பெரும்பான்மைதான் நிராகரித்தது.

இந்தக் குழுவின் பெரும்பான்மையால் எடுக்கப்பட்ட, இவ்வளவு தெளிவாகத் தெரிகின்ற தவறான முடிவை எந்த வாதத்தைக் கூறி காப்பாற்றுவது என்பதை என்னால் எண்ணிப் பார்க்கவே கடினமாக உள்ளது. இந்தக் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் ''இரட்டைக்'' கீழ்ப்படிதல் என்பது அதிகார வர்க்க மனப்பாங்குடைய மத்தியத்துவத்திற்கு எதிராகவும் ஸ்தலத்திற்குத் தேவையான தன்னுரிமைக்காகவும் மாகாண நிர்வாகக் கமிட்டியாளர்களின்பால் மையத்திற்கு உள்ள அகந்தை மிக்க உறவுகளுக்கு எதிராகவும் நடத்தப்படும் சட்டரீதியான போராட்டம் என்பது பற்றிய வாதங்களை மட்டுமே நான் கேட்டேன். சட்டம் என்பது கலூகா சட்டம் என்றும் கஸான் சட்டம் என்றும் இருக்க முடியாது, மாறாக இது ஒரே அனைத்து ருஷ்ய சட்டமாகவும் ஏன் இன்னும் சொன்னால் முழு சோவியத் குடியரசுகளின் சமஷ்டிக்கே ஒரு சட்டமாகத்தான் இருக்க வேண்டும் என்ற கண்ணோட்டத்தில் அகந்தை உள்ளதா? அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் குழுவின் பெரும்பான்மையில் வெற்றி பெற்ற கண்ணோட்டத்தின் முக்கியத் தவறு, அவர்கள் ''இரட்டைக்'' கீழ்ப்படிதல் கோட்பாட்டை தவறாகப் பயன்படுத்தினர் என்பதில் அடங்கியுள்ளது. உண்மையிலேயே இருக்கக் கூடிய மாறுபாட்டின் தவிர்க்க இயலாமையைக் கணக்கில் கொள்ளத் தெரிந்திருக்க வேண்டிய இடத்தில் ''இரட்டைக்'' கீழ்ப்படிதல் அவசியம். கலூகா மாவட்டத்தில் உள்ள விவசாயம் கஸான் மாவட்டத்தில் உள்ளதைப் போன்றதல்ல. இதேதான் தொழிற்துறை முழுவதற்கும் பொருந்திவரும். இதேதான் நிர்வாகம் அல்லது அதிகாரத் துறை முழுவதற்கும் தகும். இந்தப் பிரச்சினைகள் அனைத்திலும் ஸ்தல மாறுபாடுகளைக் கணக்கில் கொள்ளாது இருத்தல் என்பது, அதிகார வர்க்க மத்தியத்துவத்தில் விழுவதை, இது போன்ற பலவற்றைக் குறிக்கும்; இது, விவேகமான வேலையின் அடிப்படையாக விளங்கக் கூடிய ஸ்தல மாறுபாடுகளைக் கணக்கெடுப்பதில் ஸ்தல வேலையாட்களுக்கு நாம் இடையூறு விளைவிப்பதைக் குறிக்கும். ஆனால் சட்டம் என்பது ஒரே சட்டமாக இருக்க வேண்டும், பாரம்பரியமான ருஷ்யக் கண்ணோட்டத்தைக் கண்டும் காணாதது போல் இருப்பதும், கலூகா சட்டத்தைக் கஸான் சட்டத்திலிருந்து வேறுபடுத்தி தக்கவைக்க விரும்பும் அரை காட்டுமிராண்டிகளின் பழக்க

வழக்கங்களும்தான் நமது வாழ்க்கையின், நமது அநாகரிகத் தன்மை முழுவதன் முக்கிய கேடாகும். எந்த ஒரு நிர்வாக அதிகாரத்திற்கும் மாருக, அரசு வழக்கறிஞர் அலுவலக மேற்பார்வைக்கு எந்தவித நிர்வாக அதிகாரமும் கிடையாது, எந்த ஒரு நிர்வாகப் பிரச்சினையிலும் அதற்கு தீர்மானகர மான வாக்கு கிடையாது என்பதை நினைவில் கொள்ள வேண் டும். அரசு வழக்கறிஞருக்கு உரிமை உண்டு, அவர் ஒன்றை மட்டுமே செய்யக் கடமைப்பட்டிருக்கின்ருர்: எந்தவித ஸ்தல மாறுபாடுகளையும் கவனிக்காது, ஸ்தல செல்வாக்கு எப்படியிருந்தாலும், அதற்கு நேர் மாருக, குடியரசு முழுவதும் சட்டத்தை மெய்யாலுமே ஒரேமாதிரியாகப் புரிந்து கொள்ளுமாறு செய்வதைக் கண்காணிப்பதுதான் அது. அரசு வழக்கறிஞரின் ஒரே உரிமையும் கடமையும் விஷயத்தை நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு வைப்பதாகும். இவை எந்த வகையான நீதிமன்றங்கள்? நம்மிடம் உள்ளவை ஸ்தல நீதி மன்றங்களாகும். நீதிபதிகள் ஸ்தல் சோவியத்துக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். எனவே அரசு வழக்கறிஞர், சட்டம் மீறப்பட்டதைப் பற்றி தான் தொடுத்த வழக்கைத் தீர்ப்பிற்காக எந்த அதிகார அமைப்பிற்குத் தருகின்ருரோ, அது ஸ்தல ஆட்சியாகும்; ஒரு புறம், சமஷ்டிக் குடியரசு முழுவதற்குமென ஏற்படுத்தப்பட்ட ஒரேவிதமான சட்டங் களை முற்றிலும் பின்பற்றவும் மறு புறத்தில் தண்டனையை நிர்ணயம் செய்கையில் எல்லா ஸ்தல சந்தர்ப்பச் சூழ்நிலை களையும் கணக்கில் கொள்ளவும் இது கடமைப்பட்டுள்ளது; அதே சமயம் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் சந்தேகத்திற்கிட மின்றி சட்டம் மீறப்பட்டிருந்தாலும், ஸ்தல நீதிமன்றத்தில் தெளிவுபடுத்தப்பட்ட, ஸ்தல மக்களுக்கு நன்கு தெரிந்த ஏதோ சில சந்தர்ப்பங்கள், குறிப்பிட்ட நபர்களுக்கெதி ரான தண்டனையைக் குறைப்பது அவசியமென்ருே அல்லது குறிப்பிட்ட நபர்கள் நீதிமன்றத்தில் நிரபராதியாக அறிவிக்கப்பட்டார்களென்ருே தீர்மானிக்க நீதிமன்றத்தைக் கட்டாயப்படுத்தின என்று சொல்லும் உரிமை இதற்கு உண்டு. எது எப்படியிருந்தாலும், சமஷ்டிக் குடியரசு முழு வதும் ஒரே மாதிரியான சட்ட முறையை உருவாக்குவதற் கான இந்த அடிப்படை நிபந்தனையை நாம் கடைபிடிக்காது இருந்தால், எந்தவித பாதுகாப்பைபும் எந்தவித நாகரிகத்

தன்மையையும் தோற்றுவிப்பதைப் பற்றிய பேச்சிற்கே இட மில்லை.

மாகாண நிர்வாகக் கமிட்டிகளின், மற்ற ஸ்தல ஆட்சிய மைப்புகளின் முடிவுகளை எதிர்த்து அப்பீல் செய்யும் உரிமை அரசு வழக்கறிஞருக்கு இருக்கக் கூடாது என்று கூறுவதும் முற்றிலும் அதே போல் கோட்பாட்டுரீதியாக தவறானதா கும்; சட்டரீதியாகப் பார்த்தால் ரப்கிரின் (தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பு) அல்லவா அவர்களைத் தண்டிக்கக் கடமைப்பட்டதாகிறது.

ரப்கிரின் சட்டரீதியான கண்ணோட்டத்தில் மட்டுமின்றி, பிரயோஜனரீதியான கண்ணோட்டத்திலும் சரிபார்க்கிறது. எந்த ஒரு ஸ்தல ஆட்சியின் எந்த ஒரு முடிவும் சட்டத்தி லிருந்து மாறுபடாமல் பார்த்துக்கொள்ள அரசு வழக்கறிஞர் பொறுப்பேற்கின்றார்; இந்தக் கண்ணோட்டத்தில் இருந்து மட்டுமே, எல்லா சட்டவிரோதமான முடிவையும் எதிர்த்து அப்பீல் செய்ய அரசு வழக்கறிஞர் கடமைப்பட்டிருக்கின் றார்; அதோடு முடிவுகளை நிறுத்திவைக்க அரசு வழக்கறி ஞருக்கு உரிமை கிடையாது, சட்டத்தைப் பற்றிய கருத்து குடியரசு முழுவதும் முற்றிலும் ஒரே மாதிரியானதாக அமைவதற்கான நடவடிக்கைகளை எடுக்க மட்டுமே அவர் கடமைப்பட்டுள்ளார். எனவே அகில ருஷ்ய மத்திய நிர் வாகக் கமிட்டியின் குழுவின் பெரும்பான்மையின் முடிவு கோட்பாட்டு ரீதியாக மிகப் பெரும் தவறானதாக உள்ளது மட்டுமின்றி, "இரட்டைக்" கீழ்ப்படிதலைப் பற்றியக் கோட் பாட்டை அடிப்படையிலேயே தவறாக பயன்படுத்துவது மட்டுமின்றி, சட்டத்தையும் குறைந்த பட்ச நாகரிகத் தன்மையையும் நிலைநாட்டுவதற்கான எல்லா வேலையையும் இது குலைக்கிறது.

அடுத்து, இந்தக் குறிப்பட்ட பிரச்சினையின் தீர்விற்கு ஸ்தல செல்வாக்கின் முக்கியத்துவத்தைக் கணக்கில் கொள்ள வேண்டும். நாம் சட்டதிட்டங்களற்ற சமுத்திரத்தில் வாழ் கின்றோம், சட்டத்தையும் நாகரிகத்தன்மையையும் நிலை நாட்டுவதற்கான மிகப் பெரும் எதிரியாக ஸ்தல செல்வாக்கு இல்லாவிட்டாலும், அத்தகைய மிகப் பெரும் எதிரிகளில் ஒன்றாக இது விளங்குகிறது என்பதில் ஐயமில்லை. பெரும் பான்மையான ஸ்தல சோதனைக் குழுக்களில் கட்சியைத் தூய்மைப்படுத்தும் போது, தனிப்பட்ட மற்றும் ஸ்தலக்

கணக்குகளை ஆங்காங்கே தீர்த்துக்கொள்வது எப்படி மேலோங்கியிருந்த அம்சமாக இருந்தது என்பதை கட்சியைத் தூய்மைப்படுத்தும் பணி வெட்ட வெளிச்சமாக்கியதைப் பற்றிக் கேள்விப்படாமல் யாராவது இருப்பது சந்தேக மானது. இது மறுக்க இயலாத, போதுமான அளவு விசேஷ அர்த்தமுள்ள ஒரு விஷயமாகும். போதுமான அளவு சட்டரீதியாகப் பயிற்சி பெற்று சகலவித ஸ்தல செல்வாக்கு களையும் எதிர்த்து நிற்கும் ஆற்றல் வாய்ந்த நம்பிக்கை மிக்க கம்யூனிஸ்டுகளை நூற்றுக்கணக்கில் கண்டுபிடிப்பதைவிட பத்துக்கணக்கில் கண்டுபிடிப்பது நமது கட்சிக்கு எளிது என்பதை மறுக்க முடிவு செய்பவர்கள் யாராவது இருப்பது அரிதே. அரசு வழக்கறிஞர் அலுவலகத்தின் ''இரட்டைக்'' கீழ்ப்படிதலைப் பற்றியும் அது மையத்திற்கு மட்டும் கட்டுப்பட்டிருக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும் பேசும்போது, பிரச்சினைக் குறிப்பாக இதில்தான் கொண்டுபோய் விடும். தலைமை அரசு வழக்கறிஞர், உயர் நீதிமன்றம், சட்ட மக்கள் கமிசாரகச் செயற்குழு ஆகியவற்றின் மூலமாக மத்திய அரசு வழக்கறிஞர் அலுவலக ஆட்சியை நிறைவேற்ற வல்ல கிட்டத்தட்ட பத்துப் பேர்களை மையத்தில் நாம் கண்டு பிடிக்க வேண்டும் (தலைமை அரசு வழக்கறிஞர் சர்வ அதிகாரத்தையும் தானே வைத்திருக்க வேண்டுமா அல்லது உயர் நீதிமன்றத்துடனும் சட்ட மக்கள் கமிசாரகச் செயற்குழுவுடனும் இதை அவர் பகிர்ந்து கொள்ள வேண்டுமா என்ற பிரச்சினையை நான் ஒரு புறம் ஒதுக்கி வைக்கிறேன், ஏனெனில் இந்தப் பிரச்சினை முற்றிலும் இரண்டாம் பட்சமானது; ஒரு நபரிடம் இவ்வளவு பெரிய அதிகாரத்தையளிக்க கட்சி அவரை நம்புகின்றதா அல்லது இந்த அதிகாரத்தை மேலே குறிப்பிட்ட மூன்று தலைமை இடங்களிலும் பகிர்ந்தளிக்கிறதா என்பதைப் பொறுத்து ஏதாவது ஒரு வகையில் இப்பிரச்சினைத் தீர்க்கப்படும்). இந்தப் பத்துப் பேர்களும், ஸ்தல மற்றும் தனிப்பட்ட செல்வாக்குகளுக்கு எதிரான அதிகபட்ச உத்திரவாதத்தை அளிக்கக்கூடிய மூன்று கட்சி நிறுவனங்களின் மிக நெருங்கிய கண்காணிப்பின் கீழும் அவற்றுடன் மிக நேரடியான தொடர்புகொண்டும் வேலை செய்வார்கள்; மத்தியக் கமிட்டியின் ஸ்தாபன அமைப்புக் காரியாலயம், மத்தியக் கமிட்டியின் பொலிட்பீரோ, மத்திய கண்காணிப்புக் கமிஷன் ஆகியவையே அந்த மூன்று கட்சி

நிறுவனங்கள், குறிப்பாக, கட்சிக் காங்கிரசின் முன் மட்டும் பொறுப்பான இந்தக் கடைசி நிறுவனம், அதாவது மத்திய கண்காணிப்புக் கமிஷன், எந்த மக்கள் கமிசாரகத்துடனும் எந்த தனிப்பட்ட இலாக்காவுடனும் சோவியத் ஆட்சியின் எந்த அமைப்புடனும் எந்த வித சிறு பக்க வேலேயும் இதன் உறுப்பினர்களுக்கு இல்லாதவாறு உருவாக்கப்பட வேண்டும். இத்தகைய சூழ்நிலேகளில், நடைமுறை ரீதியாக ஸ்தல செல்வாக்குகளேயும் ஸ்தல மற்றும் சகலவித அதிகார வர்க்க மனப்போக்கையும் எதிர்த்து நின்று குடியரசு முழுவதும் சமஷ்டிக் குடியரசு முழுவதும் உண்மையிலேயே ஒரே வித மான சட்டமுறை பின்பற்றப்படுவதை நிலேநாட்டச் செய்ய திறமை வாய்ந்த சிறிய மத்திய சபையைக் கட்சி ஏற்படுத்தும் என்பதற்கான உத்திரவாதம் இதுவரை கண்டுபிடிக்கப் பட்டவற்றிலேயே அதிகபட்ச உத்திரவாதமாக உள்ளது என்பது தெளிவு. எனவே இந்த மத்திய நீதிபரிபாலன சபையின் சாத்தியமான தவறுகள், பொதுவாக குடியரசில் நமது சகலவித கட்சி மற்றும் சோவியத் வேலேக்கான அனைத்து அடிப்படை அம்சங்களேயும் முக்கிய விதிகளேயும் நிர்ணயம் செய்யும் அதே கட்சி நிறுவனங்களால் அந்த இடத்திலேயே திருத்தப்படும்.

இதிலிருந்து பின்வாங்குவது என்பது, யாருமே நேரடியாக, வெளிப்படையாக ஆதரிக்காத ஒரு கண்ணேட்டத்தை இலே மறைவு காய்மறைவாக முன்வைப்பதாகும், எந்தவித ஸ்தல செல்வாக்குகளுக்கும் எப்போதுமே வீழ்ந்துவிடாமல், குடியரசு முழுவதும் தாங்களாகவே ஒரேவிதமான சட்ட முறையை நிலேநாட்டுவார்கள் என்ற முறையில் முற்றிலும் களங்கமற்ற நூற்றுக்கணக்கான அரசு வழக்கறிஞர்கள் நம்மிடையே இருப்பதற்கு நாம் உத்திரவாதம் கொடுக்கக்கூடிய அளவிற்கு நாகரிகத்தன்மையும் அதனுடன் பிரிக்க இயலாதவாறு இணைந்துள்ள சட்ட முறையும் அவ்வளவு உயர்வாக வளர்ந்துள்ளன போலும் என்பதுதான் அந்தக் கண்ணேட்டமாகும்.

அரசு வழக்கறிஞர் அலுவலகத்தைப் பொறுத்தமட்டில் ''இரட்டைக்'' கீழ்ப்படிதலே ஆதரிப்பதும், ஸ்தல ஆட்சியமைப்புகளின் எந்த ஒரு முடிவையும் எதிர்த்து அப்பீல் செய்யும் உரிமையை அதனிடமிருந்து பறிப்பதும் கோட்பாட்டு ரீதியாக தவறானது மட்டுமின்றி, சட்ட முறையை இடைய

ருது அமல்படுத்தும் நமது முக்கியக் கடமைக்கு இடையூறு விளைவிப்பதோடு மட்டுமின்றி, இது ஸ்தல அதிகாரவர்க்க போக்குடையவர்களின், ஸ்தல செல்வாக்கின் நலன்களையும் மூடநம்பிக்கைகளையும் பிரதிபலிக்கின்றது, அதாவது உழைப்பாளிகளுக்கும் ஸ்தல மற்றும் மத்திய சோவியத் ஆட்சிக்கும், அதே போல ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய ஆட்சிக்கும் இடையேயான பாழ்பட்ட இடைத் தரகர்களின் நலன்களைப் பிரதிபலிக்கின்றது என்ற முடிவிற்கு நான் இறுதியாக வருகிறேன்.

எனவே நான், இந்தக் குறிப்பிட்ட விஷயத்தில் ''இரட்டைக்'' கீழ்ப்படிதலை மறுக்கவும் ஸ்தல அரசுவழக்கறிஞர் அலுவலக அதிகாரம் மையத்திற்கு மட்டும் கட்டுப்பட்டிருக்குமாறு நிலைநாட்டவும் ஸ்தல ஆட்சியமைப்புகளின் சகல முடிவுகளையும்—அத்தகைய முடிவுகளை நிறுத்திவைக்கும் உரிமையின்றி, ஆனல் காரியத்தை நீதிமன்றத் தீர்ப்பிற்குக் கொண்டு செல்லும் விசேஷ உரிமையுடன்—அந்த முடிவுகள் அல்லது தீர்மானங்களைச் சட்ட நோக்கில் எதிர்த்து அப்பீல் செய்யும் உரிமையையும் கடமையையும் அரசு வழக்கறிஞர் அலுவலகத்திடம் தக்கவைக்கவும் நான் மத்தியக் கமிட்டிக்கு முன்மொழிகிறேன்.

லெனின்

தொலைபேசி மூலம் 1922ஆம் ஆண்டு
மே 20ஆம் தேதி கூறப்பட்டது

## அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் ஒன்பதாவது கூட்டத்தின் நான்காவது அமர்வில் நிகழ்த்திய உரையிலிருந்து அக்டோபர் 31, 1922

1918ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் மாஸ்கோவில் உள்ள நமது நிர்வாக இயந்திரத்தில் கணக்கெடுப்பு நடத்திஞேம். மாஸ்கோவில் 2,31,000 அரசு மற்றும் சோவியத் உத்தியோகஸ்தர்கள் உள்ளனர் என்ற எண்ணிக்கையை நாம் பெற்றேம்; இது மத்திய உத்தியோகஸ்தர்களேயும் ஸ்தல மாஸ்கோ நகர உத்தியோகஸ்தர்களேயும் உள்ளடக்கும். இந்த அளவிற்கதிகமான பெரிய நிர்வாக இயந்திரத்தை நாம் குறைத்துவிட்டோம், இப்போது இது அநேகமாக சிறியதாக இருக்கும் என்ற நம்பிக்கையில் சிலகாலம் முன் 1922ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இதே கணக்கெடுப்பை மீண்டும் நடத்திஞேம். அதில் எண்ணிக்கை 2,43,000 பேர்களாக இருந்தது. இதோ இதுதான் ஆட்குறைப்பின் விளேவு. இந்த உதாரணம் பயின்று ஒப்பிட வேண்டிய இன்னும் பெரிய வேலையை ஏற்படுத்தியுள்ளது. அப்போது 1918ஆம் ஆண்டில், சீர்திருத்தங்களின் ஆரம்ப உற்சாகத்தில் இதே போன்றக் கணக்கெடுப்பை நாம் நடத்திய போது, உண்மையாகச் சொல்லப்போனல், அதன் முடிவுகளிலிருந்து எந்தவித பயனேயும் நம்மால் கண்டுபிடிக்க முடியவில்லே. இதற்கெல்லாம் நேரமே இருந்ததில்லே. உள்நாட்டு யுத்தம் சிறிதளவு ஓய்வு நேரத்தைக் கூட நமக்கு விட்டுவைக்கவில்லே. அது செய்யப்படும் என நாம் இப்போது நம்புகின்றேம். மிக அதிகமான குறைபாடுகளால் அவதியுறும், இருமடங்கிற்கும் மேலாக பெருக்கப்பட்டுள்ள, அடிக்கடி நமக்காக வேலேசெய்யாது நமக்கு எதிராக வேலே செய்யும்—நமது குடியரசின் உயர்மட்ட சட்டமியற்றும் நிறுவனத்தின் மேடையிலிருந்தாவது இந்த உண்மையைக் கூறுவதைப் பற்றி அச்சப்படத் தேவையில்லே —நமது நிர்வாக இயந்திரம் மேம்படுத்தப்படும் என நாம்

நம்புகின்றோம். இதை மேம்படுத்துவதற்கு நிறைய உழைப்பும் திறமையும் தேவைப்படுகிறது. இந்த மேம்படுத்தல் எப்படிப்பட்டதாயிருக்க வேண்டும் என்ற பிரச்சினையின் மேலான மிக ஆழ்ந்த வேலைக்கான அணுகுமுறைகள், ஆம் இதுவரை அணுகுமுறைகள் மட்டுமே—தனிப்பட்டக் கட்டுரைகளும் தனிப்பட்ட ஸ்தல ஆராய்ச்சிகளும்—நம்மிடம் உள்ளன. சாதாரணமாக இதுவரை இருந்ததைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமான கவனத்தை இந்தப் பிரச்சினையின் மேல் செலுத்துவோம் என்ற உறுதியுடனும் சந்தடிக்கும் கெடுபிடிக்கும் குறைவான நேரத்தை ஒதுக்குவோம் என்ற உறுதியுடனும்—எங்கும் எப்போதும் நாம் எல்லோரும் இதற்கு அளவிடற்கரிய நேரத்தை ஒதுக்குகின்றோம்—இங்கிருந்து நாம் செல்வோமேயானால், நமது நிர்வாக இயந்திரத்தை உண்மையிலேயே பயின்று அதை மேம்படுத்த ஆண்டுக்கணக்கில் வேலைசெய்வோமேயானல், அது மகத்தான சாதனையாக இருக்கும், அது நமது வெற்றிக்கான உத்திரவாதமாக இருக்கும். நமது நிர்வாக இயந்திரத்தைத் தன்னிச்சையாகத் தோற்றுவிப்போம் என்று கூற நமக்குத் தைரியம் வேண்டும். சிறந்த தொழிலாளர்கள் இராணுவத் துறையிலும் சிவில் துறையிலும் மிகக் கடினமான கடமைகளை மேற்கொண்டார்கள்; எங்கும் எப்போதும் தவறாக செயலில் இறங்கினார்கள், என்றாலும் திருத்திக்கொண்டு வேலை செய்ய அவர்களால் முடிந்தது. இந்தப் பத்துக்கணக்கான தைரியம் மிக்க நபர்களுக்கும் தங்களது காகிதக் கடலில் குழம்பி உட்கார்ந்து கொண்டு நாசவேலை செய்யும் அல்லது அரைகுறை நாசவேலை செய்யும் நூற்றுக்கணக்கானவர்களுக்கும் இடையேயுள்ள விகிதம் எங்கும் அளவிட முடியாத காகிதக் கடலில் உயிரோட்டமுள்ள நமது காரியத்தைப் பாழாக்கியது. இதுவரை கற்க முடியாத இந்தப் பிரச்சினையை நாம் மிக விவரமாக கற்க வேண்டும். பல ஆண்டுகள் செல்ல வேண்டும், பல ஆண்டுகள் நாம் கற்க வேண்டும், ஏனெனில் நமது தொழிலாளர்களின் கலாச்சாரத் தரம் குறைவானது, முற்றிலும் புதிய காரியமாகிய உற்பத்தியை மேற்கொள்வது என்பது தொழிலாளர்களுக்குக் கடினமானது—நாமோ நேர்மையிலும் உற்சாகத்திலும் தொழிலாளர்களை மட்டுமே நம்பியிருக்க முடியும். நமது அரசு நிர்வாக இயந்திரத்தின் மேம்பாட்டை அடையவும் உயர்ந்த

கலாச்சார தரத்திற்கு—தனிப்பட்ட நபர்களுடைய தரத்தை யல்ல, முழு நிர்வாக இயந்திரத்தின் தரத்தை—உயர்த்த வும் பல ஆண்டுகள் செல்ல வேண்டும். தொடர்ந்து இந்த வேலைக்கு நமது சக்திகளை அர்ப்பணித்தால், அவசியம், தவிர்க்க இயலாத மிகச் சிறந்த விளைபயன்களைப் பெறுவோம் என நான் உறுதியாக நம்புகிறேன். (தொடர்ந்த கரவொலி.)

# காங்கிரசுக்கு கடிதம்[51]

## என்பதிலிருந்து

### 1

நமது அரசியல் முறையில் சில மாற்றங்களை இந்த காங்கிரசில்[52] மேற்கொள்ள நான் மிகவும் ஆலோசனை கூறுவேன்.

நான் மிகவும் முக்கியமானவை என்று கருதக்கூடிய எண்ணங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

முதலாவதாக, மத்தியக் கமிட்டியின் உறுப்பினர் தொகையை ஒரு சில பத்துக்கணக்கில், ஏன் நூறுவரை அதிகரிப்பதை வைக்கிறேன். நிகழ்ச்சிப்போக்கு நமக்கு முற்றிலும் சாதகமானதாக (இவ்வாறு உத்தேசிக்க நம்மால் இயலாது) இல்லாமல் இருக்குமேயானல், இந்த சீர்திருத்தம் நம்மால் மேற்கொள்ளப்படாதவாறு இருந்தால், நமது மத்தியக் கமிட்டியை அதிக ஆபத்துக்கள் அச்சுறுத்தியிருக்கும் என எனக்குத் தோன்றுகிறது.

அடுத்து, இந்த விஷயத்தில் ஓரளவு வரை, ஒருசில நிபந்தனைகளில் தோழர் திரோத்ஸ்கியுடன் ஒப்புக்கொண்டு ஒரு சில நிபந்தனைகளில் அரசு திட்டக் கமிட்டியின் முடிவுகளுக்குச் சட்டத்திற்குரிய அந்தஸ்தைத் தரும்படி காங்கிரசின் முன் ஆலோசனை கூற நான் எண்ணுகிறேன்.

முதல் பாராவைப் பொறுத்தமட்டில், அதாவது மத்தியக் கமிட்டியின் உறுப்பினர் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதைப் பொறுத்தவரை, இது மத்தியக் கமிட்டியின் செல்வாக்கை உயர்த்தவும் நமது நிர்வாக இயந்திரத்தை மேம்படுத்துவதற்கான ஆழ்ந்த வேலைக்கும் மத்தியக் கமிட்டியின் சிறு பிரிவுகளின் சச்சரவுகள் கட்சியின் எதிர்காலத்திற்கான மிக அளவிட முடியாத முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறுவதைத் தடுக்கவும் அவசியம்.

பாட்டாளி வர்க்கத்திடமிருந்து மத்தியக் கமிட்டிக்கு 50—100 உறுப்பினர்களைக் கோர நமது கட்சிக்கு உரிமை

யுண்டு, அளவிற்கு மிஞ்சிய பிரயாசையின்றி இதைப் பெற முடியும் என எனக்குத் தோன்றுகிறது.

இந்த சீர்திருத்தம் நமது கட்சியின் உறுதியைக் கணிசமாக வலுப்படுத்தும், விரோத அரசுகளின் மத்தியிலான தனது போராட்டத்தை எளிமையாக்கும்; எனது கருத்துப் படி, இந்தப் போராட்டம் வெகுவிரைவிலேயே கடுமையாக தீவிரமடையக் கூடும், தீவிரமடைய வேண்டும். இத்தகைய தொரு நடவடிக்கையின் விளைவாய் நமது கட்சியின் ஸ்திரத்தன்மை ஆயிரம் மடங்கு பயன்பெறும்.

லெனின்

23. XII. 22

2

குறிப்பின் தொடர்ச்சி
டிசம்பர் 24, 1922

நான் மேலே கூறிய மத்தியக் கமிட்டியின் ஸ்திரத் தன்மை என்பதன் கீழ் பிளவிற்கு எதிரான நடவடிக்கைகளைத் தான், பொதுவாக இத்தகைய நடவடிக்கைகள் ஏற்கப் படலாம் எனில் நான் குறிப்பிட்டேன். ருஸ்கயா மீஸில் பத்திரிகையில் வெண்படையினன் ஒருவன் (அது எஸ். எஸ். ஓல்டென்புர்க் என நினைக்கிறேன்) முதலாவதாக, சோவியத் ருஷ்யாவிற்கு எதிரான அவர்களது ஆட்டத்தைப் பொறுத்த மட்டில் நமது கட்சியின் பிளவை எதிர்நோக்கிய போதும், இரண்டாவதாக, இந்தப் பிளவிற்காக கட்சியினுள்ளே இருக்கும் ஆழ்ந்த கருத்துமாறுபாடுகளை எதிர்நோக்கிய போதும் அவன் கூறியது சரியே.

நமது கட்சி இரு வர்க்கங்களை ஆதாரமாகக் கொண்டுள்ளது; எனவே இதன் ஸ்திரமின்மைக்கு வாய்ப்புள்ளது, இந்த இரு வர்க்கங்களிடையே இணக்கம் இல்லாவிடில் இது கீழே விழுவது தவிர்க்க இயலாததாகும். அந்தச் சந்தர்ப்பத்தில், ஏதாவது நடவடிக்கைகளை மேற்கொள்வதோ, பொதுவாக நமது மத்தியக் கமிட்டியின் ஸ்திரத்தன்மையைப் பற்றி வாதிப்பதோ பயனற்றது. அந்த சந்தர்ப்பத்தில் எந்த நடவடிக்கையாலும் பிளவைத் தடுத்து நிறுத்த முடியாது. ஆனால் இது மிக தொலைவில் இருக்கக்கூடிய ஒரு சம்பவம், மிகவும் நம்பத்தகாத சம்பவமாதலால் இதைப் பற்றி பேசவே வேண்டாம் என நான் நம்புகிறேன்.

அண்மை வருங்காலத்தில் பிளவிலிருந்து உத்திரவாதம் அளிக்கக்கூடிய ஸ்திரத்தன்மையைத்தான் நான் குறிப்பிடு கிறேன்; இங்கே முற்றிலும் தனிநபர் குணநலன்களைப் பற்றிய சில கருத்துக்களை எடுத்துக்கொள்ள நான் உத்தேசித்துள் ளேன்.

ஸ்திரத்தன்மையைப் பற்றிய பிரச்சினையில் இந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால் முக்கியமானது, மத் தியக் கமிட்டி உறுப்பினர்களான ஸ்தாலின், திரோத்ஸ்கி ஆகியோர்தான் என நான் எண்ணுகிறேன். எனது கருத்துப் படி இவர்களுக்கிடையேயான உறவுகள் பிளவு அபாயத்தின் அதிகப் பாதியாகும்; இப்பிளவைத் தவிர்க்கலாம், இதற்கு எனது கருத்துப்படி மற்றவற்றோடு கூட மத்தியக் கமிட்டி யின் உறுப்பினர்கள் எண்ணிக்கையை 50 வரை, 100வரை உயர்த்துவது துணை புரிய வேண்டும்.

பொதுச் செயலாளராக ஆக்கப்பட்ட தோழர் ஸ்தாலின் தனது கைகளில் எல்லையற்ற அதிகாரத்தை ஒருமுனைப் படுத்தியுள்ளார், இந்த அதிகாரத்தை அவரால் எப்போதுமே போதுமான எச்சரிக்கையுடன் பயன்படுத்த முடியுமா என எனக்கு உறுதியில்லை. மறு புறம், ரயில்வே மக்கள் கமிசார கத்தைப் பற்றிய பிரச்சினையில் மத்தியக் கமிட்டிக்கு எதிரான தனது போராட்டம் நிரூபித்தபடி தோழர் திரோத்ஸ்கி மிகச் சிறந்த திறமைகளை மட்டும் பெற்றிருக்க வில்லை. தற்போதைய மத்தியக் கமிட்டியில் தனிப்பட்ட முறையில் இவர்தான் மிகத் திறமையுள்ள நபர் என்று எனக்குத் தோன்றுகிறது, ஆனால் அளவிற்கதிகமான தன்னம் பிக்கையுள்ள, காரியத்தின் நிர்வாக சம்பந்தமான பக்கத்தின் மேல் அளவிற்கதிகமான ஆர்வத்தைக் காட்டுகின்ற நபர்.

இன்றைய மத்தியக் கமிட்டியின் இரு மாபெரும் தலை வர்களின் இந்த இரு குணங்களும் வேண்டுமென்றே இல்லா விடினும் பிளவிற்குக் கொண்டு விடத்தக்கவை, இதைத் தடுக்க கட்சி நடவடிக்கைகளை எடுக்காவிடில் பிளவு திடீரென நேரும்.

மத்தியக் கமிட்டியின் மற்ற உறுப்பினர்களை அவர்களது தனிப்பட்ட குணநலன்களுக்கேற்ப தொடர்ந்து நான் சித் தரிக்கப் போவதில்லை. ஸினோவியெவ், காமெனெவ் ஆகி யோர்களின் அக்டோபர் நிகழ்ச்சி[53] நிச்சயமாக தற்செய லானதல்ல, ஆனால் திரோத்ஸ்கியின் மேல் போல்ஷிவிச

மின்மையை எப்படி குற்றமாக சாட்ட முடியாதோ, அதே போல் அந்நிகழ்ச்சியை தனிப்பட்ட முறையில் அவர்கள் மேல் குற்றஞ்சாட்டுவதும் கடினமானதே என்பதை மட்டும் நினைவு கூற விரும்புகிறேன்.

மத்தியக் கமிட்டியின் இளம் உறுப்பினர்களில் புஹாரின் மற்றும் பியாத்தக்கோவைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். எனது கருத்துப்படி இவர்கள் (மிக இளைய சக்திகளின் மத்தியிலே) மிக மகத்தான சக்திகளாவர், இவர்களைப் பொறுத்தமட்டில் ஒன்றை கவனத்தில் கொள்ள வேண்டும்: புஹாரின் கட்சியின் மதிப்புமிக்க, பெரிய சித்தாந்தவாதி மட்டுமல்ல, இவர் நியாயமாக கட்சி முழுவதன் செல்லப்பிள்ளையாகக் கருதப்படுகின்றார்; ஆனால் இவரது சித்தாந்தக் கருத்தோட்டங்களை மிகுந்த சந்தேகத்துடன்தான் மார்க்சியக் கருத்துக்களுடன் சேர்க்க முடியும், ஏனெனில் இவற்றில் விதண்டாவாத அம்சம் உள்ளது (அவர் இயக்கவியலை எப்போதுமே கற்றதில்லை; எனது கருத்துபடி அவர் அதை எப்போதுமே முற்றிலும் புரிந்து கொண்டதில்லை).

25. XII. அடுத்து பியாத்தக்கோவ்—சந்தேகத்திற்கிடமின்றி இவர் மகத்தான வேட்கையையும் மகத்தான திறமைகளையும் உடைய மனிதர், ஆனால் நிர்வாகத் துறையிலும் காரியத்தின் நிர்வாகம் பற்றியப் பகுதியிலும் மிக அதிகமாக ஆர்வமுடையவராதலால், ஆழ்ந்த அரசியல் பிரச்சினையில் இவரை நம்புவது கடினம்.

இந்த மகத்தான, விசுவாசமுள்ள இரு ஊழியர்களும் தங்களது ஞானத்தைப் பூர்த்தி செய்யவும் தங்களது ஒருதலைப் பட்சமான அம்சத்தை மாற்றிக் கொள்ளவும் சந்தர்ப்பத்தைக் கண்டுபிடிக்க மாட்டார்கள் என்ற அனுமானத்தில்தான் மேற்கூறிய இரு கண்டனங்களும் நிகழ்காலத்திற்காக என்னால் கூறப்பட்டன.

லெனின்

25. XII. 22.

## 1922ஆம் ஆண்டு டிசம்பர் 24ஆம் தேதி எழுதப்பட்ட கடிதத்திற்கான பிற்சேர்க்கை

ஸ்தாலின் மிகவும் முரட்டுத்தனமானவர்; இந்தக் குறை கம்யூனிஸ்டுகளாகிய நம்மிடையே நிலவும் உறவுகளில் முற்றிலும் பொறுத்துக்கொள்ளக் கூடியதே, ஆனல் பொதுச் செயலாளர் பதவியில் இது பொறுக்க இயலாததாகிறது. எனவே ஸ்தாலினை இந்த இடத்திலிருந்து மாற்றி வெறொரு நபரை இந்த இடத்திற்கு அமர்த்தும் முறையைப் பற்றிச் சிந்திக்கும்படி நான் தோழர்களுக்கு முன்மொழிகிறேன்; அந்த நபர் ஸ்தாலினிடமிருந்து ஒரே ஒரு முறையில் மட்டும் மாறுபட்டு மிஞ்சி நிற்பார்—அதாவது அவர் அதிக பொறுமை யுடையவராயும் அதிக பொறுப்பு மீருதவராயும் தோழர் கள்பால் அதிக கவனமும் மரியாதையும் உடையவராயும் குறைந்த அளவு முரண்டுபிடிக்கும் தன்மையுடையவராயும் இதுபோன்ற குணங்களையுடையவராயும் இருப்பார். இந்த அம்சம் அற்பமான சில்லறை விஷயமாகத் தென்படக்கூடும். ஆனல் பிளவிலிருந்து பாதுகாக்க வேண்டிய கண்ணேட்டத் திலிருந்தும் ஸ்தாலினுக்கும் திரோத்ஸ்கிக்கும் இடை யிலுள்ள பரஸ்பர உறவுகளைப் பற்றி என்னல் மேலே குறிப் பிடப்பட்ட கண்ணேட்டத்திலிருந்தும் இது அற்பமான விஷயமல்ல, அல்லது தீர்மானகரமான முக்கியத்துவத்தை பெறக்கூடியஅற்பமான விஷயமாகும் என நான் நினைக்கிறேன்.

**லெனின்**

*1923ஆம் ஆண்டு ஜனவரி 4ஆம் தேதி*

## 3

குறிப்பின் தொடர்ச்சி

*1922ஆம் ஆண்டு. டிசம்பர் 26ஆம் தேதி*

மத்தியக் கமிட்டியின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 50 வரை அல்லது 100 வரை கூட உயர்த்துவது எனது கருத்துப்படி. இரண்டு அல்லது மூன்று லட்சியங்களுக்குப் பயன்பட வேண்டும்: மத்தியக் கமிட்டியின் உறுப்பினர்கள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக இருக்கின்றுர்களோ, அவ் வளவுக்கவ்வளவு அதிகமானேரை மத்தியக் கமிட்டியின்

வேலைக்குப் பயிற்றுவிக்கலாம், ஏதாவதொரு கவனக் குறைவினால் பிளவு ஏற்படும் அபாயம் அவ்வளவுக்கவ்வளவு குறைவாக இருக்கும். மத்தியக் கமிட்டிக்குப் பல தொழிலாளர்களைக் கவர்ந்திழுப்பது மிக மோசமாகவுள்ள நமது நிர்வாக இயந்திரத்தை மேம்படுத்த தொழிலாளர்களுக்கு உதவும். உண்மையில் இது பழைய ஆட்சியமைப்பிலிருந்து அப்படியே வாரிசாகப் பெற்றதாகும், போர், பட்டினி போன்றவை நிலவிய சூழ்நிலையில் அவ்வளவு குறைவான காலத்தில் மாற்றியமைப்பது முற்றிலும் இயலாததாக இருந்தது. எனவே, நமது நிர்வாக இயந்திரத்தின் குறைகளை நகைப்புடன் அல்லது தீய நோக்குடன் சுட்டிக்காட்டும் ''விமரிசகர்களுக்கு'', இந்த மனிதர்கள் நவீன புரட்சியின் நிபந்தனைகளை முற்றிலும் புரிந்து கொள்ளவில்லை என்று அமைதியாகப் பதில் கூறலாம். ஐந்தாண்டில், குறிப்பாக நம் நாட்டில் புரட்சி நடைபெற்ற சூழ்நிலைகளில் நிர்வாக இயந்திரத்தைப் போதுமான அளவு மாற்றியமைப்பது என்பது பொதுவாக இயலாதது. முதலாளிகளுக்கெதிராக தொழிலாளர்களும் அவர்களையடுத்து விவசாயிகளும் நடைபோடக்கூடிய புதிய அரசு அமைப்பை ஐந்தாண்டுகளில் நாம் தோற்றுவித்தால் அதுவே போதுமானது; பகைமையான சர்வதேச சூழ்நிலையில் இது மகத்தானதான காரியம். ஆனால் இதைப் பற்றிய உணர்வு, நாம் உண்மையிலேயே ஜாரிடமிருந்து, முதலாளி வர்க்கத்தினரிடமிருந்து பழைய நிர்வாக இயந்திரத்தைப் பெற்றோம், இப்போது அமைதி ஏற்பட்டதும் பட்டினியிலிருந்து விடுபட குறைந்தபட்ச தேவைகள் உத்திரவாதம் செய்யப்பட்டதும் எல்லா வேலையும் நிர்வாக இயந்திரத்தை மேம்படுத்துவதை நோக்கி திருப்பப்பட வேண்டும் என்பதிலிருந்து நம்மை எந்தவிதத்திலும் மறைக்கக் கூடாது.

பத்துக்கணக்கில் பல தொழிலாளர்கள் மத்தியக் கமிட்டியில் இடம்பெற்று மற்ற எவரையும் விட சிறப்பாக நமது நிர்வாக இயந்திரத்தைச் சரிபார்ப்பதிலும் மேம்படுத்துவதிலும் மாற்றியமைப்பதிலும் ஈடுபட முடியும் என்று இந்தக் காரியத்தை நான் கற்பனை செய்து பார்க்கிறேன். இந்தப் பணி முதலில் எதற்கு உரியதாயிருந்ததோ அந்த ரப்கிரின் இப்பணியைச் சமாளிக்கும் நிலையில் இல்லை, எனவே இது ஒரு சில வேளைகளில் மத்தியக் கமிட்டியின் உறுப்பினர்களுக்குக் ''கூடுதல் உதவியாளனைப்'' போல் அல்லது துணை

வனைப் போல்தான் பயன்படுத்தப்படலாம். எனது கருத்துப்படி, மத்தியக் கமிட்டியில் இடம் பெறக்கூடிய தொழிலாளர்கள் பெரும்பாலும் நீண்ட கால சோவியத் உத்தியோகத் துறையில் இருந்தவர்களின் மத்தியிலிருந்து வருபவர்களாக இருக்கக் கூடாது (எனது கடிதத்தின் இந்தப் பகுதியில் எல்லா இடங்களிலும் விவசாயிகளைத் தொழிலாளர்களுடன் சேர்த்துதான் கூறுகிறேன்) ஏனெனில் இந்தத் தொழிலாளர்களிடையே ஏற்கெனவே சில பாரம்பரியங்களும் சில காழ்ப்புகளும் உருவாகிவிட்டன; இவற்றுக்கெதிராக போரிடுவது உசிதமானது.

மத்தியக் கமிட்டியின் தொழிலாளர் உறுப்பினர்கள் பெரும்பாலும் ஐந்தாண்டுகளில் நம்மால் சோவியத் உத்தியோகஸ்தர்களாக முன்மொழியப்பட்ட பிரிவிற்குக் கீழேயிருக்கக்கூடிய, சாதாரண தொழிலாளர்களையும் விவசாயிகளையும் நெருக்கமாக சார்ந்திருக்கக்கூடிய, ஆனால் நேரடியாகவோ மறைமுகமாகவோ சுரண்டலாளர்களின் பிரிவில் சேர்ந்திராத தொழிலாளர்களாக இருக்க வேண்டும். இத்தகைய தொழிலாளர்களால் மத்தியக் கமிட்டியின், பொலிட் பீரோவின் எல்லாக் கூட்டங்களிலும் பிரசன்னமாயிருந்து மத்தியக் கமிட்டியின் எல்லாப் பத்திரங்களையும் படித்து முதலாவதாக, மத்தியக் கமிட்டிக்கு ஸ்திரத்தன்மையைத் தரும் திறமை வாய்ந்த, இரண்டாவதாக, நிர்வாக இயந்திரத்தின் புனரமைப்பிற்கும் மேம்பாட்டிற்கும் உண்மையிலேயே வேலை செய்யும் திறமை வாய்ந்த, சோவியத் ஆட்சியமைப்பின் விசுவாசமுள்ள ஆதரவாளர்களை ஏற்படுத்த முடியும் என நம்புகிறேன்.

லெனின்

26. XII. 22.

## 7

குறிப்பின் தொடர்ச்சி
*1922ஆம் ஆண்டு டிசம்பர் 29ஆம் தேதி*

### (மத்தியக் கமிட்டியின் உறுப்பினர் எண்ணிக்கையை அதிகப்படுத்துவது பற்றிய பகுதிக்கு)

மத்தியக் கமிட்டியின் உறுப்பினர் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் போது, எனது கருத்துப்படி முக்கியமாக,

எதற்கும் தகுதியற்ற நமது நிர்வாக இயந்திரத்தைச் சோதித்து மேம்படுத்துவதிலும் ஈடுபட வேண்டும். இந்த நோக்கத்திற்காக உயர் தகுதி படைத்த நிபுணர்களின் சேவைகளை நாம் பயன்படுத்த வேண்டும்; இத்தகைய நிபுணர்களை நமக்குத் தருவது தொழிலாளர் மற்றும் விவசாயிகளின் மேற்பார்வையின் கடமையாக இருக்க வேண்டும்.

சோதனைக்காக உள்ள, போதுமான ஞானம் உள்ள இந்த நிபுணர்களையும் மத்தியக் கமிட்டியின் இந்தப் புதிய உறுப்பினர்களையும் எவ்வாறு இணைப்பது என்ற பிரச்சினை நடைமுறை ரீதியாகத் தீர்க்கப்பட வேண்டும்.

தொழிலாளர் மற்றும் விவசாயிகளின் மேற்பார்வை அமைப்பு (தனது வளர்ச்சியின் விளைவாயும் இதன் வளர்ச்சியைப் பற்றிய நமது மலைப்பின் விளைவாயும்) நாம் இப்போது காணக் கூடியதைத் தந்துள்ளது என்று எனக்குத் தோன்றுகிறது; விசேஷ மக்கள் கமிசாரகத்திலிருந்து மத்தியக் கமிட்டி உறுப்பினர்களின் விசேஷ பணிக்கு மாறும் இடைநிலைதான் அது; சகலத்தையும் தணிக்கை செய்யக்கூடிய நிறுவனத்திலிருந்து எண்ணிக்கை ரீதியாக சிறிய ஆனால் முதல்தரமான மேற்பார்வையாளர்களின்—இவர்களுக்கு நல்ல ஊதியம் தரப்பட வேண்டும் (நமது ஊதிய நூற்றாண்டில், எந்த நிறுவனங்கள் நல்ல ஊதியம் தருகிறதோ அதில் மேற்பார்வையாளர்கள் நேரடியாக இருக்கும் சூழ்நிலையில் இது விசேஷமாக அவசியமானது)—குழுவிற்கு மாறும் இடைநிலைதான் அது.

மத்தியக் கமிட்டி உறுப்பினர்களின் எண்ணிக்கை தக்க முறையில் உயர்த்தப்படுமேயானால், ஒவ்வொரு ஆண்டும் அவர்கள் உயர் தகுதியுடைய நிபுணர்களின், சகல துறைகளிலும் உயர்ந்த மதிப்பையுடைய தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வையமைப்பின் உறுப்பினர்களின் உதவியோடு அரசு நிர்வாகத்தைப் பயிலுவார்களேயானால், அப்போது இவ்வளவு காலம் நம்மால் முடியாதிருந்த அந்தப் பிரச்சினையை வெற்றிகரமாகத் தீர்ப்போம்.

ஆக இறுதியாக, 100 வரை மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள்; தொழிலாளர் மற்றும் விவசாயிகளின் மேற்பார்வை அமைப்பின் உறுப்பினர்களான, இவர்களது கட்டளைப்படி தணிக்கை செய்யக்கூடிய 400-500க்கு மேற்படாத இவர்களது உதவியாளர்கள்.

**லெனின்**

***1922***, டிசம்பர் ***29***

# தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பை (ரப்கிரின்) நாம் எப்படிப் புனரமைக்க வேண்டும்

(12வது கட்சிக் காங்கிரசுக்குப் பரிந்துரை)

ரப்கிரின் நமக்குப் பேரளவு கடினமானது என்பதும் இது வரையில் இந்தக் கஷ்டம் சமாளிக்கப்படவில்லை என்பதும் கேள்விக்கே இடமற்ற விவரங்களாகும். ரப்கிரின் பயனுள்ளது மற்றும் அவசியமானது என்பதை மறுப்பது மூலம் இந்தக் கஷ்டத்தைச் சமாளிக்க முயலும் தோழர்கள் தவறு செய்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். ஆனால் நமது அரசுப் பொறியமைவு முன்வைத்துள்ள இந்தப் பிரச்சினையும் இதை மேம்படுத்தும் பணியும் மிகவும் கடினமானவை என்பதையும் இதற்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை, இதே சமயம் இது மிகவும் அவசரமானது என்பதையும் நான் மறுக்கவில்லை.

அயல்துறை விவகார மக்கள் கமிசாரகம் நீங்கலாக நமது அரசுப் பொறியமைவு பெருமளவுக்குக் கடந்த காலத்தின் எச்சமிச்சமே, அது காரியகரமான மாறுதலுக்கு மிகச் சிறிதளவு ஆளாகியது. அது மேற்பரப்பில் சற்றே திருத்தப்பட்டது தவிர மற்ற அம்சங்களில் எல்லாம் நமது பழைய அரசுப் பொறியமைவின் மிகவும் தனிமாதிரிச் சின்னமாகவே இருக்கிறது. எனவே, இதை மெய்யாகவே புதுப்பிப்பதற்கு ஒரு வழிமுறையைக் காண வேண்டுமானால் நமது உள்நாட்டுப் போரிடமிருந்து அனுபவம் பெற வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

உள்நாட்டுப் போரின் அதிக நெருக்கடியான தருணங்களில் நாம் எப்படிச் செயல்பட்டோம்?

நமது கட்சியின் மிகச் சிறந்த சக்திகளைச் செஞ்சேனையில் ஒருமுனைப்படுத்தினோம்; நமது மிகச் சிறந்த தொழிலாளர்களை ஒன்றுதிரட்டினோம்; நமது சர்வாதிகாரத்தின் அடியாழத்தில் புதிய சக்திகளைத் தேடினோம்.

ரப்கிரினைப் புனரமைப்பதற்கான சாதனங்களைக் காண நாம் அதே ஆதாரத்திடம்தான் செல்ல வேண்டும் என்பதை நான் நம்பகமாக அறிகிறேன். நமது மத்தியக் கண்காணிப்புக் கமிஷனை ஓரளவுக்கு விரிவுபடுத்தும் அடிப்படையில் பின் வரும் புனரமைப்புத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளும்படி நமது பன்னிரண்டாவது கட்சிக் காங்கிரசுக்கு நான் பரிந் துரைக்கிறேன்.

நமது கட்சியின் மத்தியக் கமிட்டியின் பிளீனம் கூட்டங் கள் ஒரு வகைப்பட்ட உயர் கட்சி மாநாடாக வளர்ச்சியுறு வதற்கான ஒரு போக்கை ஏற்கெனவே வெளிப்படுத்தி யுள்ளன. இவை சராசரி இரண்டு மாதங்களுக்கு ஒரு முறைக்கு அதிகப்படாமல் நடந்து வருகின்றன. அதே போதில் மாமூல் வேலை மத்தியக் கமிட்டியின் சார்பில் நமது பொலிட்பீரோ, அமைப்புத்துறை குழு, நமது செயற்குழு இத்தியாதிகளால் நடத்தப்பட்டு வருகிறது என்பதை நாம் அறிவோம். இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பாதையை நாம் இறுதி வரையில் பின்பற்ற வேண்டும் எனவும் மத்தியக் கமிட்டியின் பிளீனம் கூட்டங்களை, மத்தியக் கண்காணிப்புக் கமிஷனுடன் சேர்த்து இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கூட்டப்படும் உயர் கட்சி மாநாடுகளாக முற்றிலுமாக மாற்ற வேண்டும் ரனவும் நான் கருதுகிறேன். இந்த மத்தியக் கண்காணிப்புக் கமிஷன் பின்வரும் நிபந்தனைகளில் மறுசிரமைக்கப்பட்ட ரப்கிரினின் பிரதான பகுதியுடன் இணைக்கப்பட வேண்டும்.

காங்கிரஸ் மத்தியக் கண்காணிப்புக் கமிஷனுக்கு 75 முதல் 100 வரை (இங்கு நிச்சயமாயும் எண்ணிக்கைகள் எல்லாம் சுமாராகவே தரப்பட்டுள்ளன) புதிய உறுப்பினர் களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று நான் பிரேரேபிக் கிறேன். அவர்கள் தொழிலாளர் மற்றும் விவசாயிகளாக இருக்க வேண்டும். மத்தியக் கமிட்டியின் சாதாரண உறுப் பினர்களைப் போலவே அதே கட்சித் தகுதித் தேர்வுக்கு அவர்கள் ஆளாக்கப்பட வேண்டும், காரணம், அவர்கள் மத்தியக் கமிட்டி உறுப்பினர்களைப் போல அதே உரிமைகளை அனுபவிக்கப் போகிறவர்கள்.

மறு புறத்தில், ரப்கிரினின் அலுவலர் தொகை, கடமை யுணர்ச்சி மற்றும் நமது அரசுப் பொறியமைவு பற்றிய அறிவுக்காக விசேஷமாகத் தகுதித் தேர்வு செய்யப்பட்ட 300—400 பேர்கள் அளவுக்குக் குறைக்கப்பட வேண்டும்.

அதோடு, உழைப்பின் விஞ்ஞான பூர்வமான ஒழுங்கமைப்பின் கோட்பாடுகள் பற்றிப் பொதுவாகவும் நிர்வாக வேலை, அலுவலக வேலை இத்தியாதிகள் பற்றிக் குறிப்பாகவும் அவர்களுக்குள்ள ஞானம் சம்பந்தமான ஒரு விசேஷத் தேர்வுக்கும் ஆளாக்கப்பட வேண்டும்.

மத்தியக் கண்காணிப்புக் கமிஷனுடன் ரப்கிரின் இத்தகைய முறையில் இணைக்கப்படுவதானது இந்த இரு அமைப்புகளுக்கும் நலம்பயப்பதாகும் என்று நான் கருதுகிறேன். ஒரு புறத்தில், ரப்கிரின் இத்தகைய உயர் அதிகாரப் பலம் பெறுவதன் விளைவாக, அது அயல்துறை விவகார மக்கள் கமிசாரகத்தை விட குறைந்த பட்சம் எவ்வகையிலும் மட்டமானதாக இருக்காது. மறு புறத்தில், நமது மத்தியக் கமிட்டி மத்தியக் கண்காணிப்புக் கமிஷனுடன் சேர்ந்து உயர் கட்சி மாநாடாக மாறிவரும் பாதையை முற்றிலுமாக மேற்கொள்ளும். உண்மையில் அது இப்பாதையை ஏற்கெனவே மேற்கொண்டு விட்டது. இந்தப் பாதை நெடுகிலும் கடைசி வரை அது தொடர்ந்து செல்ல வேண்டும். அதன் மூலம் அது இருவகைகளில் தனது செயற்பணிகளைச் சரிவர நிறைவேற்ற இயலும்: தனது சொந்த முறைமையான, காலோசிதமான, திட்டப்படியான அமைப்பு மற்றும் வேலை விஷயத்திலும் நமது தொழிலாளர் மற்றும் விவசாயிகளில் மிகச் சிறந்தவர்கள் மூலம் உண்மையிலேயே விரிவான மக்கள் திரளினருடன் தொடர்புகளைப் பேணி வைத்திருக்கும் விஷயத்திலும் இது சாத்தியமாகும்.

நமது அரசுப் பொறியமைவு காலம் கடந்ததாகச் செய்யும் அந்தத் துறையினரிடம் இருந்து, அதாவது இன்றைய அறவே சாத்தியமற்றதான, மிகவும் கேவலமான முறையில் புரட்சிக்கு முற்பட்டதான வடிவம் அப்படியே இருக்க வேண்டும் என்று வலியுறுத்துவோரிடமிருந்து நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆட்சேபனை வரலாம் என்பதை நான் முன்னுணர்கிறேன் (இதற்கிடையில், அடிப்படையான சமுதாய மாற்றங்களைக் கொண்டுவருவதற்கு அவசியமான கால கட்டத்தை நிர்ணயிப்பதற்கான வரலாற்றில் மிக அரிதாகவே தோன்றுகிற வாய்ப்பு இப்போது நம் வசம் இருக்கிறது; ஐந்தாண்டுகளில் என்ன செய்ய முடியும், எதற்கு மேலும் அதிகக் காலாவகாசம் தேவை என்பதை நாம் இப்போது தெளிவாகக் காண்கிறோம்).

நான் முன்மொழியும் மாற்றம் குழப்பத்தைத் தவிர வேறு எதற்கும் இட்டுச் செல்லாது என்பதே நான் முன்னுணருகிற ஓர் ஆட்சேபணையாகும். எங்கே, ஏன், யாரிடம் கேட்பது என்பது தெரியாமல் மத்தியக் கண்காணிப்புக் கமிஷன் உறுப்பினர்கள் எல்லா அமைப்புகளையும் சுற்றித் திரிவார்கள், எல்லா இடங்களிலும் ஒழுங்குக் குலைவை ஏற்படுத்துவார்கள், ஊழியர்களைத் தமது மாமூல் வேலைகளில் இருந்து திசை திருப்புவார்கள், இத்தியாதி.

இந்த ஆட்சேபணையின் கெடு நோக்கான ஆதாரம் மிகவும் வெளிப்படையானது, எனவே அதற்குப் பதிலிறுக்கத் தேவையில்லை என்று நான் கருதுகிறேன். கமிசாரகத்தை சரியான முறையில் ஒழுங்கமைக்கவும் மத்தியக் கண்காணிப்புக் கமிஷனுடன் சேர்ந்து அதைச் சுமுகமாக இயங்கும்படிச் செய்யவும், மத்தியக் கண்காணிப்புக் கமிஷனின் தலைமைக் குழுவும் ரப்கிரினின் மக்கள் கமிசாரும் அதன் கூட்டுச் செயற்குழுவும் (உரிய இடங்களில் நமது மத்தியக் கமிட்டியின் செயற்குழுவும்) முயற்சி புரிய ஓராண்டு போதாது என்பதைக் கூறத் தேவையில்லை. ரப்கிரினின் மக்கள் கமிசாரும் முழுமையான கூட்டுச் செயற்குழுவும், ''அவரது தலைமையின் கீழ் வைக்கப்படும்'' மத்தியக் கண்காணிப்புக் கமிஷன் உறுப்பினர்களின் வேலை உள்ளிட்டு தொழிலாளர் மற்றும் விவசாயிகளது மேற்பார்வை அமைப்பு முழுவதன் வேலையையும் வழி நடத்த முடியும் (தொடர்ந்து வழி நடத்த வேண்டும்) என்று கருதுகிறேன். எனது திட்டப்படி நீடித்து இருக்கப் போகும் ரப்கிரினின் 300-400 ஊழியர்கள் ஒரு புறம், ரப்கிரினின் இதர உறுப்பினர்களுக்கும் மத்தியக் கண்காணிப்புக் கமிஷனின் கூடுதல் உறுப்பினர்களுக்கும் வேண்டி முற்றிலும் செயலகம் சார்ந்த பணிகளைச் செய்ய வேண்டும், மறு புறம், அவர்கள் உயர் தேர்ச்சியுள்ளவர்களாக, விசேஷமாயும் தகுதித் தேர்வு செய்யப்பட்டவர்களாக, பிரத்தியேகமாயும் நம்பகமானவர்களாக, உயர் ஊதியம் பெறுபவர்களாக இருக்க வேண்டும். இந்த வழியில் அவர்கள் தமது இன்றைய மெய்யாகவே (குறைந்த பட்சம் சொன்னால்) துரதிருஷ்டமான ரப்கிரினின் அலுவலர்கள் எனும் நிலையில் இருந்து முற்றிலும் விடுவிக்கப்படலாம்.

நான் சுட்டிக் காட்டிய எண்ணிக்கை அளவுக்கு அலுவலர்

தொகையைக் குறைப்பது ரப்கிரினின் ஊழியர்கள் திறனை யும் அதன் வேலை அனைத்தின் தரத்தையும் அதிகமாக உயர்த் தும் அதே சமயம் அமைப்புத் துறைப் பணிகளிலும் அதன் திறனைத் திடமாக மேம்படுத்திக் கொள்வதிலும் மக்கள் கமிசாரும் கூட்டுச் செயற்குழு உறுப்பினர்களும் தமது முயற்சிகளை முற்றாக ஒருமுனைப்படுத்த இயலுமாறு உதவும் என்பது உறுதி. அந்தத் திறன் நமது தொழிலாளர் விவசாயி களின் ஆட்சியதிகாரத்துக்கும் நமது சோவியத் அமைப்புக் கும் பரம அத்தியாவசியமானது.

மறு புறம், ரப்கிரினின் மக்கள் கமிசார் உழைப்பை ஒழுங்கமைப்பதற்கான உயர் நிலையங்களை (மத்திய உழைப்பு நிலையம், உழைப்பின் விஞ்ஞான ஒழுங்கமைப்புக்கான நிலையம், இத்தியாதி) ஓரளவுக்கு இணைப்பதற்கும் ஓரள வுக்கு ஒத்திசைவாக்கவும் பணியாற்ற வேண்டும் எனவும் நான் கருதுகிறேன். இத்தகைய நிலையங்கள் நமது குடியரசில் இப்போது பன்னிரண்டுக்குக் குறைவின்றி இருக்கின்றன. மிகையான ஒருப்படுத்தலும் இதன் பின் விளைவான இணைப் பதற்கான விருப்பமும் கேடு விளைப்பனவாகும். இதற்கு மாறாக, இங்கு தேவையாக இருப்பது என்னவெனில், இந்த நிலையங்கள் அனைத்தையும் இணைப்பதற்கும் அவற்றைச் சரிவர வரையறை செய்வதற்கும் இடையிலான ஒரு நியாய மான காலத்துக்கேற்ற நடுப்பாதையும் அவை ஒவ்வொன்றுக் கும் ஓரளவு சுயேச்சையை அனுமதிப்பதுமே ஆகும்.

இந்தப் புனரமைப்பில் இருந்து நமது சொந்த மத்தியக் கமிட்டி பெறக் கூடிய நன்மை, ரப்கிரின் பெறக் கூடிய நன்மையை விடக் குறைந்ததல்ல என்பது நிச்சயம். மக்கள் திரளினருடனான அதன் தொடர்புகள் மேலதிகமாகும் என் பதாலும், அதன் வேலையின் ஒரு சீரான தன்மையும் திறனும் மேம்படும் என்பதாலும் இது கட்டாயம் நன்மை அடையும். இதன் பின் பொலிட்பீரோவின் கூட்டங்களுக்குத் தயார் செய்வதற்கான மேலும் கறாரான, அதிகப் பொறுப்பு வாய்ந்த செயல்முறையினை நிறுவுவது சாத்தியமாகும் (நிறுவ வேண்டும்). இந்தக் கூட்டங்களில் ஒன்று ஒரு குறிப்பிட்ட காலம் அல்லது குறிப்பிட்ட அமைப்புத் துறைத் திட்டத் தால் நிர்ணயிக்கப்படும் திட்டவட்டமான தொகையிலான மத்தியக் கண்காணிப்புக் கமிஷன் உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டும்.

மத்தியக் கண்காணிப்புக் கமிஷன் உறுப்பினர்களுக்கு வேலையைப் பகிர்ந்தளிக்கும் போது, ரப்கிரினின் மக்கள் கமிசார் மத்தியக் கண்காணிப்புக் கமிஷனின் தலைமைக் குழுவுடன் சேர்ந்து அவர்களிடம் ஒன்று, பொலிட்பீரோ கூட்டங்களில் கலந்து கொள்வது மற்றும் அதன் முன் ஏதேனும் ஒரு வழியில் வரும் விவகாரங்கள் சம்பந்தப்பட்ட எல்லா ஆவணங்களையும் பரிசிலிப்பதையோ அல்லது அவர்களது வேலை நேரத்தைத் தத்துவார்த்த ஆய்வு, உழைப்பை ஒழுங்கமைப்பதற்கான விஞ்ஞான முறைகளைப் பயிலுதல் ஆகியவற்றுக்குப் பயன்படுத்துவதையோ, அல்லது உயர் அரசு நிறுவனங்களில் இருந்து கீழ் மட்ட வட்டார அமைப்புகள் வரை நமது அரசு இயந்திரத்தை மேற்பார்வை செய்து மேம்படுத்தும் வேலையில் காரிய சாத்தியமான பங்கு வகிப்பதையோ இத்தியாதி கடமையாக ஒப்படைக்க வேண்டும்.

இந்தச் சீர்திருத்தத்தின் பின்விளைவாக மத்தியக் கமிட்டி மற்றும் மத்தியக் கண்காணிப்புக் கமிஷனின் உறுப்பினர்கள் மேலும் நல்ல முறையில் தகவல்களைப் பெறுவர், பொலிட்பீரோ கூட்டங்களுக்கு மேலும் நல்ல முறையில் தயார் செய்து கொள்வர் எனும் மெய்விவரத்தில் இருந்து பெறப்படும் அரசியல் சாதகங்களுக்கும் கூடுதலாக (பரம அவசரமான சம்பவங்கள் நீங்கலாக—இந்தச் சம்பவங்களுக்காக மத்தியக் கமிட்டி மற்றும் மத்தியக் கண்காணிப்புக் கமிஷன் உறுப்பினர்களுக்குத் தகவல் தரவும் இந்த விவகாரங்களுக்குத் தீர்வு காணவுமான விசேஷ முறைகள் வகுக்கப்பட வேண்டும்—பொலிட்பீரோவின் கூட்டத்துக்கு முந்திய தினத்துக்குப் பிற்பட்டுவிடாத முறையில் இந்தக் கூட்டங்களில் விவாதிக்கப்படும் அலுவல் சம்பந்தப்பட்ட எல்லா ஆவணங்களும் மத்தியக் கமிட்டி மற்றும் மத்தியக் கண்காணிப்புக் கமிஷனின் எல்லா உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டும்) நமது மத்தியக் கமிட்டியில் முற்றிலும் தனிப்பட்ட மற்றும் தற்செயலான காரணிகளின் செல்வாக்கும் குறையும் சாதக நிலையும் ஏற்படும், இது ஒரு பிளவுக்கான அபாயத்தை குறைக்கும் என்று நான் கருதுகிறேன்.

நமது மத்தியக் கமிட்டியானது கறாராயும் மத்தியப் படுத்தப்பட்ட மற்றும் உயர் அதிகாரப் பலமுள்ள பிரிவாக வளர்ந்து விட்டது, ஆனால் இந்தப் பிரிவு செயல்பட்டு வரும் நிலைமைகள் அதனுடைய அதிகாரப் பலத்துக்குச் சரியான

அளவில் இல்லை. நான் பரிந்துரைக்கும் சீர்திருத்தம் இந்தக் குறைபாட்டை அகற்ற உதவ வேண்டும். பொலிட்பீரோவின் கூட்டங்களில் கலந்து கொள்ளும் கடமை கொண்ட திட்ட வட்டமான எண்ணிக்கையிலான மத்தியக் கண்காணிப்புக் கமிஷனின் உறுப்பினர்கள் ஒரு கச்சிதமான பிரிவாக அமைய வேண்டும். இந்தப் பிரிவின் கடமை, செயலாளர் அல்லது மத்தியக் கமிட்டியின் எந்தவொரு உறுப்பினரும், கேள்விகள் கேட்பதையோ, ஆவணங்களைச் சரிபார்ப்பதையோ, எல்லா விஷயங்கள் குறித்தும் முழுமையான தகவல் பெறுவதையோ, விவகாரங்களைச் சரிவர நடத்துவதையோ தடுக்கும் விதத்தில் விதிவிலக்கின்றி எவருக்கும் அதிகாரம் அளிக்க இடந்தரக் கூடாது என்பதில் கறாரான கண்காணிப்பு செலுத்துவதாகும்.

நமது சோவியத் குடியரசில் சமுதாய அமைப்பு இரண்டு வர்க்கங்களின் ஒத்துழைப்பை அடிப்படையாக்கியதாகும்: தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள், இப்போது இதில் புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாகத் தோன்றியவர்கள், அதாவது முதலாளி வர்க்கத்தினர்கள் ஒரு சில நிபந்தனைகளின் கீழ் பங்கேற்பதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள் என்பது தெரிந்ததே. இந்த வர்க்கங்களுக்கு இடையே கடுமையான வர்க்க வேறுபாடுகள் உதித்தெழுமானால் ஒரு பிளவு தவிர்க்க முடியாததாகும். ஆனால் நமது சமுதாய அமைப்பில் இத்தகைய பிளவுக்கான அடிப்படைகள் தவிர்க்க முடியாதபடி இல்லை. ஒரு பிளவை ஏற்படுத்தக் கூடிய அத்தகைய புற நிகழ்வுகளை மிகவும் உன்னிப்பாகக் கவனித்து அவற்றை முன்னுணர்ந்து தடுப்பது நமது மத்தியக் கமிட்டி மற்றும் மத்தியக் கண்காணிப்புக் கமிஷன், நமது கட்சி முழுவதன் முக்கிய கடமையாகும். ஏனெனில் இறுதியாக ஆய்வு செய்து பார்க்கும் போதில் நமது குடியரசின் கதி விவசாயி மக்கள் திரளினர் தமது கூட்டணிக்கு விசுவாசமுடன் தொழிலாளி வர்க்கத்துக்கு ஆதரவாக நிற்பார்களா, அல்லது அவர்கள் புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாகத் தோன்றியவர்கள், அதாவது புதிய முதலாளி வர்க்கத்தினர் தமக்கும் தொழிலாளி வர்க்கத்துக்கும் இடையில் பிளவை உண்டாக்கவும், தொழிலாளி வர்க்கத்திடமிருந்து அவர்களைப் பிரிக்கவும் இடமளிப்பார்களா என்பதையே சார்ந்து இருக்கும். இந்த மாற்று நிலையினை எவ்வளவு அதிகத் துலக்கமாக

நாம் பார்க்கிறோமோ, நமது தொழிலாளர்கள், விவசாயிகள் எல்லாரும் எந்தளவு அதிகமாக இதைத் துலக்கமாகப் புரிந்து கொள்ளுகிறார்களோ அந்தளவு அதிகமாக நாம் சோவியத் குடியரசுக்குப் படுநாசமான ஒரு பிளவைத் தவிர்ப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.

*ஜனவரி 23, 1923*

பிராவ்தா, இதழ் *16*,
*ஜனவரி 25, 1923*

# சொற்பமாயினும் சிறந்ததே நன்று

நமது அரசுப் பொறியமைவை மேம்படச் செய்யும் பிரச்சினையில், ரப்கிரின் அமைப்பானது—எனது அபிப் பிராயத்தில்—அளவை அதிகமாக்குவதில் முனைந்துவிடக் கூடாது, அவசரப்படவும் கூடாது. நமது அரசுப் பொறி யமைவின் தரத்தில் இதுகாறும் நாம் மிகச் சொற்ப சிந்தனை யும் கவனமுமே செலுத்த முடிந்திருக்கிறது. ஆகவே இப் போது நாம் முழு அளவுக்கு இந்தப் பொறியமைவை ஒழுங்கு செய்வதிலும் ரப்கிரின் அமைப்பில் மெய்யாகவே தற்காலத் தரத்துக்கு உகந்த ஊழியர்களை, அதாவது சிறந்த மேற்கு ஐரோப்பியத் தரங்களுக்குக் குறைவில்லாத ஊழியர்களை ஒருசேரத் திரட்டுவதிலும் விசேஷக் கவனம் செலுத்துவது முற்றிலும் நியாயமே. சோஷலிசக் குடியரசுக்கு இந்த நிபந் தனை கொஞ்சம் தன்னடக்கமானது தான் என்பது நிச்சயம். ஆனல் முதல் ஐந்து ஆண்டுகளிலான நமது அனுபவம் நம் தலையில் அவநம்பிக்கையையும் சந்தேகத்தையும் அப்படி நிரம்பச் செய்து விட்டது. உதாரணமாக, ''பாட்டாளி வர்க்கக்'' கலாச்சாரம் குறித்து மிதமிஞ்சிய அளவிலும் மித மிஞ்சிய அலட்சிய மனேபாவத்துடனும் வாய்வீச்சடிப்பதைக் கேட்கும் போது நம்மையும் மீறி இந்த அவநம்பிக்கையும் சந்தேகமும்தான் நம்மை ஆட்கொள்கின்றன. ஆரம்ப நிலை யாய் மெய்யான பூர்ஷ்வாக் கலாச்சாரமே போதும், நாம் மனநிறைவு அடைவோம்; ஆரம்ப நிலையாய் முதலாளித் துவத்துக்கு முற்பட்ட கலாச்சாரத்தின் நயமற்ற வகைகளி லிருந்து, அதாவது அதிகார வர்க்கக் கலாச்சாரம் அல்லது பண்ணையடிமைக் கலாச்சாரம் போன்றவற்றைக் கைவிடு வோமாயின் நாம் மகிழ்ச்சியுறுவோம். கலாச்சார விவகாரங் களில் அவசரமும் மட்டுமீறிய நடவடிக்கைகளும் மற்ற

வற்றைக் காட்டிலும் பெருங்கேடு விளைவிக்கிறவைகளாகும். நமது இளம் எழுத்தாளர்களிலும் கம்யூனிஸ்டுகளிலும் பலரும் இதனை மனதில் நன்கு பதியச் செய்து கொண்டாக வேண்டும்.

இவ்வாறு, நமது அரசுப் பொறியமைவு பற்றிய பிரச்சினையில், மேலும் மெதுவாகச் செல்வதே நல்லது என்கிற முடிவினை நமது கடந்த ஆண்டுகளது அனுபவத்திலிருந்து இப்போது நாம் வந்தடைந்தாக வேண்டும்.

நமது அரசுப் பொறியமைவு படுமோசமாய் இருப்பதாகச் சொல்லக் கூடாதெனில், எப்படியும் பரிதாபகரமானதாகவே இருக்கிறது. இதனால் முதலில் நாம் இதன் குறைபாடுகளை எதிர்த்து எப்படிப் போராடுவதென்று ஆழ்ந்த ஆலோசனை செய்தாக வேண்டும். இந்தக் குறைபாடுகள் கடந்த காலத்தில் வேர் கொண்டவை என்பதை நாம் மனதிற் கொண்டாக வேண்டும். இந்தக் கடந்த காலம் வீழ்த்தப்பட்டிருக்கிறது என்ற போதிலும், இன்னும் இது தொன்மைக் காலத்துக்கு உரிய ஒரு கலாச்சாரத்துக்கான கட்டத்தை அடையும்படிப் பழங்கதையாகி விடவில்லை. வேண்டுமென்றேதான் கலாச்சாரம் என்கிறேன், ஏனெனில் இந்த விவகாரங்களில் நமது கலாச்சாரத்தின், நமது அன்றாட வாழ்வின், நமது பழக்கவழக்கங்களின் இன்றியமையாக் கூறு ஆகி விட்டதை மட்டுமே சாதிக்கப்பட்டுவிட்ட ஒன்றாய் நாம் கருத முடியும். ஆனால் நமது சமூகக் கட்டமைப்பின் நல்ல அம்சங்கள் சரிவர ஆராய்ந்து அறியப்படவில்லை, புரிந்து கொள்ளப்படவில்லை, உணர்ந்து கிரகிக்கப்படவில்லை எனலாம். அவை அவசரமாகப் பற்றிக்கொள்ளப்பட்டிருக்கின்றன, சரிபார்க்கப்படவோ, சோதிக்கப்படவோ இல்லை என்றும் அனுபவத்தால் மெய்ப்பிக்கப்படவில்லை என்றும் நீடித்து நிலவும்படி ஆக்கப்படவில்லை என்றும் இன்ன பல வாறாகவும் கூறலாம். மெய்தான், புரட்சிகரமான சகாப்தத்தில், வளர்ச்சியானது தலை தெரிக்கும் வேகத்தில் நடந்தேறி ஐந்தே ஆண்டுகளில் நாம் ஜாரிசத்திலிருந்து சோவியத் அமைப்புக்கு வந்துவிட்ட ஒரு காலத்தில் இவ்வாறன்றி வேறு எவ்வாறும் இருக்க முடியாதுதான்.

நிதான நிலையை அடைய வேண்டிய நேரம் வந்து விட்டது. மிதமிஞ்சிய வேகத்தில் முன்னேறிச் செல்வது குறித்தும் எல்லா விதமான வீம்புப் பேச்சு குறித்தும் இன்ன

பலவும் குறித்தும் நாம் பாதுகாப்புக்குரிய அவநம்பிக்கை கொண்டாக வேண்டும். முன்னால் நாம் அடி எடுத்து வைத்துச் செல்வதாய் மணிதோறும் பறைசாற்றி நிமிடம் தோறும் எடுத்து வைத்து பிறகு வினாடி தோறும் அந்த அடிகள் நிலையற்றவை என்றும் உறுதியில்லாதவை என்றும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டவை என்றும் நிரூபிக்கிறோமே, அவற்றைச் சோதித்துப் பார்க்க வேண்டியது குறித்து நாம் சிந்தனை செய்தாக வேண்டும். அவசரப்படுவதுதான் இங்கு யாவற்றிலும் அதிக தீமை பயப்பதாய் இருக்கிறது. நாம் ஏதோ சிலவற்றையேனும் அறிவோம் அல்லது மெய்யாகவே புதியதான அரசுப் பொறியமைவு ஒன்றை, சோஷலிஸ்டு என்றும் சோவியத் என்றும் இன்ன பலவாறும் அழைக்கப்படுவதற்கு மெய்யாகவே தகுதி வாய்ந்ததான ஒன்றைக் கட்டியமைப்பதற்கு அவசியமான கூறுகளில் கணிசமான பலவும் நம்மிடம் இருக்கின்றன என்பதாகக் கற்பித்துக் கொண்டு அதை ஆதாரமாகக் கொள்வது மிகவும் அதிகக் கேடு பயப்பதாகும்.

இல்லை, இம்மாதிரியான பொறியமைவும் இதற்குரிய கூறுகளுங்கூட நகைக்கத்தக்கவாறு மிக சொற்ப அளவில்தான் நம்மிடம் உள்ளன. இதைக் கட்டியமைத்திட காலச் செலவு ஆவது குறித்துக் கவலைப்படலாகாது என்பதையும் பல, மிகப் பல ஆண்டுகள் வேண்டியிருக்கும் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இந்தப் பொறியமைவை அமைத்திட நம்மிடம் இருக்கும் கூறுகள் யாவை? இரண்டே இரண்டு மட்டுமே இருக்கின்றன. முதலாவதாக, தொழிலாளர்கள்—சோஷலிசத்துக்கான போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் போதிய அளவுக்குக் கல்வியறிவு பெற்றிருக்கவில்லை. அவர்கள் நமக்குச் சிறந்த பொறியமைவை அமைத்துத் தர விரும்புகிறார்கள். ஆனால் இதை எப்படிச் செய்வதென்று அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்களால் இந்தப் பொறியமைவை அமைத்திட இயலாது. இதற்குத் தேவையான கலாச்சாரத்தை இன்னும் அவர்கள் வளர்த்துக் கொண்டாகவில்லை. இதற்குத் தேவையானது கலாச்சாரமேதான். இங்கே பரபரத்துக் கொண்டு செயல்படுவதாலோ, தாக்குதல் தொடுப்பதாலோ, ஊக்கத்தாலோ, விறுவிறுப்பாலோ,

அல்லது பொதுவாக மனித குலத்தின் மிகச் சிறந்த பண்புகளில் எதனுலுமோ எதையும் சாதித்து விட முடியாது. இரண்டாவதாக, அறிவு, கல்வி, பயிற்சி ஆகியவற்றின் கூறுகள்—ஏனைய எல்லா அரசுகளுடன் ஒப்பிடுகையில் நம்மிடம் இவை நகைக்கத்தக்கவாறு சொற்ப அளவுக்கே இருக்கின்றன.

இங்கே அறிவின் பற்ருக்குறையை ஆர்வத்தாலும் அவசரத்தாலும் பிறவற்ருலும் ஈடு செய்து கொள்ளும் (அல்லது ஈடு செய்து கொண்டுவிடலாமென கற்பனை செய்து கொள்ளும்) போக்கு நம்மிடம் மிகுதியாகவே இருப்பதை நாம் மறக்கலாகாது.

நமது அரசுப் பொறியமைவைப் புத்தமைக்கும் பொருட்டு, எப்பாடுபட்டேனும் நாம் மேற்கொண்டாக வேண்டிய பணி என்னவெனில்: முதலாவதாக—கற்றறிதல், இரண்டாவதாக—கற்றறிதல், மூன்ருவதாக—கற்றறிதல்; கற்ற பின் அந்த விஞ்ஞான அறிவு பயனில்லாப் பண்டமாகவோ, ஆடம்பரமான வாய்ப் பேச்சாகவோ அமைந்து விடாதபடி (அடிக்கடி நம்மிடையே இப்படி நேர்ந்து விடுவதை மறைக்காமல் ஒப்புக் கொள்ளவே வேண்டும்), விஞ்ஞான அறிவு மெய்யாகவே நமது ஊனும் இரத்தமும் ஆகிவிடும்படி, முழுமையாகவும் மெய்யாகவும் நமது அன்ருட வாழ்க்கையின் உள்ளடக்கக் கூருகிவிடும்படி உறுதி செய்து கொள்ளுதல். சுருங்கக் கூறுமிடத்து, பூர்ஷ்வா மேற்கு ஐரோப்பா எழுப்பும் கோரிக்கைகளை நாம் எழுப்பலாகாது, சோஷலிச நாடாக வளர முற்பட்டிருக்கும் ஒரு நாட்டுக்கு ஏற்புடைத்த பொருத்தமான கோரிக்கைகளையே நாம் கோர வேண்டும்.

மேற்கூறியவற்றிலிருந்து பெறப்படும் முடிவு என்னவெனில்: ரப்கிரின் அமைப்பை நாம் மெய்யாகவே முன் மாதிரியான அமைப்பாக, நமது அரசுப் பொறியமைவைச் செம்மை செய்வதற்குரிய கருவியாக ஆக்க வேண்டும்.

அது தேவையான உயர் நிலையை அடையும் பொருட்டு நாம் பின்பற்ற வேண்டிய விதி வருமாறு: ''மூன்று தரம் அள ஒரு தடவை வெட்டு.''

நமது சமுதாய அமைப்பில் இருப்பவற்றுள் மிகச் சிறந்தவற்றை இதற்காகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும், அவற்றை மிகுந்த எச்சரிக்கையோடும் ஆலோசனையோடும்

விவர அறிவோடும் பயன்படுத்திப் புதிய மக்கள் கமிசார கத்தைக் கட்டியமைத்தாக வேண்டும்.

இதன் பொருட்டு, நமது சமுதாய அமைப்பில் இருக்கும் சிறந்த கூறினர்—முதலாவதாக, முன்னேறியத் தொழிலாளர் களையும் இரண்டாவதாக, சொன்ன சொல் தவருதவர்கள் என்றும் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாதவர் கள் என்றும் சொல்லத் தக்கவர்களாய் அமைந்து மெய் யாகவே அறிவொளி பெற்றவர்களாய் இருப்போரையும் போன்ற கூறினர்—முழு மனத்துடன் தாம் வகுத்துக் கொண்ட குறிக்கோளை அடையும் பொருட்டு எந்த இன் னலையும் ஏற்கத் தயங்கவோ, எந்தப் போராட்டத்தையும் கண்டு அஞ்சவோ கூடாது.

ஓடியாடிச் சந்தடி செய்து ஐந்து ஆண்டுகளாய் நாம் நமது அரசுப் பொறியமைவைச் செம்மை செய்ய முயன்றுள் ளோம். ஆனல் இது வெறும் சந்தடியாகவே இருந்துள்ளது. இந்த ஐந்து ஆண்டுகளில் இது பலன் ஏதும் அளித்ததாகத் தெரியவில்லை, அல்லது தகாததாகவுங்கூட, அல்லது தீமை பயப்பதாகவுங்கூட இருந்திருக்கிறது. இந்தச் சந்தடி நாம் ஏதோ செய்து வந்தோமென்ற தோற்றத்தை உண்டாக்கு கிறது, ஆனல் நடைமுறையில் இச்சந்தடி நமது அலுவலகங் களையும் மூளையையும் திணறடித்து வந்தது.

முடிவில் இப்போது இவை எல்லாம் மாற்றப்படுவதற் குரிய நேரம் வந்து விட்டது.

எண்ணிக்கையில் சொற்பமாயினும் தரத்தில் உயர்ந்ததே நன்று என்னும் விதியை நாம் கடைப்பிடிக்க வேண்டும். அவசரப்பட்டு நம்பகமான ஆட் செல்வம் கொஞ்சமும் இல்லாமற்போவதை விட, இரண்டு ஆண்டோ, மூன்று ஆண்டோகூட ஆவதாயினும் இச்செல்வத்தைப் பெறுவதே நன்று என்கிற விதியைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இந்த விதியைக் கடைப்பிடிப்பதும் நமது நிலைமைகளில் இதனைச் செயல்படுத்துவதும் கடினமாகவே இருக்கும், நான் இதை அறிவேன். நமது நாட்டில் இதற்கு நேர் எதிரான விதி ஆயிரம் இடுக்குகள் வழியே பலவந்தமாய் உள்ளே நுழைந்து விடும் என்பதை அறிவேன். இதற்கு நாம் பிரம் மாண்ட அளவிலான எதிர்ப்பு காட்ட வேண்டியிருக்கும் என்பதையும் விடாப்பிடியான அசுரப் பிரயத்தனம் தேவை யாய் இருக்கும் என்பதையும் எப்படியும் முதல் சில ஆண்டு

களுக்கு இத்துறையில் செய்தாக வேண்டிய வேலை மெத்தக் கடினமாகவே இருக்கும் என்பதையும் நான் அறிவேன். ஆனுலும் இம்மாதிரியான பிரயத்தனத்தால் மட்டும்தான் நாம் நமது குறிக்கோளை அடைய முடியும் என்பதிலும் இந்தக் குறிக்கோளை அடையும் போது மட்டும்தான் சோவியத் குடியரசு, சோஷலிசக் குடியரசு போன்ற பெயர்களைச் சூட்டிக் கொள்வதற்கு மெய்யாகவே தகுதி வாய்ந்த ஒரு குடியரசை நாம் தோற்றுவிக்க முடியும் என்பதிலும் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை, இத்தியாதி.

எனது முதல் கட்டுரையில்* எடுத்துக்காட்டாய் நான் தந்த புள்ளிவிவரங்கள் பெரிதும் குறைத்துக் காட்டுவதாகப் பல வாசகர்களும் நினைத்திருப்பார்கள் என்பது சாத்தியமே. அந்தப் புள்ளிவிவரங்கள் குறைத்துக் கூறுகிறவையே என்பதை நிரூபிப்பதற்குப் பல கணக்கீடுகளும் செய்து காட்டலாம் என்றே நம்புகிறேன். ஆனுல் இம்மாதிரியான கணக்கீடுகளுக்கும் பிறவற்றுக்கும் மேலானதாய் ஒன்றை, அதாவது மெய்யாகவே முன்மாதிரியாக இருக்கும்படியான தர நிலையை அடைவதில் நமக்குள்ள ஆர்வத்தை நாம் அமர்த்திட வேண்டுமென நினைக்கிறேன்.

நமது அரசுப் பொறியமைவைச் செம்மை செய்வதற்காக முழு முனைப்புடன் வேலை செய்ய வேண்டிய தருணம் முடிவில் இப்பொழுது வந்து விட்டது என்று கருதுகிறேன். இந்த வேலையில் அவசரத்தைக் காட்டிலும் அதிக தீமை பயப்பது எதுவும் இருக்க முடியாது எனலாம். எனவேதான் புள்ளிவிவரங்களை ஊதிப் பருக்க வைப்பதை எதிர்த்து எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். இதற்கு மாருய், எனது கருத்துப்படி புள்ளிவிவரங்கள் குறித்து இங்கே நாம் குறிப்பிடத்தக்க அளவுக்குக் கருராய் இருத்தல் வேண்டும். ஒளிவு மறைவின்றி நாம் இதனைச் சொல்லியாக வேண்டும்: ரப்கிரின் அமைப்பின் மக்கள் கமிசாரகம் தற்போது கொஞ்சமும் செல்வாக்கற்றதாய் இருக்கிறது. நமது ரப்கிரின் அமைப்பின் அலுவலகங்களைக் காட்டிலும் மோசமாய் அமைந்த அலுவலகங்கள் எவையும் இல்லை, தற்போதுள்ள நிலைமைகளில் இந்த மக்கள் கமிசாரகத்திடமிருந்து எதையும் எதிர்பார்ப்பதற்கில்லை என்பதை யாவரும் அறிவர். முதலாவதாக, முன்

---

* இத்தொகுதியின் பக்கங்கள் 217-224 பார்க்க—ப-ர்.

மாதிரியான அலுவலகமாய் இருக்கக் கூடியதும் இரண்டாவதாக, எல்லாரது முழு நம்பிக்கைக்கும் உரியதாகக் கூடியதும் மூன்றாவதாக, மத்தியக் கண்காணிப்புக் கமிஷனைப் போல் உயர் நிலைக்கு உரியதான ஓர் அமைப்பு ஆற்றும் பணியின் பயனுடைமையை நாம் மெய்ப்பித்துள்ளதை எல்லாருக்கும் நிரூபித்துக் காட்டக் கூடியதுமாகிய ஓர் அலுவலகத்தை ஒரு சில ஆண்டுகளுக்குள் தோற்றுவிப்பதற்கு மெய்யாகவே விரும்புவோமாயின், மேற்கூறிய உண்மையை நாம் உறுதியாக நினைவில் இருத்திக் கொண்டாக வேண்டும். என் அபிப்பிராயத்தில் அலுவலக ஊழியர்களின் எண்ணிக்கை பற்றிய பொதுவான எல்லா நியமங்களும் உடனடியாகவும் இறுதியாகவும் நிராகரிக்கப்பட வேண்டும். ரப்கிரின் அமைப்புக்குரிய ஊழியர்களை நாம் முழுக் கவனம் செலுத்தி மிகக் கண்டிப்பான சோதனையின் அடிப்படையில் தேர்வு செய்ய வேண்டும், வேறு எவ்விதத்திலும் தேர்வு செய்யலாகாது. ஏனோதானோவென செயல்படுவதும் கிஞ்சித்தும் நம்பிக்கை ஊட்டாததும் தன் சொல்லுக்கு அதிக மதிப்பில்லாததுமான மக்கள் கமிசாரகம் ஒன்றை அமைத்து என்ன பயன்? இவற்றை எல்லாம் தவிர்க்க வேண்டுமென்பதே தற்போது நாம் மனதிற்கொண்டுள்ள புத்தமைப்புப் பணியின் பிரதான குறிக்கோள் என்று நினைக்கிறேன்.

மத்தியக் கண்காணிப்புக் கமிஷனின் உறுப்பினர்களாக நாம் சேர்த்து வரும் தொழிலாளர்கள் குற்றங்குறை இல்லாக் கம்யூனிஸ்டுகளாய் இருக்க வேண்டும். அவர்களது வேலைகளுக்குரிய வழிமுறைகளையும் இவ்வேலைகளின் நோக்கங்களையும் அவர்களுக்குக் கற்று தருவதற்கான பணியில் மிகப் பெரும் பகுதி இனிமேல்தான் செய்யப்பட வேண்டுமென நினைக்கிறேன். மேலும், இந்த வேலைகளில் துணை புரிவதற்குக் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான செயலாளர்கள் இருந்தாக வேண்டும், இந்தப் பதவிகளில் அமர்த்தப்படும் முன் இவர்கள் மும்மடங்கான சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். முடிவில், விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் நேரடியாக ரப்கிரின் அமைப்பின் சிப்பந்திகளாக நாம் அமர்த்திக் கொள்ளத் தீர்மானிக்கும் பிரமுகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வோராய் இருக்க வேண்டும்:

முதலாவதாக, இவர்கள் கம்யூனிஸ்டுகள் சிலரால் சிபாரிசு செய்யப்பட்டவர்களாக இருக்க வேண்டும்;

இரண்டாவதாக, நமது அரசுப் பொறியமைவு குறித்து அறிந்தவர்கள்தானா என்பதற்கான பரீட்சையில் தேர்வு பெற்றாக வேண்டும்;

மூன்றாவதாக, நமது அரசுப் பொறியமைவுத் தத்துவத்தின் அடிப்படைக் கூறுகள், நிர்வாகம் மற்றும் அலுவலக நடைமுறையின் அடிப்படைக் கூறுகள் முதலானவற்றிலான பரீட்சையில் தேர்வு பெற்றாக வேண்டும்;

நான்காவதாக, இந்தப் பொறியமைவு அனைத்தின் செயற்பாட்டுக்கும் ஒட்டுமொத்தமாய் நாம் உறுதிமொழி அளிக்க முடியும்படியான விதத்தில் இவர்கள் மத்தியக் கண்காணிப்புக் கமிஷனின் உறுப்பினர்களோடும் தமது செயலாளர்களோடும் இசைவாய் வேலை செய்ய வேண்டும்.

இந்த நிபந்தனைகள் மிதமிஞ்சிய அளவுக்குக் கண்டிப்பானவை என்பது எனக்குத் தெரிந்ததுதான். ரப்கிரின் அமைப்பின் பெருவாரியான ''நடைமுறைவாதிகள்'' இந்த நிபந்தனைகள் நடைமுறைக்கு ஒவ்வாதவை என்பார்கள் அல்லது இவற்றை எள்ளி நகையாடுவார்கள் என்று நான் அஞ்சுகிறேன். ரப்கிரின் அமைப்பைப் போன்றதொரு மக்கள் கமிசாரகத்தின் நடைமுறைத் தேவை என்னவென்பதை இந்த மேற்பார்வை அமைப்பின் தற்போதைய தலைவர்களில் யாரேனும் அல்லது இந்த அமைப்புடன் இணைவு கொண்டோரில் யாரேனும் நேர்மையுடன் எனக்குச் சொல்வார்களா என்று கேட்கிறேன். பொருத்தமானதுதானா என்பதை உணரும் ஆற்றலைத் திரும்பவும் பெறுவதற்கு இவர்களுக்கு இந்தக் கேள்வி துணை புரியுமென நினைக்கிறேன். நம்பிக்கைக்கு இடமில்லாததாகிவிட்ட இந்த ரப்கிரின் அமைப்பு சம்பந்தமாக எத்தனையோ தரம் நாம் செய்திருக்கும் திருத்தமைவுகளில் மேலும் ஒன்றைச் செய்து பயனில்லையென விட வேண்டும் அல்லது மெள்ளச் செயல்படும்படியான, கடினமான, வழக்கத்துக்கு மாறான வழிகளில் சென்று சரிதானா என்று திரும்பத் திரும்பச் சோதித்துப் பார்த்துக் கொண்டு மெய்யாகவே முன்மாதிரியாகத் திகழக்கூடியதான ஒன்றை, தனது பட்டத்தாலும் பதவியாலும் மட்டுமின்றி தனது செயல்திறனாலும் எல்லோரது மதிப்புக்கும் உரியதாகக் கூடியதான ஒன்றைத் தோற்றுவிக்க மெய்யாகவே நாம் வேலை தொடங்கியாக வேண்டும்.

நாம் பொறுமையுடன் செயல்படத் தயாராயில்லை எனில்,

இப்பணிக்குச் சில ஆண்டுகளைச் செலவிட விரும்பவில்லை எனில், இதில் நாம் இறங்காமல் இருப்பதே உத்தமம்.

அவசர அவசரமாய் ஏற்கெனவே நாம் அமைத்திருக்கும் நிலையங்களில்—உழைப்பு ஆராய்ச்சி உயர் நிலையங்களிலும் பிறவற்றிலும்—குறைந்தபட்சமாகச் சிலவற்றைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு இவை முழு அளவுக்குத் தக்கவாறு அமைந்தவைதானு என்று சரிபார்த்திட வேண்டும், நவீன விஞ்ஞானத்தின் உயர் தரங்களுக்கு மெய்யாகவே உகந்தவாறு அமைந்து நமக்கு இவ்விஞ்ஞானத்தின் அனுகூலங்கள் அனைத்தும் கிடைக்கச் செய்யும் விதத்தில் மட்டுமே இவை தொடர்ந்து இயங்க அனுமதிக்கப்பட வேண்டும் என்பதே எனது அபிப்பிராயம். இதை நாம் செய்வோமாயின், தனக்குரிய பணிகளைச் செவ்வனே செய்து நமது அரசுப் பொறியமைவைச் செம்மை செய்வதற்காக ஒழுங்காகவும் இடைவிடாமலும் செயலாற்றவல்லதாகிய ஒரு நிலையத்தை—தொழிலாளி வர்க்கத்தின், ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின், நமது குடியரசின் பெருந்திரள் மக்கள் அனைவரின் முழு நம்பிக்கைக்கும் உரித்தான ஒரு நிலையத்தை—ஒரு சில ஆண்டுகளில் பெற்று விடலாமென எதிர்பார்ப்பது கற்பனுவாதமாய் இராது.

இந்தப் பணிக்கான தயாரிப்பு வேலைகளை இப்போதே ஆரம்பிக்கலாம். திருத்தியமைப்பதற்கான தற்போதைய திட்டத்தை ரப்கிரின் அமைப்பின் மக்கள் கமிசாரகம் ஏற்றுக் கொள்ளுமாயின், இப்போதே அது தயாரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்; பணி முழுமையாக நிறைவேற்றப்படும் பொருட்டு அவசரப்படாமலும் ஏற்கெனவே செய்யப்பட்டதை மாற்றுவதற்குத் தயங்காமலும் இடையருது ஒழுங்காய் வேலை செய்யலாம்.

இந்த விவகாரத்தில் அரைமனதான தீர்வு எதுவும் பெருந் தீங்கிழைப்பதாகவே இருக்கும். ரப்கிரின் அமைப்பின் ஊழியர்களது எண் அளவுக்கான எந்தவொரு நடவடிக்கையும் வேறு எந்தக் கருத்தின் அடிப்படையிலும் அமையுமாயின், உண்மையில் அது பழைய அதிகார வர்க்கக் கருத்துக்களின், பழைய தப்பெண்ணங்களின் அடிப்படையில்தான், ஏற்கெனவே நிந்திக்கப்பட்டவையும் பொதுவாக எல்லோராலும் ஏளனம் செய்யப்பட்டவையும் இன்ன பிறவும் ஆகியவற்றின் அடிப்படையில்தான் அமைந்திருக்கும்.

சாராம்சத்தில், இங்குள்ள பிரச்சினை பின்வருமாறே இருக்கிறது:

அரசுக் கட்டுமானப் பணியில் மெய்யாகவே ஏதேனும் ஓரளவுக்கு நாம் கற்றுக் கொண்டுவிட்டோம் (ஐந்து ஆண்டுகளில் ஏதேனும் ஓரளவுக்கு நாம் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும்) என்று இப்போது நிரூபித்துக் காட்ட வேண்டும்; இல்லையேல், இதற்கு இன்னும் நாம் போதிய முதிர்ச்சி அடைந்தாகவில்லை என்று நிரூபிப்போர் ஆவோம். பின் கூறியதே உண்மையெனில், இப்பணியில் நாம் இறங்காமல் இருப்பதே நல்லது.

நம்மிடம் இருக்கும் ஆட் செல்வத்தைக் கொண்டு பார்க்கையில், குறைந்தது ஒரேயொரு மக்கள் கமிசாரகத்தையாவது முறைப்படித் திருத்தியமைக்கப் போதுமான அளவுக்குக் கற்றுக் கொண்டு விட்டோமெனக் கொள்வது வீண் பெருமையாகாதென நினைக்கிறேன். மெய்தான், இந்த ஒரு மக்கள் கமிசாரகம் நமது அரசுப் பொறியமைவு அனைத்துக்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்தாக வேண்டும்.

பொதுவாக உழைப்பின் ஒழுங்கமைப்பு குறித்தும் குறிப்பாக நிர்வாக உழைப்பு குறித்தும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பாடப் புத்தகங்கள் தயாரிக்கப்படுவதற்காக உடனே நாம் போட்டியை அறிவிக்க வேண்டும். ஏற்கெனவே எர்மான்ஸ்கி வெளியிட்டிருக்கும் புத்தகத்தை நாம் ஓர் அடிப்படையாகக் கொள்ளலாம், எனினும் இவர் மென்ஷிவிசத்திடம் அனுதாபம் கொண்டிருப்பது வெளிப்படையாகவே தெரிவதையும் சோவியத் அமைப்புக்குப் பாடப் புத்தகம் தயாரிப்பதற்கு இவர் தகுதியுடையவரல்ல என்பதையும் இடைக்குறிப்பாய் இங்கு குறிப்பிட வேண்டும். அண்மையில் கேர்ஷென்த்செவ் எழுதியிருக்கும் புத்தகத்தையும் நாம் அடிப்படையாகக் கொள்ளலாம். கடைசியாக, பகுதியளவில் பாடப் புத்தகமாய் இருக்கும்படியான ஏனைய புத்தகங்களிலும் சில நமக்கு உபயோகமாய் இருக்கலாம்.

தகுதியும் கடமை உணர்ச்சியும் கொண்டவர்கள் சிலரை இலக்கியங்களைச் சேகரிப்பதற்காகவும் இந்தப் பிரச்சினையை ஆராய்ந்து அறிவதற்காகவும் நாம் ஜெர்மனிக்கோ, பிரிட்டனுக்கோ அனுப்பி வைக்கலாம். அமெரிக்காவுக்கோ கனடாவுக்கோ அனுப்ப முடியாமற்போகலாம் என்பதால் பிரிட்டனைக் குறிப்பிடுகிறேன்.

ரப்கிரின் அமைப்பில் வேலை ஏற்கக் கூடிய ஊழியர்களுக்கான பரீட்சைகளுக்காகப் பூர்வாங்கப் பாடத்திட்டத்தை வகுத்திடுவதற்காக நாம் ஓர் ஆணைக்குழுவை நியமிக்க வேண்டும். மத்தியக் கண்காணிப்புக் கமிஷனுக்கான வேட்பாளர்களுக்கும் இவ்வாறே செய்ய வேண்டும்.

இவற்றையும் இவற்றையொத்த பிற நடவடிக்கைகளையும் எடுப்பதில் மக்கள் கமிசாருக்கோ, ரப்கிரின் அமைப்பின் கூட்டுச் செயற் குழுவின் உறுப்பினர்களுக்கோ, மத்தியக் கண்காணிப்புக் கமிஷனின் தலைமைக் குழுவுக்கோ எந்தச் சள்ளையும் ஏற்பட்டுவிடாது என்பது தெளிவு.

இவற்றுடன் கூடவே, மத்தியக் கண்காணிப்புக் கமிஷனின் உறுப்பினர்களுக்கான வேட்பாளர்களைத் தேர்வு செய்வதற்காகத் தயாரிப்புக் குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும். இந்தப் பதவிக்குப் போதுமான அளவிற்கும் அதிகமாகவே இப்போது நாம் எல்லாத் துறைகளிலுமான அனுபவம் வாய்ந்த தொழிலாளர்களிடமிருந்தும் நமது சோவியத் மேற் கல்விக் கூடங்களின் மாணவர்களிடமிருந்தும் தேர்வு செய்ய முடியுமென நம்புகிறேன். எந்தவொரு வகையினரையும் முன்கூட்டியே வேண்டாமென ஒதுக்குவது சரியாகுமா! பல இயல்புகளும் வேறுபாடான சிறப்புத் தகுதிகளும் ஒருசேர இணையும்படிக் கண்காணிப்புக் கமிஷன் கலப்பான இயைபுடையதாய் அமைவதற்கு உசிதமான சலுகை காட்ட வேண்டியிருக்கலாம். ஆகவே வேட்பாளர் பட்டியலை வகுத்திடுவதற்குக் கணிச அளவிலான வேலை தேவையாய் இருக்கும். உதாரணமாய், புதிய மக்கள் கமிசாரகத்தின் ஊழியர்கள் ஒரே ரகத்தினராய் இருப்பது, எடுத்துக்காட்டாய் முற்றிலும் அதிகாரிகளாகவே இருப்பது, அல்லது கிளர்ச்சிப் பிரசார ரகத்தினரையோ, எல்லாரோடும் நெருங்கிச் சுமுகமாகப் பழகும் தன்மையையோ, இத்துறையிலான ஊழியர்கள் அதிகம் பழக்கப்படாத வட்டாரங்களுக்குள் ஊடுருவிச் செல்லும் திறனையோ தமது முக்கிய பண்பாகக் கொண்டவர்களையோ மற்றவர்களையோ விலக்கி ஒதுக்குவது விரும்பத் தக்கதல்ல.

* * *

எனது திட்டத்தைக் கல்வி நிலையங்களது திட்டத்துடன் ஒப்பிட்டுக் காட்டுவதன் மூலம் எனது கருத்தைச் சிறந்த

முறையில் தெளிவுபடுத்த முடியுமென நினைக்கிறேன். மத்தியக் கண்காணிப்புக் கமிஷனின் உறுப்பினர்கள் அவர்களது தலைமைக் குழுவின் வழிகாட்டலில் பொலிட்பீரோவின் எல்லாக் கோப்புகளையும் ஆவணங்களையும் முறையாய்ப் பரிசீலித்து வர வேண்டும். அதே சமயம் மிகச் சிறியவற்றிலிருந்தும் தனியார் உடைமையில் இருப்பவற்றிலிருந்தும் மிக உயர்ந்த அரசு அலுவலகங்கள் வரையிலான நமது அலுவலகங்களின் வேலை ஒழுங்கை புலனாய்வு செய்வது சம்பந்தமான பல்வேறு வேலைகளிடையிலும் இவர்கள் தமது நேரத்தைச் சரிவர பங்கிடு செய்து கொண்டாக வேண்டும். முடிவில், இவர்களது பணி தத்துவார்த்த ஆய்வும், அதாவது தாம் ஈடுபடத் திட்டமிடும் வேலைகளின் ஒழுங்கமைப்புத் தத்துவத்தைப் பற்றிய ஆய்வும், பழைய தோழர்களின் வழிகாட்டலிலோ, உழைப்பின் ஒழுங்கமைப்புக்கான உயர் நிலைக் கல்விக் கூடங்களது ஆசிரியர்களின் வழிகாட்டலிலோ அமைந்த நடைமுறை வேலைகளும் உள்ளடங்கியதாக இருக்க வேண்டும்.

ஆனால் இவ்விதமான கல்வித் துறைப் பணியுடன் மட்டும் இவர்கள் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டுவிட முடியுமென நான் நினைக்கவில்லை. இதனுடன் கூட, போக்கிரிகளெனச் சொல்ல மாட்டேன், ஆனால் ஓரளவுக்கு அவர்களை ஒத்த ஆட்களைப் பிடிப்பதற்கான பயிற்சி என்றும் தமது நடமாட்டத்தையும் அணுகு வழிகளையும் பிறவற்றையும் மறைப்பதற்கான தனி வகை உத்திகளை வகுத்திடுதல் என்றும் தயங்காது கூற வேண்டியிருக்கும் ஒரு வேலைக்கும் இவர்கள் தம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டியிருக்கும்.

மேற்கு ஐரோப்பிய அலுவலகங்களில் இத்தகைய பிரேரணைகள் முன்வைக்கப்படுமானால், அவை பயங்கரக் கோபக் கனலையும் ஒழுக்க நெறியின் பாற்பட்ட ஆத்திர உணர்ச்சியையும் பிறவற்றையும் கிளர்ந்தெழச் செய்யும். ஆனால் நம்மிடையிலும் இப்படி எழத்தக்கவாறு அந்த அளவுக்கு நாம் அதிகாரவர்க்கப் பாங்கினராய் ஆகிவிடவில்லை என்றே நான் நம்புகிறேன். யாரேனும் பிடிக்கப்பட்டு விடலாம் என்கிற கருத்து நம்மில் எவரையும் அதிர்ச்சியடையச் செய்யும் படியான அளவுக்குப் புதிய பொருளாதாரக் கொள்கை மதிப்பும் மரியாதையும் பெறுவதில் இன்னமும் வெற்றி பெற்றுவிடவில்லை. நமது சோவியத் குடியரசு மிகவும் அண்

மையிலேதான் அமைக்கப்பட்டது, பழைய குப்பைக் கூளம் இன்னமும் குவியல்களாய்ச் சுற்றிலும் குவிந்து கிடக்கிறது. தந்திர உத்திகள் மூலமும் சில நேரம் தொலைவிடங்களிலுள்ள ஆதாரங்களை நோக்கிச் செல்லும்படியான அல்லது சுற்றி வளைத்துச் செல்லும்படியான புலன் விசாரணைகள் மூலமும் நாம் இந்தக் குப்பைகளைக் கிளற வேண்டி வருவது குறித்து அதிர்ச்சியடைய வேண்டுமென யாரும் நினைக்க மாட்டார். ஆனால் அப்படி அதிர்ச்சியடைய வேண்டுமென யாராவது நினைப்பாராயின், அம்மாதிரியான ஆள் நிச்சயம் தம்மைக் கேலிக்குரியவராகவே ஆக்கிக் கொள்வார் என்பதில் ஐயமில்லை.

நமது புதிய ரப்கிரின் அமைப்பானது, பிரெஞ்சுக்காரர்கள் பகட்டான நாணம் (pruderie) என்கிருர்களே, அதனை விட்டொழித்துவிடுமென நம்புவோமாக. இதை நாம் நகைக்கத்தக்க ஆசாரப் பற்று என்றே, நகைக்கத்தக்க பித்தலாட்டம் என்றே சொல்லலாம். முற்றிலும் நமது சோவியத்துக்களையும் நமது கட்சியையும் சேர்ந்த அதிகாரவர்க்கத்துக்குத்தான் இது ஆதாயமானது. நமது சோவியத் அலுவலகங்களில் மட்டுமின்றி நமது கட்சி அலுவலகங்களிலும் அதிகார வர்க்கத்தினர் இருக்கவே செய்கிருர்கள் என்பதை இடைக்குறிப்பாய் இங்கு கூறுவோமாக.

நாம் கற்க வேண்டுமென்றும் உழைப்பின் உயர் நிலை ஒழுங்கமைப்புக் கல்விக் கூடங்களிலும் பிறவற்றிலும் கற்க வேண்டுமென்றும் நான் மேலே கூறிய போது, எவ்விதத்திலும் நான் வகுப்பறை மூலமான ''கற்றறிதலைக்'' குறிப்பிடவோ, வகுப்பறை மூலமாய் மட்டுமே கற்றறிய வேண்டும் என்ற கருத்துடன் என்னை கட்டுப்படுத்திக் கொள்ளவோ இல்லை. இந்த விவகாரத்தில் ''கற்றறிதல்'' என்பது ஓரளவு தமாஷான சூழ்ச்சியும் தந்திரமும் ஏமாற்று வித்தையும் இவ்வகைப்பட்ட பிறவும் உள்ளடங்கியதே என்பதை நான் ஒத்துக் கொள்ள மறுப்பதாக மெய்யான புரட்சியாளர் யாரும் சந்தேகிக்க மாட்டாரென நம்புகிறேன். பகட்டான ஒழுங்கும் காரிய தோரணையும் மிகுந்த மேற்கு ஐரோப்பிய அரசுகளில் ஒன்றில் இம்மாதிரியான ஒரு கருத்து எவரையும் உண்மையில் மிரளச் செய்வதாய் இருக்கும், மதிப்புக்குரிய எந்த அதிகாரியும் இது குறித்து நினைத்துப் பார்க்கவுங்கூட சம்மதிக்க மாட்டார் என்பது எனக்குத் தெரியும். ஆனல்

நாம் அந்த அளவுக்கு அதிகாரவர்க்க மனப்பாங்கு கொண்டோராகி விடவில்லை, நம்மிடையே இந்தக் கருத்து பற்றிய விவாதம் வேடிக்கையான சிரிப்பையே தவிர வேறு எந்த விளைவையும் உண்டாக்கி விடாது என்று நான் நம்புகிறேன்.

பயனுடைமையையும் கேளிக்கையையும் ஒன்றுசேரச் செய்தால் என்னவாம்? எள்ளி நகையாடத்தக்கதான ஒன்றை, திமையான ஒன்றை, ஓரளவு நகைக்கத்தக்கதும் ஓரளவு திமையானதுமான ஒன்றை, இன்ன பிறவற்றை அம்பலப்படுத்துவதற்காக வேடிக்கையான, அல்லது ஓரளவு வேடிக்கையான தந்திரத்தைக் கையாண்டால் என்னவாம்?

நமது ரப்கிரின் அமைப்பு இந்தக் கருத்துக்களைப் பரிசிலிக்க முற்படுமாயின், அது பெருமளவில் நன்மையடையும் என்பதாய் எனக்குத் தோன்றுகிறது. நமது மத்தியக் கண்காணிப்புக் கமிஷன் உறுப்பினர்களும் ரப்கிரின் அமைப்பைச் சேர்ந்த அவர்களது கூட்டாளிகளும் சிக்கலான வழியில் மிகச் சிறந்த வெற்றிகள் சிலவற்றைக் கண்டிருக்கிறார்கள். இவ்வழியிலான வெற்றிகளின் பட்டியலானது, நமது வருங்கால ரப்கிரின் அமைப்பினராலும் மத்தியக் கண்காணிப்புக் கமிஷன் உறுப்பினர்களாலும், பகட்டான நாணமும் ஆசாரப் பற்றும் மிகுந்த பாடப் புத்தகங்களில் குறிக்கப்படத்தகாத பல இடங்களிலும் நிகழ்த்தும் மிகப் பல திரச் செயல்களாலும் வளம் பெறுமெனை நினைக்கிறேன்.

* * *

கட்சி அலுவலகத்தை சோவியத் அலுவலகத்துடன் இணைப்பதாவது, எப்படி அது? அனுமதிக்கத்தகாதது அல்லவா அது?

நான் இந்தக் கேள்வியை எழுப்புவது என் சார்பில் அல்ல; சோவியத் அலுவலகங்களில் மட்டுமின்றி நமது கட்சி அலுவலகங்களிலும் அதிகாரவர்க்கத்தினர் இருப்பதாய் மேலே கூறினேனே, அவர்களைச் சுட்டி அவர்களது சார்பில் இதை எழுப்புகிறேன்.

இந்த இணைவு நமது பணியின் நலன்களுக்கு உகந்ததாய் இருக்குமாயின், ஒன்றை மற்றொன்றுடன் ஏன் இணைக்கக் கூடாதாம்? அயல்துறை விவகார மக்கள் கமிசாரகத்தைப் போன்ற ஒன்றில் ஆரம்ப நாட்களிலேயே இம்மாதிரியான

இணைவு நடைமுறைக்கு வந்து பெரிய பயன் அளித்திருக்கக் காண்கிறோமா, இல்லையா? அயல் அரசுகளது தந்திரத்தை எனலாம்—இதனிலும் கண்ணியக் குறைவான பதத்தை உபயோகிக்க வேண்டாமெனில்—முன்னறிந்து தடுக்கும் பொருட்டு, அவற்றின் ''ஆட்டத்துக்குப்'' பதிலளிக்கும் முறையில் நாம் மேற்கொள்ளும் ''ஆட்டத்தைப்'' பற்றிய சிறிதும் பெரிதுமான பல பிரச்சினைகள் குறித்தும் கட்சியின் கண்ணோட்டத்திலிருந்து பொலிட்பீரோ விவாதிக்க வில்லையா? கட்சி உறுப்பு ஒன்றுடன் சோவியத் உறுப்பு ஒன்று கொண்டுள்ள நெகிழ்வான இந்த இணைவு பெரும் பலத்துக் குரிய ஆதாரமாய் நமது அரசியலில் இருக்கவில்லையா? தனது பயனுடைமையை நிரூபித்துக் காட்டியிருக்கும் ஒன்று, நமது அயல்துறை அரசியலில் திட்டவட்டமாய் ஏற்கப்பட்டு இனி இத்துறையில் இது குறித்து ஐயப்பாட்டுக்கு இடமில்லை என்னும்படி அந்த அளவுக்குப் பழக்கமானதாகிவிட்ட ஒன்று, நமது அரசுப் பொறியமைவு அனைத்தும் பொறுத்த வரை குறைந்த பட்சம் அதே அளவுக்கேனும் பொருத்தமான தாகவே இருக்குமென நினைக்கிறேன் (உண்மையில் மேலும் அதிக அளவுக்குப் பொருத்தமானதாய் இருக்குமென நினைக் கிறேன்). ரப்கிரின் அமைப்பின் பணிகள் நமது அரசுப் பொறியமைவு அனைத்தும் அடங்கும்படி வியாபகமானவை. இத்துறையின் செயற்பாடானது, அரசு அலுவலகங்களில் ஒன்று விடாமல் யாவற்றையும்—ஊராட்சியைச் சேர்ந்தவை, மத்திய அமைப்புகளைச் சேர்ந்தவை, வாணிபத் துறை யிலானவை, முற்றிலும் நிர்வாகத் துறையிலானவை, கல்வி சம்பந்தமானவை, ஆவணக் காப்புக்கானவை, நாடகத் துறையிலானவை முதலான பலவற்றையும்—சுருக்கமாய், மிகச் சிறிய விதிவிலக்கின்றி எல்லாவற்றையும் கட்டுப் படுத்துவதாய் இருக்க வேண்டும்.

ஆகவே, இத்தகைய விரிவும் வீச்சும் வாய்ந்த செயற் பாட்டுக்குரிய ஓர் அலுவலகம், தவிரவும் செயற்பாட்டின் வடிவங்களில் இப்படி அதிவிசேஷ நெகிழ்வு தேவைப்படும் அலுவலகம், கட்சிக் கண்காணிப்பு அலுவலகத்துக்கும் சோவியத் கண்காணிப்பு அலுவலகத்துக்கும் இடையிலான இந்தத் தனி வகை இணைவைக் கொள்வதற்கு ஏன் அனு மதிக்கலாகாது?

இப்படி இணைவு கொள்வதற்கு எந்தத் தடங்களும் இருப்

பதாக எனக்குத் தெரியவில்லை. அது மட்டுமல்ல, இம்மாதிரியான இணைவு நமது பணியின் வெற்றிக்கான ஒரே உத்தரவாதமாகும் என்றும் நான் கருதுகிறேன். இது சம்பந்தமான எல்லா ஐயங்களும் நமது அரசுப் பொறியமைவைச் சேர்ந்த படுமோசமாய் அழுக்கேறி நலமிழந்த முடுக்குகளிலிருந்து எழுகிறவை என்றும் ஏளனச் சிரிப்பு ஒன்றை இவற்றுக்கு ஏற்ற பதில் என்றும் நினைக்கிறேன்.

* * *

மற்றொரு சந்தேகம்: கல்வித் துறைச் செயற்பாட்டை அதிகாரச் செயற்பாட்டுடன் இணைப்பது உகந்ததுதானா? உகந்தது மட்டுமல்ல, அவசியமானதுங்கூட என்பதாகவே எனக்குத் தோன்றுகிறது. பொதுவாகப் பேசுமிடத்து, மேற்கு ஐரோப்பிய அரசு வடிவம் குறித்து நாம் புரட்சிகரமான போக்குடையவர்கள்தான் என்றாலும், பெருந்திங்கிழைக்கும் அதனுடைய நகைக்கத்தக்க பல தப்பெண்ணங்களால் நாமும் பீடிக்கப்படுவதற்கு நாம் இடமளித்து விட்டோம். நமது அருமை அதிகாரவர்க்கத்தினர் வேண்டுமென்றே நாம் வெற்றால் பீடிக்கப்படும் படி ஓரளவுக்குச் செய்திருக்கிறார்கள். இந்தத் தப்பெண்ணங்களால் குழம்பிய நீரில் அடிக்கடி மீன் பிடித்துத் தமது சொந்த நலன்களை ஈடேற்றிக் கொள்ள வேண்டுமென்று செயல்பட்டவர்கள் இந்த அதிகாரவர்க்கத்தினர். இந்தக் குழம்பிய நீரில் அவர்கள் நிறையவே மீன் பிடித்தார்கள், எவ்வளவு விரிவான அளவுக்கு அவர்கள் இப்படி மீன் பிடித்தார்கள் என்பதை நம்மிடையே உள்ள குருடர்களால் மட்டும்தான் கவனியாது இருக்க முடிந்தது.

சமுதாய, பொருளாதார, அரசியல் உறவு நிலைகளின் எல்லாத் துறைகளிலும் நாம் ''பயங்கரமான'' அளவுக்குப் புரட்சி மனப்பாங்கு உடையவர்கள்தாம். ஆனால் பதவிப்படி நிலைகளுக்கு அளிக்க வேண்டிய மதிப்பு குறித்தும் அலுவலக வேலைகளுக்குரிய வடிவங்கள், சடங்குகள் குறித்தும் நமது ''புரட்சி மனப்பாங்கு'' ஊசிப் போன மாமூல் முறைகளுக்கு அடிக்கடி அடிபணிந்து விடுகிறது. சமுதாய வாழ்வில் முன்னேக்கிப் பெரும் பாய்ச்சல் நடந்தேறும் அதே நேரத்தில், கடுகளவே ஆன மாற்றங்களைச் செய்வதற்கும் வியக்கத்தக்கவாறு அச்சம் தெரிவிக்கப்படும் இந்தச் சுவையான நிகழ்வை நாம் பல தரம் பார்த்திருக்கிறோம்.

இது புரிந்து கொள்ளக் கூடியதே. ஏனென்றால் மிகவும் துணிச்சல் வாய்ந்த முன்னேற்றப் பாய்ச்சல்கள் யாவும் நெடுங்காலமாகத் தத்துவார்த்த ஆய்வுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஒரு துறையில்தான், பிரதானமாகத் தத்துவ அளவிலும் இதன்றி அனேகமாய் வேறு எதற்கும் இடமில்லாத நிலைமையிலும் வளர்க்கப்பட்டு வந்த ஒரு துறையில்தான் நடந்தேறின. ருஷ்யர்கள் வேலை நேரம் முடிந்த பின், அசாதாரணத் துணிச்சல் வாய்ந்த தத்துவார்த்தக் கட்டமைவுகளில் ஈடுபட்டு வெறுக்கத்தக்க அதிகாரவர்க்க அலுவலக எதார்த்த உண்மைகளிலிருந்து மனச் சாந்தி கண்டனர். எனவேதான் நமது நாட்டில் இந்த அசாதாரண துணிச்சல் வாய்ந்த தத்துவார்த்தக் கட்டமைவுகள் அசாதாரண ஒருதலைப்பட்சத் தன்மையை பெறலாயின. பொதுவான கட்டமைவுகளில் வெளியான தத்துவார்த்தத் துணிகரப் போக்குடன் கூடவே அலுவலக மாமூலில் சின்னஞ்சிறு சீர்திருத்தங்கள் சம்பந்தமான வியக்கத்தக்க பதற்றமும் வெளிப்பட்டு வந்தது. நிலவுடைமையில் உலக அளவிலான ஒரு மாபெரும் புரட்சிக்கு வேறு எந்நாட்டிலும் கண்டிருக்க முடியாத துணிவுடன் திட்டம் வகுக்கப்பட்டது. அதே போது அலுவலக மாமூல் முறைகளில் அற்பத்தனமான சீர்திருத்தம் ஒன்று வகுக்கப்பட வேண்டும் என்றதும் கற்பனையானது இல்லாதொழிந்து விட்டது. பொதுப் பிரச்சினைகளில் அப்படி ''அற்புத'' பலன்கள் கிடைக்கும்படி கையாளப்பட்ட அந்தப் பொதுவான விதிகளை இந்தச் சீர்திருத்தத்துக்காக கையாளுவதற்கு வேண்டிய கற்பனை அல்லது பொறுமை இல்லாமற்போய் விட்டது.

ஆதலால்தான், நமது இன்றைய வாழ்வில், ஒரு புறத்தி எதற்கும் கலங்காத துணிச்சல், மறு புறத்தில் சின்னஞ்சிறு மாற்றங்களே என்றாலும் சிந்தனையானது மிரண்டுவிடும் அந்தக் கலவரம் ஆகிய இரண்டும் இப்படி வியக்கத்தக்க விதத்தில் கைகோத்துச் செல்கின்றன.

மெய்யாகவே மகத்தான எல்லாப் புரட்சிகளிலும் இவ்வாறே நிகழ்ந்திருப்பதாய் நினைக்கிறேன். ஏனென்றால், மெய்யாகவே மகத்தான புரட்சிகள் யாவும், பழையனவற்றுக்கும் அதாவது பழையனவற்றை வளர்த்திடும் போக்குடையவற்றுக்கும் மற்றும் புதியனவற்றுக்காகிய, அதாவது பழையனவற்றில் இம்மியளவும் இல்லாத அளவுக்குப் புதி

யனவாய் இருக்க வேண்டிய இவற்றுக்காகிய கருத்தியலான பிரயத்தனத்துக்கும் இடையிலான முரண்பாடுகளிலிருந்து எழுகின்றவை.

புரட்சி எவ்வளவுக்கு எவ்வளவு திடுதிப்பென் எழுகிருதோ, அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமான காலத்துக்கு இந்த முரண்பாடுகள் பலவும் நீடிக்கின்றன.

* * *

நமது தற்போதைய வாழ்வின் பொதுவான இயல்பு வருமாறு: முதலாளித்துவத் தொழில்துறையை நாம் ஒழித்திருக்கிறோம், மத்திய காலத்திய அமைப்புகளேயும் நிலப் பிரபுக்களுடைய நிலவுடைமையையும் தகர்த்துத் தரை மட்டமாக்குவதற்காக இயன்றது அனைத்தும் செய்திருக்கிறோம்; இவ்விதம் நாம் சிறிய, மிகச் சிறிய விவசாயிகளைத் தோன்றச் செய்திருக்கிறோம்; இந்த விவசாயிகள் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையை ஏற்று அதைப் பின்தொடர்கின்றனர், ஏனெனில் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரப் பணியால் விளைந்திருக்கும் பலன்களில் அவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். ஆனால், அதிக வளர்ச்சி பெற்ற நாடுகளில் சோஷலிசப் புரட்சி வெற்றியடையும் வரையில் நாம் இந்தத் திட நம்பிக்கையை மட்டும் துணையாகக் கொண்டு தொடர்ந்து இயங்கி வருவது நமக்கு எளிதான காரியமன்று. ஏனெனில் பொருளாதார இன்றியமையாமை, முக்கியமாய் புதிய பொருளாதாரக் கொள்கைக்குரிய நிலைமைகளில், சிறிய, மிகச் சிறிய விவசாயிகளது உழைப்பின் உற்பத்தித் திறனை அதமிஞ்சிய அளவுக்குக் கீழ்நிலையில் இருத்தி வைக்கின்றது. தவிரவும், சர்வதேசச் சூழ்நிலையுங்கூட ருஷ்யாவைப் பின்னுேக்கித் தள்ளியது, மொத்தத்தில் மக்களது உழைப்பின் உற்பத்தித் திறனைக் குறையச் செய்து போர்முற்கால நிலைக்கும் கீழே செல்லும்படிச் செய்தது. நம்மைப் பின்னுேக்கித் தள்ளிவிடுவதற்கும் கூடுமான அளவுக்கு நாட்டில் அழிவையும் சிதைவையும் பரவச் செய்யும் பொருட்டு உள்நாட்டுப் போருக்கான கூறுகளேப் பயன்படுத்திக் கொள்ளவும் மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவ வல்லரசுகள் ஓரளவுக்கு வேண்டுமென்றும் ஓரளவுக்கு உணர்வின்றியும் தம்மால் இயன்றது அனைத்தும் செய்தன. ஏகாதிபத்தியப் போரிலிருந்து இவ்

வழியில் வெளிவருவதுதான் பல அனுகூலங்களேயும் உடைய ஒன்ருய் அவற்றுக்குத் தோன்றியது. அவை ஏறத்தாழ இவ்வாறு வாதாடின: ''ருஷ்யாவில் புரட்சிகர அமைப்பை நாம் வீழ்த்தத் தவறினுலும், எப்படியும் சோஷலிசத்தை நோக்கி அது முன்னேருதபடி தடுப்போம்.'' அவற்றின் நோக்குநிலையிலிருந்து அவை இதன்றி வேறு எவ்விதத்திலும் வாதாடுவதற்கில்லே. முடிவில் அவற்றின் பிரச்சினே பாதியளவுக்குத் தீர்வு பெற்றது. புரட்சியால் தோற்றுவிக்கப்பட்ட புதிய அமைப்பை அவை வீழ்த்த முடியவில்லே. ஆனுல் சோஷலிஸ்டுகள் முன்னறிந்து கூறியவை முற்றும் சரியே என்று நிரூபித்துக் காட்டியிருக்கக் கூடிய முன்னேற்ற அடியினே இந்த அமைப்பு உடனே எடுத்து வைக்காதபடி அவற்ருல் தடுத்திட முடிந்தது. அந்த முன்னேற்ற அடி எடுத்து வைக்கப்பட்டிருந்தால், இந்த அமைப்பு தனது உற்பத்திச் சக்திகளேப் பிரமாதமான வேகத்தில் வளர்த்துச் செல்ல முடிந்திருக்கும்; தனது உள்ளாற்றல்கள் யாவற்றையும் வளர்க்க முடிந்திருக்கும், இந்த உள்ளாற்றல்கள் எல்லாமாகச் சேர்ந்து சோஷலிசத்தை மலரச் செய்திருக்கும்; சோஷலிசமானது பிரம்மாண்டமான சக்திகளேத் தன் அகத்தே கொண்டதாகும் என்றும் அளவு கடந்த ஒளி படைத்த வளர்ச்சி வாய்ப்புகளுக்குரிய ஒரு புதிய வளர்ச்சிக் கட்டத்துள் மனிதகுலம் தற்போது பிரவேசித்து விட்டது என்றும் சோஷலிஸ்டுகள் இவ்விதம் எல்லார்க்கும் கண்கூடாக நிரூபித்துக் காட்டியிருப்பார்கள்.

தற்போது உருவாகியிருக்கும் சர்வதேச உறவுநிலே அமைப்பானது, ஓர் ஐரோப்பிய அரசு—ஜெர்மனி—வெற்றி நாடுகளால் அடிமை செய்யப்பட்டிருக்கும் அமைப்பாகும். தவிரவும், மேற்குலகின் மிகப் பழைய அரசுகளான பலவும் போரில் தமது வெற்றியின் காரணமாய், மிகச் சொற்ப அளவிலான சில சலுகைகளேத் தமது ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுக்கு அளிக்கத்தக்க நிலேயில் இருக்கின்றன. மிகச் சொற்ப அளவிலான சலுகைகளே என்ருலுங்கூட இவை அந்த நாடுகளின் புரட்சி இயக்கத்தின் வேகத்தை மட்டுப்படுத்தி ஓரளவுக்கு ''வர்க்கப் போர் நிறுத்தம்'' ஏற்பட்டிருப்பது போன்ற தோற்றத்தை உண்டாக்குகின்றன.

அதே நேரத்தில், கடந்த ஏகாதிபத்தியப் போரின் விளேவாய், கிழக்குலக நாடுகள் பலவும்—இந்தியாவும் சீனுவும்

பிறவும்—அவற்றின் பழைய தடத்திலிருந்து புரண்டுவிடும் படிக் குலுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் வளர்ச்சியானது பொதுவான ஐரோப்பிய முதலாளித்துவ வழிகளை நோக்கித் திட்டவட்டமாகப் பெயர்ந்திருக்கிறது. பொதுவான ஐரோப்பிய கொந்தளிப்பு அவற்றின் மீது பாதிப்பு செலுத்த முற்பட்டிருக்கிறது. உலக முதலாளித்துவம் அனைத்திலு மான நெருக்கடிக்கே இட்டுச் செல்ல வேண்டிய வளர்ச்சிப் போக்கினுள் அவை ஈர்க்கப்பட்டிருப்பது இப்பொழுது உலக முழுதிலும் தெளிவாகவே தெரிகிறது.

இவ்வாறு, தற்போது நம் எதிரே பின்வரும் கேள்வி எழுகிறது: நமது சிறிய, மிகச் சிறிய விவசாய உற்பத்தியையும் தகர்ந்து கிடக்கும் நமது தற்போதைய நிலைமையையும் கொண்டு நம்மால்—மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகள் சோஷலிசத்தை நோக்கியமைந்த அவற்றின் வளர்ச்சியை நிறைவு பெறச் செய்யும் வரை—அழியாது நீடித்திருக்க முடியுமா? ஆனால் இந்த மேற்கு ஐரோப்பிய நாடுகள் அவற்றின் வளர்ச்சியை முன்பெல்லாம் நாம் எதிர்ப்பார்த்த விதத்தில் நிறைவு பெறச் செய்யவில்லை. படிப்படியாக சோஷலிசம் உள்ளூர ''முதிர்ச்சி'' பெறுவதன் மூலமும் அல்லாமல், சில நாடுகளை ஏனையவை சுரண்டுவதன் மூலமும், ஏகாதிபத்தியப் போரில் தோற்கடிக்கப்பட்ட நாடுகளில் முதன்மையானதன் மீதான சுரண்டல் மூலமும், அதனுடன் சேர்ந்து கிழக்குலகம் அனைத்தின் மீதான சுரண்டல் மூலமும் அவை இவ்வளர்ச்சியை நிறைவு பெறச் செய்கின்றன. மறுபுறத்தில், இந்த முதலாவது ஏகாதிபத்தியப் போரின் விளைவாய், கிழக்குலகம் திட்டவட்டமான முறையில் புரட்சி இயக்கத்தினுள் ஈர்க்கப்பட்டிருக்கிறது, உலகப் புரட்சி இயக்கத்தின் பொதுவான சூறுவளியினுள் திட்டவட்டமான முறையில் ஈர்க்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சூழ்நிலைமை நமது நாட்டுக்கு வரையறுக்கும் செயல்தந்திரம் என்ன? பின்வருவதே என்பது வெளிப்படையாகத் தெரிகிறது: நமது தொழிலாளர் ஆட்சியதிகாரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் நமது சிறிய, மிகச் சிறிய விவசாயிகளைத் தொடர்ந்து அதன் தலைமையிலும் செல்வாக்கிலும் இருக்கச் செய்வதற்காகவும் நாம் அளவு கடந்த எச்சரிக்கை உணர்வை வெளிப்படுத்தியாக வேண்டும். அனைத்து உலக சோஷலிசப் புரட்சியை எழவே செய்தாக

வேண்டிய ஓர் இயக்கத்துள் உலகம் முழுமையும் இப்போது சென்று கொண்டிருக்கும் அனுகூலத்தை நமது நாடு பெற்றிருக்கிறது. ஆனல் உலகை இரு முகாம்களாகப் பிளப்பதில் ஏகாதிபத்தியவாதிகள் வெற்றி கண்டிருக்கும் பிரதிகூலத்தையும் நமது நாடு எதிர்நோக்குகிறது. மெய்யாகவே முன்னேறிய முதலாளித்துவ வளர்ச்சி பெற்ற நாடான ஜெர்மனி காலூன்றி எழுந்து நிற்பது இறுதி வரை கடினமாகியிருக்கும் நிலைமையால் இந்தப் பிளவு மேலும் சிக்கலாக்கப் பட்டிருக்கிறது. மேற்குலகு எனப்படுவதன் முதலாளித்துவ அரசுகள் எல்லாம் அதைக் கொத்திக் கொண்டிருக்கின்றன, எழுந்து நிற்க முடியாதபடி அதைத் தடுத்து வருகின்றன. மறு புறத்தில், கிழக்குலகு அனைத்தும், சுரண்டப்படும் உழைப்பாளர்களாகிய அதன் கோடானுகோடியானேர் மனிதத் துன்பத்தின் கொடிய வரம்புக்குத் தள்ளப்பட்டு அதன் இயல் வலிவும் பொருளாயத வலிவும் அதனிலும் மிகச் சிறியவையான மேற்கு ஐரோப்பிய அரசுகளில் எதனுடைய இயல், பொருளாயத மற்றும் இராணுவ வலிவோடு எவ்விதத்திலும் ஒப்பிடத்தகாத ஒரு நிலையில் பலவந்தமாய் இருத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

வருங்காலத்தில் இந்த ஏகாதிபத்திய அரசுகளுடனை மோதலிலிருந்து நாம் நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியுமா? வெற்றி பெற்ற மேலைய ஏகாதிபத்திய அரசுகளுக்கும் வெற்றி பெற்ற கீழ்த்திசை ஏகாதிபத்திய அரசுகளுக்கும் இடையிலான உள் முரண்பாடுகளும் மோதல்களும் நமக்கு இரண்டாம் முறையும் ஓய்வு இடைநேரம் தருமென—முன்பு ருஷ்ய எதிர்ப்புரட்சிக்கு ஆதரவாக மேற்கு ஐரோப்பிய எதிர்ப்புரட்சி நடத்திய படையெடுப்பு, மேற்கையும் கிழக்கையும் சேர்ந்த எதிர்ப்புரட்சியாளர்களது முகாமினுள், கிழக்கத்திய, மேற்கத்தியச் சுரண்டலாளர்களது முகாமினுள், ஜப்பான் மற்றும் அமெரிக்கா முகாமினுள் எழுந்த முரண்பாடுகளின் விளைவாகத் தகர்ந்த போது முதல் முறை நமக்குக் கிடைத்தது போல் திரும்பவும் ஓய்வு இடைநேரம் கிடைக்குமென நாம் நம்பலாமா?

இந்தக் கேள்விக்குப் பின்வரும் விதத்தில் பதிலளிக்க வேண்டுமென நினைக்கிறேன்: இங்கு பிரச்சினையானது மிகப் பல காரணக் கூறுகளைப் பொறுத்திருக்கிறது; பொதுவாகவும் ஒட்டுமொத்தமாகவும் போராட்டத்தின் இறுதி முடிவை

முன்னறிந்து கூற முடிகிறதென்ருல், உலகில் வாழ்வோரில் மிதமிஞ்சிய பெருவாரியானேருக்குப் போராட்டத்துக்கான பயிற்சியையும் கல்வியையும் முடிவில் முதலாளித்துவமே அளித்திடுகிறது என்பதே காரணம்.

இறுதியாகப் பார்க்கும் போது போராட்டத்தின் முடிவானது, உலகோரில் மிதமிஞ்சிய பெருவாரியானேர் ருஷ்யா, இந்தியா, சீனு முதலானவற்றில் இருப்பவர்கள் என்பதால் தீர்மானிக்கப்படும். உலகோரில் பெருவாரியானேராய் இருக்கும் இவர்கள் கடந்த சில ஆண்டுகளில் அசாதாரண வேகத்தில் விடுதலைப் போராட்டத்தினுள் ஈர்க்கப்பட்டிருக்கிருர்கள். ஆகவே இந்த விதத்தில், உலகப் போராட்டத்தின் இறுதி முடிவு எப்படி இருக்கும் என்பது குறித்து இம்மியளவும் ஐயப்பாட்டுக்கு இடமில்லை. இந்த அர்த்தத்தில் சோஷலிசத்தின் இறுதி வெற்றி எந்த நிபந்தனையும் இன்றி முற்றும் உறுதியானது.

ஆனல் நமது அக்கறைக்குரியது சோஷலிசத்தின் இந்தத் தவிர்க்கவொண்ணுத இறுதி வெற்றி அல்ல; நாம் கடைப்பிடிக்க வேண்டிய செயல்தந்திரமே நமது அக்கறைக்குரியது. மேற்கு ஐரோப்பிய எதிர்ப்புரட்சி அரசுகளால் நாம் நசுக்கப்படுவதைத் தடுப்பதற்காக ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியாகிய நாம், ருஷ்யாவின் சோவியத் ஆட்சியதிகாரமாகிய நாம் கடைப்பிடிக்க வேண்டிய செயல்தந்திரம் தான் நமது அக்கறைக்குரியது. எதிர்ப்புரட்சி ஏகாதிபத்திய மேற்குக்கும் புரட்சிகர தேசியவாதக் கிழக்குக்கும் இடையே, உலகிலே நாகரிக வளர்ச்சி மிகுந்த அரசுகளுக்கும் கிழக்கத்திய பாணியிலான பிற்பட்ட அரசுகளாயினும் உலகோரில் பெருவாரியானேரைக் கொண்டவைகளுக்கும் இடையே எழும் அடுத்த இராணுவ மோதல் வரை நாம் அழியாமல் நிலைத்திருப்பது உறுதி செய்யப்பட வேண்டுமாயின், இந்தப் பெருவாரியானேர் நாகரிக வளர்ச்சி பெற்ருக வேண்டும். சோஷலிசத்தை நேரடியாக அடைவதற்கு வேண்டிய அரசியல் முன்தேவைகள் நம்மிடம் இருந்தாலும், அதற்கான போதிய நாகரிக வளர்ச்சி நம்மிடம் இல்லை. நம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காக நாம் கீழ்க்கண்ட செயல்தந்திரத்தை அல்லது கொள்கையைப் பின்பற்ற வேண்டும்.

தொழிலாளர்கள் தொடர்ந்து விவசாயிகளுக்குத் தலைமை தாங்கும்படியாகவும் தொடர்ந்து அவர்கள் விவசாயிகளது

நம்பிக்கைக்கு உரியோராய் இருக்கும்படியாகவும், அவர்கள் மிகுந்த அளவுக்குச் சிக்கனத்தைக் கடைப்பிடித்து தமது சமூக உறவுகளில் ஊதாரித்தனத்தின் சாயல் என்பதே இல்லாதவாறு அகற்றும்படியாகவும் அமைந்த ஓர் அரசை நாம் கட்டியமைத்திட வேண்டும்.

அதிகபட்ச சிக்கனம் கைகூடும் அளவுக்கு நாம் நமது அரசுப் பொறியமைவைச் சிறிதாக்கிக் கொள்ள வேண்டும். ஜாரிஸ்டு ருஷ்யாவால், அதன் அதிகாரவர்க்க முதலாளித்துவப் பொறியமைவால் அவ்வளவு பெரிய அளவில் விட்டுச் செல்லப்பட்டிருக்கும் ஊதாரித்தனத்தில் இம்மியளவும் எஞ்சாதவாறு அறவே ஒழித்தாக வேண்டும்.

இது விவசாயிகளது குறுகிய வரம்புகளுக்குள் அமைந்த ஆட்சியாகி விடாதா?

இல்லை. விவசாயிகள் மீதான தலைமை தொடர்ந்து தொழிலாளி வர்க்கத்திடமே இருக்கும்படி நாம் பாதுகாத்துக் கொண்டோமாயின், நமது அரசின் பொருளாதாரத்தில் சாத்தியமான முழு அளவுக்குச் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் நாம் மிச்சப்படுத்துவதை எல்லாம் நமது பெருவீத இயந்திரத் தொழிலை வளர்த்திடவும் மின்மயமாக்குதலையும் நீரியல் முறையிலான புல்கரி உற்பத்தியையும் வளர்த்திடவும் வோல்ஹவ் நீர்மின்விசைத் திட்டத்தை[54] நிறைவேற்றி முடிக்கவும் இன்ன பலவும் செய்யவும் உபயோகிப்போம்.

இதுதான், இது மட்டுமேதான் நமது நம்பிக்கைக்குரிய ஆதாரமாகும். இதை நாம் செய்திடும் போதுதான் உருவகமாகப் பேசுமிடத்து நாம் குதிரையை மாற்றிக் கொள்ள முடியும், விவசாயினுடைய, குடியானவனுடைய ஏழ்மைக் குதிரையிலிருந்து, நாசமாகிவிட்ட விவசாயி நாட்டுக்காக அமைந்த சிக்கனத்துக்கான குதிரையிலிருந்து பாட்டாளி வர்க்கம் தேடி வரும், அவசியம் தேடவே வேண்டிய குதிரைக்கு—பெருவீத இயந்திரத் தொழிலுக்கும் மின்மயமாக்கலுக்கும் வோல்ஹவ் மின்விசை நிலையத்துக்கும் பிறவற்றுக்குமான குதிரைக்கு மாறிச் செல்ல முடியும்.

இப்படித்தான் நான் என் மனத்துள் நமது பணிக்கு, நமது கொள்கைக்கு, நமது செயல்தந்திரத்துக்கு, நமது போர்த்தந்திரத்துக்கு உரிய பொதுத் திட்டத்தைத் திருத்தியமைக்கப் பெற்ற ரப்கிரின் அமைப்பின் செயற்பாடுகளுடன் இணைத்திடுகிறேன். ரப்கிரின் அமைப்பைத் தனிச்சிறப்பு

வாய்ந்த உயர் நிலைக்கு உயர்த்தியும் மத்தியக் கமிட்டியின் உரிமைகளுடன் கூடிய முதன்மையை அதற்கு அளித்தும் இப்படி இன்னும் பலவும் செய்தும் நாம் இத்துறையில் தனிக் கருத்தும் கவனமும் செலுத்த வேண்டும் என்பதற்கான நியாயவிளக்கம், என் அபிப்பிராயத்தில், இதில்தான் காணக் கிடக்கிறது.

நமது பொறியமைவை முழு அளவுக்குக் களையெடுத்துச் சுத்தம் செய்வதன் மூலமும் அதற்கு இன்றியமையாத் தேவையாய் இல்லாதவை யாவற்றையும் கூடுமான அளவுக்குக் கழித்துக் கட்டுவதன் மூலமும் தான் நாம் சமாளிக்க முடியுமென உறுதியாய் இருக்கலாம் என்பதே இந்த நியாயவிளக்கம். அதோடு, சிறு விவசாயிகளது நாட்டுக்குரிய நிலையில் அல்ல, சகலமும் குறுகிய வரம்புகளுக்குள் இருக்கும்படியான நிலையில் அல்ல, மாறாக பெருவீத இயந்திரத் தொழிலை நோக்கி இடையறாது முன்னேறும்படியான நிலையில் நாம் சமாளிக்க முடியும்.

நமது ரப்கிரின் அமைப்பானது இத்தகைய மகோன்னத பணிகளைக் கொண்டதாக வேண்டுமென நான் கனவு காண்கிறேன். எனவேதான் இதற்காக மிக உயர்ந்த அதிகாரம் வகிக்கும் கட்சி மேலிடத்தை ''சாதாரண'' மக்கள் கமிசாரகத்துடன் இணைத்திடுவதற்கு நான் திட்டமிடுகிறேன்.

*மார்ச் 2, 1923*

பிராவ்தா, இதழ் 49,
*மார்ச் 4, 1923*

## பதிப்பாளர் குறிப்புகள்

[1] பிட்டர்ஸ்பர்க் தொழிலாளர்களுக்கும் சோஷலிஸ்டுகளுக்கும் ''போராட்டச் சங்கத்தின்'' பேரில் எனும் பிரசுரம் வி. இ. லெனினால் சைபீரியாவில் எழுதப்பட்டது. *1898*ஆம் ஆண்டு இது வி. இ. லெனின் எழுதிய ருஷ்ய சமூக-ஜனநாயக வாதிகளின் கடமைகள் எனும் சிறுநூலின் அநுபந்தமாக அயல்நாட்டில், ஜினீவாவில் வெளியிடப்பட்டு சட்ட விரோதமாக ருஷ்யாவில் பரப்பப்பட்டது.—*19*

[2] ''போராட்டச் சங்கம்''—''தொழிலாளி வர்க்க விடுதலைக்கான போராட்டச் சங்கம்''—*1895*ஆம் ஆண்டு பீட்டர்ஸ்பர்கில் ஜார் முறைக்கு எதிராகப் போராடுவதற்காக லெனினாலும் மற்ற சமூக-ஜனநாயகவாதிகளாலும் தோற்றுவிக்கப்பட்ட சட்டவிரோதமான ஸ்தாபனம். ''சங்கம்'' பீட்டர்ஸ்பர்க்கின் மார்க்சிய வட்டங்களை இணைத்தது, பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர்களின் புரட்சிகர நடவடிக்கையையும் வேலைநிறுத்த இயக்கத்தையும் தலைமை தாங்கி வழிநடத்தியது. *1895*ஆம் ஆண்டு டிசம்பரில் வி. இ. லெனின் உட்பட ''போராட்டச் சங்கத்திற்கு'' தலைமைதாங்கிய சமூக-ஜனநாயகவாதிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர், பின்னர் சைபீரியாவிற்கு நாடுகடத்தப்பட்டனர்.—*19*

[3] புரூதோன், பியேர் ஜோசப் *(1809-1865)*—பிரெஞ்சு கட்டுரையாளர், பொருளாதார நிபுணர்; குட்டி முதலாளித்துவக் கண்ணோட்டத்திலிருந்து முதலாளித்துவத்தை விமரிசத்த பல நூல்களின் ஆசிரியர், அராஜகவாதத்தின் ஸ்தாபகர்களில் ஒருவர்.

வல்யான், எடுவார்ட் மரீ *(1840-1915)*—பிரெஞ்சு சோஷலிஸ்டு, பாரிஸ் கம்யூனில் பங்கு கொண்டவர்; பிரெஞ்சு சோஷலிசக் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவர்.

வைட்லிங், வில்ஹெல்ம் *(1808-1871)*—ஜெர்மானிய தொழிலாளர் இயக்கப் பிரமுகர், கற்பனாவாத சோஷலிஸ்டு; தையற்காரர்.

பெபெல், ஒளகுஸ்த் *(1840-1913)*—ஜெர்மானிய சமூக-ஜனநாயகத்தின் ஸ்தாபகர்களில், தலைவர்களில் ஒருவர்; பற்றவைக்கும் தொழிலாளி.—*24*

4 காவுத்ஸ்கி, கார்ல் *(1854-1938)*—ஜெர்மானிய சமூக-ஜனநாயகத்தின், இரண்டாவது அகிலத்தின் தலைவர்களில் ஒருவர்; நடுநிலைவாதி. *1914-1918*ஆம் ஆண்டுகளில் நடைபெற்றப் போரின் போது சமூக-தேசியவெறிகளை ஆதரித்தார்.—*27*

5 ''உழைப்பு விடுதலைக்'' குழு — *1883*ஆம் ஆண்டு ஜினீவாவில் ஸ்தாபிக்கப்பட்ட முதல் ருஷ்ய மார்க்சியக் குழு. இதை ஸ்தாபித்தது கி. வி. பிளெஹானவ். ருஷ்யாவின் சமூக-ஜனநாயக தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரஸ் வரை *(1903)* இக்குழு இயங்கி வந்தது.—*29*

6 *1898*ஆம் ஆண்டு மார்ச்சில் ருஷ்யாவின் சமூக-ஜனநாயக தொழிலாளர் கட்சியின் முதல் காங்கிரஸ் மின்ஸ்கில் நடைபெற்றது. காங்கிரசில் 6 ஸ்தல சமூக-ஜனநாயக நிறுவனங்களிலிருந்து வந்திருந்த 9 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். ஸ்தல நிறுவனங்களை ''ருஷ்யாவின் சமூக-ஜனநாயக தொழிலாளர் கட்சியாக'' இணைப்பது பற்றிய தீர்மானத்தைக் காங்கிரஸ் ஏற்றது. காங்கிரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட மத்தியக் கமிட்டி காங்கிரசிற்குப் பின் விரைவிலேயே ஜார் போலீசால் கைது செய்யப்பட்டது, ஸ்தல நிறுவனங்களை ஒரே கட்சியாக ஒன்றிணைப்பது அப்போது நிறைவேற்றப்படவில்லை.—*29*

"*Credo*"—*19*ஆம் நூற்றுண்டின் இறுதியில், *20*ஆம் நூற்றுண்டின் துவக்கத்தில் ருஷ்ய சமூக-ஜனநாயகவாதிகளின் ஒரு பகுதியினரிடையே தோன்றிய சந்தர்ப்பவாதப் போக்காகிய ''பொருளாதாரவாதத்தின்'' கருத்துக்கள் அடங்கிய பத்திரம் இந்தப் பெயரால் பிரபலமானது. ஜார் முறைக்கு எதிரான அரசியல் போராட்டத்தை மிதவாத முதலாளி வர்க்கத்தினர் நடத்த வேண்டும் என்றும் தொழிலாளர்கள் உழைப்புச் சூழ்நிலைகள் மேம்படுத்தல், ஊதிய உயர்வு, வேலை நேரக் குறைப்பு ஆகியவற்றுக்கான பொருளாதாரப் போராட்டத்தோடு தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் ''பொருளாதாரவாதப்'' போக்கின் ஆதரவாளர்கள் கருதினர். ''பொருளாதாரவாதிகள்'' பாட்டாளி வர்க்கத்தின் ஒரே அரசியல் கட்சியைத் தோற்றுவிப்பதற்கு எதிராக இருந்தனர்.—*30*

8 ரபோச்சயா மீசில்—''பொருளாதாரவாதிகளின்'' பத்திரிகை, *1897-1902*ஆம் ஆண்டுகளில் வெளிவந்தது.—*30*

9 ''நரோத்னயா வோல்யா''—*1879*ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட சட்டவிரோதமான புரட்சிக் கட்சி. எதேச்சாதிகாரத்தை வீழ்த்துவதையும் ருஷ்யாவில் அரசியல் சுதந்திரத்தை வெல்வதையும் இது தனது குறிக்கோளாக வைத்தது. ஜார் முறைக்கு எதிரான போராட்டத்தின் முக்கிய முறையாக இக்கட்சியின் உறுப்பினர்கள் தனிநபர் அடக்குமுறையைக் கருதினர். வெகுஜனங்களோடு தொடர்பில்லாமல் புரட்சிவீரர்களின் குழுவினுடைய சதிவேலை மற்றும் நாசகர நடவடிக்கைகளின் பயனாய் எதேச்சாதிகாரத்தை ஒழித்துவிடலாம் என இவர்கள் தவறாகக் கருதினர்.—*30*

10 பெர்ன்ஷ்டைனியம் — ஜெர்மானிய சமூக-ஜனநாயகவாதி பெர்ன்ஷ்டைன் என்பவரால் துவக்கி வைக்கப்பட்ட ஜெர்மானிய மற்றும் சர்வதேச சமூக-ஜனநாயக இயக்கத்தின் சந்தர்ப்பவாதப் போக்கு. இதன் முக்கியக் கோரிக்கையாக, சோஷலிசப் புரட்சியையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் பற்றிய புரட்சிகர மார்க்சியத்தின் அடிப்படைக் கருத்துக்களைத் திருத்த, மாற்ற வேண்டும் என்பது இருந்தது. சோஷலிசத்திற்கான போராட்டத்தைக் கைவிடவும் முதலாளித்துவ சமுதாய வரம்பிற்குள்ளாகவே தனிப்பட்ட சீர்திருத்தங்களுக்காக முயலவும் சமூக-ஜனநாயகத்திற்கு முன்மொழியப்பட்டது.—*31*

11 கார்ல் மார்க்சால் எழுதப்பட்ட தொழிலாளர்களின் சர்வதேச தோழமை அமைப்பின் பொது விதிமுறைகள் என்பதிலிருந்து எடுக்கப்பட்ட மேற்கோள்.—*32*

12 பிட்டர் அலெக்சேயெவ் *(1849—1891)*—ருஷ்ய புரட்சி வீரர், நெசவாளத் தொழிலாளி. *1875*ஆம் ஆண்டு ஜார் அரசாங்கத்தால் கைது செய்யப்பட்ட இவர் நீதிமன்றத்தில் புரட்சி உரையாற்றினார்; உரையின் இறுதியில் லெனின் மேற்கோள் காட்டிய வார்த்தைகளைக் கூறினார். —*36*

13 மார்த்தினவ், ஏ. எஸ். *(1865—1935)*—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, ''பொருளாதாரவாதத்தின்'' சித்தாந்தவாதிகளில் ஒருவர். மார்த்தினவ் சூத்திரம் என்பதன் கீழ் லெனின், ''பொருளாதாரப் போராட்டத்திற்கே அரசியல் தன்மையை ஏற்படுத்துவதில்தான்'' சமூக-ஜனநாயகத்தின் கடமை உள்ளது என்ற மார்த்தினவின் கூற்றைக் குறிப்பிடுகின்றார்.—*38*

14 லிப்க்னெஹ்ட், வில்ஹெல்ம் *(1826-1900)*—ஜெர்மானிய சமூக-ஜனநாயகத்தின் ஸ்தாபகர்களில், தலைவர்களில் ஒருவர்.—*41*

15 பிளெஹானவ், கி. வி. *(1856-1918)*—ருஷ்ய மற்றும் சர்வதேச தொழிலாளர் இயக்கப் பிரமுகர், ''உழைப்பு விடுதலைக்'' குழு என்னும் முதல் ருஷ்ய மார்க்சிய நிறுவனத்தின் ஸ்தாபகர், மார்க்சிய தத்துவத்தைப் பற்றிய பல திறமைமிக்க படைப்புக்களின் ஆசிரியர். ருஷ்யாவின் சமூக-ஜனநாயக தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசிற்குப் பிறகு—மென்ஷிவிக்.—*42*

16 இந்த வார்த்தைகள் கா. மார்க்சும் பி. எங்கெல்சும் எழுதிய கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்டவை.—*44*

17 *B*-ங—பி. வி. சாவின்கோவின் *(1879-1925)* புனைப்பெயர், இவர் பின்னால் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் தலைவர்களில் ஒருவரானார். *1899-1901*ஆம் ஆண்டுகளில் ''பொருளாதாரவாதிகளை'' நெருங்கிவந்தார். *1900*ஆம் ஆண்டு 6ஆம் எண்ணுள்ள ரபோச்செயே தியேலோவில் வந்த அவரது கட்டுரையை லெனின் மேற்கோள் காட்டுகிறார்.—*53*

18 என்ன செய்ய வேண்டும்? என்ற வி. இ. லெனின் நூலைப் பற்றி பேசப்படுகிறது.—*64*

19 இஸ்க்ரா—*1900*ஆம் ஆண்டு லெனினால் தோற்றுவிக்கப்பட்டு பின்னர் ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர மார்க்சிய கட்சியை உருவாக்குவதில் தீர்மான கரமான பங்காற்றிய முதல் அனைத்து ருஷ்ய மார்க்சியப் பத்திரிகை. மியூனிச்சிலும் பின்னர் ஜினீவாவிலும் வெளிவந்தது, சட்டவிரோதமாக ருஷ்யாவிற்கு அனுப்பப்பட்டது.

*1903*ஆம் ஆண்டு நடைபெற்ற ருஷ்யாவின் சமூக-ஜனநாயக தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசிற்குப் பின் இஸ்க்ரா ருஷ்ய சமூக-ஜனநாயகத்தின் சந்தர்ப்பவாதிகளான மென்ஷிவிக்குகளின் பத்திரிகையானது; ''பழைய'' லெனினிய இஸ்க்ராவிற்கு மாறாக ''புதிய'' இஸ்க்ரா என்ற பெயரைப் பெற்றது.—*66*

20 ருஷ்யாவின் சமூக-ஜனநாயக தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசில், யாரை கட்சி உறுப்பினராகக் கருதுவது என்பதை நிர்ணயிக்கக் கூடிய கட்சியின் விதித் தொகுப்பின் முதல் பாராவைக் குறித்த விவாதத்தில் எழுந்த கருத்து மாறுபாடுகள் குறிப்பிடப்படுகின்றன. லெனின் இந்த முதல் பாராவிற்குக் கீழ்கண்ட சூத்திரத்தை முன்மொழிந்தார்: ''கட்சியின் வேலைத்திட்டத்தை ஒத்துக்கொள்ளக் கூடிய, பொருளாதார ரீதியாகவும் கட்சி

ஸ்தாபனங்கள் ஒன்றில் தனிநபர் முறையில் பங்கேற்பதன் மூலமும் கட்சியை ஆதரிக்கக் கூடிய எவரும் ருஷ்யாவின் சமூக-ஜனநாயக தொழிலாளர் கட்சியின் உறுப்பினராகக் கருதப்படுவார்.'' கட்சி உறுப்பினர் கட்சி ஸ்தாபனத்தில் பங்கேற்க வேண்டுமென கட்டாயப்படுத்தும் இந்தச் சூத்திரத்தை மார்த்தவ் ஆட்சேபித்தார்; அவர் வேறொரு சூத்திரத்தை முன்மொழிந்தார், இதன்படி கட்சி உறுப்பினர் கட்சி ஸ்தாபனம் ஒன்றில் இல்லாமல் இருக்கலாம், கட்சி ஸ்தாபனத்தின் கண்காணிப்பின் கீழ் வேலை செய்தால் மட்டும் போதும்.—83

21 என்ன செய்ய வேண்டியதில்லை? என்ற கட்டுரையின் ஆசிரியர்—கி. வி. பிளெஹானவ். இவர் ருஷ்யாவின் சமூக-ஜனநாயக தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசிற்குப் பின் மென்ஷிவிக்குகளின் பக்கத்திற்கு மாறினர். இந்தக் கட்டுரை வெளியிடப்பட்ட 52ஆம் எண் கொண்ட இதழிலிருந்து இஸ்க்ரா மென்ஷிவிக்குகளின் பத்திரிகையானது.—88

22 சபாக்கேவிச்—இறந்து போன ஆன்மாக்கள் எனும் என். வி. கோகலின் படைப்பில் வரும் முட்டாள்தனமான, முரட்டுத்தனமான நிலப்பிரபு பாத்திரம்.—89

23 பஷெஹோனியே—ஜார் காலத்திய ருஷ்யாவின் தாலுக்கா நகரம்; எம். இ. சல்திக்கோவ்-ஷெட்ரினின் பஷெஹோன்ஸ்கயா பழமை எனும் படைப்பு வெளியான பின் ''பஷெஹோனியே'' எனும் சொல் எல்லைப்புற இடத்தையும் மிக பின்தங்கிய நிலைமையையும் குறிக்கப் பயன்படுத்தப் படலாயிற்று.—91

24 வ்பெரியோத்—போல்ஷிவிக்குகளின் பத்திரிகை; 1904ஆம் ஆண்டு டிசம்பர் முதல் 1905ஆம் ஆண்டு மே வரை ஜினீவாவில் வெளிவந்தது, சட்டவிரோதமாக ருஷ்யாவிற்குக் கொண்டு வரப்பட்டது.—94

25 இந்தக் கடிதம் 1905ஆம் ஆண்டுப் புரட்சியின் சமயத்தில் எழுதப்பட்டது. 1905ஆம் ஆண்டு ஜனவரி 9ஆம் தேதி பீட்டர்ஸ்பர்க்கில் கபோன் எனும் மதகுருவால் ஏற்பாடு செய்யப்பட்ட தொழிலாளர்களின் அமைதியான ஊர்வலம் நடந்தது; ருஷ்யத் தொழிலாளர்களின் தாங்க இயலா வாழ்க்கையைப் பற்றி ஜார் மன்னரிடம் முறையிட தொழிலாளர்கள் மனைவி மக்களுடன் மனு ஏந்தி ஜார் அரண்மனைக்குச் சென்றனர். ஜாரின் இராணுவம் அமைதியான ஊர்வலத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியது. ஜனவரி 9க்குப் பின் ஜார் மன்னருக்கெதிராக ருஷ்யா

முழுவதும் ஆர்பாட்டங்களும் வேலைநிறுத்தங்களும் ஆயுதந்தாங்கிய கிளர்ச்சிகளும் நடைபெற்றன. 1905-1907 ஆண்டுகளின் புரட்சி துவங்கியது.—*94*

26 மென்ஷிவிக்குகள் — ருஷ்ய சமூக-ஜனநாயகத்தின் சந்தர்ப்பவாதப் பிரிவு; ருஷ்யாவின் சமூக-ஜனநாயக தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசிற்குப் பின் தோன்றியது *(1903)*; இதற்கு பிளெஹானவ், மார்த்தவ், பத்ரேசவ் போன்றவர்கள் தலைமை தாங்கினர்.—*95*

27 கபோன், கி. அ. *(1870—1906)*—மதகுரு; 1905ஆம் ஆண்டு ஜனவரி 9ஆம் தேதி ஜார் அரண்மனைக்குப் பீட்டர்ஸ்பர்க் தொழிலாளர்களின் அமைதி ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்தார்.—*95*

28 ''பொருளாதாரவாதத்தைப்'' பற்றி குறிப்பு 7ஐப் பார்க்க. —*97*

29 ''தொழிலாளி'' என்ற புனைப்பெயர் கையொப்பமிடப் பட்டுள்ள நமது ஸ்தாபனங்களில் தொழிலாளர்களும் அறிவுத்துறையினரும் எனும் துண்டுப் பிரசுரம் 1904ஆம் ஆண்டு மென்ஷிவிக்குகளால் வெளியிடப்பட்டது.

அக்செல்ரோத், பி. பி. *(1850—1928)*—மென்ஷிவிக்குகளின் தலைவர்களில் ஒருவர்.—*97*

30 பாபுஷ்கின், இவான் வசிலியெவிச் *(1873—1906)*—ருஷ்யப் புரட்சிவீரர், போல்ஷிவிக்.—*99*

31 ரென்னென்காம்ப், பி. கே. *(1854—1918)*—ஜார் காலத்திய ஜெனரல், ருஷ்யாவில் புரட்சி இயக்கத்தை அடக்கி ஒடுக்கிய கொலைபாதகர்களில் ஒருவன். 1906ஆம் ஆண்டு, புரட்சிகரத் தொழிலாளர்களையும், விவசாயிகளையும் சுட்டுக் கொன்ற தண்டனைப் படைக்குத் தலைமை தாங்கினான்.—*99*

32 டூமா, அரசு டூமா—1905ஆம் ஆண்டுப் புரட்சியின் விளைவாக ஜார் காலத்திய ருஷ்யாவில் ஏற்படுத்தப்பட்ட பிரதிநிதித்துவமுள்ள நிறுவனம். முறைப்படி அது சட்டமியற்றும் நிறுவனமாக இருந்தது. ஆனால் நடைமுறையில் அதற்கு எந்தவித உண்மையதிகாரமும் இருக்கவில்லை. அரசு டூமாவிற்கான தேர்தல்கள் நேரடியானவைகளாகவோ, சமமானவைகளாகவோ, பொதுவானவைகளாகவோ இருக்கவில்லை. உழைக்கும் வர்க்கங்களின் மற்றும் ருஷ்யாவிலிருந்த ருஷ்யர்களல்லாத தேசிய இனத்தவரின் வாக்

குரிமை கடுமையாக வெட்டப்பட்டது. பெரும்பகுதி தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் வாக்குரிமையே இருக்கவில்லை.

முதல் அரசு டூமாவும் (ஏப்ரல்-ஜூலை, *1906*), இரண்டாவது அரசு டூமாவும் (பிப்ரவரி-ஜூன், *1907*) ஜார் அரசாங்கத்தால் கலைக்கப்பட்டன. மூன்றாவது அரசு டூமாவிலும் (*1907-1912*), நான்காவது அரசு டூமாவிலும் (*1912-1917*) ஜார்வம்ச எதேச்சாதிகாரத்தின் ஆதரவாளர்களான கறுப்பு நூற்றவர்களின் பிரதிநிதிகள் மிகுந்திருந்தனர்.—*103*

33 காடேட்டுகள், அரசியல் சட்ட-ஜனநாயகக் கட்சி—ருஷ்யாவில் மிதவாத முடியாட்சி முதலாளி வர்க்கத்தினரின் முக்கியக் கட்சி; *1905*ஆம் ஆண்டு அக்டோபரில் தோன்றியது. இதில் முதலாளி வர்க்கப் பிரதிநிதிகளும் நிலப்பிரபு பிரமுகர்களும் பூர்ஷ்வா அறிவுஜீவிகளும் அடங்கியிருந்தனர். தங்களை ''மக்கள் விடுதலைக்'' கட்சி என்று அழைத்துக் கொண்ட காடேட்டுகள் உண்மையிலேயே ஜார் முறையை அரசியல் சட்ட முடியாட்சி வடிவத்தில் தக்க வைப்பதற்காக எதேச்சாதிகாரத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ள முயன்றனர். *1917*ஆம் ஆண்டு பிப்ரவரிப் புரட்சிக்குப் பின் காடேட்டுகள் இடைக்கால பூர்ஷ்வா அரசாங்கத்தில் தலைமைப் பதவி வகித்து மக்கள் விரோத, எதிர்ப்புரட்சி கொள்கையை நடத்தினர். மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின் காடேட்டுகள் சோவியத் ருஷ்யாவிற்கு எதிரான எல்லா எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளிலும் ஆக்கிரமிப்பாளர்களின் போர்களிலும் தீவிரப் பங்கேற்றனர்.—*103*

34 *1905*ஆம் ஆண்டு மாஸ்கோவிலும் டோன் நதிக்கரையிலுள்ள ரொஸ்தோவிலும் கிராஸ்னயார்ஸ்கிலும் மற்ற நகரங்களிலும் தொழிலாளர்களின் ஆயுதந்தாங்கிய கிளர்ச்சிகள் நடைபெற்றன. டிசம்பர் மாதத்திய ஆயுதந்தாங்கிய கிளர்ச்சிகள் *1905-1907* ஆண்டுகளில் நடந்தப் புரட்சியின் மிக உயர்ந்த எழுச்சியாக இருந்தன. —*104*

35 கலைப்புவாதிகள்—*1905-1907*ஆம் ஆண்டுகளின் புரட்சியின் தோல்விக்குப் பின் மென்ஷிவிக்குகளான சமூக-ஜனநாயகவாதிகள் மத்தியில் பரவிய சந்தர்ப்பவாதப் போக்கினர்.

இவர்கள் தொழிலாளி வர்க்கத்தின் தலைமறைவான புரட்சிக் கட்சியை ஒழித்துக் கட்டக் கோரினர். ஜார் முறைக்கெதிரான புரட்சிப் போராட்டத்தைக் கைவிடுமாறு தொழிலாளர்களுக்கு அறைகூவல் விடுத்த இவர்

கள் கட்சி சார்பற்ற ''தொழிலாளர் காங்கிரசைக்'' கூட்டி அதில், புரட்சிக் கோஷங்களை மறுத்துவிட்டு வெறும் சட்டபூர்வமான, ஜார் அரசாங்கத்தால் அனுமதிக்கப் பட்ட நடவடிக்கைகளில் மட்டுமே ஈடுபடக்கூடிய ''பரந்த தொழிலாளர் கட்சி'' என்ற சந்தர்ப்பவாதக் கட்சியைத் தோற்றுவிக்கத் திட்டமிட்டனர்; லெனினும் மற்ற போல் ஷிவிக்குகளும் அயராது பாடுபட்டு புரட்சிக்குத் துரோகம் விளைவித்த இவர்களைத் தோலுரித்துக் காட்டினர். தொழி லாளி வெகுஜனங்கள் மத்தியில் இவர்களுக்கு வெற்றி கிடைக்கவில்லை. *1912* ஜனவரியில் நடைபெற்ற ருஷ்யா வின் சமூக-ஜனநாயக தொழிலாளர் கட்சியின் பிராக் மகாநாடு இவர்களைக் கட்சியிலிருந்து விலக்கியது.—*105*

36 உழைப்புவாதிகள்—குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதி களின் குழு; அரசு டூமாவின் உறுப்பினர்கள். *1906*ஆம் ஆண்டு ஏப்ரலில் உழைப்புவாதிகள் பிரிவு என்றழைக்கப் பட்ட அமைப்பை உருவாக்கினர்கள். அரசியலில் காடேட்டுகளுக்கும் சமூக-ஜனநாயகவாதிகளுக்குமிடையே ஊசலாடினர்கள்.—*106*

37 *1914*ஆம் ஆண்டு உலக ஏகாதிபத்திய யுத்தம் ஆரம்ப மானபோது, நான்காவது அரசு டூமாவின் உறுப் பினர்களான போல்ஷிவிக்குகள் எ. இ. படாயெவ், எம். கே. முரானவ், கி. இ. பெத்ரோவ்ஸ்கி, எப். என். சமோய்லவ், என். ஆர். ஷாகவ் ஆகியோர் ஜார் அரசாங் கத்திற்கான இராணுவக் கடன்களுக்கு ஆதரவாக வாக் களிக்க மறுத்து போரின் ஏகாதிபத்திய, மக்கள் விரோதத் தன்மையை விளக்கிப் பேசினர். போருக்கெதிரான புரட்சி கர நடவடிக்கைக்காகப் போல்ஷிவிக்குகளான பிரதிநிதி கள் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுபின் சைபீரியாவிற்கு நாடுகடத்தப்பட்டனர்.—*106*

38 வண்டர்வேல்டே, எமில் *(1866-1938)*—பெல்ஜிய தொழி லாளர் கட்சியின், இரண்டாம் அகிலத்தின் தலைவர்களில் ஒருவர்; சமூக-தேசியவெறி, ஏகாதிபத்திய யுத்தத்தை ஆதரித்தார்; யுத்தத்தின் ஆரம்பத்தில் பெல்ஜிய பூர்ஷ்வா அரசாங்கத்தில் சேர்ந்தார்.—*106*

39 *1914*ஆம் ஆண்டு கோடைக்காலம் உலக ஏகாதிபத்திய யுத்தம் ஆரம்பமானபோது, பெரும்பான்மையான ஐரோப் பிய நாடுகளின் சோஷலிசக் கட்சிகளின் தலைவர்கள் தங் களது ஏகாதிபத்திய அரசாங்கங்களின் தரப்பிற்கு வந்து ஏகாதிபத்திய யுத்தத்தை ஆதரிக்கத் துவங்கினர். சோஷ லிசத்திற்கு துரோகமிழைத்த சோஷலிசக் கட்சிகளின் பிரமுகர்களின் பெயர்களை லெனின் பட்டியல் இடுகின்றார்:

ஜீயுடேகும், ஹேய்னே—ஜெர்மானிய சமூக-தேசியவெறியர்; சம்பா, வல்யான்—பிரெஞ்சு சமூக-தேசியவெறியர்; பிஸ்ஸோலாதி, முஸ்ஸோலினி—இத்தாலிய சமூக-தேசியவெறியர்; செஹெயித்ஸே, பிளெஹானவ்—ருஷ்யாவின் சமூக-தேசியவெறியர்.—*109*

40 பிரெஷ்கோ-பிரெஷ்கோவ்ஸ்கயா இ. கே. *(1844-1934)*—சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் பெண் பிரமுகர்.

தெஸெரெத்தேலி இ. கி. *(1882-1959)*—மென்ஷிவிக்குகளின் தலைவர்களில் ஒருவர்.—*113*

41 நோவயா ஷீஸ்ன் — மென்ஷிவிக்குகள்-சர்வதேசியவாதிகளும் அரைகுறை மென்ஷிவிக்வாதத்தைச் சார்ந்த தனிமையான அறிவுஜீவிகளும் சுற்றிக் குழுமியிருந்த ஒரு பத்திரிகை; 1917ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் 1918ஜூலை வரை பெத்ரோகிராதில் வெளியிடப்பட்டது. இவர்களைப் பற்றி விமரிசிக்கும்போது லெனின், ''கோட்பாடற்ற நிலையை மூடி மறைத்து வெளிப்படுத்தும் அறிவுஜீவிகளின் சந்தேக நோக்குதான் அவர்களிடம் விஞ்சி நிற்கக் கூடிய மனநிலை'' என்றார். இந்தப் பத்திரிகை அக்டோபர் புரட்சியை விரோத மனப்பான்மையுடன் எதிர் கொண்டது.—*119*

42 பெலின்ஸ்கி, வி. கி. *(1811-1848)*—மாபெரும் ருஷ்ய புரட்சிகர ஜனநாயகவாதி, பிரசுரகர்த்தா, பொருள்முதல்வாத தத்துவஞானி.—*120*

43 கோதேவின் பாவுஸ்த் என்பதிலிருந்து மேபிஸ்தோபெலின் சொற்கள்.—*128*

44 பாரிஸ் கம்யூன் வரலாற்றிலேயே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைத் தோற்றுவிப்பதைப் பற்றிய முதல் சோதனை. பாரிஸ் கம்யூன் 1871ஆம் ஆண்டு மார்ச் 18 முதல் மே 28வரை நிலவியது. பாரிஸ் கம்யூன் மத ஸ்தாபனத்தை அரசிலிருந்தும் பள்ளியை மத ஸ்தாபனத்திலிருந்தும் பிரித்தது; நிரந்தர இராணுவத்தை மாற்றி மக்களனைவரையும் ஆயுதபாணியாக்கியது; நீதிபதிகளையும் உத்தியோகஸ்தர்களையும் மக்கள் தேர்ந்தெடுக்கும் முறையைப் புகுத்தியது; உத்தியோகஸ்தர்களின் ஊதியம் தொழிலாளர்களின் ஊதியத்தைவிட கூடுதலாக இருக்கக் கூடாதென நிர்ணயித்தது; தொழிலாளர்களின், நகர ஏழைகளின் பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதற்கான பல நடவடிக்கைகளை எடுத்தது; இத்தியாதி. 1871ஆம் ஆண்டு மே 21இல் தியேர் எதிர்ப்புரட்சி அரசாங்கத்தின் படைகள் பாரிசுக்குள் புகுந்து பாரிஸ் தொழி

லாளர்கள் மீது கொடுமையான அடக்குமுறையை கட்ட விழ்த்துவிட்டன: சுமார் 30,000 பேர்கள் கொல்லப் பட்டனர், 50,000 பேர்கள் கைது செய்யப்பட்டனர், பலர் கடுங்காவல் சிறைக்கு அனுப்பப்பட்டனர்.—128

45 35வது குறிப்பைப் பார்க்க.—166

46 மக்கியாவெல்லிசம்—பதினாரும் நூற்றாண்டின் இத்தாலிய அரசியல் பிரமுகரும் அரசா் எனும் நூலின் ஆசிரியரு மான மக்கியாவெல்லி என்பவரின் பெயரால் இவ்வாறு அழைக்கப்படுகிறது. இந்த அரசியல் போக்கின் ஆதர வாளர்கள் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக எதை யுமே செய்யத் தயங்க மாட்டார்கள்.—166

47 கூட்டம் நடத்தியவர்கள் எனும் விளாதிமீர் மயக்கோவ்ஸ்கி யின் கவிதையைப் பற்றிப் பேசப்படுகிறது.—180

48 ஒப்லோமவ்—நிலப்பிரபு, இ. ஏ. கொன்சரோவின் ஒப்லோ மவ் கதையில் வரும் முக்கியக் கதாபாத்திரம்.—180

49 இந்தக் குழு அக்டோபர் புரட்சியின் சரித்திரத்தையும் ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் சரித்திரத்தையும் பற்றிய தகவல்களைச் சேகரித்து பயிலுவதற்காக 1920ஆம் ஆண்டு செப்டெம்பரில் ஏற்படுத்தப்பட்டது.—182

50 ஆன்டான்டு நாடுகளின் தலைமை கவுன்சில், ஐரோப்பாவில் பொருளாதார பரஸ்பர தொடர்புகள், பொருளாதார ஒத்துழைப்பு பற்றிய பிரச்சினைகளைக் குறித்த சர்வதேச மகாநாட்டை ஜெனோவாவில் கூட்டும் தீர்மானத்தை 1922ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் தேதி ஏற்றது; சோவியத் ருஷ்யாவின் பிரதிநிதிகளை மகாநாட்டிற்கு அழைக்க முடிவு செய்யப்பட்டது. மகாநாட்டில் கலந்து கொள்ள தனது ஒப்புதலை சோவியத் அரசு அறிவித்தது. ஆனால் மகா நாட்டைக் கூட்டுவது ஆன்டான்டு வல்லரசுகளால் பன் முறை ஒத்திப்போடப்பட்டது.

மகாநாடு 1922ஆம் ஆண்டு ஏப்ரல் 10 முதல் மே 19வரை ஜெனோவாவில் நடைபெற்றது. மகாநாட்டில் சோவியத் ருஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, பெல் ஜியம், ஜப்பான், ஜெர்மனி உட்பட 29 அரசுகளின் பிரதிநி திகள் கலந்து கொண்டனர். அமெரிக்கப் பிரதிநிதி ''பார் வையாளர்'' என்ற முறையில் பிரசன்னமாயிருந்தார். சோவியத் ருஷ்யாவின் பொருளாதார இடர்ப்பாடுகளைப் பயன்படுத்தி அதன்மேல் தளைபூட்டும் ஒப்பந்த நிபந்தனை களை சுமத்த மகாநாட்டில் ஏகாதிபத்திய வல்லரசுகள் முயன்றன. போருக்கு முந்தைய கடன்கள் உட்பட எல்லா

ஜார்காலத்தியக் கடன்களையும் கட்டுமாறும், தேசவுடைமையாக்கப்பட்ட நிறுவனங்களை அந்நிய உரிமையாளர்களுக்குத் திருப்பித் தருமாறும் இது போன்ற மற்றவைகளையும் அவர்கள் கோரினர். ஏகாதிபத்தியவாதிகளின் திமிர்பிடித்த உரிமைக் கொண்டாடல்களை சோவியத் தூதுக் குழு மறுத்தது; இது, பொது ஆயுதக் களைப்பு, போருக்கு முந்தைய அனைத்துக் கடன்களையும் ரத்து செய்தல் ஆகியவற்றைப் பற்றிய யோசனைகளை முன்மொழிந்தது. சோவியத் ருஷ்யாவின்பால் பிரான்ஸ் மற்றும் பிரிட்டனின் விரோதம் மிக்க நிலையின் விளைவாய் மகாநாடு முடிவடையவில்லை.—*183*

51 காங்கிரசுக்குக் கடிதம் — வி. இ. லெனினின் கடைசிப் படைப்புக்களில் ஒன்று. கடுமையாக நோய் வாய்ப்பட்டிருந்த அவர் *1922*ஆம் ஆண்டு டிசம்பரின் கடைசி நாட்களிலும் *1923*ஆம் ஆண்டு ஜனவரி துவக்கத்திலும் கடிதத்தை வாய்மூலம் சொல்லி எழுதச் சொன்னார்.—*209*

52 திட்டமிடப்பட்ட ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் XIIஆவது காங்கிரசைப் பற்றிக் குறிப்பிடப்படுகிறது.—*209*

53 *1917*ஆம் ஆண்டு அக்டோபர் புரட்சிக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் கட்சியின் மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் காமெனெவ், ஸிநோவியெவ் ஆகியவர்களின் துரோகச் செயலைப் பற்றிக் குறிப்பிடப்படுகிறது. அக்டோபர் எழுச்சிக்கு ஒரு சில நாட்கள் முன் அவர்கள் அரைகுறை மென்ஷிவிக் பத்திரிகையான நோவயா ஷிஸ்னில் அறிக்கையை வெளியிட்டு எழுச்சிக்கான தயாரிப்பைப் பற்றிய போல்ஷிவிக் கட்சியின் மத்தியக் கமிட்டி தீர்மானத்தை இடைக்கால பூர்ஷ்வா அரசாங்கத்திற்குக் காட்டிக்கொடுத்தனர்.—*211*

54 வோல்ஹவ் நீர்மின்விசைத் திட்டம்—லெனின்கிராடிலிருந்து *120* கி. மீ. தொலைவில் வோல்ஹவ் ஆற்றில் சோவியத் யூனியனின் முதல் பெரிய நீர்மின்நிலையக் கட்டுமானம். கட்டுமானம் *1918*ஆம் ஆண்டில் துவங்கியது, ஆனால் உள்நாட்டுப் போர் முடிவடைந்ததும் *1921*ஆம் ஆண்டில்தான் விரைவாக நடக்கத் துவங்கியது.—*247*

C 012

வாசகர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளை வரவேற்கவும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்ச்சியோடு காத்திருக்கிறது.

தங்கள் கடிதங்களை "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow. USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

---

விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41—பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை—600098.

ஷோ-ரூம்

136. மவுண்ட் ரோடு, சென்னை—600002.

கிளைகள்

80. மேலக் கோபுர வீதி, மதுரை—625001.
87/89. ஒப்பணக்கார தெரு, கோயம்பத்தூர்—641001.
சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008.
செர்ரி ரோடு, சேலம்—636001

விற்பனை நிலையங்கள்

3—22—75—D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன்.
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்.

62 39

30,

31

В. И. Ленин

О ВОСПИТАНИИ КАДРОВ

*На тамильском языке*

V. I. Lenin

ON PERSONNEL TRAINING

*in Tamil*